7 25/86

224

25 ஆகஸ்ட் 1986

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, சனவரி 28, 1986-தொகுதி 220 எண் 3.

Tuesday, 28th January 1986-Volume 220 No. 3.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

204

பொருளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. | 307—322 |
| 2 அறிவிப்பு | |
| பேரவையிலிருந்து செய்தி .. .. | 322—323 |
| 3 கவன ஈர்ப்பு— | |
| (1) திருச்சி நகராட்சியில் இப்ரஹிம் பார்க் லைனில் முன்னறிவிப்பு ஏதுமின்றி பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்த கடைகளை நகராட்சி அதிகாரிகள் காலி செய்ததினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து | 324—326 |
| (2) அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் சட்டக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து. | 326—327 |
| 4 அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) 1986ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986). | 327—328 |
| (2) 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986). | 328 |
| (3) 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986). | 328 |
| (4) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986). | 329 |
| (5) தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986). | 329 |

பக்கங்கள்.

(6) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986.) 329

(7) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986). 330—373

5 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. . 374—376

தமிழ்நாடு ... சட்டப்பேரவை நூலகம் 143540 சென்னை-600 009.

D

Y211,32'N86

N86.226.3-S;1

224

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1986 ஜனவரி 28.

தை 15, குரோதன, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினா எண்கள் 41 மற்றும் 42 ஒத்தி வைக்கப்படுகின்றன.

### சாந்தோம் கடற்கரையை ஒட்டியுள்ள சாலை

***43 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சாந்தோம் கடற்கரையை ஒட்டியுள்ள சாலையை மேம்படுத்தி, "ஒரு வழிப்பாதையாக" மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மற்றும் (இ) சென்னை மாநகராட்சி, காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) மற்றும் பொதுப் பணித்துறையால் சென்னை சாந்தோம் கடற்கரையை ஒட்டியுள்ள சாலையை மேம்படுத்தி "ஒரு வழிப்பாதையாக" மாற்றும் செயற்குறிப்பு பரிசீலிக்கப் பட்டது. பின்னர், இச்சாலை மேம்படுத்தப்பட்டு சோதனைக் கட்டமாக, காலை மற்றும் மாலை வேளைகளில் ஒரு வழிப்பாதையாக அறிவிக்கப்பட்டு போக்குவரத்து திருப்பி விடப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இதை ஒரு வழிப் பாதையாக ஆக்குவதற்கு முன்னதாக இந்தப் பகுதியிலே நிறைய விபத்துக்கள் நேர்ந்ததுண்டா? இப்போது அது குறைந்திருக்கிறதா? அவ்வாறு குறைந்திருப்பது உண்மையாயின், வேறுசில பகுதிகளிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்ய மாநகராட்சி முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஜனவரி 28

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, விபத்துக்கள் பற்றி என்னிடம் தற்போது விவரமேதும் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன். போக்குவரத்து நெரிசல் பகுதிகளை ஒருவழிப் பாதையாக மாற்றிட அரசாங்கம் பல்வேறு கட்டங்களில் யோசித்து வருகிறது. பரிசீலித்து எங்கெங்கு மாற்றியமைக்க முடியுமோ அங்கெல்லாம் மாற்றியமைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, சாந்தோம் கடற்கரையை யொட்டிச் செல்கின்ற சாலைக்கு அடையாறிலிருந்து ஒரு பகுதி, ஊரூர் பகுதி, திருவான்மியூர் பகுதிகளாக முதலிலே அமைக்கப்பட்டது. அந்தப் பகுதிகளும் இப்போது பழுதடைந்திருக்கின்றன. அவற்றைச் சரிவரப் பராமரிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அவற்றையும் செப்பனிட்டு, பராமரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, புயல் வெள்ளத்தால் அந்தப் பகுதி சாலைகளும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்பது உண்மைதான். ஆனால் அவற்றைப்பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, சாந்தோம் கடற்கரைச் சாலையைச் செப்பனிட அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது? மேலும் கடற்கரையையொட்டிய பகுதிகளில் சிமெண்ட்டால் ஆன பெஞ்சுகளை ஏற்படுத்தினால், தலைவர் போன்று வழக்கமாகக் கடற்கரைக்குச் செல்கின்றவர்கள் அவற்றில் அமருவதற்கு வசதியாக இருக்குமே. அவ்வாறு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அந்தச் சாலை கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டிருந்தது. அந்தச் சாலையை மேம்படுத்த ரூ. 21.4 லட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. சிமெண்ட் பெஞ்சுகள் போடுவது பற்றிக் கேட்டார்கள். அதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்கவும். அவ்வாறு போடுவதற்கு மத்திய அரசு தடை விதித்திருப்பதாகக் கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, சென்னை, சாந்தோம் கடற்கரையையொட்டி இருக்கின்ற சாலை மிகச் சிறப்பாகவே இருக்கிறது. ஆனால் மாநகராட்சியிலிருக்கிற பல்வேறு சாலைகள் குண்டும் குழியுமாக



1986 ஜனவரி 28]

இருக்கின்றன. அவற்றையும் பராமரிப்பதற்கு ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா? அவ்வாறாயின் ஒவ்வோராண்டும் அவற்றிற்காக ஒதுக்கப் பட்டிருக்கிற நிதி எவ்வளவு? அவற்றிற்காகச் செலவு செய்திருப்பது எவ்வளவு? அவற்றில் எந்த அளவுக்குச் செலவாகியிருக்கிறது என்றும் அறிந்திட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், சேகரித்துத் தருகிறேன். மாநகராட்சி சாலைகள் பொதுவாக கடந்த புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பது உண்மைதான். அவற்றைச் செப்பனிடு வதற்கான வேலைகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன. அவை சீக்கிரம் முடியும் என்று நம்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் அச்சாலை ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அச்சாலை பல இடங்களில் மிகவும் குறுகலாகத்தான் இருக்கிறது. ஆகவே எப்போதுமே அச்சாலையை ஒரு வழிப்பாதையாக மாற்றியமைத்தால்தான், அப்பகுதியில் உள்ள நெரிசல் குறையும். எனவே அந்த வகையில் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நெரிசல் இருக்கிற நேரத்தில் அச்சாலையை ஒரு வழிப்பாதையாக மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறோம். எப்போதுமே அப்பாதையை ஒரு வழிப்பாதையாக மாற்ற வேண்டிய தேவை இல்லை என்று அரசு கருதுகிறது. நெரிசல் இல்லாத நேரங்களில் அது இரு வழிப்பாதையாக இருப்பதற்கு தடை இருக்க முடியாது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதை அரசு பரிசீலித்துப் பார்த்து, தேவைப்பட்டால் அவ்வாறு செய்வதற்கு அரசு பரிசீலிக்கும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, சென்னை, சாந்தோம் கடற்கரையையொட்டி இப்போது திடீர் திடீரென்று குடிசைப் பகுதிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அவற்றை அகற்றும் கருத்துரு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இப்போது கையில் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

1986 ஜனவரி 28]

## தொழில் வரியை இரத்து செய்தல்.

* 44 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொழில் வரியை, இரத்து செய்யும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லை எனில், இனியாவது அரசு இதனை பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) தற்போது இயலாது.

(முற்பகல் 10-05)

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்று கூறினார்கள். இப்போது நமது மாநிலத்திலுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடமிருந்து தொழில் வரி வசூலிக்கப்படுகிற தென்று அறிகிறோம். இப்போது இல்லையென்றாலும், வருங்காலத்திலாவது அந்தத் தொழில் வரி வசூலிப்பதை ரத்து செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் இல்லை யென்று சொன்னேன். எதிர்காலத்திலாவது அரசு அப்படி யோசிக்குமா என்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். எதிர்காலத்தில் வரக்கூடிய யோசனைக்கு, இப்போது யோசிக்குமென்று சொல்லக்கூடிய அளவுக்கு இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, ஏற்கெனவே வெளியிடப் பட்ட ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே போனஸ் வழங்குவது உட்பட, தொழில் வரி ரத்து உட்பட நிறைவேற்றப்படுமென்று வாக்குறுதி அளித்து, அது விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. விளம்பரப்படுத்தப்பட்ட செயலை, கட்சி இப்போது ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நிறைவேற்றுவது தானே முறை. இப்போது இல்லாவிட்டாலும், எதிர்காலத்திலாவது அந்த அடிப்படையிலே சிந்திப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். இப்போது அரசு அதைப் பரிசீலிப்பதற்கில்லை.



1986 ஜனவரி 28]

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, தொழில் வரி, ஆசிரியர்கள் அரசு ஊழியர்களிடம் இப்போது வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுடைய பணி தொண்டு என்று எல்லோராலும் புகழப்படுகிறது. தொண்டுக்குத் தொழில் வரி போட முடியாது. ஒன்று தொண்டு என்று கருதினால், அதற்குத் தொழில் வரி போடக்கூடாது. தொழிலாகக் கருதினால், தொழிற்சங்க உரிமை பெற வேண்டும். இதுபற்றி அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அரசுப் பணி தொண்டா அல்லது தொழிலா என்பது அவர்கள் எடுத்துக்கொள்ளும் முறையைப் பொறுத்திருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுக்கு போனஸ் வேண்டு மென்று கேட்க வரும்போது, தொழில் என்ற அடிப்படையில் கேட்கிறார்கள். ஆனால் இதுபோன்று வரும்போது, தொண்டு என்ற அடிப்படையிலே கேட்கிறார்கள். தொழில் வரியை ரத்து செய்யும் எண்ணம் இல்லை. ஆசிரியர் களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், வியாபாரம் செய்யும் இடங்களில் தொழில் செய்பவர்களுக்கும் அவர்கள் ஊதியத்தைப் பொறுத்து, தொழில் வரி விதிக்கப் படுகிறது. அதில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, தொழில் வரியானாலும், தொண்டு வரியானாலும், வரி இல்லாத ஒரு நிலையைப் பரிசீலிக்கிறபோது, ஆசிரியர்களுக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிற இந்த அரசு, இதை ரத்து செய்து ஆசிரியர்களுக்கு உதவி வழங்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தற்போது அந்த உத்தரவாதம் அளிப்பதற்கில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, தொழில் வரி மூலம் உள்ளாட்சித் துறைக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் மிக மிகச் சொற்பமான தாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து, நகராட்சியிலும் வெவ்வேறு விதமான தொகைகளைக் குறிப்பிட்டு, பல தொல்லைகளை ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதிலே ஒரு சரியான நடைமுறையைக் கூட அவைகள் பின்பற்றுவதில்லை. ஆகையால் இதை ஒரு 'நியூஸன்ஸ்' என்று கருதியாவது, இந்த வருமானத்தை ஈடுசெய்வதற்கு எளிதாக ஒரு மாற்றுத் திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தொழில் வரியைப் பொறுத்தவரையில் "டேபுலேஷன் பார்ம்" கொடுத்திருக்கிறோம். இவ்வளவு வருமானம் இருந்தால், இவ்வளவு தொழில் வரி என்று போடுகிறோம். அதன்

பிரகாரம் தான் அது வசூலிக்கப்பட வேண்டும். அதை மீறி வசூலிக்க முடியாது. அப்படி எங்காவது வசூலிப்பதாகத் தகவல் கொடுத்தால், அதை அரசாங்கம் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உள் விளையாட்டு அரங்கு.

* 45 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) புது டில்லியில் உள்ள 'இந்திரப் பிரஸ்தா' உள் விளையாட்டு அரங்கினைப் போன்று, தமிழகத்தில் ஒரு விளையாட்டு அரங்கினை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்படி ஒரு உள் விளையாட்டு அரங்கம் இல்லாத காரணத்தால், பல சமயங்களில் மிக முக்கியமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறாமல், ஏன் சர்வ தேசியப் போட்டிகள்கூட நடைபெற முடியாமல் தள்ளிப் போடப் படுகின்ற அல்லது ரத்து செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள்கூட இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே "இந்திரப் பிரஸ்தா" "உள் விளையாட்டு அரங்கம்" போன்று அவ்வளவு பிரம்மாண்டமாகவும், கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தும் அதைச் செய்யாவிட்டாலும், நம்முடைய பட்ஜெட்டின் நிதி நிலைக்கேற்ப ஒரு சிறிய விளையாட்டு அரங்கினை நம்முடைய தமிழ் நாட்டில் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, "இந்திரப் பிரஸ்தா" போன்ற உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமானால், மிகப் பெரிய தொகையைச் செலவு செய்ய வேண்டியிருக்கும். ஆகவே அப்படிப் பட்ட ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் சிறிய ஒரு உள் விளையாட்டு அரங்கம் சென்னையில் அமைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் தீவிரப் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனுடைய அடிப்படையில் ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி வளாகத்திற்கு ஒரு விளையாட்டு அரங்கம், விளையாட்டுத் துறையின் சார்பில் கட்டுவதற்கு விளையாட்டு



(முற்பகல் 10-10)

மற்றும் இளைஞர் பயிற்சித் துறை இயக்குநர் அக் கல்லூரி நிர்வாகத்தினருடன் கலந்தாலோசித்து அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பியிருந்தார். இப்போது ஒரு உள் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்காக தேவையான நிலத்தைப் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒய்.எம்.சி.ஏ. நிறுவனத்திற்கு மத்திய அரசின் முன் அனுமதியோடு மாற்றம் செய்திருக்கிறோம். தற்போது அந்த நிறுவனத்திடம் அந்த நிலம் இருக்கிறது. அதைச் சீர்படுத்த ஒட்டுமொத்தமாக எவ்வளவு தொகை வழங்கலாம் என்பது ஆராயப்பட்டு வருகிறது. அந்த அமைப்பின் மூலம் எவ்வளவு பொருள்செலவில் உள் விளையாட்டு அரங்கத்தைக் கட்டலாம் என்று இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் விளையாட்டின் மேம்பாட்டிற்காக என்று தமிழகத்தில் விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இனி அந்தக் கழகம்தான் இந்தப் பிரச்சினையைக் குறித்து பரிசீலிக்கும்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், சென்ற முறை இந்த மாமன்றத்தில் கல்வி பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பின் மீது விவாதம் நடந்தபோது, சென்னையில் ஜப்பானுக்கும் இந்தியாவுக்குமிடையேயான கைப்பந்துப் போட்டி மழையின் காரணமாக ரத்து செய்யப்பட்டது. அப்போது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை கூட 'Dont blame the rains' என்று எழுதியிருந்தது. அதாவது "மழையைக் குறை சொல்லாதீர்கள், மாநிலத்தின் தலைநகரான சென்னையில் ஒரு உள் விளையாட்டு அரங்கம் கூட கட்டவில்லையே" என்று அது குறிப்பிட்டிருந்தது. எனவே இந்த அடிப்படையில் ஒய்.எம்.சி.ஏ. மூலமாக கட்டப்பட இருக்கிற உள் விளையாட்டு அரங்கம் எவ்வளவு விரைவில் கட்டப்படும் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கருத்துருவை விளையாட்டு வளர்ச்சிக் கழகம் பரிசீலித்து அனுப்பிய பிறகு, அரசு அதன்மீது தக்க முடிவை மேற்கொள்ளும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உள்விளையாட்டு அரங்கம் கட்டப்படுவதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் நீலகிரி மாவட்டத்தைப் போன்ற பல இடங்களில் வெளி விளையாட்டு அரங்கங்களேகூட இன்னும் கட்டி முடிக்கப் படாமல் இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட வெளி விளையாட்டு அரங்கங்கள் இல்லாத இடங்களில் அத்தகைய அரங்கங்களை விரைவில் கட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விளையாட்டு மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட விளையாட்டு வளர்ச்சிக் கழகம் இத்தகைய விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்கான தீவிர முயற்சிகளை எடுக்கலாம். அந்த அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களைப் பொறுத்த கருத்துருக்கள் பரிசீலிக்கப்படும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தமிழகத்தினுடைய மையப் பகுதி திருச்சியாகும். எனவே எப்போதும் சென்னையையே கருத்தில் கொண்டு இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தாமல் திருச்சியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அங்கேயும் உள் விளையாட்டு அரங்கங்களை அமைக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விளையாட்டு வளர்ச்சிக் கழகம் அதையும் பரிசீலிக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட கருத்துரு ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டதால், அதன் அடிப்படையில் எடுக்க வேண்டிய முடிவுகளை விரைவுபடுத்தும் முயற்சியில் அரசு ஈடுபடுமா? இன்னும் ஆறு மாத காலத்திற்கு மழை இல்லாமல் இருக்குமாதலால், அதற்குள் அப்படிப்பட்ட பணிகளைத் தொடர்ந்து ஆரம்பித்து முடித்து விட்டால், வரும் மழைக் காலத்தில் பல போட்டிகள் மழை காரணமாக நிறுத்தப்படாத அல்லது ரத்து செய்யப்படாத நிலை உருவாகுமல்லவா? எனவே இந்த அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடி கவனம் செலுத்தி, இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாம் இந்தத் திட்டத்தை விரைவு படுத்தும் முயற்சிகளை மேற்கொள்கிறோம். என்றாலும்கூட, மழைக் காலத்தில் போட்டிகளை நடத்தாமல் இருந்தால் நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்தில் விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்ட பெருமளவில் நிதிகூட வசூலிக்கப்பட்டு அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாக நான் அறிகிறேன். எனவே அந்தத் திட்டத்திற்கு அரசு முன் அனுமதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அறிந்து சொல்ல முடியும். இப்போது என்னிடம் விவரம் இல்லை.



**திரு. அ. மயில்சாமி :** தமிழகத்தில் வெளி விளையாட்டு அரங்கம் என்று சுமார் 50,000 அல்லது 1 லட்சம் மக்கள் உட்கார்ந்து அமர்ந்து பார்ப்பது போன்ற அரங்கம் இல்லாததன் காரணமாகத்தான், நேரு தங்கக் கோப்பைக் கான கால்பந்துப் போட்டி இங்கே நடத்துவதற்கு அனுமதி கிடைத்தும், நாம் நடத்த இயலாமல் போனதால், இன்றைக்கு கேரள மாநிலத்தில் உள்ள திருவனந்தபுரத்திற்கு அந்த வாய்ப்பு கிடைத்து, அவர்கள் அங்கே அதை நடத்துகிறார்கள். எனவே அப்படிப்பட்ட பெரிய வெளி விளையாட்டு அரங்கத்தைத் தமிழகத்தில் அமைப்பதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளி விளையாட்டு அரங்கத்தில் காட்டுகிற அக்கறைக்காக அவரைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் இருக்கிற விளையாட்டு அரங்கங்கள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன, எவ்வளவு மக்களாலே பயன் படுத்தப்படுகின்றன என்பதையும் அவைகள் கட்டிமுடிக்கப்பட்ட பிறகு, எத்தனை நாட்களுக்குப் பயன்பட்டிருக்கின்றன என்பதையும் கவனிக்க வேண்டும். அவைகளுக்காகச் செலவழிக்கப்பட்ட பணத்திற்கு ஏற்ப சமுதாயத்திற்கு அவைகளாலே நன்மை கிடைக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். அதைப் போலவே இந்த விளையாட்டு அரங்கங்கள் மூலமாக பெரும்பான்மையான மக்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஏதோ வெறும் சமுதாய அந்தஸ்துக்காக விளை யாட்டு அரங்குகளைக் கட்டுகிற முயற்சிகளை நாம் பரிசீலிக்க முடியாது. விளையாட்டுகளின் வளர்ச்சிக்காகவும், பெரும்பான்மையான மக்களின் மத்தி யிலே இந்த உணர்வைத் தூண்டுகிற வகையிலும் இந்த அரசு முடிவெடுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தொடக்கப் பள்ளி ஆசிரியர் போராட்டம்.

* 46. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஒரே மாதிரியான கோரிக்கைகளை முன் வைத்து, ஒரே மாதிரி யான போராட்டம் நடத்திய தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் மற்றும் தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆகிய இயக்கங் களின் போராட்ட காலத்திற்கு, கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கு விடுப்பும், ஊதியமும் வழங்கப்பட்டு, மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கு விடுப்பும், ஊதியமும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இந்தப் பாகுபாட்டிற்குரிய காரணங்கள் யாவை?

ஏனென்றால், மானியம் என்ற சொற்றொடரை சட்டத்திலே பயன்படுத்துவதால், அதை அவர்களுக்குச் சாதகமாக அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே கிராண்ட் என்பதற்குப் பதிலாக வேறு சொற்றொடரைப் போட்டு மாற்றுச் சட்டம் கொண்டுவர முயற்சி செய்யலாம் அல்லவா? அப்படிச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம். அது வேறுவிதமாக இருக்குமானால், மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை எடுக்கலாம். முன்பெல்லாம் 'கிராண்ட்' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, செலவில் ஒரு பகுதியை அரசு ஏற்றுக்கொண்டிருந்தது. இன்றைக்கு சம்பளத்தைப் பொறுத்த வரையில், அரசே தந்து கொண்டிருக்கிற நிலைமையிலே ஒரு மாற்றத்தை அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, அதன் அடிப்படையிலே என்ன மாற்றத்தைச் செய்யலாம் என்பதைப்பற்றி அந்தத் தீர்ப்புக்குப் பிறகு பார்க்கலாம்.

## ஆசிரியர்கள் சங்கங்கள்.

* 48. வினா—திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்களுக்கு மட்டுமே, அரசு ஆணைகளின் நகல்கள் வழங்கப்படவும், அவ்வாணைகளில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அச்சங்கங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவும் அரசு ஆணையிட்டிருந்ததில், அரசு தற்போது மாற்றம் ஏதும் செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. அ. மயில்சாமி: அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தின் பெயரைப் போடுவதுதான் அரசின் திட்டம். ஆனால் அண்மைக் காலங்களில் அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் பெயரைப் போடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். 1—10—1970 என்ற நாளைக் குறிப்பிட்டு, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்கத்தின் பெயர் குறிப்பிட்டு அரசாணை அந்தச் சங்கத்தின் பெயரில் வந்திருக்கிறது. ஆகவே அங்கீகரிக்கக் கூடிய விதிகளில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்



(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விதிகளில் எந்த விதமான மாற்றமும் இல்லை. ஆனால் விதிகளுக்கு முரணாக இப்படி இரண்டு உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, இந்த அங்கீகரிக்கப் பட்ட சங்கங்களுக்கு அனுப்பப்படும் ஆணைகளைப் பொறுத்தவரையில், பள்ளிக்கல்வியைப் பொறுத்தவரையில் சரியான முறையில் ஆணைகளை அனுப்பி வருகின்றார்கள். ஆனால் அதிலே தலைமைச் செயலகத்தில் உள்ள தொழிற் நுட்பக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றைச் சார்ந்த ஆணைகள் எங்களுக்குச் சரியாக வரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி கவனத்தில் கொண்டு அதில் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## தாம்பரம்-ஸ்ரீபெரும்புதூர் பேருந்து.

* 49 வினா.—திரு. சி. இராமலிங்கம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாம்பரத்திலிருந்து, படப்பை, மணிமங்கலம் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று கொண்டிருந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து, நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மீண்டும் அவ்வழித்தடத்தில் பேருந்தைவிட, நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (இ) 26—10—1983 முதல் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் இந்த வழித்தடத்தில் பேருந்து இயக்கி வருகிறது. இது நிறுத்தப்படவில்லை.

## தலைக்கவசம்.

* 50 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 12—8—1985 அன்று வரை, தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது?

(இ) தலைக்கவசம் அணிவதிலிருந்து, பெண்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 12—8—1985 முடிய தலைக் கவசம் அணியாமல் பயணம் செய்தவர்கள் மீது மொத்தம் 6,242 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

(இ) தலைக்கவசம் அணிவதிலிருந்து பெண்களுக்கு விதிவிலக்கு ஏதும் அளிக்கப்படவில்லை. ஆனால், வாகனங்களின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்யும் பெண்களைப் பொறுத்த வரையில், இவ்விதி வற்புறுத்தப்படுவதில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, பெங்களூரில் டி.வி.எஸ். 50, லூனா, மோபட் போன்ற சிறிய வண்டிகளில் போகின்றவர்கள் தலைக் கவசம் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. இதுபோல இந்த அரசும் செய்யுமா? குறிப்பாக பெண்கள் திருமணங்களுக்குப் போகின்றபோது, ரூ. 200, ரூ. 300 என்று செலவு செய்து சிகை அலங்காரம் செய்து புதிய முறையில் முடியை வைத்துக் கொண்டு போகின்றவர்கள் இந்தத் தலைக்கவசம் அணிந்து கொண்டு போவதால், கலைந்து போகின்றது என்று கவலைப்படுகின்றார்கள். ஆகவே அவர்கள் ஓட்டினாலும், ஏற்கனவே தலைக் கனம் அதிகமாக இருக்கின்ற அவர்களுக்கு தலைக்கவசம் வேண்டாமென்று இந்த அரசு ஆணை யிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, டி.வி.எஸ். 50 யிலேயிருந்து விழுந்தாலும், தலையிலே அடிபடும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அவர்களுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் அரசு இந்த நடவடிக்கையை எடுத்து வருகிறது. இருந்தாலும் தனிப்பட்ட முறையிலே பரிசீலிக்க அரசு தயாராக இருக்கின்றது. இன்னொன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண் களுக்கு இருக்கின்ற தலைக் கனம் பற்றிப் பேசினார்கள். எனக்கு அது தெரியாது. அது அவருக்குத் தெரிந்திருக்கின்றது. குறிப்பாக ரூ. 200 செலவழித்து கொண்டையெல்லாம் போட்டுக்கொள்ளக்கூடியவர்கள், அந்த வாய்ப்பு இருப்பவர்கள் அநேகமாக மோட்டார் சைக்கிளில் போகமாட் டார்கள். வாகனத்தை ஓட்டிக் கொண்டு போகமாட்டார்கள். மோட்டார் காரில்தான் போவார்கள். எனவே அவர்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டக் கூடியவர்களாக இருந்தால், நிச்சயமாக தலைக் கவசம் அணிய வேண்டும். பின்னால் அமர்ந்து போகின்றவர்களுக்கு வேண்டுமானால் விதிவிலக்குக் கொடுக்கலாமா என்பதைப்பற்றி அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது.



டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்றுதான் இந்த அலங்காரத்தைச் செய்துகொள்கின்றார்கள். அதிலும் சென்னையில் அதிகம் இந்த அலங்காரத்தைப் பார்க்க வேண்டும் மற்றவர்கள் என்பதற்காகத்தான் ஸ்கூட்டரில் போகின்றார்கள். என்றாலும் அரசு அதிலே இருக்கின்ற ஆபத்தை ஆராய்ந்து பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பெங்களூரில் உள்ள நடைமுறை எப்படி இருக்கின்றது என்று ஆய்ந்து ஒரு வேளை அது சரியாக இருக்குமானால், அதையும் கவனிக்க வேண்டும் அல்லது நகரத்தைவிட்டு வெளிப்பகுதிகளுக்குப் போகும்போது, அது தேவையில்லை என்று இந்த அரசு கருதுமானால், அந்த வகையிலேயும் நடவடிக்கை எடுக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பெண்கள் அப்படி நினைத்துக்கொண்டு அலங்காரம் செய்து கொண்டிருந்தால், அப்படி அந்த வண்டியிலே வந்தால், இறங்குகின்றபோது, அந்த அலங்காரமே மாறிவிடும். எனவே அதிலே விதிவிலக்கு கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. பெங்களூரில் உள்ள நிலைமைகள் வேறு. நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற நிலைமைகள் வேறு. காரணம் அங்கே இருக்கின்ற பாதைகளினுடைய அகலம் எல்லாம் அதிகமாக இருக்கின்றது. இங்கே ஜனத்தொகை அதிகமாக இருக்கின்றது. பேருந்துகளும் அதிகமாக இருக்கின்ற நிலை இருக்கின்றது. அதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக நகரத்தை விட்டு வெளியிலே போனால், இது தேவையில்லை என்று சொல்கின்றார்கள். அங்கே போய் விழுந்தாலும் தலை அடிபடும். ஆக எங்கே போனாலும் தலையிலே அடிபடும் என்ற காரணத்தினால், கவசம் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறோம். டி.வி.எஸ். போன்ற சிறிய வண்டிகளைப் பொறுத்தவரை, தனியாக ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, வழக்குகளுடைய மொத்த எண்ணிக்கை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே நகரப் பகுதியிலே, சென்னையிலே மட்டும் எத்தனை? மற்ற மாவட்டப் பகுதிகளில் அப்படிப்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா, அதிகமாக இருக்கின்றனவா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். இந்தத் தலைக்கவசம் அணிகின்றதனாலேயே ஆக்சிடெண்ட் ஏற்படுகின்றபோது, அதனாலேயே ஆபத்து ஏற்படுகிறது என்று பத்திரிகையிலே வந்திருக்கின்றதே. அது இல்லாமல் இருந்தால், அவர் காப்பாற்றப்பட்டிருப்பார் என்றுகூட கட்டுரை வந்திருக்கின்றதே. இதையெல்லாம் அரசு ஆய்வு செய்திருக்கின்றதா?

அப்படி ஆய்வு செய்தால் அதை விட்டுவிட நடவடிக்கை எடுக்குமா? இன்னமும் அப்படி ஆபத்து வராத அளவுக்கு கவசம் அணிவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, எங்கெங்கே எவ்வளவு வழக்குகள் என்ற விவரங்கள் இங்கே இல்லை. சென்னை மாநகரத்தில் அதிகமாக இருக்கக்கூடும். அதிலிருந்து 90,545 ரூபாய் அபராதத் தொகை வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து, தலைக் கவசம் அணிவதால், விபத்துக்கள் ஏற்படுகிறதென்று பத்திரிகையில் படித்ததாகச் சொன்னார்கள். இருக்கின்ற நிலைமை என்னவென்றால், தலைக் கவசம் வேண்டாமென்று முடிவெடுத்த பிறகு விபத்துக்கள் நடந்தால், தலைக் கவசம் இருந்தால், காப்பாற்றப்பட்டிருக்கக்கூடும் என்று எழுதுகிறார்கள். தலைக் கவசத்தைக் கொண்டு வந்துவிட்டால், அதனாலே விபத்து ஏற்படுகிறது என்று எழுதுகிறார்கள். இருந்தாலும், தலைக் கவசம் அணிந்து விபத்திலே இறப்பவர்களின் எண்ணிக்கை 2 சதவிகிதம் என்றால், தலைக் கவசம் இல்லாமல் இறந்தவர்கள் எண்ணிக்கை 50 சதவிகிதத்திற்கு மேலே வருமென்று தோன்றுகிறது. இருந்தாலும், விரிவாகப் பரிசீலித்து, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, தலைக் கவசம் அணிகிறவர்கள் சொல்கிற முக்கியமான புகார், அது அணிவதால் காது கேட்பதில்லை என்பதுதான். பின்னாலிருந்து வரும் வாகனங்கள் எழுப்பும் ஒலி கேட்பதில்லை என்று சொல்லுகிறார்கள். அந்தத் தலைக் கவசம் காதை மறைக்கும் அளவுக்கு இருப்பதாக செய்யப்படுகிறது. ஆகவே தலைக் கவசம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளிடம் அதன் வடிவமைப்பை மாற்றி, ஒலி கேட்கும் வகையிலும், அதே சமயத்தில் காதுக்குப் பாதுகாப்பாக அமையுமாறும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே உருவாக்குவதற்கு தக்க அறிவுரைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் குறைபாடு சொல்லப்பட்டது. அதைப்பற்றி நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கெனவே பரிசீலனை செய்து, நம்முடைய சேரன் போக்குவரத்துக் கழகத்திலேயே தலைக் கவசத்தைத் தயார் செய்கிறார்கள். அதிலேகூட இதற்குப் 'ப்ரொவிஷன்' செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே யார் யாருக்குச் சொல்ல வேண்டுமோ அவர்களுக்குச் சொல்லி, அந்தப் ப்ரொவிஷனை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1986).

2. 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1986).

3. 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1986).

4. தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1986).

5. தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1986).

6. தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1986).

7. தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986).

## 3. கவன ஈர்ப்பு.

**(1) திருச்சி நகராட்சியில் இப்ராஹிம் பார்க் லைனில் முன்னறிவிப்பு ஏதுமின்றி பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்த கடைகளை நகராட்சி அதிகாரிகள் காலி செய்ததினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.**

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

"திருச்சி நகராட்சியின் அனுமதி பெற்று இப்ராஹிம் பார்க் லைனில் பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்த கடைகளை முன்னறிவிப்பு ஏது மின்றி நகராட்சி அதிகாரிகள் காலி செய்ததினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மேலவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, விவர அறிக்கையில் அதிகாரிகள் அளித்திருக்கிற விவரங்கள் உண்மைக்கு மாறானதாகவும், நியாயமற்ற முறையிலும் அமைந்திருக்கின்றன என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதில் பல ஆண்டுகளுக்கு முன்பு அஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு என்பதைச் சொல்லத் தயாராக இல்லை. அங்கே 25 ஆண்டுகளுக்கு முன்பு நகராட்சியிடம் வாடகைக்கு எடுத்து, பழைய இரும்பு வியாபாரிகள் அங்கே வியாபாரம் செய்து வருகிறார்கள். எனவே அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல. அதனால் 6 அடி அகலத்திற்கு சாமான்களைப் பரப்பினார்கள் என்று சொல்லி, அதற்கு வாடகை போட்டு, ஒவ்வொருவரும் 93,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லி, நிபந்தனை போட்டு, நெருக்கடி ஏற்படுத்தி, அவர்கள் எல்லாம் உடனடியாக அஸ்பெஸ்டாஸ் ஷெட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்போது சொல்லுகிறார்கள், ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு செய்தோம், அஸ்பெஸ்டாஸ் ஷெட்டை எடுத்துக் கொண்டு போய்விட்டோம் என்று. அவைகளை அகற்ற வேண்டுமென்று முடிவு செய்ததால்தான், இப்படி அகற்றப்பட்டிருக்கின்றன. அதுதான்

---

@ 373-378 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(முற்பகல் 10-30)

உண்மை. அப்படித்தான் நடந்திருக்கிறது. மனச்சாட்சி உள்ள அதிகாரிகளாக இருந்திருந்தால், ஏழை எளிய வியாபாரிகளின் கடைகளை அகற்றி, அவர்களின் வயிற்றில் அடித்திருக்க மாட்டார்கள். அடித்து விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பார்களா என்றால், அதுவும் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இல்லை. அந்த அளவுக்கு அதிகாரிகள் நாணயம் அற்றவர்களாக நடந்து கொண்டிருக்கிறார்கள். நகராட்சியில் மாற்று இடம் இல்லை என்கிறார்கள். காரணம் மனதில் இடம் இல்லை. ஆகவே நகராட்சியில் இடம் இல்லை. 25 ஆண்டுகளாக நாணயமாக வியாபாரம் செய்துகொண்டு வாழ்கிற அந்த வியாபாரிகள் கடைகளை நாணயம் இல்லாத வகையில் அகற்றிவிட்டார்கள். ஆகவே அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க அமைச்சரே முயற்சி எடுத்து, நகராட்சி அதிகாரிகளுக்கு ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பழைய இரும்பு வியாபாரம் செய்பவர்கள் எல்லாம் ஏழைகள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. நல்ல வியாபாரம்தான். நீண்டகாலமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். நன்றாக சம்பாதித்தார்கள், சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை வருடங்களாக ஆக்கிரமிப்பு இருந்தது என்று அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 25 ஆண்டுகளாக இருந்திருக்கிறார்கள். நகராட்சியின் இடத்தில் 25 ஆண்டுக் காலமாக அவர்கள் வியாபாரம் செய்து வந்திருக்கிறார்கள் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவற்றை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் வியாபாரம் செய்ய மாற்று இடம் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதுகுறித்து என்னிடம் பேசுவதற்காக அந்த வியாபாரிகள் பிரதிநிதிகளை அழைத்து வந்து என்னைச் சந்தித்தார்கள். மாற்று இடம் தர முடியுமா என்று பரிசீலனை செய்யும்படி அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறேன். அதுபற்றிய தகவல் இன்னும் வரவில்லை. தகவல், வந்ததும், திரு. சுப்பு அவர்கள் என்னைச் சந்தித்தால், என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. க. சுப்பு:** ஒரே ஒரு தகவல். அதிலே சொல்லியிருக்கிறார்கள், கார் ஷெட்டுக்கு விடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வாடகைக் கார் வைத்திருப்பவர்கள் அங்கே கார்களை நிறுத்த விரும்ப

## திருச்சி நகராட்சியில் இப்ராஹிம் பார்க் லைனில் முன்னறிவிப்பு ஏதுமின்றி பழைய இரும்பு வியாபாரம் செய்த வந்த கடைகளை நகராட்சி அதிகாரிகள் காலி செய்ததினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

[திரு. க. சுப்பு] [1986 ஜனவரி 28

வில்லை. பழைய இரும்பு வியாபாரம் நடத்த குத்தகைக்கு அந்த இடம் விடப்பட்டிருந்தது. இப்போது அதை ஆக்கிரமிப்பு என்று சொல்லி அதிகாரிகள் அகற்றிவிட்டார்கள். அது ஆக்கிரமிப்பு இல்லை. ஆக்கிரமிப்பு இல்லாமல், குத்தகைக்கு எடுத்து வியாபாரம் செய்து வந்தவர்களை அகற்றியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை என்ற எண்ணத்தில், இதைப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (2) அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் சட்டக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப் படாதது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும், சட்டக்கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்படாதது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும், சட்டக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நீட்டிக்கப்பட்டுவிட்டன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, என்னுடைய எட்டாண்டுக் கால இந்த அவையின் அனுபவத்தில், இவ்வளவு ரத்தினச் சுருக்கமான ஒரு பதிலை, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலாக யாரும் அளித்ததாக வரலாறு இடையாது. இன்றைக்குக் கல்வியமைச்சர் அவர்கள் திருக்குறளைப் போல், ஒரு பதிலை இங்கே அளித்திருக்கிறார்கள். இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரச்சினையை முடித்து விட்டார்கள். கேட்கப்பட்டதைக் கொடுத்துவிட்டார்கள். நான் பாராட்டுக்காகத்தான் சொல்கிறேன். சலுகைகள் கொடுக்கப்பட்டு, இந்தப் பிரச்சினை முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோலவே, ஒவ்வொரு பிரச்சினையும் தீர்க்கப் படுமேயானால், நலமாக இருக்கும்.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பாராட்டுவதாக இருந்தால், "பாராட்டப்போகிறேன்" என்று முன்னாடியே சொல்லிவிட்டால் உறுப்பினர் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.



1986 ஜனவரி 28]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒன்றே ஒன்று சொல்கிறேன். கல்லூரி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்தச் சலுகைகள் விரிவாக்கப்படவில்லை என்ற கோரிக்கைகளை அவர்கள் வைத்து, பத்திரிகைகளில் அது வந்து, பிறகு இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்ததற்குப் பின்னாலேதான், உடனடியாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல், முதன் முதலாக அரசு ஆணை வழங்கும் போதே, எல்லோருக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கும்படி ஆணை வழங்கினால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் வர வாய்ப்பிருக்காது. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளில் ஆசிரியர்கள் இருப்பதால், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஆணைகள் வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டு விடுகிறது. இக்கால தாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இப்போது அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் பட்டியல் இருக்கிறதா? அப்படி சட்டக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிற விபரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இடைக்கால நிவாரணம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அடுத்து, அரசின் சட்ட முன்வடிவுகள். அனைத்துச் சட்ட முன்வடிவுகளும் ஒரே பொருளைப்பற்றி இருப்பதால், அவை ஒன்றாகவே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விவாதத்திற்குப் பின், தனித்தனியாக நிறைவேற்றப்படும்.

(முற்பகல் 10-35)

1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) மற்றும் உள்ள சட்ட முன்வடிவுகளையும் எடுத்துக்கொண்டதாக மாண்புமிகு அமைச்சர் பேசலாம்.

[1986 ஜனவரி 28

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(2) 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்;

(3) 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @@@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 378-379 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 379-380 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@@ 380 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 ஜனவரி 28]

(4) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் (நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(5) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) சட்ட முன்வடிவு @@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(6) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு @@@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 381 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 382 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@@ 383 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஜனவரி 28

**(7) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986).**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) மற்றும் ஆறு சட்ட முன்வடிவுகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு, அரசுத் தரப்பில் நான் பதில் சொல்லலாம் என்று கருதுகிறேன். இருப்பினும் அச்சட்ட முன்வடிவுகளைப்பற்றிச் சில கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986), 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 4/1986), 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 5/1986) மற்றும் தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) ஆகிய நான்கு சட்ட முன்வடிவுகளையும் பேரவையில் நிறைவேற்றிய வண்ணமாக, மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, மாநகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 30—11—1985 அன்று முடிவடையவிருந்தது. கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 11—12—1985 அன்று முடிவடையவிருந்தது. மதுரை

@ 384 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 ஜனவரி 28] [திரு. ப. உ. சண்முகம்]

மாநகாராட்சி தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 29—1—1986 அன்று முடிவடைய இருக்கிறது. இம்மூன்று மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்ற பின்பு நடத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. நகராட்சி மற்றும் ஊராட்சித் தேர்தல்கள் 23—2—1986 அன்று நடைபெறவிருக்கிறது. எனவே இத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டிய அவசியமேற்பட்டது. இதற்காக தமிழ் நாடு அவசரச் சட்டங்கள் 8, 9 மற்றும் 10 (1985) பிறப்பிக்கப்பட்டன. இந்த அவசரச் சட்டங்களுக்குப் பதிலாக முதல் மூன்று சட்ட முன்வடிவுகள் கொண்டுவரப்படுகின்றன.

நகராட்சித் தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 31—12—1985 அன்று முடிவடையவிருந்தது. நகராட்சித் தேர்தல்களை 23—2—1986 இல் நடத்த அரசு தீர்மானித்ததால், நகராட்சித் தனி அதிகாரிகளின், பதவிக்காலத்தை 31—3—1986 வரை நீட்டித்து தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு அவசரச் சட்டம் 11 பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக நான்காவது சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்களுக்கான அறிக்கை 17—1—1986 அன்று நகராட்சி அலுவலகங்களிலும் மற்றும் முக்கிய பகுதிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. நகராட்சித் தலைவர் தேர்தல்கள் கட்சி சார்பிலும், உறுப்பினர் தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையிலும் நடைபெறவிருக்கின்றன. இவ்விரு தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் 23—1—1986, 24—1—1986 மற்றும் 27—1—1986 ஆகிய தேதிகளில் நகராட்சி ஆணையர்களால் பெறப்படும் என்று முதலில் ஆணையிடப்பட்டது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பில் நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டதற்கேற்ப, வேட்பு மனுக்கள் பெறும் காலத்தை மேலும் 3 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; அதாவது 28—1—1986, 29—1—1986 மற்றும் 30—1—1986 வரை பெறப்படும். இதன் விளைவாக 31—1—1986 அன்று வேட்பு மனுக்கள் ஆய்வு செய்யவும், 3—2—1986 மாலை 3.00 மணி வரை வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ளவும், தேர்தல் கால அட்டவணை திருத்தப்பட்டது. ஆனால் தேர்தல் தேதியில் யாதொரு மாற்றமும் இல்லாமல் 23—2—1986 அன்று ஏற்கெனவே குறிப்பிட்டவாறு தேர்தல் நடைபெறும். வாக்கு எண்ணிக்கை 24—2—1986 அன்று நடைபெறும்

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஜனவரி 28

நகராட்சித் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை 31—3—1986 வரை நீட்டித்து சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டாலும், தேர்தல்கள் முடிந்தவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் உறுப்பினர்களும் பதவி ஏற்பதற்கு ஏற்றவாறு, இத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தைக் குறைக்கவும் சட்டத்தில் ஏற்கெனவே வகை செய்யப்பட்டுள்ளது. எனவே சென்னை, கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க கொண்டுவரப்பட்டுள்ள இந்த நான்கு சட்ட முன்வடிவுகளையும் இம்மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986), 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) மற்றும் 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) ஆகிய மூன்று சட்ட முன்வடிவுகளை இம்மேலவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு முன்னதாக ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கான தேர்தல்களை 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்த தீர்மானித்தது. ஆனால் சில நிர்வாகக் காரணங்களுக்காக, இந்தத் தேர்தல்கள் நிர்ணயித்தவாறு நடத்த இயலவில்லையாதலால், இந்தத் தேர்தல்கள் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் தள்ளி வைக்கப்பட்டது. ஆகையால் மேற்கூறிய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குப் பிறகும் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிவரை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது சட்டமன்றம் நடைபெறவில்லையாதலால், தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு அவசரச் சட்டங்கள் 3, 4 மற்றும் 5 ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு, 13—9—1985 நாளிட்ட தமிழ் நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. தற்போது ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கான தேர்தல்களை 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடத்த அரசு தீர்மானித்துள்ளது. எனவே மேற்சொன்ன தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மீண்டும் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்குப் பிறகு 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம்



1986 ஜனவரி 28] [திரு. ப. உ. சண்முகம்]

தேதிவரை நீட்டிக்க அரசு முடிவு செய்தது. 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் தேதியன்றுதான் சட்டமன்றம் கூட இருந்ததாலும், தனி அதிகாரிகளின் பதவிக்காலம் 31—12—1985 ஆம் தேதியன்று முடிவடைய இருந்ததாலும் அவர்களின் பதவிக் காலத்தை 31—3—1986 ஆம் தேதிவரை நீட்டித்து தமிழ் நாடு 1985 ஆம் ஆண்டு அவசரச் சட்டங்கள் 16, 17 மற்றும் 18 ஆளுநர் அவர்களால் 23—12—1985 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டு, 26—12—1985 ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. இந்த மூன்று சட்ட முன்வடிவுகளும் மேற்சொன்ன அவசரச் சட்டங்களை சட்டமாக்க விழைகிறது. தேர்தல் நடப்பதற்கு ஏற்ப தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தைக் குறைக்க சட்டங்களில் வகை உள்ளது.

எனவே, இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் இம்மேலவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானங்கள்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** துணைத் தலைவரவர்களே, சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளினுடைய சட்டத் திருத்த முன்வடிவின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை முதலிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அரசியல் வாழ்விலேயாகட்டும், பொது வாழ்விலேயாகட்டும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு சில கீர்த்திகள் உண்டு. அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல இன்றைக்கு அவர்கள் ஒரு புகழைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். வருகிற பிப்ரவரி 23 ஆம் தேதி பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் முறையாக தலைவர்களை எல்லாம் தேர்ந்தெடுக்கக்கூடிய தேர்தலை நடத்த முன்வந்து எப்படியும் உறுதியாக நடத்திவிடுவேன் என்ற அடிப்படையிலே அந்தத் தேர்தலை மட்டும் முடித்து விட்டால், உள்ளபடியே இதைவிட அவருக்கு ஒரு பெரிய புகழ், அரசியல் வாழ்க்கையிலே நிச்சயம் அவருக்குக் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், பல அமைச்சர்கள் இந்தத் துறையிலே இருந்தார்கள். முதலிலே மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் இருந்தார்கள். அவர்கள் எத்தனையோ முறை தேர்தல் வரும், நடைபெறும் என்று சொல்லி, கடைசியிலே அவர்தான் இந்த அவையை விட்டு வெளியிலே சென்று



விட்டார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்கள் இந்தத் துறைக்கு வந்து, இந்தத் தேதியிலே தேர்தல் நடைபெறும், இப்போது நடைபெறும் என்று சொல்லி, அதற்குப் பிறகும் தேர்தல் நடைபெறாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே கூட இரண்டு முறைகள் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. இருந்தாலும் உறுதியாக பிப்ரவரி 23 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்கின்ற அளவிலே, இந்தத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியில் உள்ளபடியே நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே என்ன ஒரு சிரமம் என்றால், வாரப் பத்திரிகைக்காரர்களுக்குச் சிரமமாக இருக்கும். ஏனென்று சொன்னால், இந்த ஆண்டிலே வாரப் பத்திரிகைகள் எல்லாம் ஒரு மிகப் பெரிய நகைச்சுவைத் துணுக்கு என்று போட்டால், பஞ்சாயத்துத் தேர்தலைத் தான் போடுவார்கள். எந்தப் பத்திரிகையை எடுத்தாலும், அதிலே வருகின்ற மிகப் பெரிய நகைச்சுவைத் துணுக்காகச் சொல்வது இந்த பஞ்சாயத்துத் தேர்தலைத்தான். ஒரு நீதிபதி கேட்பார், ஒரு குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதித்துவிட்டு, "உன்னுடைய கடைசி ஆசை என்ன? அதை நிறைவேற்றிவிட்டு உன்னைத் தூக்கிலிடப் போகிறேன்" என்று சொல்வார். தூக்குத் தண்டனை பெற்ற கைதி எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று கருதி, "நான் பஞ்சாயத்துத் தேர்தலிலே ஓட்டுப் போட்ட பிறகு, என்னைத் தூக்கிலிட வேண்டும்" என்று சொல்வான். உடனே நீதிபதி முழிப்பார். அப்படியெல்லாம் வாரப் பத்திரிகைகளில் துணுக்கு எழுதுவார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் தேர்தல் முடிந்து விட்ட பிறகு சிரமம் ஏற்படும். ஏனென்றால் அதுபோல் அவர்கள் துணுக்குகள் எழுத முடியாது. அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் சிறந்த முறையிலே இந்தத் தேர்தலை நடத்திட முன்வந்திருந்தாலும், மக்களுக்கு சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. ஏனென்று சொன்னால், இன்றைக்கு பல பேர் பேசுகின்றபோது, இன்றைக்கு தேர்தல் நின்று விடுமா, நாளைக்கு அறிவிப்பு வந்து விடுமா என்று அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் தேர்தலுக்குச் சென்று, வாக்குகளை அளித்து, அந்த வாக்குப் பெட்டிகள் உரிய இடத்திலே சேர்ந்து, எண்ணப்பட்டு, தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாற்காலியிலே அமர்கின்ற வரையிலே மக்களுக்குச் சந்தேகம் இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் அந்த அளவுக்கு கடந்த கால வரலாறு அமைந்து விட்டது. இருந்தாலும் உறுதியாக இந்தத் தேர்தலை பிப்ரவரி 23 ஆம் தேதி நடத்த

முன் வந்ததற்காக எங்களுடைய உண்மையான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே மாதிரி நகர சபைகளுக்கு, கோவை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி ஆகியவைகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும். மதுரை மாநகராட்சிக்கு மட்டும் 6 மாதம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிச் சொல்லும் போது அதிலே சொல்லியிருக்கிறார்கள்.

"The Government has decided to conduct the election in the first instance for the Panchayat Union Councils and Municipal Councils in the State in February 1986 and to hold elections to Corporation Councils thereafter."

அதாவது முதற் கட்டமாக இந்தத் தேர்தல்களை முடித்துவிட்டு அடுத்த கட்டமாக கோவை, மதுரை, சென்னை ஆகிய மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்த இருக்கிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏன், இதையும் சேர்த்தே நடத்திவிடலாமே. ஒரே நேரத்திலே எல்லாத் தேர்தல்களையும் நடத்தினால், இன்னும் அமைச்சர் அவர்களுக்கு நிரம்பப் புகழ் கிடைக்கும். ஒரே நேரத்திலே ஜனநாயகத்திலே அத்தனை அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்திய பெருமை அவர்களுக்குக் கிடைத்திருக்கும். இருந்தாலும் பாதிப் பாதியாக நடத்த அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். ஆனால் இப்படி நடத்த முன்வராத காரணத்தால், சென்னையிலே இருக்கிற ஒருசில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல் நடைபெறாமல், அதிகாரிகள் கையில் மாநகராட்சி இருக்கின்ற காரணத்தாலே, சென்னையில் ஒரு வேலை கூட நடைபெறவில்லை. அதற்கு எத்தனையோ குறிப்புகளை நான் சொல்ல முடியும்.

(முற்பகல் 10-45)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் இப்போது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தயவு செய்து கடந்த ஓராண்டுக் காலமாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள 3-வது பக்கத்தை மட்டும் பார்த்தாலே போதும். சென்னையைப்பற்றி அவர் நன்கு உணர்ந்துகொள்ளலாம். இதற்காக அந்தப் பத்திரிகை தனது 3-வது பக்கத்தையே ஒதுக்கியிருக்கிறது. "மெட்ராஸ், தி சிடி ஆஃப் நெக்லக்ட்" என்ற தலைப்பிட்டு அழகான படங்களைப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் காட்ட வேண்டுமென்றே நான் அதற்குரிய கட்டிங்குகளைக் கொண்டு வந்து காட்ட எண்ணினேன். அது சிரமமானது என்பதால் கடந்த 10 நாட்களாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வந்துள்ள



கட்டிங்குகளை மட்டும் நான் ஏற்கெனவே அவைத் தலைவரின் அனுமதியோடு இங்கே கொண்டு வந்திருக்கிறேன். சென்னை மாநகராட்சியில் அதிகாரிகள் நடத்தும் நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக ஏற்பட்டிருக்கிற பல்வேறு சீர்கேடுகளைக் குறித்து படங்களோடு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தேதிவாரியாகக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது 13—1—1986 அன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் 3 வது பக்கத்தில் வெளியிடப்பட்ட படம். மாநகராட்சி அதிகாரிகளின் கையிலே இருப்பதால், இத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன என்றுகூட அமைச்சர் அவர்கள் சொல்லலாம். கொசுத் தொல்லையானாலும் சரி, மற்ற நிர்வாகச் சீர்கேடுகளானாலும் சரி, அவர்களாலே சரியாகக் கவனிக்கப்படவில்லை என்று சொல்லலாம். ஆனால் பொதுவாக உள்ள ஒரு பத்திரிகை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. இந்தப் படத்தில் சென்னை அயனாவரம் பகுதியில் சோமசுந்தரம் முதல் தெருவில் தண்ணீர் தேங்கி இருப்பதைப் படம் எடுத்துப் போட்டு கீழ்க்கண்டவாறு அது எழுதியிருக்கிறது :—

"Madras might be a distant provincial city, as former American Ambassador John Kenneth Galbraith wrote in the New York Times recently, but it is home to around six million of us, my estimate. We ought to be able to make a better job of it than this. Staff Photographer Vino John took this picture of Somasundaram First Street in Ayyanavaram and reports that although Corporation workers have been there to attend to the problem, the situa ion does not change and this by the way is drain water—not rain water, stinking, stagnant that does not seem to want to go away."

அதாவது சென்னை மாநகராட்சியின் பணியாளர்கள் அங்கே இருந்தும் கூட, அவர்கள் இந்தப் பணிகளைக் கவனிக்காத காரணத்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, இந்தப் படத்தை வெளியிட்டிருக்கிறது. (மாண்புமிகு உறுப்பினர் அந்தப் படத்தை எடுத்து அவைக்குக் காட்டினார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையில் வந்ததை அவைத் தலைவரின் அனுமதியோடு இங்கே குறிப்பிட்டுப் பேசுவது அல்லது படிப்பது என்பது சரியாக இருக்கலாம். ஆனால் அதற்காக அந்தப் படத்தை ஒரு எக்சிபிட் போல் அவையில் எடுத்துக் காட்ட முடியாது.

**அமைச்சர் அவர்களிடம் அந்தப் படத்தைக் காட்ட** விரும்பினாலும், அதைத் **தலைவர் மூலமாகக் கொடுத்தால், அவரிடம்** சேர்க்கப்படும். எனவே **'எக்சிபிட்' போல் எடுத்துக்காட்டுவது சரியல்ல** என்பதைத் **தெரிவித்துக்** கொள்கிறேன்.

திரு. மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். தங்கள் மூலமாகவே அமைச்சர் அவர்களுக்குத் தர விரும்புகிறேன், சோமசுந்தரம் முதல் தெரு என்பது அயனாவரம் பகுதியில் பொதுவாக மழைத் தண்ணீர் வந்து தேங்குகிற பகுதி அல்ல. ஆனால் டிரெயின் வாட்டர் எனப்படும் சாக்கடைத் தண்ணீர் அங்கே தேங்கியிருக்கிறது. அதைத்தான் 13—1—1986 அன்று வெளியிடப்பட்ட படத்தில் சொல்லியிருக்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை. இதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாநகராட்சியின் நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக மக்கள் படுகிற அவதி குறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது 21—1—1986 அன்றையதினம் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் வெளிவந்த படம். அதாவது மாநகராட்சி அதிகாரிகள் பல்வேறு ஆக்கிரமிப்புகளைக் கட்சி வித்தியாசமின்றி அகற்றியதாகச் சொல்லப்படுகிறது. அதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. அப்படி அகற்றியதற்குப் பின்னாலே இன்றைக்கு என்ன நிலைமை என்றால் தியாகராய நகரில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு இடத்தைக் குறித்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை இந்தச் செய்தியைப் படத்தோடு வெளியிட்டிருக்கிறது. அதில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"Encroachers not in a blind alley."

"The operation clearance of the Corporation has come full circle during the much publicised encroachment removal last year; the civic body rediscovered the conservancy lane running parallel to Ranganathan Street, T. Nagar after nothing less than 30 years. To-day the lane sports a row of unauthorised shops signifying the quiet burial given to the anti-encroachment drive.

'One can carry on here so long as the prtsent Government is in power' says the one-shop-keeper of Annai Sathya Super Market which has come up in the lane."



இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொடுக்க விரும்புகிறேன். ஆக்கிரமிப்புகளை அகற்றியதாகச் சொல்லப்பட்ட நிலையில் இன்றைக்கு இருக்கும் நிலைமை இது, எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கட்சிப் பாகுபாடு ஏதுமில்லாமல், அனைத்து ஆக்கிரமிப்புகளும் எடுக்கப்பட்டுவிட்டன என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் சத்தியா சூப்பர்மார்கெட் என்று ரங்கநாதன் தெருவுக்குப் 'பேரலலாக' உள்ள இடத்தை ஒருவர் ஆக்கிரமித்துக் கொண்டு கடை நடத்திவருகிறார்.

அதற்கு அடுத்து இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முதலில் சொன்னது சாக்கடை நீர் தேங்கியிருக்கும் நிலைமை பற்றியது. அடுத்தது ஆக்கிரமிப்பைப்பற்றியது. இது கொசுத் தொல்லையால் கஷ்டப்படும் சென்னை நகரில் கொசு எப்படி உற்பத்தியாகிறது என்பதை விளக்குகிற வகையில் இருக்கிறது. இது 25—1—1986 தேதியிட்ட "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் வெளிவந்த படம். இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று படிக்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6 மாதங்களுக்கு முன்பு இங்கே அவையில் ஒரு செய்தியைச் சொன்னார். அதாவது சாந்தோம் பகுதியில் உள்ள இந்த இடத்தில் ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டப்படும் என்று சொன்னார். அந்த இடத்தைத்தான் கொசு உற்பத்தியாகும் இடமாக இருக்கிறது என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டு கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறது :—

"This site, the backwaters of Santhome where the City Corporation has proposed to build a shopping complex has, since the announcement by the Local Administration Minister P. U. Shanmugam in the Assembly six months ago, become a breeding ground for mosquitoes."

(முற்பகல் 10-50)

இது நேற்று வந்தது. 27—1—1986 தேதி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிக்கையில் "மதறாஸ் சிட்டி ஆஃப் நெக்லெக்ட்" என்ற தலைப்பின்கீழ் அண்ணா நகர் பகுதியில் தங்கம் காலனியைப்பற்றி வந்திருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் ரோடு போட வேண்டும் என்று மாநகராட்சியிடம் பல்வேறு முறை முறையிட்ட பிறகு, ஒரு 'தின்' ரோடு—அதாவது லேசாக ஏதோ தாலி தார் ரோடு என்று போட்டார்கள். அதனால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அடுத்த நாளே சாக்கடை கட்டப் போகிறோம் என்று சொல்லி நடு ரோடில் கால்வாய் வெட்டி இரண்டு பக்கமும் மண்ணைக் குவித்துப் போட்டுவிட்டதால் இன்றைக்கு அங்கேயுள்ள மக்கள் அதில் தேங்கியுள்ள

தண்ணீரில்தான் நடந்து செல்கிறார்கள். இதை ஹாரி மில்லை படம் பிடித்து போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 13ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரையில் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில் வந்த செய்திகள் இவை. அவர்கள் இதற்காகவே மூன்றாவது பக்கத்தை ஒதுக்கி, அதிலே "மதராஸ் சிட்டி ஆஃப் நெக்லக்ட்" என்று படம் பிடித்து போட்டு வருகிறார்கள். அதிலே ஆக்கிரமிப்பு பற்றிப் போடுகிறார்கள், கொசு உற்பத்தி சாதனங்களைப் பற்றிப் போடுகிறார்கள், தண்ணீர் தேங்கியிருப்பதைப் போடுகிறார்கள். ஆனால் எந்தவிதமான நிவாரண நிகழ்ச்சியும் நடைபெறாமல் இருக்கிறது. மாநகராட்சிக்குத் தேர்தல் நடந்திருந்தால், மாநகராட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள், அவர்களிடம் மக்கள் நிச்சயமாகச் சென்று பயமுறுத்துவார்கள். "எந்தக் கட்சியாக இருந்தாலும், நாங்கள்தானே வாக்களித்தோம், ஆகவே இதைச் செய்வது உங்கள் கடமை, நீங்கள் செய்ய வேண்டும்" என்று கேட்டால், அவர்களும் கவனிப்பார்கள். ஆகவே இப்படி 6 மாத காலம் பதவிக் காலத்தை நீட்டிக்கிறோம் என்று சொல்லும்போது, எங்களுக்கு பயம் ஏற்படுகிறது. பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தியே தீருவோம் என்று உறுதியாக அரசு சொல்லும்போது, அதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் மாநகராட்சித் தேர்தலையும் சேர்த்தே நடத்தியிருக்கலாம். யார் வந்தாலும் பரவாயில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால், மாநகராட்சியில் இந்த அளவிற்கு சீர்கேடுகள் நடைபெறாது. மதுரையிலும், கோயம்புத்தூரிலும் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும். இருந்தாலும் இந்த ஐந்து செய்திக் குறிப்புகளை கவனிப்பதன் மூலம் மாநகராட்சிகள் தேர்தலை நடத்த வேண்டும் என்ற உறுதி இந்த அரசாங்கத்திற்கு வர வேண்டும் என்ற அடிப்படையிலே இதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 6 மாத கால நீட்டிப்பு உள்ளபடியே தேவையற்றது. நடைபெறவிருக்கும் தேர்தலோடு இந்தத் தேர்தலையும் நடத்த முன்வந்திருக்கலாம் என்று எடுத்துச் சொல்லி, இந்த அரசின் சட்ட முன்வடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. ஜேப்பியார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிற சட்ட முன்வடிவை ஆதரித்துப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துக்களை இங்கே தெரிவித்தார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1972 அக்டோபரில் ஆரம்



பித்தது. அது ஒரு இயக்கம் இல்லை, அதற்கு ஆளே இல்லை, அதற்கு அமைப்பு இல்லை, அதிலே ஜனநாயக முறைப்படி தேர்தல் இல்லை என்றெல்லாம் அந்த உறுப்பினர் சார்ந்துள்ள கட்சியைச் சார்ந்த தலைவர்கள் எல்லாம் தினமும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, 6 மாத காலத்திற்குள் திட்டமிட்டு தமிழகம் முழுவதற்கும், இன்னும் சொல்லப் போனால் பிற மாநிலங்களில் உள்ள அனைத்திந்திய அண்ணா தி.மு.க. கட்சிக்கும் தேர்தலை நடத்தி முடித்து வெற்றி கண்டார். அவர்தான் இப்போது உள்ளாட்சித் தேர்தலையும் நடத்த முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவரைப் பாராட்டினார்கள். அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்.

சென்னை மாநகராட்சியைப்பற்றிப் பேசும்போது, சில பத்திரிகைக் குறிப்புகளை எடுத்து வைத்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி வைப்பதற்கு முன்பும் சரி, துவக்கி வைத்த பிறகும் சரி, அவர் மணிக் கணக்காகப் பேசியிருந்தாலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலே "Anna also spoke" என்று போட்டு முடித்து விடுவார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளைப் படித்து இந்த நாட்டிலே ஆட்சி செய்ய முடியுமா என்றால் முடியாது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகையை சுட்டிக் காட்டியதற்குப் பதிலாக தி.மு.க. கொள்கை ஏடாக இருந்திருந்தால், சந்தோஷப்பட்டிருப்பேன். ஏதாவது பாயிண்ட் கிடைத்துவிட்டால், அதைச் சொல்லிவிட்டு அந்தப் பத்திரிகையைப் பாராட்டுவார்கள். அவர்களுக்குப் பாதகமாக செய்தி வந்தால், "எங்களுக்குத் தெரியாதா, அந்தப் பத்திரிகையை நடத்துவது யார் என்று?" என்று பேசுவார்கள். வேலை செய்பவர்கள்கூட ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதுவார்கள். அவர்கள் வாழும் பகுதியில் கொசு இருக்கிறது என்றால், அவர்களால் நிம்மதியாக இருக்க முடியாது. ஆகவே அதற்காக அவர்கள் பத்திரிகையைப் பயன்படுத்தும் காலம் இது என்பதை அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக நகரங்களில் ஏரி போன்ற இடங்களில் தண்ணீர் இருக்கும். அதிலே குப்பைகளைக் கொட்டி நிரப்பி கட்டிடம் கட்டுவது, வழக்கம். குப்பைகளைக் கொட்டினால், கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்குவது பத்திரிகைகளின் செயல்தான். என்னவென்றால் அவர்கள் மட்டும் பாதித்து விடக்கூடாது. இப்போது தியாகராயநகர்பற்றிச் சொன்னார்கள்.

[திரு ஜேப்பியார்] [1986 ஜனவரி 28

(முற்பகல் 10-55)

'தி. நகர்' என்று பெயரை மாற்றி வைத்திருக்கின்றார்கள். திராவிட பரம்பரையிலே வந்த பெயர் தியாகராய நகர். இந்தப் பத்திரிகைகள், ஆல் இந்தியா ரேடியோ, டெலிவிஷன் ஆகியவற்றிலே எல்லாம் 'தி நகர்'' என்று ஆகிவிட்டது. 'தி' என்றால் யார் என்று தெரியாத நிலை வந்துவிட்டது. 'தி.' என்பது தியாகராயர் என்பதும் திராவிடர் வரலாற்றின் தந்தை அவர் என்பதும் தெரியாமல் ஆகிவிட்டது. அவர் பெயரைச் சொல்வதே தவறு என்ற அளவில் ஷார்ட்டாக 'தி. நகர்' என்று போடப்படுகிறது. நாம் ஒரு பெயரை வைத்தோம். பத்திரிகை ஒரு பெயரை வைத்திருக்கின்றது. அது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும். அது நாளடைவிலே 'தி. நகர், தி.நகர்' என்று ஆகிவிட்டது. 'தி' என்றால் அது யார் என்று தெரியாமல் போய்விட்டது. அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். அன்னை சத்தியா கடை என்று சொன்னார்கள். அவர் மனம் புண்படக்கூடாது. நானும் பேசுவதிலே வருத்தப்படுகிறேன். காரணம் அவர் உயிரோடு இல்லை. அவர் கட்சியைச் சேர்ந்தவர். அவர் இறந்துவிட்டார். அன்னை அஞ்சுகம் என்று அங்காடிப் பெயரைப் போட்டு ஒரு கடைக்கு தினம் 10 ரூபாய் என்று வசூல் செய்து, அவர் சார்ந்திருந்த தலைவருடைய படத்தை அந்தக் கடையிலே கட்டாயமாகப் புகுத்தி, தினமும் ரூ. 10 வசூல் செய்து, அந்த வசூலை அந்தப் படம் மாட்டியவர்க்குக் கொடுத்தார் என்ற பிரச்சினை இங்கே இருக்கின்றது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்து 7, 8 ஆண்டுகள் ஆகின்றன. மாநகராட்சிக்கு அந்தப் பணத்தை இன்னும் செலுத்தவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு வாங்கி வைத்திருக்கின்றார்கள். முறையாகச் சேரவேண்டிய பணத்தைக் கூட ஏமாற்றுகின்றனர். அங்கே ஒரு படத்தை மாற்றியிருக்கின்றார்கள். அந்தப் படம் ஒரு அரசியல் கட்சித் தலைவருடைய படம். அதைப் பயன்படுத்துகின்றார் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு அந்த இடத்தைக் கண்டுபிடித்தார்கள் என்று சொன்னார்கள். மனிதர்கள் நடமாட முடியாத அளவுக்கு அந்த இடம் குப்பை கொட்டப்பட்டு இருந்த இடம். அந்தத் தெருவே மறைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தைக் கண்டுபிடித்தார்கள். இத்தனை ஆண்டுக்காலமாக ஒரு தெருவாகப் போகவே முடியாத அளவுக்கு இருந்த இடத்தை, குப்பைகளும் சாக்கடைகளுமாக இருந்த அந்த இடத்தைக் கண்டு பிடித்து சுத்தப்படுத்தி அதற்கப்புறம் வேலை அற்றவர்கள் அங்கே ஒரு



1986 ஜனவரி 28] [திரு. ஜேப்பியார்]

அங்காடியை வைத்து மற்றவர்கள் எல்லாம் போக வர வழிவகை செய்து வைத்திருக்கின்றார்கள். இதுதான் உண்மை என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்னை சத்தியா என்ற பெயரை வைத்ததனாலேயே அரசியல் நோக்கமாக இருக்கும் என்று நினைத்துச் சொல்கின்றார்கள். அதற்கு முன்னாலே இருந்தவர், கடைபோட்டு மாநகராட்சிக்குப் பணம் செலுத்தாமல், நீதிமன்றத்திற்குப் போய் ஒரு தடையுத்தரவை வாங்கிக் கொண்டு பல லட்சம் அல்ல, கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளை அடித்திருக்கின்றார்களே, அதற்கு என்ன பதில் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இப்போது மாநகராட்சிக்கு ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். அங்கே இருக்கின்ற கல்வித் துறையை நம் அரசாங்கமே நேரடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். நானும் அதை வரவேற்கிறேன். ரூ. 4, 5 கோடி மாநகராட்சிக்கு மிச்சப்படும். அரசு மேல் நிலைப் பள்ளிக்கூடமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை நான் வலியுறுத்துகிறேன். அதைப்போலவே, மாநகராட்சியிலே இருக்கின்ற மருத்துவ மனைகளுக்கு என்று ரூ. 2, 3 கோடி செலவாகிறது. அது டாக்டர்கள் சம்பளத்திற்காகவும், மருந்துச் செலவுகளுக்காகவும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் சென்னையிலே யாருக்காவது தலைவலி என்று வந்துவிட்டால் கூட, அவர்கள் பொது மருத்துவ மனைக்குத்தான் வந்துவிடுவார்கள். கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிகளை அரசு மருத்துவ மனைகளாக ஏற்றுக்கொண்டு, "அந்தந்தப்பகுதி மருத்துவமனையில் இருக்கின்ற மருத்துவர்கள் இந்த நோய்க்கு பெரிய மருத்துவ மனைக்குப் போகலாம் என்று சான்றிதழ் தந்தால், அவர்கள்தான் பெரிய மருத்துவ மனைக்கு வரலாம், மற்றவர்கள் வரக்கூடாது" என்று விதி இருக்க வேண்டும். அந்தந்தப் பகுதி மருத்துவ மனையிலேயே சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தேர்தல் நடத்தி வெற்றி காணுவார்கள். மாநகராட்சிக்குத் தேர்தல் நடக்கும் என்று அரசு சார்பிலே சொல்லியிருக்கின்றார்கள். அது நடந்தே தீரும். ஏனென்றால் இது நினைத்ததை முடிப்பவர் ஆட்சி. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தேர்தல்களை நடத்துவதிலே மிகவும் வேகமாக இருக்கின்றார்கள். அவரையும் வாழ்த்தி, அவரை இந்த நிலைக்கு உருவாக்கியிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களையும் வாழ்த்தி, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சி, மாநகராட்சித் துறை மீதான சட்ட முன்வடிவுகள் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் முன்பு இதே மாமன்றத்தில் கூறியது எனது நினைவுக்கு வருகின்றது. அப்போதே நகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்திவிட்டுத்தான் இந்த மாமன்றத்திற்கு வருவேன் என்று சொன்னார்கள். அப்போதே நாங்கள் பாராட்டினோம். இப்போதும் பெப்ரவரி 23 ஆம் தேதி தேர்தல் நடத்தப்போவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக அவர்களுக்கு என் அணியின் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஆணையாளர்கள், தனி அதிகாரிகள் அவ்வப்போது அங்கே மாறி வந்திருக்கின்றார்கள். கடந்த வருடம் சென்னையைப்பற்றிக் கூறும்போது, அப்போது ஆணையாளர் திரு. மலைச்சாமி என்பவர் இருந்தார். ஒரு நல்ல பணியை, ஆக்கிரமிப்பைத் தடுக்கும் பணிகளை நல்லமுறையில் செய்துகொண்டு வந்தார்கள். ஆனால் என்ன காரணம் என்று

(முற்பகல் 11-00)

தெரியவில்லை. உடனடியாக அவர் பதவியிலிருந்து மாற்றப்பட்டுவிட்டார். பெரிய பதவிகளில் இருக்கும் அதிகாரிகளை மாற்றும்போது, பின்னால் வரும் அதிகாரிகள் அங்கே வரும்போது, நமக்கும் இதுபோன்ற நிலை வருமோ என்று எண்ணி, அவர்கள் கடமைகளை ஆற்றத் தவறி விடுவார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களிடமும், தமிழக அரசிடமும் கேட்க விரும்புவது, பெரிய பதவிகளில் உள்ள அதிகாரிகளுக்கு குறிப்பாக நல்ல பணிகளைச் செய்யும் அதிகாரிகளுக்கு நல்லெண்ணத்தைக் கொண்ட அவர்களுக்கு உற்சாகமும், ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் பணி செய்யும்போது, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கடமையிலிருந்து மீறினால், அவர்களை மாற்றலாம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் அவர்கள் சென்னையிலுள்ள பல்வேறு பிரச்சினைகள்பற்றிச் சொன்னார்கள். கொசுத் தொல்லைபற்றிச் சொன்னார்கள். சென்னையில் கொசுக்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்தில் கொசுக்கள் நிறைய உற்பத்தியாகின்றன. கொசுக்களின் உற்பத்தியைத் தடுக்க சென்னை மாநகராட்சியில்



ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் செலவில் பெரிய இயந்திரத்தை வாங்கினார்கள். நமது அமைச்சரவர்கள் அந்தத் துறைப் பொறுப்பை ஏற்றபோது, கேள்வி நேரத்திலே, அந்த இயந்திரம் என்னவாயிற்று என்று கேட்டேன். அப்போது, 'நான் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிறேன், அது பற்றி விசாரிக்கிறேன்' என்று சொன்னார்கள். 'அந்த இயந்திரம் என்ன நிலையில் இருக்கிறது? அது பயனுள்ள நிலையில் இருக்கிறதா'? என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சிகளின் நிதி நிலைமை நல்ல நிலையில் இல்லை. இப்படி பெரியதொரு இயந்திரத்தை பல கோடி ரூபாய் செலவில் வாங்கி, அதை உபயோகப்படுத்தாமல் இருந்தால், எப்படி? அந்தப் பணத்தை மற்ற முன்னேற்றத் திட்டங்களுக்காகச் செலவழித்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அது குறித்தும் மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

அண்மையில் பத்திரிகையில் ஒன்றைப் பார்த்தேன். சென்னையில் ஐந்து கோடி ரூபாய்க்கு பெரியதொரு சாலை போடும் இயந்திரம் வந்துள்ளதாக அறிகிறேன். அது மாநகராட்சிக்குச் சொந்தமானதா அல்லது தனியாருக்குச் சொந்தமானதா என்று அறிய விரும்புகிறேன். அந்த இயந்திரம் குறிப்பாக சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகளைப் போடுவதற்காக வந்த இயந்திரம் என்று கேள்விப்படுகிறோம். அது மெரினா கடற்கரையில் இருக்கிறது. உபயோகமற்ற நிலையில் இருக்கிறது. எந்தக் கொள்கைக்காக அந்த இயந்திரத்தை நாம் வாங்கினோமோ அதற்கு அதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே மாநகராட்சிக்குச் சொந்தமான நேரு ஸ்டேடியம், எழும்பூர் ஸ்டேடியம் ஆகியவை இருக்கின்றன. இவைபற்றி நான் ஏற்கெனவே மாநகராட்சிகள் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திலே பேசும்போது, குறிப்பிட்டிருக்கிறேன். மாநகராட்சிக்குச் சில பணிகள் இருக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது அவர்கள் பணியல்ல. சாலைகள் போடுவது, பொதுமக்களுக்கு வேண்டிய நல்ல பல பணிகளைச் செய்வதுதான் அவர்களுடைய வேலை. தமிழக அரசு விளையாட்டு முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். விளையாட்டு மைதானங்களை—நேரு ஸ்டேடியம், எழும்பூர் ஸ்டேடியம்—தமிழநாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைத்தால், மேலும் அவர்கள் நல்ல முறையில் அவற்றைப் பராமரித்து, விளையாட்டுகள் முன்னேற்றத்திற்கு நல்ல பல ஆக்கப் பணிகளைச் செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பேசும்போதுகூட, அதுபோன்ற எண்ணம் இல்லை, விளையாட்டுத் திடல்களை அவர்களிடம் கொடுக்கும் எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். இந்த நேரத்தில் அவர்களிடம் வலியுறுத்திக் கேட்பது, மாநகராட்சி மக்களுக்குச் செய்ய வேண்டிய முக்கிய பணிகளைச் செய்யட்டும். விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திடம் விளையாட்டு மைதானங்களை ஒப்படைத்தால் நல்லது. தனியாரிடத்திலே அதைக் கொடுக்கச் சொல்லவில்லை. தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திடம்தான் ஒப்படைக்கச் சொல்கிறேன். அதனால் நிச்சயமாக விளையாட்டுகளை நல்லமுறையில் நடத்த முடியும். அவர்கள் நல்ல அரங்குகளைக் கட்டவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் அது உபயோககரமாக இருக்கும்.

(முற்பகல் 11-05)

குறிப்பாக மாநகராட்சியைப் பொறுத்தவரையில், ஒன்றைக் கூற விரும்புகிறேன். எழும்பூர் ஸ்டேடியத்தில் நெல்லை நண்பர்கள் கைப்பந்துக் கழகம் என்று இருக்கிறது. அவர்கள் அகில இந்தியப் போட்டிகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். கடந்த முறைகூட ஜப்பான் அணிக்கும், இந்திய அணிக்கும் பெரியதொரு போட்டியை நடத்தினார்கள். அப்போது பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவாயிற்று. அதை ஈடுகட்ட, 'டோனார்' டிக்கட் என்று போட்டார்கள். வியாபாரத்திற்காக அவர்கள் அந்தப் போட்டியை நடத்த வில்லை. 'டோனார்' டிக்கட்டுக்கும் மாநகராட்சி வரி வசூலிக்க வேண்டு மென்று கடிதம் எழுதியது. இன்னும் அதை வற்புறுத்திக் கொண்டிருக் கிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்வது, இதுபோன்ற போட்டிகளை நடத்துகிறவர்கள் மிகக் குறைவு. எனவே இப்படிப்பட்ட போட்டிகளை நடத்தும்போது, அவர்களுக்கு ஆதரவும், உதவியும் செய்ய வேண்டும். எனவே அவர்களுக்கு விதிக்கப் பட்டுள்ள வரியை நீக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் கேட்கிறோம். தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் நகராட்சியில் நிதி நிலைமை மிக மிக மோசமாக இருக்கிறது. அதனால் அங்கே பல்வேறு பணிகள், திட்டங்கள் தடைப்பட்டிருக்கின்றன. சாலைகள் போடுதல், மற்றும் பல வளர்ச்சிப் பணிகள் தடைப்படுகின்றன. மாவட்ட நிர்வாகம் பல்வேறு பொறுப்புக்களை ஏற்று, நடத்தி வந்தாலும், நகராட்சியில் நிதி நிலைமை சரியாக இல்லாததால் வளர்ச்சிப் பணிகள் தடைப்படுகின்றன.



கடந்த முறை ஏற்பட்ட புயல், வெள்ளத்தின்போது 5 இலட்சம் ரூபாய்தான் கடலூருக்குக் கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசும்போது, 5 இலட்சம் ரூபாய் போதாது; நிறைய நிதியைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன் வளர்ந்து வரும் நகரங்களுக்கு, குறிப்பாக தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள நகராட்சிகளுக்கு அதிக நிதி கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 25 ஆண்டுகளாகக் கேட்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தை கடலூரில் விரைவில் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பாதாளச் சாக்கடை இல்லாததால், கொசுக்கள் பெருகி, அதனால் மலேரியா போன்ற வியாதிகள் வருகின்றன. அதையெல்லாம் தடுக்க, அந்தத் திட்டத்திற்கு 5 கோடி ரூபாயானாலும் அதை ஒதுக்கி, வெகு விரைவில் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வட ஆற்காடு மாவட் டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தென் ஆற்காடு மாவட்ட நலனில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அண்மையிலே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஆலந்தூர் நகராட்சிக்கு பெரியதொரு கட்டிடத்தைத் திறந்தார்கள். அதற்காக அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்திலே கூறிக்கொள்வது, நான் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் பட்டதாரித் தொகுதி பிரதிநிதி என்ற முறை யில் கூறிக்கொள்வது, அந்த விழாவிற்கு எனக்கு இன்விடேஷன் கூட அனுப்ப வில்லை. அந்த விழாவில் பேச என்னை அழைக்க, வேண்டுமென்று எண்ண வில்லை. இந்த மாதிரி விழாக்களுக்கு அழைப்புகளை அனுப்ப வேண்டு மென்று சொல்வதோடு, இது போன்ற தவறுகள் நடக்கக்கூடாது என்று அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, சட்டமுன்வடிவு களை வரவேற்று, அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவுகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்துப் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக் களும் தாக்கலாகிவிட்டன . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சேர்த்துப் பேசலாமென்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாகப் பேச வேண்டுமென்று விரும்பினால், அப்படிப் பேசுவதற்கு எந்தவித ஆட்சேபணை

யும் இல்லை. எல்லாச் சட்டமுன்வடிவுகளும் ஒரே கொள்கையை உடைய தாக இருப்பதால், சேர்த்தே பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனியாகப் பேச வேண்டுமென்று நினைத்தால், அதில் பேச அனுமதிக்கலாம். ஆட்சேபணை இல்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல்களுக்கான வேலைகள் இன்றைக்கு வேகமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலேயே பாராட்டுவதற்காக, மாண்புமிகு அமைச்சரவர்கள் பகிரங்கமாகப் பாராட்டுகிறேன் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. எனக்கு இருக்கிற மகிழ்ச்சி எல்லாம், ஒரு நகர மன்றத் தலைவராக இருந்து, நீண்ட நெடுங்காலம் பணி ஆற்றியதன் விளைவாக அவர்கள் இந்தத் தேர்தலில் எந்த அளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் என்பதை நான் உணர்வேன். பொதுவாக நகராட்சிகள் என்று சொல்கிற நேரத்தில்,

(முற்பகல் 11-10)

சட்டமன்றப் பேரவையிலிருப்பதைவிட, மேலவையிலிருப்பதைவிட, நகராட்சிகளில் இருக்கிற பயிற்சி என்பது மிகப்பெரிய பயிற்சியாகும். அந்தப் பயிற்சியை அடிப்படையில் பெற்று வளர்ந்திருக்கிற ஒரு நல்ல அரசியல்வாதி என்ற முறையில், இன்றைக்கு அவர்கள் இந்தத் தேர்தலை நடத்துவதில் எவ்வளவு முனைப்பாக இருக்கிறார்கள் என்பது என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இப்படி தேர்தலுக்கான வேலைகள் அத்தனையும் நடைபெற்று, வேட்பாளர்களும் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கிற நிலையில்கூட, சில பேருக்கு சந்தேகம் இன்னும் தீரவில்லை. இவர்களுக்கு வந்திருக்கிற சந்தேக நோயைத் தீர்ப் பதற்கு மாத்திரை கிடைக்காமல் யாரிடமாவது மாத்திரை இருக்கிறதா என்று தேடுகிற நேரத்தில் மிகவும் வருத்தமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள்கூட இதற்கு மாத்திரை கண்டு பிடிக்க முடியாது. காரணம் இது நீண்ட நாட்களாக இருக்கிற வியாதி. எதை எடுத்தாலும் சந்தேகம். ஒரு பத்திரிக்கை காலையிலிருந்து மாலை வரை சந்தேகத்திலேயே இருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** துணைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதி மருத்துவத்தில் மருந்து இருக்கிறது. (சிரிப்பு)



**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தினகரன்' என்று ஒரு பத்திரிக்கை இருக்கிறது. அதன் ஆசிரியருக்கு இதை அறிவித்தால், மிகவும் உதவியாக இருக்கும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, பத்திரிக்கையின் பெயரைக் குறிப்பிடுவது எப்படிச் சரியாக இருக்கும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பெயரைச் சொல்லும்போது, இதை ஏன் சொல்லக்கூடாது?

**திரு. எஸ். ஆர். இராதா :** இவ்வாறு இன்னும் சந்தேகிக்கிற நிலை இருக் கிறது. இதற்கெல்லாம் ஒரு சட்டம் கொண்டுவருகிற நேரத்தில், அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்கிறதென்று சொன்னால், அதைச் சந்தேகித்துக் கொண்டே காரியங்களைச் செய்துகொண்டிருப்பதென்று சொன்னால், அது மக்களை எந்த அளவுக்குக் குழப்பத்தில் ஆழ்த்தும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பத்திரிக்கையில் "இன்றைக்கு நடக்காது, தடை வரு கிறது, அங்கே போகிறார்கள், இங்கே போகிறார்கள்" என்று சொல்கிற அளவுக்கு நிலைமை இருப்பதை உள்ளபடியே வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தலையே நடத்தவில்லை என்று பேசுகிறவர்களுக்கு நான் சொல் கிறேன். மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்தியவர்களே நாங்கள்தான். அதில் பல பேர் மேயர்களாக இருந்து ஆட்சி நடத்துகிற அளவுக்கு வசதி களை உருவாக்கியவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். ஆனால் இன்றைக்கு ஒருசிலர், எந்த இடத்தில் பேசினாலும்—திருமண விழாவாக இருந்தாலும் சரி, அல்லது கருமாதியாக இருந்தாலும் சரி—மாநகராட்சி, நகராட்சித் தேர்தல் நடக்காது என்று பேசிக்கொண்டிருக் கிறார்கள். அவ்வாறு பேசிக் கொண்டே வேட்பாளர்களையும் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. ஒரு பக்கம் வேட்பாளர்களை அறிவிக்கிறார்கள். மற்றொரு பக்கம் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகத்தையும் எழுப்புகிறார்கள். அவ்வாறு சந்தேகிப் பதாகச் சொல்லிக்கொண்டே, எப்படியாவது தனக்கு ஒரு சின்னம் வாங்கி யாகவேண்டும் என்று அந்தக் கட்சியில் இருப்பவர்கள் அலைந்து கொண்டிருக் கிறார்கள். இந்தத் தடவை நிச்சயமாகத் தேர்தல் நடக்கும் என்று உறுதி யோடு, தேர்தலைச் சந்தித்து, ஜனநாயகத்தைக் காப்பாற்றும் கடமையை ஆற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தேர்தல் நடைபெறுவதன் மூலமாக எவ்வளவு பெரிய பலன்கள்
கிடைக்கின்றன என்பதை நான் எண்ணிப்பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக
பல்வேறு பலன்கள், உரிமைகள் கிடைக்கும். காரணம், இவை அடிப்
படையான பிரச்சினைகளாகும். இன்றையதினம் நகராட்சிகள், ஊராட்சி
களின் அதிகாரங்கள் அதிகாரிகளின் கையில் இருக்கின்றன. அவர்கள்
எப்படியெல்லாம் இருப்பார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.
ஏனென்றால் அவர்களால் சில காரியங்களைத்தான் செய்ய முடியும். எந்தக்
காரியம் செய்வதாக இருந்தாலும், சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான்
செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி
நிதிகள் இருப்பார்களானால், அவர்கள் எவ்வளவு காரியங்கள் செய்வார்கள்
என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் நகராட்சி உறுப்பினராக 12
ஆண்டுகாலம் இருந்த நேரத்தில், அந்தப் பகுதிக்கு என்னாலே செய்ய
முடிந்த வேலைகள், நான் மேலவை உறுப்பினராக இருந்து செய்கிற வேலை
களைவிட அதிகமாக இருந்திருக்கின்றன. இப்போது நான் மேலவை உறுப்
பினராக இருந்து பணியாற்றுகிறபோது அவ்வளவு திருப்திகரமாகப் பணி
புரிய முடியவில்லை என்பது என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத்
தெரியும். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு ஏற்படுகிற ஒவ்வொரு பிரச்சினையை
யும் அந்த ஊரில் இருக்கிறவர்கள் உடனுக்குடன் கவனிப்பதற்கு நல்ல வாய்ப்
பாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு புதியவர்கள்
வரப் போகிறார்கள். அந்த இளைஞர்கள் நல்ல பணிகளை மேற்கொள்ளப்

(முற்பகல் 11-15)

போகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்றைக்கு எந்தக் கட்சியும் இல்லாத
அளவுக்கு நகராட்சியைப் பொறுத்தமட்டில், உறுப்பினர்கள் கட்சிச்
சின்னத்தில் நிற்காத அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டு, அவர்கள் எல்லாம்
பொதுவானவர்கள் என்ற நிலையிலே, அவர்கள் நகராட்சி மன்றங்களுக்குப்
போவது மிகப் பெரிய பாராட்டுக்குரிய ஒன்று. ஆனால் நம்முடைய
அமைச்சர் அவர்கள் தேர்தலிலே கட்சியே தேவையில்லை என்று புரட்சித்
தலைவர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை வலியுறுத்திக் காரியம் ஆரம்
பித்து, கடைசியிலே பல பேருடைய வேண்டுகோளுக்கிணங்க இன்றைக்கு
நகராட்சித் தலைவர் தேர்தலுக்குச் சின்னம் தருவது என்ற நிலைக்கு
வந்திருக்கிறோம். அத்தனை பேரையும் மறுபடியும் நான் கேட்டுக்கொள்
வேன், இன்றைக்கு வரப் போகிற தேர்தல் இந்த அளவுக்கு ஒரு பெரிய
வெற்றி. ஏனென்றால், நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்குத் தேர்தல்
சின்னத்திலே கட்சிச் சின்னம் இல்லை என்பது ஒரு பெரிய வெற்றி. நான்
முதலிலே நகராட்சிக்குப் போகும்போது, உதய சூரியன் சின்னத்திலேதான்





ஜெயித்து உள்ளே போனேன். அந்த நேரத்திலே 4 பேர்தான் தி.மு.க.விலே
உறுப்பினர்கள். அன்றைக்கு அங்கிருந்த தலைவர், காங்கிரசு தலைவராக
இருந்தார். அவர் கட்சிப் பாகுபாட்டை வைத்துக்கொண்டு, கட்சியைக்
காரணமாக வைத்துக்கொண்டு, எங்களைப் புறக்கணிக்க ஆரம்பித்து
பின்னாலே, என்றைக்கு நான் உறுப்பினர் சபதம் எடுத்துக் கொண்டேனோ,
அன்றைக்கே போராட ஆரம்பித்து, கடைசியிலே 12 ஆண்டுக் காலம் போராடிப்
போராடி—இந்தப் போராட்டத்தின் விளைவு என்னவென்றால், நகராட்சித்
தலைவரை அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பேன், அவ்வளவுதான். காரியங்
களைப் பொறுத்தவரையில், யாருக்கும் காரியங்கள் நடக்காது. நான் செய்த
ஒரு பெரிய போராட்டம் என்னவென்றால்—அங்கிருந்த காங்கிரசு உறுப்பி
னர்கள் கொஞ்சம் வளமாக வாழ்ந்தார்கள்—எல்லா நகராட்சித் தலைவர்
களும் உறுப்பினர்களைக் கவனித்தால்தான் காரியம் ஆகுமென்ற நிலை
இருந்தது. ஏனென்றால் நெருக்கடி கொடுத்துக்கொண்டே இருப்பேன்.
ஆனால் இன்றைக்கு அந்த நிலை இல்லை. எந்தக் கட்சியின் சார்பிலேயும்
உறுப்பினர் வரப்போவதில்லை. தலைவர்தான் கட்சி சார்பிலே வருகிறார்
என்று சொன்னாலும், உறுப்பினர் கட்சி சார்பு இல்லாத அளவுக்குத்தான்
நடந்து கொள்வார் என்பதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. அடுத்து வரும் தேர்த
லிலே அண்ணாவினுடைய கொள்கையை நாம் ஏற்றுக்கொள்வோம், நகராட்சி,
மாநகராட்சி என்று சொல்வது கட்சி வேலை நடைபெறுகிற ஒரு இடமல்ல
என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணாவினுடைய அந்தக்
கொள்கையை நாம் ஏற்றுக்கொள்வதிலே நிச்சயமாகத் தயக்கம் காட்டக்
கூடாது என்பதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன். அந்த அளவுக்குத்
தேர்தல்கள் அமைய வேண்டும். தேர்தல் தீவிரக் கட்சி அடிப்படையிலே
நடைபெறுவது அல்ல என்றும், இன்றைக்கு தலைவர் தேர்தலுக்கு மட்டும்
கட்சிச் சின்னம் தரப்படுகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்
காலத்தில் அதையும் மாற்றுகிற நிலைமைகள் வர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்தத் தேர்தலுக்கு முன்னாலே, வேகமாக, துணிந்து, விளைவுகள் எது
வானாலும் பரவாயில்லை என்று, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தான் ஒரு முயற்சி எடுத்து தமிழகம் முழுவதும் உள்ள ஆக்கிரமிப்புகளை
அகற்ற வேண்டுமென்று சொல்லி, எல்லா ஊர்களிலேயும் ஆக்கிரமிப்புகள்
அகற்றப்பட்டன. பல ஆண்டுகளாக பெரிய பெரிய மனிதர்கள், யாராலும்
அசைக்க முடியாத நிலையில் இருந்தவர்கள், "நான் என்னுடைய கையில்
அதிகாரிகளை வைத்திருக்கிறேன்; என் கையில் முனிசிபாலிட்டி இருக்கிறது,

என் கையில் மாநகராட்சி இருக்கிறது” என்று சொல்கிற நிலையிலே இருந்த பல்வேறு பெரிய மனிதர்களின் கட்டிடங்கள் எல்லாம் பல இடங்களிலே இடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலை மிக வேகமாக நடைபெற்றது. பல பேர் அமைச்சர் அவர்களைப் பாராட்டினார்கள். இவ்வளவு வேகமாக இருக்கிறாரே, இது எங்கே போய் முடியும் என்றார்கள். ஆனால் திடீரென்று தேர்தல் வந்த காரணத்தாலே இனிமேல் இடிக்க முடியாது. இனிமேல் ஆட்சிக்கு வருகிறவர்கள், யார் பொறுப்பில் வருகிறார்களோ அவர்கள்தான் அந்த வேலையைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது, பாகுபாடு இல்லாமல், யார் ஆக்கிரமிப்புச் செய்தாலும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே, அமைச்சர் அவர்களுடைய அந்த உத்தரவைச் செயலாற்றுவதிலே நிச்சயமாகத் துணையாக இருப்பார்கள் என்பதிலே மிகுந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதிலே இன்றைக்கு கட்சிகளைக் காட்டலாம். அங்கே யாரோ செய்தார்கள், அவர் அ.தி.மு.க. என்று சொல்கிற நிலை இருக்கிறதே, தயவுசெய்து இதை அரசியல் நோக்கத்தில் பார்க்காதீர்கள். ஆக்கிரமிப்புகளை அகற்றிய நேரத்தில், எல்லோரையும் யார் என்று பார்க்காத நிலையிலேதான் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. இது யார் செய்தார்கள், அவர்கள் செய்தார்களா, இவர்கள் செய்தார்களா என்று பார்த்தால், இப்போது ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது என்று சொன்னால், நான் நிச்சயமாகச் சொல்வேன்; சென்னை மாநகரத்திலே இருந்த மஸ்டர் ரோல் குறை திரும்ப வரக்கூடாது என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் இன்றைக்கு மறந்திருப்போம். ஆனால் அந்த மஸ்டர் ரோல் வழக்கிலே உட்பட்டவர்கள் பலர் செத்தே போய்விட்டார்கள். ஏனென்றால் அது சாதாரண ஊழலா? எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் அதைச் சொல்லலாம். அந்த ஊழல் இன்றைக்கு வெளியிலே வரமுடியாமல் போய், சொல்கிற அளவுக்குக் கூட பல பேருக்கு நினைவே இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கு மஸ்டர் ரோலில் பணம் கொள்ளை அடித்தவனே யோக்கியன் மாதிரி, ஊரிலே நடமாடிக் கொண்டிருக்கிறான். அவனைக் கேட்டால், இப்போது மறுபடியும் தேர்தல் நடத்தினால், நான்தான் கவுன்சிலராக ஆவேன் என்று சொல்கிறான். அந்த அளவுக்கு ஊழலிலே சம்பந்தப்பட்டவர்கள் பேசுகின்ற அளவுக்கு இன்றைக்குக் காலம் மாறிவிட்டது. காரணம் என்னவென்றால், மக்கள் மறந்து விடுவார்கள்; எதுவும் தெரியாது அவர்களுக்கு; தெரியாத காரணத்தாலே நமக்கு லாபம் என்ற அளவுக்கு சில பேர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக நான் சொல்வேன், இந்த ஊழல் செய்கின்றவர்கள், தவறு செய்கின்றவர்கள் இன்றைக்கு யாராக இருந்தாலும், இந்த ஆட்சி இருக்கிற வரையிலே, புரட்சித் தலைவர் இருக்கிற





வரையிலே, ஊழல் செய்கின்றவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், அவர் மீது நடவடிக்கை எடுப்பதிலே கவனமாக இருப்போமே தவிர, மீண்டும் மஸ்டர் ரோல் ஊழலை அனுமதிக்கும் அளவுக்கு நிச்சயமாக விடமாட்டோம்.

(முற்பகல் 11-20)

இனி தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக நகராட்சிகளுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுக்கோ, மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கோ பொறுப்புக்கு வருகிறவர்கள், அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று தெரிந்தால், அவர்களின் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்போமே தவிர, “நமது கட்சிக்காரன்தானே, அடித்துக் கொள்ளட்டும்” என்று விட்டுவிட மாட்டோம்.

தற்போது ஸ்பெஷல் ஆபீசர்களாக இருப்பவர்களின் அதிகாரம் போகிறதே என்ற நிலை வரும். பல அதிகாரிகள் இப்போதே வேதனைப்படுகிறார்கள். நிறைய வேலை செய்து கொண்டிருந்தோமே, இப்போது வேலை இல்லாமல் போய்விடப் போகிறதே என்று அவர்கள் வேதனைப்படுகிறார்கள். இனி அந்தப் பணிகள் எல்லாம் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தோழர்களுக்குத்தான் வரப் போகிறது. அவர்களெல்லாம் மற்றவர்கள் பாராட்டுகிற அளவுக்கு நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த வகையில் அவர்கள் சிறப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

அடுத்து, மார்ச் மாதம் வரை தேதியைப் போட்டிருக்கிறார்களே என்று கூட சந்தேகமான முறையில் ஒரு சிலர் பேசினார்கள். இப்படி மார்ச் என்று போடுவதற்குக் காரணம் இருக்கிறது. போடும்போதே அதிகாரிகள் முன் எச்சரிக்கையாகத்தான் போடுவார்கள். பின்னாலே தவறு வந்துவிடக் கூடாது, பின்னாலே இதை மாற்றுகிற நிலைமை வந்துவிடக் கூடாது என்றுதான் போடுவார்கள். எந்த நேரத்திலும் எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்றுதான் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுப்பார்கள். அந்த வகையில்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரியில்தான் தேர்தல் நடக்க இருக்கிறதே, அதுவரை நீடிப்பு தந்தால் போதுமே என்று சொன்னால், தேர்தல் நடக்கும்போதே, பெரம்பூர் அல்லது எக்மோர் போன்ற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. அப்படி ஏற்பட்டுவிட்டால், அதற்கு என்று தனியான ஒரு நீட்டிப்பு கேட்கிற நிலைமை வந்துவிடக் கூடாது. எனவே என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. யாரும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. அதன் காரணமாகத்தான்

கால நீட்டிப்பு கேட்கிறபோது, கொஞ்சம் அதிகமான காலத்தைக் கேட்பார்கள். எனவே அந்த அளவுக்குக் கால நீட்டிப்பு அவசியம் என்று சொல்லி இந்தத் திருத்தங்களை வரவேற்று அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னால் உள்ள 7 சட்ட முன்வடிவுகளின் மீதும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இவை அனைத்தும் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க வகை செய்யும் சட்ட முன்வடிவுகள். இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகள் இந்த அவைக்கு ஏற்கெனவே பல முறை வந்தாகிவிட்டது. இப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாகத் தேர்தல் நடக்குமென்றும் தேர்தல்கள் நடந்து முடிந்த உடனே கால நீட்டிப்புகூட ரத்து செய்யப்படும் என்றும் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் உறுதி கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நகராட்சிகளானாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியங்களானாலும் சரி, அல்லது கூட்டுறவு அமைப்புகளானாலும் சரி, ஏற்கெனவே நான் பல முறை அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை என்ற காரணத்தால், பல காரியங்கள் பல இடங்களில் செய்யப்படாமல் இருக்கின்றன, இவ்வளவு நாள் இருந்த நிலைமை இன்னும் ஒரு 2 மாதத்திற்கு இருந்தால் என்ன ஆகிவிடும் என்று எதிர்வாதம் கிளப்பலாம். அது நியாயமாகிவிடாது. இன்றைக்கு ஜனவரி 28 தேதியாகிவிட்டது. பிப்ரவரியில் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்பது அது. எனக்கு முன்னாலே பேசியவர்கள் சந்தேகத்தைத் தூண்டியதைப்போல் நான் தூண்ட விரும்பவில்லை. இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இன்றைக்குப் பலர் கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட்டுகளும் அவர்களுடைய வாதங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எனவே தேர்தல்கள் நடந்தாலும், இடைக் காலத்தில் அதிகாரிகள் நடந்துகொண்ட நடைமுறைகள் பற்றி அறிந்திருக்கிற காரணத்தால், முக்கியமாக இரண்டு அம்சங்களை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



பொதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் திறமையாகவும் பொறுப்பாகவும் பணியாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் செயல்பாட்டின் காரணமாக பாதிக்கப்பட்ட சிலர் கடந்த காலங்களில் அப்படிப்பட்ட அதிகாரிகளை மாற்றுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். நான் உள்நோக்கத்தோடு பேசுவதாக யாரும் கருதக்கூடாது. நான் ஏதோ உள்ளாட்சி மன்ற அமைப்புகளை மட்டும் வைத்துப் பேசவில்லை. இது வேறு துறைகளிலும் நடந்திருக்கிறது. சென்னையில் நடந்ததைக் குறித்து பத்திரிகையிலேயே வந்தது. எனவே மக்கள் மத்தியிலே இதன் காரணமாக உண்மையிலேயே சந்தேகம் இருக்கிறது, மன வருத்தம்கூட ஏற்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-25)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

காரணம், சென்னையிலே பொதுவாக சிவிக் சென்ஸ் குறைந்திருக்கிறது. சாலைகளில் நடக்க முடியவில்லை, வாகனங்கள் செல்ல முடியவில்லை, நிறைய ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. சென்னை போன்ற பெரிய நகரத்தில் ஏற்படும் என்கிரோச்மென்ட்களைப் பார்த்து நடவடிக்கை எடுப்பது கொஞ்சம் கஷ்டம். மேலேயுள்ள, கீழேயுள்ள அதிகாரிகளைப் பார்த்துச் செய்ய வேண்டும். பல பரிமாற்றங்கள் காரணமாக ஆக்கிரமிப்புகள், அத்துமீறல்கள் பல ஆண்டுகளாக நடந்திருக்கின்றன. இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் வந்த பிறகு அது நடந்தது என்பதல்ல. இதற்கு முன்பும் நடந்திருக்கிறது. அது தொடர்கிறது. அது அரசியல் காரணமாக நடக்கிறது என்று சொல்ல மாட்டேன். இது ஒரு சமூக பலவீனம். வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம் முன்னால் குறடு கட்டலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி பல்வேறு இடங்களில் அளவிற்கு மீறி ஆக்கிரமிப்புகள் நடந்திருக்கின்றன. சாதாரண 30 அடி தெருக்களில் கூட ஒரு கோயில் இருந்தால் அந்தக் கோயிலின் பக்கத்தில் குடிசை போடுகிறார்கள். அதன் பக்கத்திலேயே தொழு நோய்க்காரர்கள் குடியிருக்கிறார்கள். சாராயம் காய்ச்சப்படுகிறது. இந்த மாதிரி சமூகத் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகள் இருக்கின்றன. அந்தக் குடிசைகளை அதிகாரிகள் சானிட்டரி ஓர்க்கர்களைக் கொண்டு வந்து பிரித்துப் போடுகிறார்கள். அப்படிப் பிரித்துப் போடும்போது, முனிசிபாலிட்டி அதிகாரிகள் அவற்றைத் தூக்கிச் செல்ல முடியவில்லை. அங்கேயே போட்டுவிட்டுச் செல்கிறார்கள். காலையில் பிரித்துப் போட்டால், மாலையிலேயே குடிசை மீண்டும் வந்துவிடுகிறது. தனி அதிகாரிகள் இதற்குப் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. நிர்வாகம் பல இடங்களில் அப்படி

நடக்கிறது. இந்த மாதிரி காரியங்களை தனி அதிகாரிகளால் துரிதமாகச் செய்ய முடியவில்லை. அப்படியே திறமையாக யாராவது செயல்பட்டால், அவர்கள் மாற்றப்படுகிறார்கள். பாரபட்சமின்றி நடந்தால், அவர்கள் மாற்றப்படுகிறார்கள். ஆகவே "நமக்கு எதற்கு வம்பு, நம் காலத்தை ஓட்டுவோம்" என்று சிலர் போகிறார்கள். சிலர் துணிந்து தப்பு செய்கிறார்கள். இதெல்லாம் நடக்கிற காரியங்கள். இவைகளுக்கெல்லாம் யார் காரணம், யார் ஆதரவு என்ற பிரச்சினைகளுக்குள்ளே நான் போகவில்லை. அரசியலில் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது நியாயமாகாது. அது பலனற்ற வாதம். இப்படிப்பட்ட தப்புகள் நகராட்சிகளில் நடக்கின்றன. குறிப்பாக மதுரையில் எவ்வளவோ தப்புகள் நடக்கின்றன. கோயம்புத்தூரில் நடக்கும் தப்புகளுக்குக் கணக்கே கிடையாது. பொதுவாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் ஏராளமான தப்புகள் நடக்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை இல்லை என்பதுதான் என்று சொல்லலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரிடத்திலே பல்வேறு சமூக நிர்ப்பந்தங்கள் கொண்டு வந்து, இவைகளை மாற்ற முடியும். ஆனால் சமூகத்திற்கு அவசியமான, போடப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, அப்படி ஒரு முறையாக அதிகாரிகள் துணிந்து செயல்பட்டால், அவர்களுக்கு அரசு ஊக்கம் தரும் நிலை வர வேண்டும். நியாயமான ஊக்கத்துடன், அவர்கள் செயல்படும்போது, தவறே வராது. நியாயமான ஊக்கத்துடன் செயல்படும்போது, ஏதாவது தவறு இருந்தால், அவற்றைத் திருத்த முயற்சி செய்யலாம். அப்படி இல்லாமல், அந்தத் தவறைப் பயன்படுத்தி, சில சக்திகள் அப்படிப்பட்டவர்களை பொறுப்பிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற முயற்சி செய்தால், அது தவறு. இன்னும் சொல்லப் போனால், நான் குடியிருந்த பகுதியில் உள்ள நகராட்சியில் அப்படி நடந்தது. ஆகவே இந்த மாதிரி தப்புகள் பகிரங்கமாக நடக்கின்றன. அதிகாரி ரிட்டையர் ஆக இன்னும் கொஞ்சம் நாள்தான் இருக்கிறது, ஆகவே என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று செய்கிறார். தமிழ் நாட்டில் ரிட்டையர் ஆகும் அன்றே நடவடிக்கை எடுத்திருப்பது உண்மை. அது பரிதாபத்தைக் கிளப்புகிறது. ரிட்டையர் ஆகும் அதிகாரிகள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. தப்பு நடக்கும்போது நடவடிக்கை எடுக்க அரசு தயங்கக் கூடாது. அப்படி தப்பு செய்த சில பேர் மீது நடவடிக்கை எடுத்து அத்தியாவசியமான முறையில் அவர்களை மாற்றினால் பொதுமக்களிடையே அரசுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். அப்படி மாற்றப்படாமல் இருக்கும் தனி அதிகாரிகள் விஷயத்தில் அரசாங்கம் இப்போது, வேறு வழியில்லாமல்,



நீட்டிப்புத் தருகிறது. தேர்தல் நடந்துவிட்டால், தனி அதிகாரி என்ற பெயர் மாறி கமிஷனர்களாக இருப்பார்கள். அப்போதுகூட சட்டத்தின்படி முறையாகச் செயல்படும் அதிகாரிகளுக்கு அரசு ஊக்கம் அளிக்க வேண்டும். அவர்களிடையே சிறு தவறு ஏற்பட்டால், அவர்களைத் திருத்த அரசு முயற்சி எடுக்கலாம்.

(முற்பகல் 11-30)

ஆனால் தவறு செய்பவர்களை மாற்ற வேண்டும். திட்டவட்டமாகப் பொது மக்களிடமிருந்து புகார் வந்தால், அவர்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் அடுத்து ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல காரியங்களுக்காக பஞ்சாயத்து யூனியனுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்றால், அதில் முழுத் தொகையும் செலவழிக்கப்படாமல் இருந்தால், சரியாகச் செலவழிக்கப்படாமல் மிச்சமாக இருந்தால், கடைசியாக 2, 3 மாதங்கள் இருக்கும்போது, அந்தந்தத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள், அந்த யூனியனுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். "இன்னும் 2 மாதம்தான் இருக்கின்றது. உங்கள் யூனியனுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 18 ஆயிரம் செலவு செய்ய வேண்டியதாக இருக்கின்றது. அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று சொல்லவேண்டும். என்னோடு படித்த நண்பர்கள் இந்தத் துறைகளில் அந்தப் பதவியில் பொறுப்பில் இருக்கின்றவர்களும் இருப்பார்கள். அவர்கள் இப்படியெல்லாம் செய்ததை நானும் பார்த்திருக்கிறேன். இப்போது அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்தது. இப்போது அந்தப் பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னமும் செலவு செய்யாமல்கூட இருக்கின்றார்கள். இது பிப்ரவரி மாதம். பணம் பாக்கியிருந்தாலும், அதை எடுத்துச் சொல்லி அதிகாரிகள் காரியங்களைச் செய்யச் சொல்ல வேண்டும். அந்த யூனியனுக்குச் சேரவேண்டிய தொகை, செலவு செய்யக்கூடிய தொகை இவ்வளவு இருக்கின்றது, அதைச் செலவு செய்யுங்கள் என்று அறிவுறுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகராட்சிகளிலே செய்திருக்கின்றார்கள். இந்த இரண்டு மாதத்திலேகூட ஓரளவுக்குச் செய்யலாம். அப்போதுதான் நகராட்சி அதிகாரிகள் திறம்பட காரியங்கள் செய்வார்கள்.

இங்கே சுகாதாரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நகராட்சிகளில் உள்ள இடங்களில் நூற்றுக்கணக்கான குடிசைகள் குவிந்திருக்கின்றன. அந்த மாதிரி இடங்களில் சில இடங்களில் சுகாதார அதிகாரிகளே கிடையாது. அந்த இடங்களில் உள்ள மக்கள் என்ன செய்ய முடியும்? சில இடங்களில்

அதிகாரிகள் குறைவாக இருக்கின்றார்கள். வேலைப்பளுவின் காரணமாக அந்த இடங்களில் கவனிக்க முடியாமல் போய்விடுகின்றது. சுகாதார அதிகாரிகளை அதிகப்படுத்த வேண்டும். இன்னமும் பல நகராட்சிகளில் குடிசைகள் பெருகிவிட்டன. கிராமப்புறங்களில்கூட ஏழை ஜனங்கள் எங்கே இடம் கிடைத்தாலும், குடிசைகள் போட்டுக்கொண்டு வசிக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். திடீரென்று பல இடங்களில் 10, 15 குடிசைகள்கூட வந்து விடுகின்றன. இந்தமாதிரி பல இடங்களில் நகரங்களில் ஒழுங்கில்லாமல் குடிசைகள் வந்து பெருகிவிடுகின்றன. அந்த இடங்களில் தேவையான அளவுக்கு சானிட்டரி ஸ்டாப்பை அதிகரிக்க வேண்டும். தொழில் சங்கங்கள் சண்டைபோட்டு கொஞ்சம் 'ஸ்டாப்' எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றன. ஏற்கெனவே அரசும் ஒரு நிறைவான கொள்கை வைத்திருக்கின்றது. அந்த அளவில் சானிட்டரி ஊழியர்களைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். முன்பு 100 குடிசைகள் இருந்த இடத்தில் இப்போது 150 குடிசைகள் வந்துவிட்டிருக்கின்றன. அதுபோலவே 40 வீடுகள் இருந்த இடத்தில் 214 வீடுகள் என்ற அளவுக்கு அதிகமாகி விட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் பெருகிக்கொண்டிருக்கின்றது. ஆனால் பணியாட்கள் யாரும் இல்லாத இடங்களும் இருக்கின்றன. ஒரு ஆள் வந்து வேலை செய்ய முடியாது. அனுபவத்தை வைத்துத்தான் நான் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சுகாதார அதிகாரிகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொசுத் தொல்லைபற்றிக் குறிப்பிட்டுக்கொள்கிறேன். பல வருடங்களாகவே பேசிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கொசுத் தொல்லையிலிருந்து தப்பவே முடியாது என்று இருக்கிறோம். ஏதாவது புதிய சகாப்தம் வந்தால்தான் இந்தக் கொசுத் தொல்லை நம்மை விடுவதாக இருக்கும் என்று நினைக்கிறேன். சுகாதார அதிகாரிகளை அதிகப்படுத்துவதைப்பற்றி அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓரளவுக்காவது சுகாதார அதிகாரிகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான், அந்த அதிகாரிகள் காரியங்களை நன்றாகச் செய்ய முடியும். இன்றுள்ள சூழ்நிலையில்தான் தவறுகள் ஏற்படுகின்றன. இந்தச் சட்ட முன்வடிவின்படி தேர்தல் நடந்து விட்டால், தவறுகள் நடக்காமல் காரியங்கள் செய்ய முடியும். அமைச்சர் அவர்கள் வாக்குறுதிப்படி தேர்தல் நடக்க வேண்டும். செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அதிகாரிகள் இந்த இரண்டு மாதங்களிலாவது ஒதுக்கப் பட்டிருக்கும் பணத்தைச் சரிவரச் செலவு செய்வதற்கான நடவடிக்கைகளை



எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இந்தத் துறையிலே விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை சார்பில் மேலவையினுடைய ஒப்புதலுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அரசுத் தரப்பிலே நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புவது, இந்த அரசு அதிகாரிகளுக்கு நீடிப்பு கொடுப்பதன் மூலம் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டிய உறுப்பினர்களை மறுக்கவோ அல்லது தடுக்கவோ வேண்டும் என்று இந்த அரசு நினைத்ததில்லை. அதற்கு அரசு இசைவைக் கொடுக்காது என்ற எண்ணம் வரத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தின்

(முற்பகல் 11-35)

கட்டாயத்தால்தான் இப்படி தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டியிருக்கிறதே தவிர வேறல்ல. உள்ளாட்சித் துறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் உள்ளாட்சி நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டுமே தவிர, அதிகாரிகள் உள்ளாட்சியை நடத்திக் கொண்டிருப்பது சரியானதாக இல்லையென்பதை கடந்த கால சம்பவங்கள் நிரூபித்திருக்கின்றன. இதில் எந்தக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமும் இல்லை. அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது, நல்ல கருத்தொன்றைச் சொன்னார்கள். "உள்ளாட்சி நிர்வாகத்தில் தவறுகள் நடக்கின்றன, அப்படி நடக்கின்ற தவறுகளைத் திருத்த முயற்சி எடுங்கள்" என்றார்கள். தவறே நடக்கவில்லை என்று நான் சொல்லமாட்டேன். நடக்கிற தவறுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தவறுகள் இனி நடந்தாலும், அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தவறுகள் நடந்தால், அந்தத் தவறுகள் அரசின் கவனத்திற்கு வந்துவிட்டால், தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதியாகச் சொல்கிறேன்,

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஜனவரி 28

திரு. மிசா கணேசன் அவர்கள் பேசும்போது, "இந்தத் தேர்தல்களை நீங்கள் நடத்தி முடித்துவிட்டால் அதனால் உங்களுக்குப் பேரும் புகழும் கிடைக்கும்" என்று சொன்னார்கள் தனிப்பட்ட ஷண்முகத்தால் தேர்தல்கள் நடக்கவில்லை. நடக்கிற தேர்தல் அண்ணா தி.மு.க.-வின் ஆட்சியில், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடத்துகிற தேர்தலே தவிர, நான் நடத்துகிற தேர்தல்கள் அல்ல. எனக்காக நடத்துகிற தேர்தலும் அல்ல. தேர்தல்கள் நடத்தினால் தேவலாம் என்று நான் சொன்னபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஒத்துக் கொண்டார்கள். அதனால்தான் தேர்தல்கள் நடக்கின்றன. முதலமைச்சர் "தேர்த்ல்களை நடத்துங்கள்" என்று ஆணையிட்டதற்குப் பிறகுதான், நடவடிக்கை எடுக்க முடிந்ததே தவிர, நானாக நடத்தவில்லை. நடத்த வேண்டுமென்று கேட்டேன். "ஆமாம், காலம் கடந்துவிட்டது" என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் எனக்குப் புகழும் பேரும் இல்லை. இந்த ஆட்சிக்கு, புரட்சித் தலைவருக்குத்தான் பேரும் புகழும்.

உள்ளாட்சித் தேர்தல்கள்பற்றி ஒரு வாரப் பத்திரிகையில் கூட துணுக்குகள் வந்துள்ளதாக திரு. மிசா கணேசன் சொன்னார். எனக்காகவே ஒரு வாரப்பத்திரிகை போட்டி, பந்தயம் வைத்து உதவி செய்ய முன்வந்தது. ப.உ.ச. வுக்கு உதவுவோம் என்று விசேஷ துணுக்குகளை வெளியிட்டு, நல்ல விளம்பரம் செய்தார்கள். காசு கொடுத்தால்கூட, இவ்வளவு விளம்பரம் வந்திருக்காது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அதை வேடிக்கையாக, விளையாட்டாக எடுத்துக்கொண்டேனே தவிர, எனது மனம் புண்பட்டது என்று யாரும் கருதத் தேவையில்லை.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் கட்டுரைகள் வருவதுபற்றி திரு. மிசா, கணேசன் குறிப்பிட்டார். திரு. ஜேப்பியார் கூட ஒரு கருத்தைச் சொன்னார். தங்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டால், அதை நடுநிலைப் பத்திரிகை என்று சொல்வதும், அதே பத்திரிகை அவர்களைக் கண்டித்து வெளியிட்டால் அது முதலாளிகள் நடத்துகிற பத்திரிகை என்று கண்டனம் தெரிவிப்பதும் வழக்கமான நிலைமை என்று சொன்னார். அது நாடறிந்த உண்மை. ஹாரி மில்லர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வெளியிடுகிற படங்களை நானும் பார்த்தேன். ஒரே வரியில் அதற்குப் பதில் சொல்லலாம். சென்னை மிகப் பெரிய நகரம். ஹாரி மில்லர் போடுகிற படங்கள் மிகச் சிறியவை, ஆகவே அது புறக்



1986 ஜனவரி 28] [திரு. ப. உ. சண்முகம்]

கணிக்கப்படவேண்டிய படம் என்று சொல்லிவிடலாம். இவ்வளவு பெரிய நகரமாக இருந்தாலும், ஒரு சின்ன குறைகூட இருக்கக் கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். போடப்படுகிற படங்களுக்கு அதில் உள்ள குறைகளைத் தவிர்க்க தக்க நடவடிக்கைகளை மாநகராட்சி அதிகாரிகளிடம் சொல்லி எடுத்து வருகிறோம். அதிகாரிகளும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். பத்திரிகைகளில் வரும் செய்திகளும், துணுக்குகளும், படங்களும் அதிகாரிகளின் கவனத்திற்கும் அரசின் கவனத்திற்கும் கொண்டுவரப் பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மூன்றாவது பக்கம் மாநகராட்சியின் குறைகளைக் காண்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். தொடர்ந்து அந்தப் பத்திரிகை இத்தகைய குறைகளை வெளியிட்டால், எனக்கும், அதிகாரிகளுக்கும் வசதியாக இருக்கும், நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அன்னை சத்தியா மார்க்கெட் தியாகராய நகரில் ரங்கநாதன் தெருவிற்கு இணையாக இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தெரு வழியாகத்தான் பஸ்கள், கார்கள் போக வேண்டும். ரயிலை விட்டு இறங்குகிற மாணவ, மாணவிகள் போக வேண்டும். நடப்பதற்கே பாதை இருக்காது. குறுக்கும் நெடுக்குமாக கடைகள் இருக்கும். சமூக விரோத சக்திகள் தவறுகள் செய்ய வாய்ப்புகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள்கூட என்னிடம் இதைப்பற்றிச் சொல்லி, இப்படி நடக்கிறது, அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். ரங்கநாதன் தெருவை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாநகராட்சி நிர்வாகம் முடுக்கிவிடப்பட்டது. கடைகள் அப்புறப்படுத்தப்பட்டன. நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்பு நமக்குச் சாதகமான முறையில் இருந்தது. அதற்குப் பிறகு ரங்கநாதன் தெருவிற்குப் பக்கத்தில் உள்ள தெருவில் இரண்டு வீடுகளுக்குப் பின்புறமாக இருந்த ஒரு தோட்டத்தை எப்படியோ 30 ஆண்டுகளுக்கு முன்பு சுவர்கள் வைத்து மறைத்துவிட்டு, தனியாக வைத்திருந்தார்கள். அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. உடனே மாநகராட்சி அதிகாரிகளை அழைத்துக் கேட்டோம். உண்மைதான் என்று சொன்னார்கள். அப்படியென்றால் சுவர்களை இடித்துத் தள்ளி, பாதையாக ஆக்குங்கள் என்று சொல்லி அதைப் பாதையாக்கினோம். அதிலே இருந்தவர்கள் நீதிமன்றத்திற்குப் போனார்கள். மாநகராட்சி அதை எடுத்துக்

கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆகவே மேற்கொண்டு மாநகராட்சி அதில் தலையிட முடியவில்லை. ஆனால் ரங்கநாதன் தெருவைக் காலி செய்த கடைக்காரர்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்தார்கள். நீதிமன்றத் தடை இருந்ததால், நாங்கள் அதற்குள் போகவில்லை. தடை நீங்கும் என்று நினைக்கிறோம். அப்போது அவர்களிடம் பணம் வசூலிக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அங்கேயே உள்ள அன்னை அஞ்சுகம் மார்க்கெட் பற்றிச் சொன்னார்கள். 10 ரூபாய் வாடகை வசூல் செய்யப்படுகிறது என்றார்கள். திருத்திக் கொள்ள வேண்டும், 10 ரூபாய் அல்ல. ஒரு நாள் ஒன்றுக்கு 400 விருந்து 500 ரூபாய் வரை வாங்குகிறார்கள். ரயில்வே காம்பவுண்டு சுவருக்குப் பக்கத்தில் அஞ்சுகம் மார்க்கெட்டை துவக்கிவைத்து 10, 12 ஆண்டுகாலமாக ஒருவர் பணம் வசூலித்துக்கொண்டு இருந்திருக்கிறார். அவர் இப்போது இறந்து விட்டார். அதற்குப் பிறகு அவருடைய பிள்ளை அதற்கு உரிமை கொண்டாடி வசூலித்துக்கொண்டிருக்கிறார். நான்கூட அவைகளை அப்புறப்படுத்துங்கள் என்று சொன்னேன். நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்த நோட்டீசை எடுத்துக்கொண்டு சுப்ரீம் கோர்ட் போய் தடை வாங்கிவிட்டார்கள், மாநகராட்சி இதில் தலையிடக்கூடாது என்று. தடையை நீக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். இருந்தாலும் தினமும் வசூல் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் மாநகராட்சிக்குப் பணம் வருவது கிடையாது. தனிப்பட்ட நபர்தான் வசூலிக்கிறார். இப்படி நடப்பது முறையானதுதானா என்று கேட்க விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், சத்தியா பெயரிலோ அஞ்சுகம் பெயரிலோ வருத்தம் கிடையாது. இந்த அரசு எந்தப் பெயரையும் வைத்துக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்று தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி எங்களுக்குக் கிடையாது என்றும் உறுதியாகச் சொல்ல முடியும். அஞ்சுகம் பெயரால் வைக்கப்பட்டிருக்கிற மார்க்கெட்டில், நீதிமன்றத்தின் தடையாணையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று உறுதியாகச் சொல்கிறேன். அப்படி எடுத்தவுடன், மாநகராட்சிக்கு வர வேண்டிய பணத்தை அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, மாநகராட்சி ஆணையாளரைப்பற்றி திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. மாணிக்கம் அவர்களும் பேசினார்கள். ஆணையாளர், அவர் அதிகமாக வேலை செய்தார் என்றோ, வேலை செய்ய வில்லை என்றோ மாற்றப்படவில்லை. நிர்வாக வசதிக்காக அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். அதிகாரி தவறு செய்தாரா என்பதல்ல பிரச்சினை. நிர்வாக வசதிக்காக மாற்றப்பட்டிருக்கிறார்.

ரோடு போடும் இயந்திரம் ஒன்று காமராஜ் சாலையில் நின்றுகொண்டிருக்கிறதே, அது யாருக்குச் சொந்தம் என்று கேட்கப்பட்டது. 'தனியாருக்கா, மாநகராட்சிக்கா, அதன் விலை இரண்டரை கோடியாயிற்றே' என்று சொன்னார்கள். விலையைப் பற்றி எனக்குத் தெரியாது. அது தனியாருக்குச் சொந்தமானது. அந்த இயந்திரத்தைக் கொண்டு பரிட்சார்த்தமாக சாலைகள் போட்டுப் பார்க்கப்பட்டன. வெற்றிகரமாக இருந்தது. எனவே அதைப் பயன்படுத்தி, மேற்கொண்டு பாதைகள் போடலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைக்கூட அந்த இயந்திரத்தைக் கொண்டே செப்பனிடலாம் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அந்த இயந்திரம் அந்த வகையில் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளையாட்டுத் திடல்களையெல்லாம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கலாம் என்று திரு. ஜெயச்சந்திரன் சொன்னார். அது கொள்கையளவில் முடிவு எடுக்கப்படவேண்டிய விஷயம். இந்த நேரத்தில் அதைப்பற்றி எதையும் தெரிவிக்க விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, மாநகராட்சி அதிகாரிகளிடமும் பேசி அதன் பின் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் நகராட்சிக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்றும், ஆலந்தூர் நகராட்சி திறப்பு விழாவுக்கு தன்னை அழைக்கவில்லையென்றும் தெரிவித்தார்கள்.

(முற்பகல் 11-45)

நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி நடப்பது அதிகாரிகளின் சிறிய தவறினால் என்றாலும், அது நடந்திருக்கக்கூடாது; இனி அப்படி நடக்காது என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை, மேலவை, நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு எல்லாம்

அவர்கள் எந்த இயக்கத்தை, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அழைப்பு அனுப்பப்பட வேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இனி அனுப்பப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, நகராட்சி உறுப்பினர்கள் தொண்டு செய்தால்தான், சிறப்பாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தார்கள். நானும் அந்தக் கருத்தை ஒத்துக்கொள்கிறேன். என்னைக் கேட்டால், சட்டமன்றப் பேரவைக்கோ, மேலவைக்கோ, நாடாளுமன்ற மக்களவைக்கோ மாநிலங்களவைக்கோ வருகின்றவர்கள், ஊராட்சி அல்லது நகராட்சி மன்றங்களில் இத்தனை ஆண்டுக் காலம் உறுப்பினராக இருந்திருக்கவேண்டும் என ஒரு தகுதியாகக் கூட திர்ணயிக்கலாம். ஏனென்றால் ஜனநாயகத்திற்கு ஆரம்பப் பாடசாலையாக இருப்பது இதுபோன்ற ஊராட்சிகளும், நகராட்சி மன்றங்களும்தான். அவற்றில் பயிற்சி பெற்றால்கூட நல்லதென்று கருதுகிறேன். பயிற்சி பெற்ற பிறகு சட்டமன்றப் பேரவைக்கோ, மேலவைக்கோ வரும்போது, அவர்களுக்கு வேலை செய்வது எளிதாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட பயிற்சி இருப்பது நல்லது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசும்போது, ஆக்கிரமிப்புகள்பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. மேற்கொண்டும் எங்கேனும் ஆக்கிரமிப்புகள் இருந்தால், அவற்றை அகற்ற அரசு தயங்காது என்று உறுதியளிக்கிறேன். ஒரு பத்திரிக்கையில் இன்று காலையில் பார்த்தேன். "எம்.ஜி.ஆர். உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்க முயற்சிக்கிறார்" என்று போட்டிருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. அப்பத்திரிக்கை உண்மைக்குப் புறம்பான செய்திகளை நாள்தோறும் போட்டுக்கொண்டிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த வேட்பாளர்கள் பட்டியலை இன்றைக்கு வெளியிட்டிருக்கிறோம். தேர்தலை நிறுத்தி வைக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திலே வழக்கு வந்தபோது, அதை எதிர்த்து அரசுத் தரப்பில் வாதாடச் சொல்லி தள்ளுபடி செய்யச் சொல்லியிருக்கிறோம். அம்மனுவைத் தள்ளியிருக்கிறோம். அவர்கள் உச்சநீதிமன்றத்திற்குப் போவார்களானால், அங்கேயும் எதிர்ப்பதற்கு அரசுத் தரப்பில் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம். இருந்தாலும் பழியை முதலமைச்சர் மேலே போடுவதிலே அந்தப் பத்திரிக்கைக்கு அலாதி ஆசை. ஒருவேளை பத்திரிக்கை விற்பதற்காக அப்படிப் போடுகிறார்களோ என்னவோ



தெரியவில்லை. அவர் பெயரைக் கொட்டை கொட்டையாகப் போட்டால்தான், அவர் பெயரை மக்கள் பார்த்தால்தான், மக்கள் அப்பத்திரிக்கையை வாங்குவார்கள் என்பதற்காகவோ என்னவோ தெரியவில்லை. எப்படியோ முதலமைச்சர் பல பேருக்கு பலவிதங்களில் உதவி செய்கிறார். அந்தப் பத்திரிக்கைக்கு இந்தவகையில் உதவி செய்கிறார் என்று கருதுகிறேன். வாழ்க அந்தப் பத்திரிக்கை என்று நான் வாழ்த்துகிறேன்.

அடுத்து, ஆக்கிரமிப்பு சமூக பலவீனம் என்கிற உண்மையை மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் சொன்னார்கள். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். இந்தச் சமூக பலவீனத்தை பயன்படுத்திக்கொண்டு, வியாபாரிகள் 'ஷன் ஷேடுகள்' ஐப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். 'ஷன் ஷேடுகளை' போட்டுக்கொள்வது பற்றி நமக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. ஆனால் 'ஷன் ஷேடுகள்' என்ற பெயரால் தாங்கள் விற்பனை செய்கிற பொருள்களை வெளியிலே தொங்கவிட்டு அதற்கும் வெளியிலே நாற்காலிகளைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டு, மக்கள் நடப்பதற்கே பாதை இல்லாமல் செய்துவிடுகிறார்கள். இதை யார் வேண்டுமானாலும் தியாகராய நகர் சென்று பார்க்கலாம். இப்போது பாதை அங்கே எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம். எவ்வளவு அகலம் இருக்கிறது என்பது தெரியும்.

தியாகராய நகர் என்றவுடனே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் பேசியது நினைவுக்கு வருகிறது. தியாகராய நகரை, 'டி. நகர்', 'டி. நகர்' என்று அழைக்கிறார்களே என்று வருத்தப்பட்டார். நானும் தெரிவித்துக் கொள்கிறேன். 'டி. நகர்' என்று போடுவதை தியாகராய நகர் என்றுதான் போட வேண்டும். அவ்வாறே எல்லோரும் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எனக்கு இருக்கிற அச்சம் என்னவென்று கேட்டால், சென்னையில் ஒரு பாலத்தின் பெயரே மருவி வேறு பெயராகப் போய்விட்டது எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். 'பார்பர் பிரிட்ஜ்' பற்றி எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். "ஹாமில்டன்" என்பவர் பெயரால் உருவாகிய பாலத்தின் பெயர், மருவி 'அம்பட்டன் வாராவதி' என்று திரிந்து, பிறகு மீண்டும் அது ஆங்கிலத்தில் "பார்பர் பிரிட்ஜ்"—ஆக மருவியே போய்விட்டது. எனவே எனக்கு இருக்கிற பயமெல்லாம், 'டி. நகர்', 'டி. நகர்' என்று அழைக்கப்பட்டால், பிற்காலத்தில் அந்தப் பெயர் ஏன் வந்தது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டு எதிர்காலத்தில் எந்த புத்திசாலியாவது, "அங்கே நல்ல டீ கிடைக்கும் போல இருக்கிறது, எனவே அந்தப் பெயர் வந்தது" என்று புத்தகத்தில் எழுதி

வைத்துவிடுவார்களோ என்ற அச்சம் எனக்கு வருகிறது. ஆகவே, 'தியாகராய நகர்' என்ற பெயரை வெளிப்படையாகப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இந்தச் சமயத்தில் இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். பல தெருக்களின் பெயர்களை மாற்றியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால், பழைய மௌன்ட் ரோட்டை அண்ணா சாலை என்று மாற்றியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பல நேரங்களில் என்னிடம் வருத்தப்பட்டுச் சொன்னதுண்டு. போராட்டம்கூட நடத்தட்டுமா என்று கேட்டதுண்டு. அண்ணா சாலையில் உள்ள பல நிறுவனங்கள் இன்னும் அண்ணா சாலை என்று போடுவதற்குத் தயங்குகிறார்கள். பழையபடி 'மௌன்ட் ரோடு' என்றேதான். போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து மௌன்ட் ரோடு என்று போடுவதை மாற்றிக்கொண்டு, அண்ணா சாலை என்று போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் சென்னை மாவட்டக் கழகத்தின் செயலாளர் என்கிற முறையிலே யோசனைகூட கேட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு தராத காரணத்தால், போராட்டத்தில் இறங்கவில்லை.

(முற்பகல் 11-50)

அந்தப் போராட்டத்தில் இறங்க வேண்டிய அவசியத்தை உருவாக்க மாட் டார்கள் என்று நம்புகிறேன். தவறுகள் நடக்கும்போது, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள். நிச்சயமாக நான் உறுதியளிக்கிறேன். எங்கு, எப்போது தவறுகள் நடந்தாலும், அவைகள் மீது நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்குமென்று உறுதியளிக்கிறேன். மாண்புமிகு திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது, கொசு ஒழிப்பு இயந்திரத்தைப்பற்றிக் குறிப்பிட் டார்கள். சென்னை மாநகராட்சியில் இரண்டு கொசு ஒழிப்பு இயந்திரங்கள் உள்ளன. அதில் ஒன்று பழுதுபட்டுள்ளது. அதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் டில்லியிலிருந்து வர வேண்டியிருக்கிறது. மற்றொரு இயந்திரம் தற்காலிகமாக திருவொற்றியூர் நகராட்சி பயன்படுத்துவதற்காக அனுப்பப் பட்டிருக்கிறது என்ற செய்தியை எனக்கு அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் அதைப்பற்றிக் கவனிக்கிறேன், விரைவில் நடவடிக்கை எடுக் கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கருத்துக்கள் தெரிவித்த உறுப் பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தவறுகள் நடக்கும் நேரத் தில்—நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது—தயவுசெய்து அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வாருங்கள் என்று தங்கள் மூலமாக அவர் களை வேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாக்களை இந்த மேலவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1986) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-55)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1986 ஜனவரி 28

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

**தீர்மானம்,** அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1986 ஜனவரி 28]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1986 ஜனவரி 28

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1986 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(முற்பகல் 11-57)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

121. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ் சில விதிகளை இயற்றுவது தொடர்பாக வீட்டுவசதி-நகர்ப் பகுதி வளர்ச்சித் துறையின் 8—8—1985 ஆம் நாளிட்ட 765 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 122 ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

122. தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகத்தின் தலைப்பு அதிகாரிகளின் 15—11—1984 முதல் 24—7—1985 வரையிலான கால அளவிற்கான இறுதி கணக்குகள் [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

123. தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

124. தமிழ்நாடு பொதுப்பணிகள் பொறியியல் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

125. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

126. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



127. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு அறிக்கை [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

128. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

129. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

130. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

34. தமிழ்நாடு அரசின் 1963-64, 1969-70, 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை. [ஏழாவது பேரவையில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது போக்குவரத்துத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் (1985-86) பதினொன்றாவது அறிக்கை].

35. 1973-74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை.

*36. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1986).

*37. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1986).

*38. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1986).

*39. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1986).

*40. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1986).

*41. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1986).

*42. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1986).

## இணைப்பு I

[324 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருச்சி நகரத்தில் மேலரண் சாலையில் இப்ராஹிம் பார்க்கை அடுத்து, நகராட்சியால் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கூரை கொண்ட ஷெட் வாடகை கார்கள் நிறுத்துவதற்கென அமைக்கப்பட்டது. இந்த இடத்திற்கு வடக்கே சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இதே சாலையில் ஒரு வாடகைக் கார் நிறுத்துமிடமிருந்தது. அங்கிருந்து வாடகைக் கார் ஓட்டுநர்கள் இப்ராஹிம் பார்க் அருகில் கட்டப்பட்ட ஷெட்டிற்கு வர விருப்பப்படாததால், அந்த ஷெட்டைப் பழைய இரும்பு சாமான் வியாபாரிகளுக்கு குத்தகை அடிப்படையில் பயன்படுத்தக் கொடுக்கப்பட்டது. அதில் 29 பேர்களுக்குச் சொந்தமான 32 கடைகள் இருந்தன. இந்த ஷெட் இப்ராஹிம் பார்க் நுழைவாயிலுக்கு வடபுறம் அமைந்துள்ளது. இதைத் தவிர, ஓட்டு வில்லைக் கூரை ஷெட் மேலும் 15 பேர்களால், மேற்படி நுழைவு வாயிலுக்கு தெற்கே அமைக்கப்பட்டது.

---

*27—1—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.





மேற்படி இரண்டு ஷெட்டுகளும், நகரில் போக்குவரத்து மிகுந்த மிக முக்கியமான சாலையில் அமைக்கப்பட்டிருந்தன. மாவட்ட போக்குவரத்து மற்றும் சாலை அபிவிருத்திக் குழு, மேற்படி ஷெட்டுகள் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதாகக் கருதி, அந்த இரண்டு ஷெட்டுகளையும் அகற்றவேண்டும் என 1983 முதல் நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும் நகராட்சிக்கு அறிவுறுத்தி வந்தது.

மேற்படி கடைக்காரர்கள் அவர்களுக்கு நகராட்சியால் வழங்கப்பட்ட இடத்தில் கடை வைத்தது மட்டும் அன்றி அவற்றிற்கு முன்புறம் சுமார் 6 அடி அளவிற்கு கடைச் சாமான்களைப் பரப்பி வியாபாரம் செய்து வந்தனர். இந்த அதிகமான ஆக்கிரமிப்பால் ஏற்கனவே குறுகலாக இருந்த சாலை மேலும் குறுகலாகியது. இந்த அதிகப்படியான இடத்திற்கு மேற்படி வியாபாரிகள் குத்தகைப் பணமோ, வாடகையோ நகராட்சிக்குச் செலுத்தவில்லை. 17—8—1983 அன்று நடைபெற்ற மாவட்ட போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் சாலை அபிவிருத்தி கூட்டத்தில், இந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுமாறும், அவர்களிடமிருந்து கட்டணம் ஏதாவது நிலுவையில் இருந்தால் அதைத் தள்ளுபடி (Write off) செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஏற்கனவே, போக்குவரத்து குழு முடிவு செய்ததுபோல் நடவடிக்கை எடுக்குமாறு, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் நகராட்சியை கேட்டுக்கொண்டார்.

மேலும் நகராட்சி பலமுறை கேட்டுக்கொண்டும், இந்த வியாபாரிகள் நிலுவையில் உள்ள குத்தகை அல்லது வாடகை கட்டணத்தை செலுத்தவில்லை. மேற்படி வியாபாரிகளுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு அதைச் செலுத்துமாறும் தவறினால் அவர்களுடைய குத்தகையை ரத்து செய்வதுடன் மேற்படி ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படும் என்று 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும், 1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் எழுத்து மூலம் ஒவ்வொரு நபருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டது. 1985 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணைப்படி, அப்போதைய குத்தகைதாரர்கள் 1—4—1985 முதல் 31—3—1986 வரை தொடர்ந்து கடைகளை நடத்தி வரலாம். ஆனால் 1984-85 ஆம் ஆண்டுக்கு எவ்வளவு வாடகை கொடுத்தார்களோ அதில் 15 சதவீதம் அதிகமாக கொடுக்கவேண்டும். இதற்கேற்ப, மூன்று நாட்களுக்குள் நிலுவைத்தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு மேற்படி தொகையைச் செலுத்த வேண்டும் என்றும், தவறினால் குத்தகை புதுப்பிக்கப்படமாட்டாது என்றும் எழுத்து மூலமாக மீண்டும் ஒவ்வொரு நபருக்கும் ஜூன் 1985-ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. 1971-72 முதல் 1984-85 வரை நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மொத்த வாடகைத் தொகை ரூ. 92,076.60

ஆகும். மேற்படி நபர்கள் ஜூலை 1985 வரையிலும் கூட நிலுவைத் தொகையைச் செலுத்தாததால், அவர்கள் உடனடியாக அவர்கள் வசம் உள்ள இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்றும், தவறினால் கடைகள் இலாக்காவினால் அகற்றப்படும் என்றும் ஜூலை மாதம் ஒலிபெருக்கியால் அறிவிக்கப்பட்டது.

7—8—1986 அன்று மேற்படி ஆக்கிரமிப்பாளர்களை அவர்களால் அமைக்கப்பட்ட ஓட்டு வில்லை ஷெட்டை அகற்றுமாறு நேரில் அறிவுறுத்திய தன்பேரில் மேற்படி நபர்களே, மேற்படி ஷெட்டையும் அவர்கள் பொருட்கள் அனைத்தையும் அகற்றி விட்டனர். அவர்கள் பொருட்களையோ அல்லது ஷெட்டையோ நகராட்சி அகற்றவில்லை.

12—8—1985 அன்று நகராட்சியால் அமைக்கப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் கூரை ஷெட்டில் உள்ள கடைக்காரர்களை நேரில் சென்று மேற்படி கடைகளை காலி செய்யும்படி கோரப்பட்டது. அவர்கள் காலி செய்த பின்னர், நகராட்சியால் அமைக்கப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் ஷெட், அகற்றப்பட்டு, அந்தப் பொருட்கள் (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள் மற்றும் இரும்புத் தூண்கள்) நகராட்சிக்குக் கொண்டு வரப்பட்டது.

நகராட்சியால் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு, அறிக்கைகள் தனித்தனியாக வியாபாரிகளுக்கு காலி செய்யும் முன்பே. கொடுக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர், கடைக்காரர்களுக்கு மாற்று இடம் கொடுப்பது சம்பந்தமாக எந்தவித திட்டமும் நகராட்சியிடம் இல்லை என்றும் ஒதுக்கீடு செய்ய மாற்று இடம் இல்லாமல் தெரிவித்துள்ளார்.

## இணைப்பு II

[328 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 3 OF 1986.
(As passed by the Assembly)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act, 1919.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 27th November 1985.





2. *Amendment of section 55-B, Tamil Nadu Act IV of 1919.*—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the words "within a period of eleven years", the words "within a period of eleven years and six months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Madras City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 8 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

## இணைப்பு III.

[328 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 4 OF 1986.
(As passed by the Assembly)

*A Bill further to amend the Coimbatore City Municipal Corporation Act, 1981.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Coimbatore City Municipal Corporation (Amendment) Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 27th November 1985.

2. *Amendment of Schedule VII to Tamil Nadu Act 25 of 1981.*—In Schedule VII to the Coimbatore City Municipal Corporation Act, 1981. (Tamil Nadu Act 25 of 1981), (hereinafter referred to as the principal Act), in sub-rule (*a*) of rule 4, for the words "within a period of four years and six months", the words "within a period of five years" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Coimbatore City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 9 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு. IV.

[328 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 5 OF 1986.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madurai City Municipal Corporation Act,* 1971.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Amendment) Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 27th November 1985.

2. *Amendment of section 62-A, Tamil Nadu Act* 15 *of* 1971.—In sub-section (1) of section 62-A of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) (hereinafter referred to as the principal Act), for the words "within a period of one year and six months", the words "within a period of two years" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Madurai City Municipal Corporation (Third Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 10 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு V.

[329 ஆம் பக்கத்தில் இனம் 4 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 6 OF 1986.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act,* 1976.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 27th November 1985.

2. *Amendment of section* 4, *President's Act* 28 *of* 1976.—*In* clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976) (hereinafter referred to as the principal Act),—

(i) for the words "for a period of nine years and six months", the words "for a period of nine years and nine months" shall be substituted.

(ii) in the first proviso, for the words "the said period of nine years and six months", the words "the said period of nine years and nine months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 11 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act. as amended by this Act.

இணைப்பு VI.

[329 ஆம் பக்கத்தில் இனம் 4 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 7 OF 1986.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 13th September 1985.

2. *Amendment of section 4, President's Act 5 of 1977.*—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977) (hereinafter referred to as the principal Act) for the expression "the 15th September 1985", the expression "the 31st March 1986" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 3 of 1985) and the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Fourth Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 16 of 1985) are hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said ordinances shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு VII.

[329 ஆம் பக்கத்தில் இனம் 4 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 8 OF 1986.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 13th September, 1985.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979) (hereinafter referred to as the principal Act), for the expression "the 15th September 1985", the expression "the 31st March 1986" shall be substituted.

3. *Repeal and saving.*—The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 4 of 1985) and the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Fourth Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 17 of 1985) are hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinances, shall be deemed to have been done or taken under the principal, Act, as amended by this Act.

இணைப்பு VIII.

[330-ஆம் பக்கத்தில் இனம் 4 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 9 OF 1986.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Act, 1958.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencemeந*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Second Amendment) Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 13th September 1985.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), in clause (*b*), in the proviso, for the expression "the 15th September 1985" the expression "the 31st March 1986" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayats (Fourth Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 5 of 1985) and the Tamil Nadu Panchayats (Fifth Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 18 of 1985) are hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinances, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

1024/86

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 29, 1986-தொகுதி 220 எண் 4

Wednesday, 29th January 1986-Volume 220 No. 4

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. Geerge, Madras-600 009.

லை ரூ. 2.75]

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1986, சனவரி 29.

தை 16, குரோதன, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 51 முதல் 58 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். இப்போது வினா எண் 59.

குடியாத்தத்தில் நவீன உலர் சலவை நிலையம்

*59 வினா—திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடியாத்தம் வட்டம் சலவையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு "பவர் லாண்டரி" துவக்க ரூ. 44,000 ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள சலவையாளர்கள், "பவர் லாண்டரி" முறையில் சலவை செய்வதை விரும்பவில்லை என்றும் கூறப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குடியாத்தம் சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் நவீன உலர் சலவை நிலையம் அமைக்க அரசின் நிதி உதவியைக் கோரி 5—4—1982 அன்று தீர்மானம் இயற்றியது. அச்சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அரசு நிதி உதவி அளித்துள்ளது. நிதி உதவியைப் பெற்றுக்கொண்டபின், தற்போது நவீன உலர் சலவை நிலையம் அமைக்க விரும்பவில்லை என்று அச்சங்கம் தீர்மானம் செய்துள்ளதை அரசு ஏற்க இயலாது. நவீன உலர் சலவை நிலையம் அமைக்க ஆக்கபூர்வமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

## கூட்டுறவு பயிற்சியாளர்கள்.

* 60 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்): மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

தமிழ்நாடு மத்திய, மாநில கூட்டுறவு வங்கிகளில், பட்டம் பெற்ற கூட்டுறவு பயிற்சியாளர்களை பணியில் அமர்த்துவதுபோல், பட்டம் பெறாத கூட்டுறவு பயிற்சியாளர்களை பணியில் அமர்த்தும் கருத்தாரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : படித்து பட்டம் பெற்றவர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி தரும் திட்டங்கள் எவ்வளவு இருக்கின்றன ? வேலையில்லாத பட்டதாரிகள் அதிகமாக இருக்கும் நிலைமையைக் கருதி இன்னும் அதிகம் பேருக்கு பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : இப்போது தமிழகத்திலே கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் ஏழும், கூட்டுறவு பயிற்சி கல்லூரிகள் இரண்டும், ஆக மொத்தம் ஒன்பது இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மிளகாய் சாகுபடி.

* 55 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் பச்சை மிளகாய் மட்டும் சாகுபடி செய்யும் பண்ருட்டி வட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு, உரிய உயர் விளைச்சல் விதை இரகங்களை வழங்க அரசு முன்வருமா ?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பண்ருட்டி தாலுகாவில் மட்டும் அல்லாமல் தமிழ் நாட்டில் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் பச்சை மிளகாய் சாகுபடியாளர்கள் உள்ளனர். உயர் விளைச்சல் தரவல்ல கே 1, கே 3, கோ 1, கோ 2 மற்றும் எம்.டி.யு. 1 இரகங்கள் தமிழ்நாடு முழுவதும் தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத் துறைகள் மூலமாக வழங்கப் படுகின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஆந்திரா மிளகாய்க்கு அதிகக் காரம் இருப்பதாகவும் நம்முடைய மிளகாய்க்கு அதிகக் காரம் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். அந்த வகையிலே அதிகக் காரம் உள்ள மிளகாயை உற்பத்தி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நம்முடைய காரத்திற்குத் தகுந்தாற்போல் உற்பத்தி செய்யப்படுகிறது.

## பாலூர் விவசாயப்பண்ணை.

* 56 வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பண்ருட்டி தாலுகா, பாலூர் விவசாயப் பண்ணை மூலம் அரசு மேற்கொண்டுள்ள விவசாயப் பணிகள் என்ன ?

(இ) இதை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(உ) உயர் ரக மிளகாய் விளைச்சலுக்கு இங்கே ஆராய்ச்சி மேற்கொள்ள அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) பாலூர் விவசாயப் பண்ணையில் முக்கியமான காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள், நெல் முதலிய பயிர்களின் உயர் விளைச்சல் தரும் ரகங்களின் மூல விதைகளின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. கத்திரிச் செடியில் இனத்தேர்வு முறையில் புது ரகங்கள் உற்பத்தி செய்யவும், கத்திரிச்செடியின் உரத்தேவை, நீர்த்தேவை இவைகளின் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) இல்லை.

(உ) தற்போது இல்லை.

[1986 சனவரி 29

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்த அரசு விவசாயத் துறையில் அதிக அக்கறை எடுத்து வரும் நேரத்தில் விவசாயப் பண்ணைகள் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்றனவா ? அப்படி இல்லாத மாவட்டங்களில் விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பெரும்பாலும் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 22—1—1986 அன்று ஒத்தி வைக்கப் பட்ட வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

கத்தரிக்காய்.

* 17 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நெல், கோதுமை, பருத்தி, மணிலா, பச்சை மிளகாய் போன்ற விவசாய விளைபொருட்களை (Notified crops) அரசு நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டதுபோல், கத்தரிக்காயையும் அரசு நிர்ணயப் பயிர் என அறிவிக்க முன்வருமா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிர்ணயம் செய்யப்படும் ?

(உ) காலதாமதத்திற்கு காரணமென்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) காய்கறி மற்றும் பழவகைகளுக்காக விற்பனைக்கூடங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய விற்பனைக்கூடங்கள் அமைத்த பின் மற்ற மாவட்டங்களிலும் கத்தரிக்காயை அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

கால்நடை மருத்துவக் கல்லூரி.

* 18 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

தென் ஆற்காடு அல்லது வட ஆற்காடு மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்கும் கருத்து ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.



1986 சனவரி 29]

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் எண்ணம் இல்லை என்று தெரிவித்தார்கள். அந்தப் பகுதிகளிலே உள்ளவர்கள் இதற்காக சென்னைக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. கல்வித் துறையிலே நல்ல பல மாற்றங்களைச் செய்து கொண்டு வருகிறோம். அதைப் போலவே, இப்போது இல்லை என்றாலும் வருங்காலத்திலேயாவது இந்த இரண்டு மாவட்டங்களிலும் எங்கேயாவது ஓர் இடத்தில் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தற்போது நாமக்கல்லுக்கு அருகே, இலத்திவாடிக்கு அருகே புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியைத் துவக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு இந்த ஆண்டு பல்கலைக் கழகம் 628 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. நாமக்கல்லைச் சேர்ந்த ரோட்டரி சங்கம் 10 இலட்சம் ரூபாயை வழங்க முன் வந்து வழங்கியிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே அமைக்கலாமா என்பதுபற்றி எதிர்காலத்திலேதான் பரிசீலிக்க வேண்டும்.

(முற்பகல் 10-05)

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, நாமக்கல்லில் அமைப்பு வருகிறது. அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே இந்த ஆண்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 24—10—1985 அன்றே கல்லூரி தொடங்கப்பட்டுவிட்டது. கட்டிட வசதியில்லாத காரணத்தினால் வகுப்புகள் நாமக்கல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் நடைபெற்று வருகிறது.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாமக்கல்லில் ரோட்டரி சங்கம் இதில் ஈடுபட்டிருப்பதாகக் கூறி னார்கள். இன்னும் இரண்டு மாவட்டங்களில் இதுபோன்ற ரோட்டரி சங்கங்கள் அல்லது தனியார்கள் நிதி ஒதுக்கிச் செய்ய முன் வந்தால், அதை அரசு மான்யமாக ஏற்றுக்கொண்டு கல்லூரி அமைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தனியார்கள் கொடுக்கும் நிதியைக் கொண்டு மட்டும் கல்லூரி நடப்பதாக இருந்தால், அதைப்பற்றி அரசு முயற்சி எடுக்கும். அதற்கு மிகுந்த பணச் செலவு ஆகும். தேவைகளைக் கருத்தில் கொண்டு அந்தக் காரியங்களைச் செய்ய முடியும்.

முந்திரிக்கொட்டை உடைக்கும் தொழிலாளர்கள்.

*51 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பண்ருட்டியின் புறநகர்ப் பகுதியில் வாழும் முந்திரிக்கொட்டை உடைக்கும் தொழிலாளர்கள், தங்களுக்கு நியாயமான ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று, அரசுக்குக் கோரிக்கைகள் அனுப்பி உள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) பண்ருட்டியின் புறநகர்ப் பகுதியில் வாழும் முந்திரிக்கொட்டை உடைக்கும் தொழிலாளர்களிடமிருந்து கோரிக்கைகள் எதும் அரசுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, அப்படி கோரிக்கைகள் எதுவும் அரசுக்கு வரவில்லை என்றாலும்கூட, முந்திரிக் கொட்டைத் தொழிலாளர்களுடைய ஊதிய நிர்ணயம் சம்பந்தமான பிரச்சினையை அரசு உணர்ந்திருக்கின்றதா? அப்படியானால், அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கின்றதா? அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் அரசால் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றதா? அது குறித்து தகவல் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழக அரசு ஊதியத்தை நிர்ணயித்துள்ளது. அந்தத் துறை 10 பிரிவுகளாக இருக்கின்றது. அந்தத் துறையிலே 10 பிரிவினர் ஈடுபட்டிருக்கின்றார்கள். அரைத்தல், உடைத்தல், உரித்தல், தரம் பிரித்தல், சரிபார்த்தல், இணைப்புவேலைகள், போர்மர் இயக்குநர், சிப்பம் கட்டுதல், நிரப்புதல், எழுத்தர், காவலர் என்று





10 பிரிவுகள் இருக்கின்றன. அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் இன்றைக்கு சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, இன்றையதினம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று குறைந்த அளவு ஊதியச் சட்டம் கூறுகிறது. என்றாலுங்கூட, தமிழக அரசு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இதை நிர்ணயிக்க வேண்டும் என்று இருக்கின்றது. 1983-லே நிர்ணயிக்கப்பட்டது. அதை விரைவில் இந்த ஆண்டு திருத்தியமைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: குறைந்தபட்ச ஊதியம் பற்றிய விவரங்களை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, இங்கே விவரங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கிறேன்.

நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள்

*52 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காமராசர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகில் உள்ள புதுப்பட்டி கிராமத்தில் இருக்கும் கூட்டுறவு ஆட்டுப்பண்ணையில் உள்ள ஆடுகளில், திடீரென்று 1985, செப்டம்பரில் நோயினால் பாதிக்கப்பட்டு, பல ஆடுகள் இறந்துவிட்டன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆடுகள் இறந்து போயின?

(உ) அந்நோய் மேலும் பரவாமல் இருக்க, அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (இ) காமராசர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகிலுள்ள புதுப்பட்டி கிராமத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் அல்லது பண்ணை ஏதுமில்லை. இக்கிராமத்தில் 1985 ஆகஸ்ட் மாதத்தில் சில ஆடுகள் நோயினால் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஏழு செம்மறியாடுகளும் மூன்று வெள்ளாடுகளும் குணமடைந்துவிட்டன. இறப்பு ஏதுமில்லை.

(உ) புதுப்பட்டி கிராமம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு, தற்போது நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, 1985 செப்டம்பரிலே புதுப்பட்டி பகுதியிலே ஏற்பட்ட நோயினாலே ஆடுகள் நூற்றுக்கணக்கில் இறந்துவிட்டதாகப் பத்திரிகையிலே வந்திருக்கின்றது. ஆனால் அந்த நோயினால் இரண்டு மூன்று ஆடுகள் பாதித்ததாகவும் அதற்குப் பிறகு வெக்கை நோய்க்கு அந்தப் பகுதியிலே மருத்துவ வசதி செய்திருப்பதாகவும் சொல்கின்றார்கள். இதுபோன்ற நோய் நம் மாநிலத்திலே பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கின்றது என்று செய்திகள் வந்திருக்கின்றனவே அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அப்படி தகவல்கள் வருகின்றபோது, கால்நடை பராமரிப்புத் துறை உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. ஏதாவது விவரம் ஒரு குறிப்பிட்ட பகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், தகவல் அளிக்கிறோம்.

### சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம்.

* 53 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில், சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம் ஒன்றை, உருவாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10.10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, தூத்துக்குடி பகுதி வளர்ந்து வருகிற ஒரு துறைமுகப் பகுதி. எனவே அங்கே ஒரு சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம் உருவாக்கப்பட்டால், தொழில்கள் வளர்ச்சிக்கு, குறிப்பாக பெருந்தொழில்கள் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்குமென்ற அடிப்படையில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இப்போது



கருத்துரு எதுவும் இல்லாவிட்டாலும், இப்படிப்பட்ட சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம் வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கிறதா ? அதைப் போல அங்கேயும் வருங்காலத்தில் விரிவுபடுத்தும் எண்ணமுண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தியாவிலேயே நான்கு இடங்களில்தான் சுங்கத் தீர்வையற்ற அந்தப் பேட்டைகளை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. சென்னையிலும், கல்கத்தாவில் பால்டா பகுதியிலும், கொச்சியிலும், உத்திரப்பிரதேச மாநிலத்தில் நொய்டாவிலும் சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலங்கள் அமைக்கப்படுகின்றன. சென்னையில் அதை அமைக்க 100 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, தூத்துக்குடி தமிழகத்தில் இரண்டாவது துறைமுகமாக வளர்வதால், அதையும் இந்தத் திட்டத்தின்கீழ் சேர்க்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது அப்படிப் பட்ட எண்ணம் எதுவுமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்னையிலே ஏற்பட இருக்கிற சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது இயங்கத் தொடங்கி விட்டதா ? எத்தனை தொழிற்சாலைகள் வர இருக்கின்றன ? எத்தனை தொழிலதிபர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நூற்றுக்கு நூறு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்பேட்டை அது. இதுவரையில் 155 விண்ணப்பங்கள் வந்துள்ளன. மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து அங்கீகரிக்கிறார்கள். அந்த வகையில் 74 பேர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதற்கான கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சுங்கத் தீர்வையற்ற வர்த்தக மண்டலத்தில் ஆரம்பிக்கப் போகிற தொழிற்சாலைகள்பற்றிச் சொன்னார்கள். 155 விண்ணப்பங்கள் வந்தன என்று சொன்னார்கள். எல்லாமே தனிப்பட்டவர்களிடமிருந்து வந்த

விண்ணப்பங்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அங்கே அரசாங்கம் ஏதேனும் தொழில்களை ஆரம்பிக்க முன்வருமா அல்லது முழுவதும் தனிப்பட்டவர்களுக்கே அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் தான் அநேகமாக அங்கே தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கிறார்கள். அரசாங்கம் இதுவரையிலே அதுமாதிரியான தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்த முன்வரவில்லை. காரணம், இங்கே நூற்றுக்கு நூறு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்பேட்டைகளை அமைக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. வெளி நாட்டுக்காரர்கள், அயல் நாடுகளில் வாழ்கின்ற இந்தியர்கள்—என்.ஆர்.ஐ.—அங்கே முதலீடு செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

## Loans to Hotel Industry.

* 54. *Q.*—Thiru K. SUBBU : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Tamil Nadu Industrial Investment Corporation, has stopped sanctioning loans to the Hotel Industry in Tamil Nadu; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) மற்றும் (இ) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் உணவு விடுதிகள் அமைக்க 29—9—1984 வரை கடனுதவி அளித்து வந்தது. ஏற்கனவே இத்திட்டத்திற்கு கணிசமான அளவில் கடனுதவி அளிக்கப்பட்டு விட்டதாலும் கடனுதவியைப் பெற்ற அநேக உணவு விடுதிகள் இக்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப்பட்டு 29—9—1984-க்கு முன்னரே பெறப்பட்டு பரிசீலிக்கப்படாத திருத்த விண்ணப்பங்களுக்கு 1985-86-ல் கடனுதவி வழங்க இந்நிறுவனம் தற்போது முடிவு செய்துள்ளது. மேலும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களின் தலைமையகங்களில் உணவு விடுதிகள் அமைக்க கடனுதவி கோரும் விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் இந் நிறுவனம் முடிவு செய்துள்ளது.



**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, புதிய முடிவு ரொம்ப வரவேற்கத்தக்கது. அதை வரவேற்கத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். உணவு விடுதிகளுக்குப் பணம் வழங்கும்போது, சிறிய உணவு விடுதிகளைக் கட்டவும் அரசாங்கத்திடம் திட்டமிருக்கிறதா ? சிறிய உணவு விடுதிகளைக் கட்ட உதவி செய்தால், பலர் அப்படிப்பட்ட சிறிய உணவு விடுதிகளைக் கட்ட முன்வந்து, அதன்மூலம் உணவு கொடுத்து, உண்டி கொடுத்து, உயிர் கொடுப்பார்கள். எனவே அந்த முறையில் எல்லோரையும் ஊக்குவிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நட்சத்திரத் தகுதியில்லாத உணவு விடுதிகளுக்குத்தான் இந்தக் கடன் உதவி. அதாவது நட்சத்திரத் தகுதியில்லாத சிறிய உணவு விடுதிகளை நடத்துகின்றவர்களுக்குத் தான் இந்த உதவி அளிக்கப்படுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, நல்ல உணவு விடுதிகளின் தேவை அதிகமாக இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் எல்லாம் நல்ல உணவு விடுதிகள் தேவை என்று சொல்லுகிறார்கள். எனவே இந்த நிறுவனமே மாதிரி உணவு விடுதிகளை அமைத்து, முன் உதாரணமாகச் செயல்படுமா ?

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது கடன் வழங்கி உதவுகிற நிறுவனமே தவிர, எந்தத் தொழிலையும் நடத்துகிற நிறுவனம் அல்ல.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நிறுவனம் கடன் வழங்குவதைப்பற்றிச் சொன்னார்கள். அதற்காக நன்றி. அங்கே உணவு வசதிகள் மட்டுமல்ல, மாவட்டத் தலைநகர்களில் அறைகள் கொண்ட கட்டிடங்கள் கட்டுவதற்கும், அப்படிக் கட்டக் கூடியவர்களுக்குக் கடன் வழங்க அந்த நிறுவனம் முன்வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** உணவு விடுதிகள் பல்வேறு வகைகளில் கட்டப்படுகின்றன. சாதாரண விடுதிகள், அறைகளோடு கூடிய விடுதிகள் என்று இரண்டு வகைகள் உள்ளன. அதிலே நட்சத்திரத் தகுதி இல்லாத

ஓட்டல்களுக்கு மட்டும் இந்த நிறுவனம் கடன் வழங்குகிறது. நட்சத்திர ஓட்டல் போன்ற கட்டிடங்களுக்கு மத்திய அரசு சுற்றுலாத் துறை மூலம் கடன் வழங்கப்படுகிறது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, டி.ஐ.ஐ.சி. மூலமாகக் கடன் தொகை பெறுவதில் காலதாமதம் ஆவதாகவும், கடன் வழங்குகிற அதிகாரிகளைச் சந்திக்கவே முடிவதில்லை என்ற நிலைதான் அங்கே இருப்பதாகவும் சொல்கிறார்கள். மேலும் நேரடியாகக் கடன் வாங்க முடியாமல் இடைத்தரகர்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். இது அமைச்சருக்கே தெரிந்திருக்கலாம். இருந்தாலும் விபரம் வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். தமிழ்நாடு தொழில் நிறுவனத்தின் மூலம் பெறும் கடன்களை காலதாமதம் இல்லாமல் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில், என்னிடத்தில் அப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. அப்படிப்பட்ட சம்பவங்கள் ஏதாவது இருந்தால், அதற்கான தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. பல்வேறு கடன்களை அந்த நிறுவனம் வழங்குகிறது. என்ன பிரச்சினை என்றால், தொழில் தொடங்குபவர்கள் தமிழ்நாடு பூராவும் ஒரே மாதிரி தொழிலைத் தொடங்க கடன் கேட்கிறார்கள். 25 ஆயிரம் பேருக்கு ஒரே மாதிரியான தொழிலுக்குக் கடனை வழங்கிய பிறகு, மற்ற விண்ணப்பதாரர்களுக்கு வேறு தொழில்களைத் தொடங்கலாமே என்று ஆலோசனை சொல்கிறோமே தவிர, கடன் வழங்க மாட்டோம் என்று சொல்வது இல்லை.

## *Foundries.*

* 57. Q.—Thiru K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to set up a pilot project, to modernise the foundries in Coimbatore Region; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, கோவை வட்டாரத்தில் வார்ப்படத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்த தற்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும் கூட, அது மக்களுக்குத் தேவைப்படுகிற அவசியத்தைக் கருதி, வருங்காலத்திலாவது அவைகளை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் வார்ப்படத் தொழிற்சாலை அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாக கோவை மாவட்டத்திலேதான் 80 சதவீத வார்ப்படத் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. ஆகவே சிறு தொழில்களை நவீனமயமாக்கும் மத்திய அரசின் திட்டத்தின்கீழ் இந்தத் தொழில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் வார்ப்படத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தற்போது 12 சிறிய தொழில் நிறுவனங்கள் அதனால் பயன் பெற்றுள்ளன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கோவை மாவட்டத்தில் மட்டும் இத்தகைய வார்ப்படத் தொழிற்சாலைகள் 80 சதவீதம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு மாவட்டங்களில் எங்கெங்கே அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன ? பிற மாவட்டங்களில் அவைகள் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ? பிற மாவட்டங்களிலும் வார்ப்படத் தொழிற்சாலைகளை அரசே அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜெகதீசன் :** தமிழ்நாட்டில் மொத்தம் 509 சிறு வார்ப்படத் தொழிற்சாலைகள் உள்ளன. கோவையில் மட்டும் 394 இருக்கின்றன. இந்த வார்ப்படத் தொழில்களை தனியார்தான் அமைக்கிறார்கள். அவர்கள் அதிக அளவில் முன்வந்தால், பரவலாக எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்த முடியும். இதை நவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும்போது மைய அரசும் மாநில அரசும் சேர்ந்துதான் இந்த முயற்சியில் ஈடுபடவேண்டியிருக்கிறது. மேலும் குறிப்பாக, அதற்குத் தேவையான மூலப் பொருளான நிலக்கரியும், பிக் அயர்னும் (Pig Iron) சரியாகக் கிடைக்கவில்லை. அவைகளை அதிக அளவில் கொடுக்க வேண்டும் என்று மைய அரசை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, கோவையில் இந்தத் தொழில் மூலப்பொருள்கள் கிடைக்காததால் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பாக நிலக்கரியை ஏற்றிக்கொண்டு வரும் வாகன்கள் பற்றாக்குறை இருப்பதாக ஒரு குற்றச்சாட்டும் பொதுவாக இருக்கிறது. இந்தியாவிலேயே கோவை மாவட்டத்தில்தான் இத்தகைய வார்ப்படத் தொழிற்சாலை இருப்பதால், அதை நவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறபோது, வாகன்கள் பற்றாக்குறையால் அது பாதிக்கப்படுவதால், வாகன்கள் நிறைய அனுப்பவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன்: தலைவர் அவர்களே, நமக்கு அதற்குத் தேவையான 'தனி இரும்பைப்' பொறுத்த மட்டில், ஓரளவுக்கு மத்திய அரசினுடைய செயல் நிறுவனம் நமக்கு அதை விநியோகித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக 'கோக்' என்கிற சுட்ட கரி மாதம் ஒன்றுக்கு சுமார் 230 வேகன் தேவைப்படுகிறது. ஆனால் சராசரியாக இப்போது 50, 55 வேகன்கள்தான் கொடுத்துக்கொண்டு வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, இங்கே வந்திருந்த மைய அரசின் அமைச்சர் அவர்களிடம் நானும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் வற்புறுத்தியதன் அடிப்படையில், சென்ற மாதம் மட்டும் ஆயிரம் டன் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு கூடுதலாக அனுப்புவதற்கு, தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோயம்புத்தூரில் 396 வார்ப்படத் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் மாவட்டங்களாகும். தனியார் மேற்படி தொழிற்சாலைகளை இந்த மாவட்டங்களில் அமைக்க முன்வந்தாலும், வராவிட்டாலும், அங்குள்ள மக்கள் தற்சமயம் புயலாலும், வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்கேயும் மேற்படி தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அரசு முன்னின்று நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அந்த அந்த மூலப்பொருள்களைக் கொண்டு என்ன என்ன தொழில்கள் தொடங்க முடியுமோ அந்தந்தத் தொழில்களைத் தொடங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தைக் குறிப்பிட்டார்கள். அங்கே கிடைக்கக்கூடிய முக்கிய மூலப் பொருள் தேங்காய் நாராகும். எனவே அது சம்பந்தப்பட்ட தொழில்களைத் தொடங்க மிகுந்த வேகத்தோடு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். பட்டுவளர்ச்சியும் தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

## Mulberry Cultivation.

* 58. *Q.*—Thiru S. J. SADIQ PASHA ; Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the State Government proposes to cultivate mulberry on a massive scale in one lakh acres, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன்: (அ) ஆம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் தமிழ்நாட்டில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும் பரப்பளவு ஒரு லட்சம் ஏக்கராவாக அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) கூடுதலாக பண்ணைகள், வித்தகங்கள், பட்டு நூற்பு நிலையங்கள் ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, பட்டு வளர்ச்சியைக் கருத்திலேகொண்டு, பட்டுத் துறையை தனித் துறையாக அரசு அமைத்தது. அதன்மூலம், என்ன என்ன பணிகள் நடந்திருக்கின்றன? குறிப்பாக கர்நாடக மாநிலத்திற்கு ஈடாக பட்டு வளர்ச்சியில் தமிழகத்தையும் வளர்ப்பதற்கு உதவும் வகையில், பட்டுப் பூச்சிகள் உணவாகக்கொள்ளும் ஒரே செடியான முசுக்கொட்டைச் செடியை வளர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜீ. ஜகதீசன் :* தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1979 ஆம் ஆண்டிலேதான் தனியாக பட்டு வளர்ச்சிக்கென ஒரு துறையை சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பித்தது. அது முதற்கொண்டு பட்டு வளர்ச்சிக்குத் தேவையான அளவிற்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறோம். 1956-இல் மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு, பட்டு வளர்ச்சி அதிகமாக நடந்துகொண்டிருந்த கொள்ளேகால் பகுதி கர்நாடக மாநிலத்திற்குச் சென்றுவிட்டது. அங்கே அப்போது சுமார் 500 ஏக்கரா நிலத்திலேதான் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டு வந்தது. அதன்பிறகு தர்மபுரி மாவட்டத்திலே ஓசூர், தாளவாடிப் பகுதிகளில் இப்போது சுமார் 65,000 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படுகிறது. தேவையான அளவுக்கு எல்லா வசதிகளையும் அங்கே செய்துகொண்டிருக்கிறோம். இப்போது ஏறக்குறைய ஆறு இலட்சம் கிலோ பட்டுநூல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 40,000 ஏக்காரவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்கான ஏற்பாடுகளையும் நாம் இப்போது மேற்கொண்டிருக்கிறோம்.

*திருமதி வி. ஜெயலட்சுமி :* தலைவர் அவர்களே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு லட்சம் ஏக்கராவில் முசுக்கொட்டைச் செடி பயிரிட திட்டம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். 'நபாட்' நிறுவனமானது, காமராஜர் மாவட்டத்தில் திருவில்லிப்புத்தூர் தாலுகாவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்குரிய சாதகமான சூழ்நிலைகள் (clomatic conditions) இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. ஆகவே அங்கே முசுக்கொட்டைச் செடி பயிரிடுவது பட்டு வளர்ச்சிக்கு மிகவும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்று அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு பிளவைக்கல் அணைக்கட்டுத் திட்டத்திற்கு கீழேயுள்ள பகுதியிலே முசுக்கொட்டைப் பண்ணை ஒன்றை வைத்திருக்கிறார்கள். அந்தப் பண்ணையை மேலும் விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா ?

(முற்பகல் 10-25)

இன்னும் பரவலாக திருவில்லிப்புத்தூர், சாத்தூர் போன்ற தாலுக்காக்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அந்த இடங்களிலும் அவைகளை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய



கூடமைப்பட்டுள்ளேன். மேலும் முசுக்கொட்டைச் செடி பண்ணையிலே வேலை பார்க்கும் அலுவலர்களுக்கு நிரந்தரமான ஊதியங்கள் இல்லையென்றும், அவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் நான் அந்தப் பண்ணைக்குச் சென்றபோது கூறியதைக் கேட்டேன். அவர்களுடைய நல்வாழ்வுக்காக இந்த அரசு ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜீ. ஜெகதீசன்:* தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலே ஓசூர், தாளவாடி போன்ற பகுதிகளிலேதான் நல்ல சீதோஷ்ண நிலை இருக்கிறதென்று நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு மிகப் பின்தங்கிய இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், புதுக்கோட்டை போன்ற வறட்சியான மாவட்டங்களிலேகூட முசுக்கொட்டைச் செடி பயிரிடமுடியும். அதன் மூலமாக வேலையற்ற விவசாயக் கூலிகளுக்கு நிரந்தரமான நல்ல வருவாய் தர முடியும் என்ற ஏற்பாட்டை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி பயிரிட்டால், இரண்டு அல்லது மூன்று பேர்கள்—வீட்டிலுள்ள பெண்கள் வேலை செய்தால்கூட போதுமானது. ஏறக்குறைய 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய்க்கு வருமானம் கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு, அந்தப் பகுதியிலே பரவலாக முசுக்கொட்டை பயிரிடவும், பட்டு வளர்க்கவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் மற்ற வசதிகளையும் தக்க நேரத்தில் அரசு பரிசீலனை செய்து வழங்கும்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(1) 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986).

(2) 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986).

(3) 1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986).

(4) 1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986).

(5) 1986 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986).

## 3. கவன ஈர்ப்பு.

### மீனம்பாக்கம் பின்னி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிர்வாகம் அந்நிறுவனத்தை மூடிவிட அறிவிப்பு கொடுத்துள்ளது குறித்து.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—



"மீனம்பாக்கம், பின்னி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிர்வாகம், அந்நிறுவனத்தை மூடிவிட அறிவிப்பு கொடுத்துள்ளதன் விளைவாக வேலை இழக்கவிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, இதுகுறித்து ஒரு விளக்கமான அறிக்கை @ மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, பின்னி என்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனமானது பின்னி லிமிடெட்டின் ஒரு பகுதிதான். அதற்கு பொதுவான பேலன்ஸ் ஷீட்டுதான் வைத்திருக்கிறார்கள். 1984 ஆம் ஆண்டு வரை அது லாபத்தில் இயங்கியது. இது 65 ஆண்டுக் காலமாக இயங்கி வரக்கூடிய ஒரு நிறுவனம். ஹெவி என்ஜினியரிங் பாதுகாப்புத் துறை மற்றும் பி.ஹெச்.இ.எல். போன்ற நிறுவனங்களுக்கு என்ஜினியரிங் தளவாடங்களை அளித்து வரக்கூடிய மிக முக்கியமான நிறுவனமாக அது இருக்கிறது. இதில் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல், நிர்வாகம் வேண்டுமென்றே செய்ததாக தொழிலாளர்கள் கருதுகிறார்கள். அதனுடைய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பி & சி மில்லை மூடி தொழிலாளர்களை ஆட் குறைப்பு செய்து, சம்பளத்தை வெட்டி, அதிகமாக லாபம் ஈட்டுவதற்கு முனைந்து வெற்றி பெற்ற நிர்வாகம், இப்பொழுது பின்னி இன்ஜினியரிங் ஒர்க்ஸில் வேலை பார்க்கிற 1,300 தொழிலாளர்களை வேலையிலிருந்து ஆட் குறைப்பு செய்து, சம்பளத்தை வெட்டி, அதன் வாயிலாக அதிக லாபம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, வேண்டுமென்றே அதை நஷ்டத்தில் இயங்குவதற்கு ஓராண்டுக் காலமாக அனுமதித்துள்ளார்கள் என்று தொழிலாளர்கள் தரப்பிலே கூறப்படுகிறது. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தக் காலம் ஓராண்டுக்கு முன்னதாகவே முடிந்து, தற்போது ஊதிய உயர்வு வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது தொழிலாளர் நலத்துறை சமரசப் பேச்சு வார்த்தை தொடங்கியிருக்கிறது. ஆனால் நிர்வாகம் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதாவது ஆட் குறைப்பு, சம்பள வெட்டு இதுபோன்ற கோரிக்கைகளை வைத்து, தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடிய அடிப்படையில், சம்பளத்தை உரிய நேரத்தில் கொடுக்காமல், காலம் தாழ்த்திக் கொடுப்பது—இதுவரை பல மாதங்கள்,

---

@ 517 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கொடுக்கப்படவில்லை—'இன்சென்டிவ்' கொடுக்காமல் இருப்பது, 'மெடிக்கல் அலவன்ஸ்' கொடுக்காமல் இருப்பது, 'கேன்டீன்' வசதிகளைக் குறைப்பது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது கவன ஈர்ப்பு. உறுப்பினர் விளக்கம்தான் கேட்க வேண்டும்.

திரு. க. சுப்பு: அதுமாத்திரமல்லாமல், அவர்களையெல்லாம் நிர்ப்பந்தப் படுத்துகிற காரணத்தால், இந்த நிறுவனத்தை மூடி விடவேண்டுமென்று நிர்வாகம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிற கோரிக்கையை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்றும், தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதன்மீது அவர்களுக்கு அனுமதியை அரசு மறுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, தொழிலாளர்கள், தொழில் நிறுவனம் ஆகிய இரண்டு சாராரையும் இன்றைக்கு அழைத்து தொழிலாளர் நலத் துறை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன சமூகநல உரிமையைப் பாதுகாக்கின்ற உணர்வை வைத்துக்கொண்டு ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டுவர அரசு முயலும்.

(முற்பகல் 10-30)

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, அந்த வகையில் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்காகவே மானேஜ்மென்டின் கோரிக்கைக்கு அனுமதி மறுப்பதோடு, இந்தத் தொழிற்சாலையை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. எனவே அந்தத் தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இது குறித்து ஆணையர் பார்த்து முடிவு எடுத்த பிறகு, அரசு முடிவெடுக்க வேண்டும். ஆணையர் முடிவை தற்போது அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.



4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு.
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986.)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

Thirumathi TARA CHERIAN: Hon. Chairman, I thank you for giving me this opportunity to express my opinion on this particular Bill which seeks to amend the Tamil Nadu Prohibition Act, 1937. As I understand, the Bill before us replaces an Ordinance which extended the time-limit for auctioning arrack shops by just one month before the Government took over the arrack retail trade. My only objection is this. The Bill pertains to Prohibition. I want to ask: "Are we really very serious about re-introducing Prohibition?" It is said that the present Bill seeks to further amend the Tamil Nadu Prohibition Act, 1937. It is also stated that after some time or in the near future, Prohibition is to be re-introduced in all sincerity. But I want to assert that it will never be enforced fully or even partially in our country, including Tamil Nadu. Therefore, let us not hoodwink ourselves and pull wool over our eyes and say that we would be able to re-introduce Prohibition in the right sense. Nowhere in the world it has succeeded. In America, they have tried and failed. From the very beginning, we have been saying that Prohibition is not enforced in the neighbouring States. I want to know how

---

@ 518—519 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Prohibition is going to be enforced in our State. Nowhere in India, including the State of Gujarat, which is the birth-place of our revered Mathatma Gandhi, Probhibition has been successfully implemented. For political reasons, it is often mentioned so as to keep the subject fresh in the minds of the people. This could be brought before the Lok Sabha which is a bigger representative body of the people. Ithink much time is wasted on this particular subject. Besides, different yardsticks are used in regard to Prohibition in the case of different sets of people. The armed forces are permitted to consume intoxicants, though, I know, many people in the Army are abstainers and they never drink. The people in the armed forces are not forbidden from drinking. Therefore, Prohibition will not be a success in their case. The prohibition drinks are used as beverages among the tribal people and it is part of their food and they consume it to keep themselves warm in hilly areas. The International Airlines which has been a great pride of our country will never be able to introduce Prohibition. We have not introduced Prohibition on in those Planes because nobody asks for permit but only money to have drink there. We will have to think about other things that have been determental to the health of the people. I do not know whether the people in power realise that not only in Delhi, Bombay and Calcutta but even in Madras, many of the intoxicating drugs are easily available near Colleges and Schools and our children consume them and

(முற்பகல் 10-35)

are becoming their addicts. The Government have not come forward bodly to say that they are not going to encourage people in this regard. All that they can say is that they would see to it that people do not have too much of drinks. But this has to be impressed on the people themselves. Now, we find sexually transmitted diseases spreading very quickly. A new kind of danger in the form of a new disease known as AIDS which was hitherto prevalent in foreign countries is now coming to India. So, there are several things which are happening and which cannot be controlled by law alone. There is an essential difference between human beings and animals. God has given to human beings the intellect to choose what is good. It is often said that while a rich man gets away with all his pleasures a poor man is punished even if he tries to get a little bit of pleasure. A poor rickshaw-puller or a man who pulls a cart with a heavy load is sent to prison if he is found drunk. But a rich man found in a similar condition escapes punishment easily. This is a well-known fact. This is not something known to me alone; the entire



hierarchy of the Government knows it. Therefore, the time has come for our Government, which have got a steamroller majority, to come forward with bold statement. A statement has now been made about the re-introduction of Prohibition. But, everybody knows that such statements are made on the eve of every Election. Right from 1937, several regimes have come to power in our State and each regime has talked about enforcing Prohibition. But the Union Government in the regime of Indiraji made it very clear that the revenue loss of Tamil Nadu on account of enforcing Prohibition would not be replenished by the Government of India. Therefore, the time has come for the Hon. the Chief Minister to examine the whole thing and come out with a bold statement. We are often quoting the ideals of Gandhiji and the sayings of Thiru Anna who has been very popular in the South. We forget the several other things that they have said and point out only the small things...

Thiru G. SWAMINATHAN: Is it not a fact that, when we introduced Prohibition, the Government of India took into consideration the necessity for compensating the loss to the State Government? This is a valid point because we are going to re-introduce Prohibition.

Thirumathi TARA CHERIAN: From what I read some time ago, I can say that they have made their stand clear even before the Seventh Plan was finalised. Even if they give us something more, the entire loss on this score cannot be recouped. The Union Minister has made it very clear that, since the take-over by Government of certain sectors, there has been a general increase in the revenues of the State Government. My point is that, from the ethical and moral point of view, we cannot force anything down the throats of the people and ask them to do this or not to do that. By all means, let us try to rehabilitate the people who have become addicts. By all means, let us spend a lot of money to educate the people and to tell them that drinking is harmful beyond a certain limit.

*அமிர்தமானாலும் நஞ்சாகும், அளவிற்கு மேல் சாப்பிட்டால்.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'நஞ்சாக' இருந்தால்தான், தமிழ் வருகிறதுபோல் தெரிகிறது.*

Thirumathi TARA CHERIAN: We have to find out why people resort to drinking. They take a drink or two in the evenings because they have nothing else to do. It is so not only in Tamil Nadu but in various other States also. Especially, those who do hard manual

[Thirumathi Tara Cherian] *[1986 ஜனவரி 29*

work would like to have some fun and frolic in the evenings. Because they have no other place to go for some entertainment, they go to the toddy shop or the arrack shop. In a way, this also helps to check the population explosion, because when the people have nothing else to do, they go on procreating. If there are some entertainment sports where these people could get some pleasure after a days's hard work, most of the people can be easily weaned away from excessive drinking. Another aspect which has got to be considered is that, during periods when Prohibition is strictly enforced, these people consume various kinds of injurious and spurious liquor. I would appeal to the Government which has got a very big majority to have a sort of dialogue with various people and consider all the aspects relating to the Prohibition policy. If we just re-introduce Prohibition without giving thought to all these things, those who are now drink-addicts may become a burden to society. A drink-addict may consume some spurious liquor, get incapacitated and become a burden not only to his family but to society as a whole. If he dies, his widow may not have the means to support herself and may become a destitute. So, we have to see how best we can educate the people on the evils of excessive drinking. We have also to find out how the people, especially those who do hard work, could make themselves happy in the evenings and on Saturdays and Sundays. I think I am not going beyond my limit, if I talk about the beautification of the Beach in Madras. It was a right step on the part of the Government with a view to curbing acts of goondaism in that part of the City. The other day I did not want to interrupt when the subject was raised regarding the action taken to beautify the Beach. The fisherfolk could have been made to move away from the place, without the firing and other happenings. Before I sit down, I want to say that the people should have facilities for some amount of entertainment.

Now that there is so much of unemployment, I hope the Tamil Nadu Marketing Corporation will rise above party politics and give the licence to run arrack shops to all persons irrespective of caste or creed and particularly to unemployed Graduates, women and the physically handicapped. There are also a number of ex-servicemen who are unemployed. I am not casting aspersion on the present set-up. If the Government could have a small Committee which is impartial and which is above board for the issue of licences, it would be useful since the Government have got so much work that it



*1986 சனவரி 29]* [Thirumathi Tara Cherian]

cannot devote more attention to this. If the unemployed are helped in this way, it will be of great benefit to them. Thank you for the opportunity given.

*(முற்பகல் 10-40)*

*திரு. எல். ஜெயச்சந்திரன்:* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை முழுமையாக வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக் கூற உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். நம்முடைய மாநில வாணிபக் கழகம் மூலமாக அல்லது அவர்களுடைய ஏஜெண்டுகள் மூலம் சாராயத்தை சில்லரையாக, முழுமையாக விற்க, இதைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 1987 ஜனவரி முதல் தேதியிலிருந்து மதுவிலக்கை அமல்படுத்த இருக்கிறோம். என்று உறுதிமொழி அளித்துள்ளார்கள். அதற்கு நான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், பொறுப்பில் உள்ள அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாராய சில்லரை விற்பனையில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை அளிக்கவேண்டும் என்று கொள்கையளவிலே இருக்கின்றார்கள். இப்படி ஒரு நல்ல முறையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதற்கும் அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அப்படி வேலையில்லாத பட்டதாரிகளை முழு அளவில் நியமித்திருக்கின்றார்களா என்று பார்க்கும் போது, சற்று ஏமாற்றமாகத்தான் இருக்கின்றது. பெயரளவுக்குத்தான் அது இருப்பதுபோல் தெரிகிறது. அதில் பட்டதாரிகளை முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சில்லரை வியாபார நிறுவனங்களில் அவர்கள் பணியை நிரந்தரமாக்க வேண்டும் என்று ஒரு கட்டாயத்தை அரசு அறிவித்தால், நன்றாக இருக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வாணிபக் கழகம் எடுத்தபிறகு, சாராயத்தினுடைய விலை அதிகமாகிவிட்டதாகவும், அதன் காரணமாக வியாபாரம் குறைந்திருப்பதாகவும் தெரிகிறது. சாராயத்திற்கு முன்பு இருந்த விலையை விட விலை அதிகமாக வைத்து விற்கிறார்கள் என்று கூறினார்கள். இப்படி விற்பதனால், சில்லரை வியாபாரிகளும் மற்றவர்களும் சற்று கலப்படங்கள் செய்வதாக ஆங்காங்கு பொதுமக்கள் புகார் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அதையும் அரசு கண்காணிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். விலையை முன்பு இருந்ததைவிட ஏற்றியிருப்பதால், வியாபாரம் குறைந்திருப்பதால், எந்த அளவுக்கு இப்போது அரசுக்கு வருமானம் வருகின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பொதுவாக விலையேற்றத்தினால் வியாபாரம் சற்று குறைந்துவருகின்றது என்று பொதுமக்களும் வியாபாரிகளும் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அதைப்பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று சில்லரை வியாபாரிகளும் ஏஜெண்டுகளும் விற்பதற்கு அரசு திட்டம் கொண்டுவந்து அதை மாநிலம் முழுவதும் அறிவித்திருந்தாலும், மறுபடியும் கள்ளச் சாராயம் அதிகமாகிவிட்டது என்ற புகாரும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நான் முக்கியமாகக் கூற விரும்புவது, இந்த மாநிலம் முழுவதும் கொடுத்திருக்கின்றார்கள். அதுவும் முக்கியமாக பள்ளிகள், கோயில்கள், போக்குவரத்து நெரிசல் உள்ள இடங்களிலே இந்தக் கடைகளை

(முற்பகல் 10-45)

வைத்திருக்கின்றார்கள். அந்த இடங்களிலே அவை இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு எதிர்ப்புகள் இருந்தாலும், அதை மாற்ற வேண்டும். அதிகாரிகளும் அவற்றை அகற்றப் பயப்படுகிறார்கள். காவல் துறையினர் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டாலும், இதுபோன்ற இடங்களில் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும், இவற்றை அகற்ற வேண்டும். பள்ளிகள், கோவில்கள் போன்றவற்றுக்கு அருகிலும், நகரின் நடு மத்தியிலும் அந்தக் கடைகளை வைத்திருப்பதால், பொது மக்களுக்குப் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. கடலூரில் சுப்பராயன் நகருக்கு அருகிலும், மரியசூசை நகர்



பகுதியிலும் நடு மத்தியில் கடைகள் இருக்கின்றன. உதாரணத்திற்காக ஒன்றிரண்டைச் சொல்கிறேன். நாம், குடிப்பவர்களை குடிக்க வேண்டாமென்றுதான் சொல்லுகிறோம். இருந்தாலும், குடிப்பவர்கள், கடைகள் எங்கிருந்தாலும், அங்கே சென்று குடிப்பார்கள். எனவே இந்தக் கடைகள் நகரின் நடு மத்தியில் இல்லாமல், ஒதுக்குப்புறமான இடங்களில் இருந்தால், பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு தலைவரவர்களுக்கு நன்றி கூறி, சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசுகிறபோது, உண்மையிலேயே சாராய, கள்ளுக் கடைகளை இந்த அரசு மூடப் போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணைப்படி, சட்டமன்றப் பேரவையில் அவை முன்னவர் அவர்கள் 1987 ஆம் வருடம் சனவரி 1 ஆம் தேதியிலிருந்து கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் நிச்சயமாகத் திறக்கப்படாது என்று அறிவித்திருக்கிறார்கள். சனவரி 1 ஆம் தேதியிலிருந்து மதுவிலக்கு அமுல்படுத்தப்படுமென்று சொன்னதன் நோக்கம், பட்ஜெட்டிலே அதுமாதிரியான கொள்கை அறிவிக்கப்படும் என்பதால்தான், அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இதன்மூலம் வருவாயைப் பொறுத்தவரையில், சொல்கிறேன். கலால் துறை மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 250 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கிறது. கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் 1987 சனவரி 1 ஆம் தேதி முதல் மூடப் போவதால், சுமார் 200 கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசுகிறபோது, மதுவிலக்குக் கொள்கை 100 சதவிகிதம் வெற்றி பெறுமா என்ற ஒரு சந்தேகத்தை, கேள்வியை எழுப்பினார்கள். இராணுவத்திலும், மலைவாழ் மக்களிடையேயும், விமானப் போக்குவரத்து சர்வீசிலும் மது பானம் இருப்பதுபற்றிச் சொன்னார்கள். ஆகாய விமானத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசுதான் அதனுடைய விதி முறைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படி கட்டுப்படுத்தினால் இந்தியாவுக்கு வருகிற டூரிஸ்டுகள் வருவார்களா என்பது சந்தேகம். அதைப்போல இராணுவத்திலே உள்ளவர்களுக்கு மதுவிலக்கை அமுல்

படுத்தினால், அவர்கள் வழக்கப்படி போராடுவார்களா என்பது இராணுவத் தளபதிகள் சொல்ல வேண்டிய விஷயம். மலைவாழ் மக்களைப் பொறுத்த வரையில், எந்தச் சட்டத்தைப் போட்டாலும், அவர்களாக முன்வந்து மதுவிலக்கை ஏற்றுக்கொண்டாலொழிய, அதில் 100 சதவிகிதம் வெற்றி பெற முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் சொன்னதுபோன்று, இந்தியாவில் 100 சதவிகிதம் மதுவிலக்கை எந்த மாநிலத்திலும் அமுல்படுத்த முடியாது. அண்ணல் காந்தியார் பிறந்த மாநிலத்தில், பெர்மிட் இருந்தால் சாப்பிடலாம் என்று விதி முறைகள் இருக்கின்றன. ஆனால் இதை ஒரு தேசியக் கொள்கையாக மத்திய அரசு எடுத்து அமுல்படுத்த முன்வர வேண்டும். 1971 ஆம் ஆண்டு சட்டம் 33 பிரகாரம் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்த கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தும்போது, மத்திய அரசு இந்திய உப கண்டத்தில் தேசிய அளவில் மதுவிலக்கைக் கொண்டு வர முயற்சி எடுக்க வேண்டும்; அதற்குரிய நடவடிக்கை வருமா என்று பார்த்துத்தான் இந்த சர்க்கார் தளர்த்துகிறது என்று அப்போதே சொன்னார்கள். இந்திய அரசியல் சாசனத்தில், டைரக்டிவ் பிரின்சிபிளில், அடிப்படையாக நாம் பின்பற்ற வேண்டிய கொள்கையில், மதுவிலக்குக் கொள்கை ஒன்றாக அறிவிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. பாராளுமன்றம் உண்மையிலேயே இந்திய

(முற்பகல் 10-50)

உபகண்டத்தில் இந்தக் கொள்கையை அமல் படுத்தவேண்டுமென்று நினைத்திருந்தால், தேவையான சட்டத் திருத்தத்தை இந்திய அரசியல் சட்டத்தில் டைரக்டிவ் பிரின்சிபிளில் கொண்டுவந்து மாநிலங்கள் இப்படிப் பட்ட கொள்கைகளை அமல்படுத்த வேண்டுமென்று அறிவுரைகள் கொடுப்பதற்குப் பதிலாக, மாநிலங்கள் அந்தக் கொள்கையை அமல் செய்வதன் மூலம் எவ்வளவு பொருளாதார நஷ்டத்திற்கு உள்ளாகிறது என்று கணக்கிட்டு, அந்த அளவுக்கு நிதியுதவி கொடுப்பதற்கு முன்வந்திருந்தால் நலமாக இருக்கும். மிகப் பெரிய பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள். விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து, திட்டக் கமிஷனில் மதுவிலக்கை அமல்படுத்தி இந்தியா முழுமைக்குமான ஒரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் நன்றாக அறிவார்கள். 1985 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி வரையில், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் என்ற 'டாஸ்மெக்' என்ற நிறுவனம் இந்த உரிமங்களை வழங்கி வந்தது. 1985 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியிலிருந்து சில்லரை வியாபாரத்தை நடத்தி வருகிறது. இப்போது சட்டசபை இல்லாத நேரத்தில் ஆளுநா அவர்களால் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்குப் பதிலாகத்தான் இந்தச் சட்டம் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மொத்த வியாபாரத்தை இந்த டாஸ்மெக் நிறுவனம் நடத்தி வந்திருக்கிறது. அப்படி நடந்ததால், அரசுக்கு லாபத்தை ஈட்டித் தந்திருக்கிறது. இந்த மொத்த, சிறிய வியாபாரத்தை இந்தக் கழகம் எடுத்து நடத்தியதால், 1983-84 ஆம் ஆண்டில் 2 கோடியே 37 லட்சம் ரூபாயும், 1984-85 ஆம் ஆண்டில் 6 கோடியே 63 லட்சம் ரூபாயும் லாபம் வந்தது. இப்போது நடப்பாண்டில் 1985-86-ல் 16 கோடியே 80 லட்சம் வருமானம் வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த சில்லரை வியாபாரத்தின் மூலமாக வேலையில்லாப் பட்டதாரி களுக்கு வேலை கிடைத்ததா, வேலையில்லாக் குறையைப் போக்குமா என்று கேட்டார்கள். இந்த சில்லரை வியாபாரத்தை மாநில வாணிபக் கழகம் நடத்துவதற்கு சில விதிமுறைகளை விதித்திருக்கிறது. யார் யார் உரிமை கேட்கலாம், யார் யாருக்கு அது வழங்கப்படும் என்ற விதிமுறைகள் இருக்கின்றன. செய்தித் தாள்களிலும் விளம்பரம் கொடுக்கப்பட்டது. அந்த 'நார்ம்ஸ்', 'கிரைட்டீரியா' பிரகாரம் 18 வயது நிரம்பியிருக்கவேண்டும், எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும், போதுமான செல்வ நிலை உள்ளவராயும், அல்லது போதுமான செல்வ நிலை உடையவர் சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்றும் விதிகள் இருக்கின்றன. அப்படி சான்றிதழ் கொடுப்பவர் கடையை நடத்துபவருக்கு 'கியாரண்டி' கொடுக்க வேண்டும். அவர்கள், மதுவிலக்குச் சட்டத்தை மீறியிருக்கக்கூடாது. அதன் காரணமாக தண்டனை பெற்றிருக்கக்கூடாது. தடுப்புக் காவல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கும் காரியங்களில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாது. மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் அரசுக்கு அபராதம் கட்டியிருக்கக்கூடாது. யாரும் பினாமியாக இருக்கக்கூடாது. பிராந்தி கடை உரிமை பெற்றவராக இருக்கக்கூடாது. மொத்த வியாபாரம் உரிமை பெற்றவர்களாகவோ அல்லது அங்கே

பணியாற்றுபவர்களாகவோ இருக்கக்கூடாது. இப்படி விதிகள் உள்ள பாரத்தில் கையொப்பமிட்டுக் கொடுக்க வேண்டும். ஒருவர் ஒரு கடைக்கு மேல் நடத்த விண்ணப்பிக்கக்கூடாது. இவைதான் விதிமுறைகள்.

இந்த விதிமுறைகளின்படி, ஆதிதிராவிடர்கள் 185 பேர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அவர்களில் 86 பேர்களுக்கு உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் சதவீதம் 46.5 ஆகும்.

மலைவாழ் மக்கள் பத்து பேர் கேட்டதற்கு, ஆறு பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 60 சதவீதம் ஆகிறது. வேலையில்லாத பட்டதாரிகள் 816 பேர் கேட்டார்கள். அதில் 228 பேருக்குக் கொடுக்கப்பட்டது. இது 28 சதவீதம் ஆகிறது. மாதர்கள் 952 பேர் கேட்டதற்கு, அவர்களில் 307 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இது 32.3 சதவீதம் வருகிறது. ஊனமுற்றோர் 16 பேர் விண்ணப்பித்தார்கள். ஐந்து பேர்கள் உரிமம் பெற்றனர். இதுவும் 31.3 சதவீதம் வந்துள்ளது.

இந்த உரிமங்களை படிக்காதவர்களுக்கு வழங்க முடியாது. ஆகவே பட்டதாரிகள் மட்டுமல்லாமல், படித்தவர்கள் நிறையப் பேர் இந்த உரிமத்தைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் புதிய சட்டத்தின் மூலம் 7,356 கடைகளுக்கு உரிமம் கேட்கப்பட்டிருந்தது. அவற்றில் 7,200 கடைகளுக்கு இதுவரையில் உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 7,200 கடைகளையும் எடுத்திருப்பவர்கள் படித்து, வேலையில்லாமல் இருப்பவர்கள்தான் என்று நிச்சயமாக நாம் நம்பலாம்.

Thirumathi TARA CHERIAN: One point, Sir. Is it possible for the Hon. Minister to assure us that the people who are going to be employed will belong to all the different political parties? From the way they are chosen, I think it would be difficult to give such an assurance. Everybody has got some party affiliation or other.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

But, it will make us happy if such an assurance is given. Instead of seeing whether a person belongs to a particular party or the other, it would be a good thing if persons like ex-Servicemen and voluntary workers who have nothing much to do with politics are chosen for the purpose. Anyway, I would like to get an assurance to the effect that, while the requisite criteria relating to education, etc., would be



followed, the party affiliaion of the persons would not be looked into while making these appointments. A feeling is gaining ground, in matters like the appointment of conductors in the Transport Department, that the appointments are not so much . . . . . . . .

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member should only ask a question.

Thirumathi TARA CHERIAN. I am asking a question, Sir. Such a feeling should not be allowed to be spread while making appointments in the Transport Department and also other services. Similarly would it be possible for the Hon. Minister to tell us that these appointments will be above all party politics and that all people can apply irrespective of their party affiliation?

The Hon. Thiru V. V. SWAMINATHAN: Mr. Deputy Speaker, Sir, according to the criteria fixed and published in the newspapers . . . .

Mr. DEPUTY CHAIRMAN: Here, it is the Deputy Chairman.

The Hon. Thiru V. V. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, there is no criterion prescribing any political affiliation to get this agency. So, anybody who belongs to any party caste or religion can apply for agency. The agents were appointed only based on this criteria published in the newspapers and not on the basis of any political affiliation. As far as the Government know, people belonging to different parties got agency. It is only an agency and not a licence.

hirumathi TARA CHERIAN: Is it possible to put honorary social workers and volunteers like me on a committee so that we may go through the details and say that it is above party politics?

The Hon. Thiru V. V. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, there are Writ Petitions pending before the Madras High Court and the Supreme Court of India where the criteria question is in issue. So, we have our criteria. Whether the criteria are correct or sufficient will be decided by the Court. Let us wait for the Court's Judgment.

(முற்பகல் 10-55)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் இந்தக் கடைகள் மசூதி, பள்ளிக்கூடம், கோவில் போன்றவைகளுக்குப் பக்கத்தில் வைக்கப் படுகின்றனவென்று சொன்னார்கள். அரசைப் பொறுத்தவரையில், சட்ட விதிகள் அனுமதித்தாலும், பொதுமக்கள் அல்லது பொதுமக்கள் பிரதிநிதிகள் கடுமையான ஆட்சேபணை செய்வார்களானால், அந்த இடங்களை மாற்றச் சொல்லித்தான் இதுவரையில் உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றோம். உதாரணமாக மதுரையில் நான்கு கடைகள், விதிகள் பிரகாரம் இருந்தாலும், அங்கேயுள்ள பொதுமக்கள் ஆட்சேபணை செய்ததால், அந்த இடங்களி லிருந்து மாற்றச் சொல்லி, சம்பந்தப்பட்ட உரிமதாரர்களுக்கு ஆணைகள் அனுப்பியிருக்கின்றோம். சென்னையில்கூட பட்டினப்பாக்கத்தில் கடைகள் திறக்க வேண்டாம் என்று அப்பகுதிவாழ்வோர் கேட்டுக்கொண்டதன் பிறகு அங்கே திறக்கப்பட்ட கடை மூடப்பட்டது. மேலும் கடைகள் எங்காவது விதிகளுக்குப் புறம்பாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல, புகார்கள் வருமானால், மேற்படி கடைகள் விதிகளுக்கோ, பொதுமக்களுக்கோ ஆட்சேபணைக் குரியனவாக இருக்கிறதா என்று பார்த்து நடவடிக்கை எடுக்க அரசால் இயலும். ஆனால் இதில் ஒரு சங்கடம் இருக்கிறது. பொதுவாக எல்லா மதத்தினருக்கும் ஊரின் முக்கியமான ஓரிடத்தில் அல்லது இரண்டு இடங்களில் தான் மத ஸ்தாபனங்கள் இருக்கும். ஆனால் இந்து மதத்தினைப் பொறுத்த வரையில், எங்கு பார்த்தாலும் கோவில்கள் உள்ளன. ஒரே தெருவில் உள்ள ஒவ்வொரு மரத்திற்குப் பக்கத்திலும் இப்படி வைத்திருக்கிறார்கள். சில வீட்டுச் சொந்தக்காரர்கள் தனியாக வீடு கட்டி, வெளியே பிள்ளையாரை வைத்து ஒரு கண்ணாடியைப் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். தெருவிலே போகிறவர்கள் எல்லாம் அதைக் கும்பிட்டுவிட்டுப் போகிறார்கள். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. திருவல்லிக்கேணியில் ஒரு கோவில் அருகே சாராயக் கடை இருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் அது ஒரு தனியாருடைய வீட்டில் உள்ள கோவிலாகும். அப்படிப் பார்த்தால் எங்கும் கடையே வைக்க முடியாது. ஆக பொதுவாக இத்தனை அடிக்கு அப்பால்,

(முற்பகல் 11-00)

பள்ளிக் கூடத்திற்கு அப்பால், மருத்துவமனைக்கு அப்பால் என்று வைக்க முடியும். அப்படித்தான் இதுவரையில் விதிகள் பிறப்பிக்க அனுமதிக்கப் படுகிறது. அதுமாத்திரமல்லாமல், இந்த விதிகளை மீறி யாராவது சாராயக்





கடைகளை வைத்திருந்தால், அனுமதி கேட்டால், விதிவிலக்கு அளிக்கிற உரிமை அரசுக்கு ஏற்கெனவே இருந்தது. இப்போது அந்த உரிமையைக்கூட எடுத்துவிட்டோம். ஆகவே யாரும் சிபாரிசுமீது விதிவிலக்குப் பெற்று இந்த விதிகளுக்குப் புறம்பாக கடைகள் வைக்கலாமென்று நினைக்க முடியாது.

திரு. எல். ஜெயச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, போக்குவரத்து நெரிசலான பகுதிகளிலே கடைகள் இருக்கின்றன. அவைகளை அங்கிருந்து நீக்கும் அதிகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அதற்கு நன்றி. அதுபோன்று அதிகாரங்கள் இருந்தாலும், அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளை அவர்கள் எடுக்குமாறு அரசு கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படி ஏதாவது குறைகளை அரசுக்கு அனுப்பி யிருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், அதை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் பேசும்போது, 'எய்ட்ஸ்' பற்றியும், இந்த மதுபானங்களை, எல்லோருக்கும் தெரிந்த அறிமுகமான சாராயம், கள், பிராந்தி, விஸ்கி ஆகியவைகளை, தடை செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். இதுவல்லாமல் 'பிரவுன் சுகர்' என்று நாட்டில் நடமாடுவதுபற்றியும் சொன்னார்கள். அதுபற்றி நமது பாரதப் பிரதமர் அவர்கள் அண்மையில் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்து, யார் 'பிரவுன் சுகரை' சட்ட விரோதமாக வைத்திருந்தாலும், விற்றாலும் அல்லது விற்க முயன்றாலும், கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதன் பிரகாரம் நமது அரசும் சட்டங்களைப் பிறப்பித்திருக்கிறது. கூடுமானவரை பொதுமக்கள் இதில் கண்காணித்து ஒத்துழைக்க வேண்டும். மதுவிலக்குக் கொள்கையாக இருந்தாலும் அரசு அறிவிப்பு போட்டு, அதை சட்டம் மூலமாக மாத்திரம் நிறைவேற்ற முடியாது. வழக்கு மன்றங்களும் ஒத்துழைக்க வேண்டும். கள், சாராயம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் 1980 முதல் 1985 வரையில் 1,518 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, மதுக் கஷாயம் விற்றவர்கள் என்ற பெயரில் பல பேரை இந்த அரசு கைது செய்திருக்கிறது. மருந்துகள், குளோரல் ஹைடிரேட்

போன்றவைகளை வைத்திருப்பவர்களையும் இந்த அரசு கைது செய்திருக்கிறது. எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்படாத குண்டர்கள் 1,117 பேர்களை இந்த சர்க்கார் கைது செய்திருக்கிறது. சட்டவிரோதமாக மதுபானங்கள் வழங்கப்படாமலிருப்பதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சாராயம், கள் விற்பனை இன்னும் 5½ மாதங்களும், அதற்குப் பிறகு ஜுலை 15-க்கு பிறகு 5½ மாதங்களும்—மொத்தம் 10 மாதங்கள்தான் இருக்கும். அதற்குப் பிற்பாடு கள், சாராயக் கடைகளே இருக்காது என்பதனால், இந்தக் கால நீட்டிப்புச் சட்டத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தந்து, நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi TARA CHERIAN : Fr. Deputy Chairman, Sir, until such time when it could be really enforced, till such a time really comes—about which I have got my own dougts—will it be possible for the Hon. Minister to go abroad on a special visit to developed countries to see how the bars and pubs are run there? In those countries, one connot see people drinking all the time and rolling about. The bars and pubs in those countries pull down the shutters after a certain time. Therefore, as long as the arrack shops exist in our State, we have to see how best they could be run so that people may not be permitted to go overboard.

THE HON. THIRU V. V. SWAMINATHAN: Sir, this is a policy matter which has to be decided by the Hon. the Chief Minister.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசின் சட்ட முன்வடிவின்மீது முதலிலே, உறுப்பினர்கள் பேசுகிறார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஏதாவது சந்தேகம் இருந்தால், யார் பேசினார்களோ அவர்கள் கேட்பதற்கும், பதில் அளிப்பதற்கும் வாய்ப்பு அளிக்கிறோம். ஆனாலும் உறுப்பினர்கள் கேள்வி கேட்க வேண்டுமானால் அனுமதிக்கிறோம். அதைத் தொடர்ந்து செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** எங்களுக்கெல்லாம் சொல்லிவிட்டால் நாங்கள் கரெக்டாக நடப்போம். மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, விவாதத்தில் பங்கு கொண்டவர்கள் மட்டும் தான் கேள்விகள் கேட்க வேண்டுமென்ற மரபு இருந்தாலும் கூட, மாண்புமிகு



துணைத் தலைவரவர்கள் அனுமதியளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமான ஒரு கேள்வியாக எனக்குப் பட்டதால் நான் கேட்க விரும்புகிறேன் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சாதாரணமாக, பேசிய உறுப்பினர்கள் கூட கேள்வி கேட்கக்கூடாது. அப்புறம் கேள்வி கேட்டுக் கேட்டு அது ஒரு மரபாக ஆகிவிட்டது. மறுபடியும் இன்னொரு மரபு வரப்போகிறதா !

(முற்பகல் 11-05)

**திருமதி வி. ஜெயலட்சுமி :** சில ஏஜென்சிகளைப் பொறுத்தவரையில், கோர்ட்டில் வழக்குகள் இருக்கின்றன. அதைப்போலவே சில ஏஜென்சிகளைப் பொறுத்தவரையில், அவை குறிப்பிட்ட நிபந்தனைகளைச் சரியாக நிறைவேற்றவில்லை என்ற காரணத்திற்காக, தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன அல்லது ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிற ஏஜென்சிகளைப்பற்றி திரும்ப ஆய்வு செய்யும்போது, ஏற்கெனவே இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்கு அவை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் இதுவரை வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும், பெண்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் என்று பல உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் இத்தகைய ஏஜென்சிகளைக் கொடுத்து அவர்களுடைய நல்வாழ்வுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூட முன்னாள் இராணுவ வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இருப்பினும் விண்ணப்பங்களை மறுபரிசீலனை செய்யும்போது, அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணையிடும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது, தமிழகத்தில் சாராயத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மையில் இங்கே ஆந்திரத்தை விடக் குறைவாக

இருக்கிறது. ஸ்டாக்கிஸ்ட்களுக்கு ஒரு பாட்டிலுக்கு 75 பைசாதான் லாபம் கிடைக்கிறது. ஏஜென்சிகளுக்கு 2.81 காசு கிடைக்கிறது. இதன் மூலமாக வேலையில்லாதவர்கள் 7,200 பேருக்குக் கடைகளைக் கொடுத்து அவர்கள் மாதம் 1,000 ரூபாய்க்குக் குறையாமல் ஊதியம் பெறக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(2) 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இனி எடுத்துக் கொள்ள இருக்கும் அனைத்து சட்ட முன்வடிவுகளும் ஒரே மாதிரியாக இருக்கிற காரணத்தால், அவை உறுப்பினர்கள் அவையனைத்தையும் குறித்து பேசி விட்டால், பிறகு தனித்தனியாக எடுத்து நிறைவேற்ற உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், தனியாக எடுத்து நிறை வேற்றிவிட்ட பிறகு, மற்ற சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில், ஒன்றாக எடுத்துப் பேசி தனித் தனியாக நிறைவேற்றலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அப்படியே எடுத்துக் கொள்ளலாம். முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1936) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

### 5. தகவல் கோரல்.

**பொதுக் கணக்குக் குழு அறிக்கை பற்றிய ஆவணத்தில் பெரும்பகுதி ஆங்கிலத்திலும் அட்டை மட்டும் தமிழிலும் இருப்பது குறித்து.**

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு முன்னால் ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன்.

---

@ 520 132 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இன்றைய தினம் அவையின் முன் பொதுக் கணக்குக் குழுவின் தமிழ் அறிக்கையும் நேற்றைய தினம் பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் மேலட்டை மட்டும்தான் தமிழில் இருக்கிறது. உள்ளே பார்த்தால் பெரும்பாலான பகுதிகள் ஆங்கிலத்தில் தான் இருக்கின்றன. தமிழில் தனியாகவும் ஆங்கிலத்தில் தனியாகவும் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளதாக இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிலைமை என்னவென்றால், இவற்றின் உள்ளே பெரும்பாலான பகுதிகள் தமிழில் இல்லாமல் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொண்டு இது குறித்து தக்க அறிவுரை வழங்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களின் கருத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு செயல்படுவார்கள் என்று கருதுகிறேன்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (2) 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986)—தொடர்ச்சி.

(முற்பகல் 11-10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்ப அறக்கட்டளை சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு முன்பாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடமிருந்து சில கருத்துக்களைப் பெறுவது இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு உகந்ததாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே பொறுப்புக் கழகம் பற்றிக் குறிப்பிடும்போது . . . . .

"For the effective and efficient functioning of the said Trust, it was considered necessary that the composition of the Board of Management, as it is now provided for in the scheme, should be changed and, accordingly, the Official Committee has filed an application in the High Court, Madras for changing the composition of the Board of Management and for making necessary changes in the scheme governing the said Trust."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு உயர்நீதி மன்றத்திலே எப்போது



நம்முடைய தரப்பிலே மனு தாக்கல் செய்யப்பட்டது? அதனுடைய இன்றைய நிலைமை என்ன? அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தால், நாங்கள் பேசுவதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

அரசின் கடித எண் 35161/பி2, நாள் 24—11—1983-ல் கண்டுள்ள கருத்துக்களின்படி பச்சையப்பன் அறக்கட்டளையின் விதிகளை மாற்றியமைக்கும் விண்ணப்பம் 19—7—1984 அன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே நாம் விரும்புகிற மாற்றம் என்பது அந்த ஸ்கீம் முடிவு ஆகிறபோதுதான் தெரியும். பொதுவாக பேரவையிலேயும் இந்த அவையிலேயும் உள்ள உறுப்பினர்கள் சொன்னது போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும், அரசுத் தரப்பிலே சில பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இதற்கு முன்பு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் இருந்த குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த ஸ்கீமை மாற்ற வேண்டும் என்று வந்தபோது, சில பேர் அதை எதிர்த்து வழக்காடி வந்த காரணத்தால், தாமதம் ஏற்படுகிறது. ஆகவேதான் இந்த ஓராண்டை அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆதரிக்கிறேன். இதை ஆதரிக்கும் அதே நேரத்தில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பொருள் குறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உயர்நீதி மன்றத்திற்கு விண்ணப்பத்தை அனுப்பி, அவர்களுடைய கருத்துக்களை, அறிவுரைகளைக் கேட்டு, தக்க மாற்றங்களைச் செய்ய அரசு எடுத்துள்ள முடிவை நான் வரவேற்கிறேன். நாம் எடுக்கக்கூடிய திட்டங்களுக்கு உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை வாங்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது இருப்பதால், நான் அதை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு. மேலவை மற்றும் பேரவை ஆகிய இரண்டு அவைகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும் என்று கருதுகிறேன். சட்டமன்றப் பேரவை,

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஜனவரி 29

மேலவை உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு அரசுத் தரப்பு உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருப்பதை அரசு ஆதரிக்கிறது. பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் ஏராளமான கல்வி நிலையங்கள், கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகியவை இருக்கின்றன. அங்கே ஆசிரியப் பெருமக்கள், அலுவலர்கள் இருக்கிறார்கள். அலுவல் பற்றற்ற உறுப்பினர்களைச் சேர்க்கும்போது அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் பச்சையப்பன் அறக்கட்டளைப் பணிகளில் முக்கியமான பணி கல்வி நிலையங்களை நடத்துவதுதான். ஆகவே, அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். மதப் பற்று உடைய திருப்பணிகள் நடத்துவதும் பச்சையப்பன் அறக்கட்டளையின் நோக்கங்களுள் ஒன்றாக இருப்பதால், மதப்பற்று உடையவர்கள் சார்பாக பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சிறந்த கல்வி அறிஞர்கள் பொறுப்புக் குழுவிலே பிரதிநிதியாக இருக்க வேண்டும். இதைப் போன்ற மிக முதிர்ச்சியடைந்தவர்கள் இருந்தால்தான் அது ஜனநாயக அமைப்பாக இருக்கும். இப்போது முழுக்க முழுக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். அதிகாரிகள் இருப்பதை நான் குறை சொல்லவில்லை. அலுவல் பற்றற்ற உறுப்பினர்கள் இருக்கும்போது, நிர்வாகத்தை செம்மையாக நடத்த முடியும். இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்திலேயே அது ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. "for effective functioning" இந்த மாற்றம் தேவையென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அப்படி நல்ல ஜனநாயக அமைப்பாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

இதுவரை பொறுப்புக் கழகம் மிகத் திறமையான முறையில் நடந்து வருவதற்கு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். அவை தவிர்க்க முடியாதவை. இருந்தாலும் பொதுப்படையாகப் பார்க்கும்போது, அது நல்ல முறையிலே நடைபெறுகிறது என்பதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஏற்கெனவே சொல்லி வந்த ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சட்ட முன்வடிவிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்வி நிலைய நிர்வாகச் சீர்திருத்தம் என்ற தலைப்பில் சில நடவடிக்கைகளை பொறுப்புக் கழகம் எடுத்துள்ளது. அது இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வி நிலைய நிர்வாகச் சீர்திருத்தம் என்ற தலைப்பிலே இப்போதே செய்யக்கூடிய முக்கியமான சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தில் மேல்நிலைப் பள்ளிகள் மூன்று, இடைநிலைப் பள்ளிகள் மூன்று, ஒரு நடுநிலைப் பள்ளி, மூன்று தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன.



1986 ஜனவரி 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

(முற்பகல் 11-15)

ஆகவே 10 பள்ளிக்கூடங்கள் மொத்தத்தில் இருக்கின்றன. நம்முடைய தமிழ் நாடு தனியார் பள்ளி ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் இவைகள் வருகின்றன. இவைகள் அரசுடமையாக்கப்பட்ட பள்ளிக்கூடங்களாக இல்லை. தனியார் பள்ளி ஒழுங்குபடுத்தும் சட்டம், 1973-ம் ஆண்டு சட்டத்தின்படி இவைகள் வருகின்றன. அந்தச் சட்டத்தின்படி, 'எஜுகேஷன் ஏஜென்சி' என்று ஒரு அமைப்பு. அதுதான் மேனேஜ்மெண்ட். இன்னொன்று ஸ்கூல்ஸ் கமிட்டி என்பது. அது பள்ளிக்கூடத்தினுடைய நிர்வாகக் குழு. அது பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட நிர்வாகக் குழு. அந்த ஸ்கூல் கமிட்டிக்கும் ஏஜென்சிக்கும் வேறுபாடு உண்டு. ஏஜென்சி என்பது ஒரு மேலாண்மை அதிகாரம் பெற்றதாகும். டிரஸ்ட் போர்ட் என்பது ஒரு எஜுகேஷனல் ஏஜென்சி. பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி என்று சிதம்பரத்திலே இருக்கின்றது. அந்த மேல்நிலைப் பள்ளிக்கு தனியாக ஒரு குழு இருக்கின்றது. அந்தக் கமிட்டியிலே செக்ரட்டரி இருக்கின்றார்கள். ஒரு பொது கமிட்டிக்கு செயலாளர் தேவை. இந்த எஜுகேஷனல் ஏஜென்சிக்குச் செயலாளராக இருக்கக்கூடியவர் அந்தப் பள்ளிக்கூடத்திலே இருக்கக்கூடிய ஸ்கூல் கமிட்டிக்கும் செயலாளராக இருந்தால், நிர்வாகப் பணியிலே தாமதம் ஏற்படும். தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழே, அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய தலைமை ஆசிரியரே அந்தக் கமிட்டியினுடைய செயலாளராக இருக்கலாமென்று சட்டம் அனுமதிக்கிறது. ஆகவே அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய தலைமையாசிரியரையே அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய நிர்வாகக் குழுவிற்கு, ஸ்கூல் கமிட்டிக்கு, செயலாளராகப் போட்டுவிட்டால், பல காரியங்களில் ஏற்படுகின்ற தாமதம் தவிர்க்கப்படும். தலைமையாசிரியரைப் போடவில்லை என்றால், உள்ளூரிலேயே, அந்தந்த ஊரிலேயே கல்வித் துறையிலே இருக்கக்கூடிய ஒருவரை அந்தப் பள்ளிக்கூடக் குழுவினுடைய செயலாளராக நியமித்து விட்டால், கால தாமதம் தவிர்க்கப்படும். சிதம்பரம் என்னுடைய சொந்த ஊர். அங்கே இருக்கின்ற மேல்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளியிலே ஆசிரியர்கள் ஒழுங்காகச் சம்பளம் வாங்குவதில்லை. வாங்குவது இடையாது. அதாவது தாமதமாக வாங்குகின்றார்கள். பல மாதங்கள் தாமதமாகச் சம்பளத்தை வாங்குகின்றார்கள். முதல் தேதி சம்பளம் வாங்குவதே கிடையாது. காரணம் என்ன? இந்த எஜுகேஷனல் ஏஜென்சிதான் காரணம். அது பில் சம்பந்தமான விஷயமாக இருக்கின்றது. எல்லா பில்களும் பள்ளியிலிருந்து சென்னைக்கு வரவேண்டும். அங்கேயுள்ள டிரஸ்ட்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஜனவரி 29

டுக்கு வரவேண்டும். பிறகு கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு வரவேண்டும். திரும்ப பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும். இதனாலேயே தாமதம் ஏற்படு கிறது. இந்தத் தாமதம் தவிர்க்கக்கூடியதுதான். ஆனால் இது நிகழ்கின்றது. காரணம் 'சென்ட்ரலைசேஷன்' (Centralisation). இங்கேயே அதிகாரம் குவிந்திருக்கின்றது. ஆகவே இந்த ஸ்கூல் கமிட்டிக்கு உள்ளூரிலேயே ஒருவரை செக்கரட்டரியாகப் போடலாம் அல்லது தலைமையாசிரியரையே எக்ஸ் அபிசியோ செக்கரட்டரி என்று உடனடியாகச் செய்துவிட்டால் நல்லது. இது பல பள்ளிக்கூடங்களிலே இருக்கின்றது. நான் இதை சான்றாகச் சொல்கிறேன். இது நாமே செய்யக்கூடியதுதான். நாம் உயர்நீதிமன்றத் தினுடைய பதிலுக்காகக் காத்திருக்க வேண்டியது இல்லை. இது அன்றாட நிர்வாகம் சம்பந்தப்பட்டது. நாம் இதைச் செய்ய வேண்டும் என்று வலி யுறுத்திச் சொல்கிறேன். இதைப்பற்றி ஏற்கெனவே அதிகாரிகளிடம் விவாதித் திருக்கிறேன். இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன் னொன்று. சிதம்பரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி நல்ல நிலையிலே நடக்கக்கூடிய பள்ளியாக இருக்கின்றது. ஏராளமான மாணவர்கள் அங்கே வந்து சேர்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட 'வோக்கேஷ னல் ஸ்கீம்' அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்தக் கல்வித் திட்டத்தைப் பாராட்டி கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பள்ளிக் கூடத்திலே வசதி இல்லை. அது ஒரு சிறிய இடம். 'எக்ஸ்பேண்ட்' (Expand) பண்ணுவதற்கான வசதி இல்லை. அதிலே நிலப்பரப்பு இல்லை. அதனாலே மேலே மேலேதான் கட்டிடம் கட்ட வேண்டியிருக்கிறதே தவிர, அதிலே நிலப் பரப்பு போதுமானதாக இல்லை. மேற்கொண்டு கட்டிடங்களைக் கட்ட, இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அங்கே இன்னும் அதிகமாக வசதிகளைச் செய்ய வேண்டும். கூரைக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 29 ஆயிரம் ஒதுக்கியிருப்பதாகவும், மற்றும் பழுதுப் பணிகளுக்காக டெண்டர் கோரப்பட் டிருக்கின்றது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான வசதிகள், வகுப்பறைகள் இல்லை. நம்முடைய பொறுப்புக் குழு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால் அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கின்றார்கள். சிதம்பரத்திலே பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளிக்குக் கொஞ்சம் உரிமை கொடுக்க வேண்டும். மற்ற பள்ளிகளுக்குக் கொடுப்பதுபோல் உரிமை கொடுக்க வேண்டும். அங்கே தொடக்கப் பள்ளிக்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரொம்ப நாட்கள் ஆகின்றது. அப்படி பணம் ஒதுக்கீடு செய்தும், டெண்டர் கோரியும், பல மாதங்கள் ஆகிவிட்டன. 2 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நினைக்கிறேன்.



1986 சனவரி 29] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இன்னும் அங்கே அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. பணிகள் எல்லாம் ஆரம்பக் கட்டத்திலேதான் இருக்கின்றன. கட்டிடங்கள் எழும்பவில்லை, அதற்கு ஒரு நல்ல கட்டிடம் வராமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் சடங்குகள் தான். அதை விரைவுபடுத்த வேண்டும். அதற்கான சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்து எறிந்துவிட்டு, சீக்கிரம் அங்கே வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர். அதற்காக கட்டிடங் கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டன. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், தென் ஆற்காட்டில் இருக் கின்ற ஒரே ஒரு மகளிர் கல்லூரி கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி. அதிலே படிக்கின்ற மாணவிகள் எல்லாம் ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்னால் விளையாட்டுத் துறையிலே நல்ல ஆர்வம் காட்டி, உற்சாகம் காட்டி, மாநில அளவிலே பல போட்டிகளில் பங்கேற்றுக்கொண்டிருக்கின்ற அளவுக்கு இருந்தார்கள். அந்த அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

(முற்பகல் 11-20)

இப்போதும் அப்படிப்பட்ட ஆற்றல் படைத்த, திறமை படைத்த மாணவிகள் இருக்கிறார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, 3, 4 ஆண்டு களாக அங்கே விளையாட்டுப் பயிற்சிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கப் படுவதில்லை. என்னிடம் படித்த மாணவிகள் அங்கே படிக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்டேடியம் தமிழகத்திலேயே இல்லை என்று நம்முடைய அமைச்சரவர்கள் பாராட்டி விட்டுப் போயிருக்கிறார்கள். எனவே அங்கேயுள்ள மாணவிகள் தங்களுடைய விளையாட்டுத் திறமையை வளர்த்துக்கொள்ள வசதி இருக்கிறது. பக்கத் திலேயே ஸ்டேடியம் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் விளையாட்டு நிகழ்ச்சி களிலே, போட்டிகளிலே அதிகமாகப் பங்கேற்பதில்லை. பொறுப்புக் கழகம் இதிலே கவனம் செலுத்தி, கல்லூரி முதல்வரவர்களுக்கு அறிவுறுத்தி, விளை யாட்டுத் துறையிலே மாணவிகளுக்கு பயிற்சியும், ஊக்கமும் கொடுக்க நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொறுப்புக் குழு செய்த முக்கியமானதொரு முடிவை நான் பாராட்டி, அமர விரும்புகிறேன். பள்ளிகளில், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது, மேனேஜ்மெண்ட் கோட்டா என்று இருக்கிறது. அந்த மேனேஜ்மெண்ட் கோட்டாவை தன்னிச்சையாக எடுத்துக் கொள்ளாமல், பணி

டுக்கு வரவேண்டும். பிறகு கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு வரவேண்டும். திரும்ப பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும். இதனாலேயே தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதம் தவிர்க்கக்கூடியதுதான். ஆனால் இது நிகழ்கின்றது. காரணம் 'சென்ட்ரலைசேஷன்' (Centralisation). இங்கேயே அதிகாரம் குவிந்திருக்கின்றது. ஆகவே இந்த ஸ்கூல் கமிட்டிக்கு உள்ளூரிலேயே ஒருவரை செக்காட்டரியாகப் போடலாம் அல்லது தலைமையாசிரியரையே எக்ஸ் அபிசியோ செக்காட்டரி என்று உடனடியாகச் செய்துவிட்டால் நல்லது. இது பல பள்ளிக்கூடங்களிலே இருக்கின்றது. நான் இதை சான்றாகச் சொல்கிறேன். இது நாமே செய்யக்கூடியதுதான். நாம் உயர்நீதிமன்றத்தினுடைய பதிலுக்காகக் காத்திருக்க வேண்டியது இல்லை. இது அன்றாட நிர்வாகம் சம்பந்தப்பட்டது. நாம் இதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறேன். இதைப்பற்றி ஏற்கெனவே அதிகாரிகளிடம் விவாதித்திருக்கிறேன். இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று. சிதம்பரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி நல்ல நிலையிலே நடக்கக்கூடிய பள்ளியாக இருக்கின்றது. ஏராளமான மாணவர்கள் அங்கே வந்து சேர்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட 'வோக்கேஷனல் ஸ்கீம்' அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்தக் கல்வித் திட்டத்தைப் பாராட்டி கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்திலே வசதி இல்லை. அது ஒரு சிறிய இடம். 'எக்ஸ்பேண்ட்' (Expand) பண்ணுவதற்கான வசதி இல்லை. அதிலே நிலப்பரப்பு இல்லை. அதனாலே மேலே மேலேதான் கட்டிடம் கட்ட வேண்டியிருக்கிறதே தவிர, அதிலே நிலப்பரப்பு போதுமானதாக இல்லை. மேற்கொண்டு கட்டிடங்களைக் கட்ட, இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அங்கே இன்னும் அதிகமாக வசதிகளைச் செய்ய வேண்டும். கூரைக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 29 ஆயிரம் ஒதுக்கியிருப்பதாகவும், மற்றும் பழுதுப் பணிகளுக்காக டெண்டர் கோரப்பட்டிருக்கின்றது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான வசதிகள், வகுப்பறைகள் இல்லை. நம்முடைய பொறுப்புக் குழு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால் அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கின்றார்கள். சிதம்பரத்திலே பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளிக்குக் கொஞ்சம் உரிமை கொடுக்க வேண்டும். மற்ற பள்ளிகளுக்குக் கொடுப்பதுபோல் உரிமை கொடுக்க வேண்டும். அங்கே தொடக்கப் பள்ளிக்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரொம்ப நாட்கள் ஆகின்றது. அப்படி பணம் ஒதுக்கீடு செய்தும், டெண்டர் கோரியும், பல மாதங்கள் ஆகிவிட்டன. 2 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று நினைக்கிறேன்



இன்னும் அங்கே அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. பணிகள் எல்லாம் ஆரம்பக் கட்டத்திலேதான் இருக்கின்றன. கட்டிடங்கள் எழும்பவில்லை, அதற்கு ஒரு நல்ல கட்டிடம் வராமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் சடங்குகள் தான். அதை விரைவுபடுத்த வேண்டும். அதற்கான சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்து எறிந்துவிட்டு, சீக்கிரம் அங்கே வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர். அதற்காக கட்டிடங்கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டன. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், தென் ஆற்காட்டில் இருக்கின்ற ஒரே ஒரு மகளிர் கல்லூரி கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி. அதிலே படிக்கின்ற மாணவிகள் எல்லாம் ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்னால் விளையாட்டுத் துறையிலே நல்ல ஆர்வம் காட்டி, உற்சாகம் காட்டி, மாநில அளவிலே பல போட்டிகளில் பங்கேற்றுக்கொண்டிருக்கின்ற அளவுக்கு இருந்தார்கள். அந்த அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

(முற்பகல் 11-20)

இப்போதும் அப்படிப்பட்ட ஆற்றல் படைத்த, திறமை படைத்த மாணவிகள் இருக்கிறார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, 3, 4 ஆண்டுகளாக அங்கே விளையாட்டுப் பயிற்சிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கப்படுவதில்லை. என்னிடம் படித்த மாணவிகள் அங்கே படிக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்டேடியம் தமிழகத்திலேயே இல்லை என்று நம்முடைய அமைச்சரவர்கள் பாராட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். எனவே அங்கேயுள்ள மாணவிகள் தங்களுடைய விளையாட்டுத் திறமையை வளர்த்துக்கொள்ள வசதி இருக்கிறது. பக்கத்திலேயே ஸ்டேடியம் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளிலே, போட்டிகளிலே அதிகமாகப் பங்கேற்பதில்லை. பொறுப்புக் கழகம் இதிலே கவனம் செலுத்தி, கல்லூரி முதல்வரவர்களுக்கு அறிவுறுத்தி, விளையாட்டுத் துறையிலே மாணவிகளுக்கு பயிற்சியும், ஊக்கமும் கொடுக்க நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொறுப்புக் குழு செய்த முக்கியமானதொரு முடிவை நான் பாராட்டி, அமர விரும்புகிறேன். பள்ளிகளில், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது, மேனேஜ்மெண்ட் கோட்டா என்று இருக்கிறது. அந்த மேனேஜ்மெண்ட் கோட்டாவை தன்னிச்சையாக எடுத்துக் கொள்ளாமல், பணி

புரிந்து ஓய்வு பெற்ற அலுவலர்கள், ஆசிரியர்கள், இப்போது பணி புரியு ஊழியர்கள் குழந்தைகளுக்கு நிறைய சலுகைகளை மேனேஜ்மெண்ட் கோட்ட வில் செய்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்று, பாராட்டுகிறேன் அந்த ஊழியர்களை உற்சாகப்படுத்தக்கூடிய, ஊக்கப்படுத்தக்கூடிய நல் முடிவு அது. அதைப் பாராட்டுகிறேன். மேனேஜ்மெண்ட் கோட்டா 10, 2 சதவிகிதம் வருகிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அவ களுக்கு நிரந்தரமாக ஒதுக்கினால், அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கிடைக்கும். அறக்கட்டளையின் முன்னேற்றத்திற்காக தங்களை அர்ப்பணி துக்கொண்ட ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிகளில் சேருவதற்கு நிரந்தர ஏற்பாடு செய்தால், இன்னும் முற்போ கான நடவடிக்கையாக அது இருக்குமென்று சொல்லி, பொதுவாக இந்த சட்ட முன்வடிவை நான் ஆதரித்து, அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை சம்பந்தமான சட்ட முன்வடிவுபற்றி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பச்சையப்பர் தன்னுடைய சொத்துக் களை எல்லாம் இந்த அறக்கட்டளைக்குத் தந்தார்கள். அவருடைய நிலங் களெல்லாம் இந்த அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. அதைப்பற்றிச் சொல்கிறபோதுகூட, "பச்சையப்பர் நிறமோ பச்சையப்பா"—அங்கே அண்ணாவைப் போன்றவர்கள் படித்தார்கள், மு. வ. வைப் போன்றவர்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள், அதனால் "அங்கே படித்தவர்கள், கற்றுத் தந்தவர்கள் உள்ளமோ வெள்ளையப்பா"; "அறக்கட்டளையில் நடந்ததோ கொள்ளையப்பா", "அதனால் வந்தது இந்தச் சட்ட முன்வடிவப்பா"—இந்த நிலைமைகளை எல்லாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மு. வ. அவர்கள் பச்சையப்பர் அவர்களைப் பற்றிச் சொன்ன கருத்துக்கள்—"தமிழ் நாடு வண்மையின் எல்லையையும் கண்ட நாடு. ஈதலையே வாழ்தலின் ஊதிய மாகக் கொண்ட வள்ளல்கள் பலர் தோன்றிய நாடு இது. பதினெட்டாம் நூற் றாண்டில் அறம் பல புரிந்த வண்மையாளராய்த் திகழ்ந்த தமிழர் பச்சையப்பர். அவருடைய அறநெஞ்சமே இன்று ஆயிரக் கணக்கானவர்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கும் அறிவு நிலையங்களாக விளங்குகிறது" என்று குறிப் பிட்டார்கள்.

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தில் பெரியவர்கள் பலர் தொண்டுள்ளத்தோடு பணியாற்றிய காலமுண்டு. அவர்களுக்கு நன்றி தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைக் காலத்தில் சிலர் தவறு செய்தார்கள். இப்போது மட்டுமல்ல, அறக்கட்டளையை உருவாக்கியபோதுகூட, பழைய



வரலாற்றை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த ஜார்ஜ் நார்ட்டன் அவர்கள் பெரியதொரு முயற்சியை எடுத்துக் கொண்டார்கள். வெள்ளைக்காரராக இருந்த அவர், இந்த நாட்டு நலனில் அக்கறை எடுத்துக்கொண்டதை நினைவு கூர வேண்டும். அவர், "பச்சையப்ப முதலியாரின் கருத்தையும் இந்த நாட்டு மக்களின் வழக்கத்தை யும் ஒட்டி, நீதிமன்றத்தின் ஏற்பாட்டின்படி, கல்வி வளர்ச்சிக்காக நான்கு லட்ச ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டது. இதை மற்றவர்கள் அழிக்காத படிக்கும் கவர்ந்து கொள்ளாதபடிக்கும் காப்பாற்றுவதற்காக நான் பெரு முயற்சி செய்ய வேண்டி இருந்தது." என்று குறிப்பிட்டார்கள். அப்போதே இந்த ஆபத்து இருந்தது. அவர்கள் மேலும் சொல்லுகிறார்கள், "நான் உங்களோடு இருந்து இறுதி வரையில் இருந்து என் வாழ்நாளைக் கழிக்க முடியாதவன். ஆகையால் நீங்கள் நாளடைவில் என் பெயரை மறந்து விடுவீர்கள். என் நினைவே இல்லாமல் போய்விடும். இதைவிட மிகுதியாக நான் வருந்தும் காரணம் ஒன்று உண்டு. அதாவது, இப்படி நான் உங்களுக்குத் தொண்டு செய்வதால், என் நாட்டு மக்கள் என்னைப் பழிப்பார்களோ, என்னவோ? இதற்காக நான் அஞ்சவில்லை. என் செயல்களையும் மனச் சான்றையும் ஆராய்ந்தால், நான் குற்றம் இல்லாதவனாக இருக்கிறேன்." என்று சொல்லுகிறார்கள். திரு. நார்ட்டன் அவர்கள் வெள்ளைக்காரர். அவர், பச்சையப்பன் அறக்கட்டளைக்காக எடுத்த முயற்சிகளை இந்த நாட்டு மக்கள் மறந்தாலும், மறக்கலாமென்று சொன்னார்கள். இந்த அரசு அந்த அறக் கட்டளையின் பொறுப்பை ஏற்று, நடத்தி வருவதால், அந்த அறக் கட்டளைக்கு ஏற்பட்டுள்ள லாபங்களை மாண்புமிகு உறுப்பினர்

(முற்பகல் 11-25)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அதாவது 20.90 லட்சத்திலிருந்து 32.81 லட்சத்திற்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. கிட்டத்தட்ட 80 லட்சம் ரூபாய் கடன்களைத் தீர்த்திருக்கிறார்கள். இவ்வளவையும் செய்திருக்கிறார்கள் என்றால், இதற்கு முன்புள்ளவர்கள் இவைகளைச் செய்யாமல் போன நிலைமையையும் அக்கறை எடுத்துக் கொள்ளாத நிலைமையையும் நாம் காணமுடிந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால், இந்த நிர்வாகத்தை மேலும் ஒரு ஆண்டு என்ன, இரண்டாண்டுகள்கூட எடுத்துக்கொண்டு நல்ல முறையில் இந்த நிர்வாகத்தைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அதிகாரிகளாக இருந்தாலும், நாமும் அதிலே இருப்பதாகத்தான் பொருள். அரசு அதிகாரிகளுக்கு அங்கே பல பணிகள் காத்துக்கொண்டிருக்கின்றன. அவர்கள்

அதை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. முன்பு இருந்த நிர்வாகத்தில், யாராவது வேண்டியவர்கள் என்றால், அன்றே முடிவு செய்து, அன்றைக்கே ஆசிரியர்களாகப் போட்டுவிடக்கூடிய நிலைமைகள் இருந்தன. இதன் காரணமாகவே சரியாகச் சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருந்தது. ஆகவே யு.ஜி.சி. அந்த நிறுவனத்தை பிளாக் லிஸ்ட்டில் வைத்துவிட்டார்கள். இன்ன காரியத்திற்குத்தான் அந்த நிறுவனம் பயன்பட வேண்டுமென்ற நிலைமையை மாற்றி, என்னென்னவோ காரியங்களுக்கு பச்சையப்பன் அறக்கட்டளையைப் பயன்படுத்தியதால், அதை பிளாக் லிஸ்ட்டில் சேர்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. நீதிமன்றத்தின் மூலமாக இந்த அறக்கட்டளைக்குச் சரியான பாதுகாப்பை ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே அறக்கட்டளை உறுப்பினர்களாக இருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாணவர்கள் பிரதிநிதிகள், ஆசிரியர் பிரதிநிதிகள் அந்த அறக்கட்டளைக் குழுவில் இருக்க வேண்டும். அந்த நிறுவனம் பெண்கள் கல்லூரிகளையும் நடத்துவதால், அவர்களும் அந்த உரிமையைப் பெற வாய்ப்பளிக்கும் வகையில், மாணவிகள் பிரதிநிதியும், ஆசிரியைகள் பிரதிநிதி ஒருவரும் இருக்கிற அளவுக்கு அந்த அமைப்பு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. செங்கல்வராயன் என்பவர் அங்கே துபாஷியாகவே இருந்தார்கள். தனது இறுதிநாளில் அவர்கள் தன்னுடைய சொத்துக்களையெல்லாம் பச்சையப்பன் அறக்கட்டளைக்கு உயிலாக எழுதி வைத்தார்கள். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தன்னுடைய நோக்கம் இந்த பச்சையப்பர் அறக்கட்டளைக்குச் சொந்தமான சொத்துக்களுடன் தன்னுடைய இன்ஸ்டிடியூட்டுகளையெல்லாம் இணைத்துக் கொடுத்தார்கள். அதிலே அவர்கள் சொல்கிறார்கள், "பச்சையப்ப முதலியார் டிரஸ்டுகளுக்கும் என்னுடைய சொத்துக்கள் சேர்ந்த டிரஸ்ட்டுகளுக்கும் என்னுடைய சுய ஜாதியைச் சேர்ந்த சிலரைச் சேர்ந்து என்னுடைய சொத்துக்களுக்கும் டிரஸ்டியாக இருந்து பார்க்கும்படி எழுதியிருக்கிறது. மேற்படி பச்சையப்ப முதலியார் அறக்கட்டளையோடு சேர்ந்துகொள்வதில் என்னுடைய சுய ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு இஷ்டம் இல்லாத பட்சத்தில் அவர்களை நீக்கிவிட்டு பச்சையப்ப முதலியார் டிரஸ்ட்டுகளைப் பார்க்க வேண்டியது" என்றெல்லாம் அந்தக் காலத்து வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அளவுக்கு பச்சையப்பர் அறக்கட்டளையுடன் தன்னுடைய சொத்தையும் சேர்த்துக்



கொள்ளவேண்டுமென்று, பச்சையப்பனார் அவர்கள் அறிந்த செங்கல்வராயன் அவர்கள் செய்திருக்கிறபோது, இப்போது எப்படியாவது அந்தச் சொத்துக்களைத் தனியாகப் பிரித்து தனி அறக்கட்டளையாக்க முடியுமா என்று அதற்கும் நீதிமன்றம் போயிருக்கிறார்கள். ஆனால் அந்த உயிலின்படி நிச்சயம் அதை மாற்ற முடியாது என்பதையும், பச்சையப்ப முதலியார் என்பவர் அனைவரையும் சேர்ந்த ஒருவராகத் திகழ்ந்திருக்கிறார், அப்படித் திகழ்ந்து பணிகளை ஆற்றிக்கொண்டிருந்தார் என்பதையும் நாம் அறிவோம். அந்தப் பணிகளை அரசு தொடர்ந்து ஆற்றிவருகிறது. அதனால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதை வரவேற்கிறேன். குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு கட்டிடங்கள் வாடகையை எடுத்துக் கொண்டால், 60 ரூபாய் வாடகை சென்னையில் கொடுத்துக் கொண்டிருந்ததை மாற்றி, அதெல்லாம் இரண்டாயிரம், மூவாயிரம் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படிப் பேசியே அந்த வாடகையை உயர்த்தி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். நீதி மன்றத்திற்கு இப்போது அவர்கள் போயிருக்கிறார்கள். நீதி மன்றத்திற்குப் போனால், வாடகையும் கொடுக்காமல் இருக்கலாம், உடனே நிறுத்தி விடலாம், காலத்தையும் ஓட்டலாம் என்பதற்கு வசதியாக நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். ஆகவே நிர்வாகத்தைச் சீர் செய்ய அதிகாரிகள் முயற்சி எடுத்து செயல்பட்டிருப்பதை உள்ளபடியே பாராட்டுகிறேன்.

அதேபோல், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, காஞ்சிபுரத்திலும் புதிய கட்டிடங்கள் கட்டினார்கள். மகளிர் கல்லூரிக்கும் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. நிர்வாகம் செம்மையாக நடக்கிற நோக்கில், கல்லூரிக்கு அனுமதிக்கும் கட்டிடங்களாகட்டும், எந்தக் குறைபாடும் இல்லாத அளவுக்கு சிறப்பாக நடத்தப்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். இப்போது பச்சையப்பன் கல்லூரியில் படித்து புகழ் பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவர்கள் இன்றைக்குப் பெருமைப்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள் என்றாலும், டாக்டர் மு. வ. அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்கிறார், "பச்சையப்ப முதலியாருக்கு குழந்தைகள் இல்லை, ஆனால் குழந்தைகள் இல்லையென்றாலும், இங்கே படித்த, படிக்கும் குழந்தைகள் அனைவரும் அவருடைய குழந்தைகளாகவே இருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டு, "அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளில் எத்தனையோ பேர், நீதிமன்றங்களில் நீதியாளர்களாக விளங்கினார்கள், விளங்குகிறார்கள், விளங்குவார்கள்; எத்தனையோ பேர் அரசாங்கத்தின் அமைச்சர்களாகத் திகழ்ந்தார்கள், திகழுகிறார்கள், திகழ்வார்கள்; எத்தனையோ பேர் பேராசிரியர்களாக, எழுத்தாளர்களாக, அறிஞர்களாக ஒளி பரப்பினார்கள், பரப்புகிறார்கள், பரப்புவார்கள்"

என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். "இதை நினைக்கும்போது, பச்சையப்பர் அவர்களுடைய பெயர் நமக்கு ஊக்கமளிக்கிற, உணர்ச்சியூட்டுகிற இன்ப உயிர்ப்பாக இருக்கிறது. ஆகவே வாழ்க பச்சையப்பர்" என்று டாக்டர் மு. வ. அவர்கள் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த பச்சையப்பர் அறக்கட்டளையில் அரசு எடுத்திருக்கிற நல்ல முயற்சி காரணமாக இப்போது நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல.

(முற்பகல் 11-30)

நான் விரும்புவது என்னவென்றால், இந்த அரசு பொறுப்பேற்று ஐந்து ஆண்டுக் காலத்தில், தவறு செய்தவர்கள் யார் யார் என்பதை அரசு அறிந்திருக்கும். அவ்வாறு தவறு செய்திருப்பவர்களை அறிந்து, நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் பொது நிறுவனங்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு படிப்பினையாக இருக்கும், வழிவகையாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சையப்பன் பல்கலைக் கழகமாக ஆகவேண்டிய ஓர் அமைப்பாக இது இருக்கின்றது. ஆரம்பத்தில் சைனா பஜாரில் ஒரு கட்டிடத்தினைக் கட்டி அங்கேதான் ஆரம்பிக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்கேதான் படித்தார்கள். அண்ணா அவர்கள் இதுபற்றி ஒரு தடவை சொல்லியிருக்கிறார், "மாடியிலே நாங்கள் பாடம் கேட்டுக் கொண்டிருப்போம், ஆனால் கிழே எதையெடுத்தாலும் ஒரு அணா, 1½ அணா என்று குரல் ஒலித்துக் கொண்டிருக்கும்" என்பார்கள். அதே பச்சையப்பன் கல்லூரியிலே படித்த என்னைப் போன்றவர்களுக்கு அரசு எடுத்திருக்கிற இந்த முயற்சி மிகவும் நல்ல முயற்சி. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவற்றை நானும் வரவேற்கிறேன். அவர்கள் பேசியதைப் போல், மேற்படி அறக்கட்டளையை அரசு ஏற்ற பிறகு, நிர்வாகத்திலே நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன



என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதனாலே இந்த நிர்வாகத்தை ஒட்டுமொத்தமாக நிரந்தரமாக அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசுகிறபோது, பச்சையப்பன் பல்கலைக் கழகம் வேண்டுமென்று கூறினார்கள். நான் அதை வரவேற்கிறேன். அவ்வாறு ஒரு பல்கலைக் கழகத்தை, காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு செய்தால், அது நாம் அனைவரும் சந்தோஷப்படுகிற நிகழ்ச்சியாக மாறும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மேற்படி அறக்கட்டளையை அரசு எடுத்துக் கொண்ட பிறகு, அதன் வருமானத்தை 2½ இலட்ச ரூபாயிலிருந்து 35 இலட்சம் ரூபாயாக அதிகப்படுத்தியிருக்கிறோம். இன்னும் அவர்களுக்கு முழுச் சுதந்திரம் கிடைக்குமானால், அதை அரசே முழுமையாக எடுத்துக் கொள்ளுமானால், கோடிக் கணக்கான ரூபாய் வரக்கூடிய அளவுக்கு சொத்துக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல்லூரி முன்னாள் நிர்வாகத்தில் இருந்தபோது, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வேலைநிறுத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. எங்கே சென்றாலும், பச்சையப்பன் கல்லூரி பெயர்தான் நினைவுக்கு வரும். சில அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்கிற எண்ணம் வருகிறபோது, பச்சையப்பன் கல்லூரியைப் பயன்படுத்திக் கொள்கிற வரலாறுகளையெல்லாம் நாம் தெரிந்து வைத்திருந்தோம். ஆனால் இன்றைக்கு நிர்வாகத்தை அரசே மேற்கொண்ட பின்னர், அந்நிலைமைகள் எல்லாம் மாறி, இன்றைக்கு பச்சையப்பன் கல்லூரியிலே 'சீட்டு' கிடைத்தால் போதும் என்கிற அளவுக்கு அக்கல்லூரியின் தரம் உயர்ந்து வருகிறதைப் பார்க்கிறோம். அதற்கு முக்கிய காரணம் நிர்வாக மாற்றம்தான். இவ்வாறு வாரிசே இல்லாத எந்த ஒரு டிரஸ்ட்டாக இருந்தாலும், அதை அரசே எடுத்துக் கொள்வதில் தவறே இல்லை. எனவே பச்சையப்பன் அறக்கட்டளை மூலம் பச்சையப்பன் பல்கலைக் கழகம் வருவதும், அதுவும் அண்ணா பிறந்த மண் காஞ்சியிலே கொண்டுவருவதும் மிகவும் நல்ல காரியமாக இருக்கும். ஏனென்றால் தற்சமயம் சென்னையிலே ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. எனவே அதைக் காஞ்சியிலே வைத்தால் நல்ல காரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சமயத்தில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சர் பி. டி. தியாகராயர் கல்லூரி, வட சென்னையிலே இருக்கிறது. அது எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. அக்கல்லூரி நிர்வாகம் எடுப்பேன், கவிழ்ப்பேன்

என்கிற முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே பணி புரியும் ஆசிரியப் பெருமக்களையெல்லாம் மிரட்டுவது, அறைகளுக்குள் அழைத்துச் சென்று ராஜினாமா கடிதங்களை அச்சுறுத்திப் பெறுவது, பல்வேறு துன்பங்களை ஏற்படுத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது. அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்த நிர்வாகத்திற்கும் வாரிசு இல்லை. எப்படி பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தை அரசே எடுத்து அக்கல்லூரியின் புனிதத் தன்மையைக் காப்பாற்றியதோ, அதைப் போலவே தியாகராயர் கல்லூரியையும் அரசே எடுத்து அதன் புனிதத் தன்மையையும் பாதுகாத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலில் நிர்வாகப் பொறுப்பிலிருக்கிற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு ஆசிரியர் அவருக்குப் பிரச்சாரத்திற்காகப் போகவில்லை என்பதற்காக துன்புறுத்தப்பட்டிருக்கிறார். அவர் இப்போதுதான் ஹெட்மாஸ்டராக ஆகிக் கொண்டிருக்கிறார். அவரே இவர் ராஜினாமா செய்ததுபோல எழுதி வைத்துக்கொண்டு, எம்.ஏ. படித்த ஆசிரியருக்குப் பதிலாக இவரே அவரைப்போல டைப் அடித்துவிட்டு, "எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ராஜினாமா செய்து விட்டேன்" என்று மிரட்டி கையெழுத்து வாங்கி, இப்போது அவரை வெளியிலே நிறுத்தி வைத்து விட்டார்கள்.

(முற்பகல் 11-35)

இந்தக் கொடுமைகள் ஆசிரியப் பெருமக்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கொண்டு அங்கே நிறைய ஆண்களும், பெண்களும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் அரசு பச்சையப்பன் கல்லூரியை எப்படி எடுத்ததோ அதைப்போல வாரிசு இல்லாத அந்தத் தியாகராயர் கல்லூரியையும் ஒரு நிர்வாக டிரஸ்டியிடமிருந்து எடுத்து, அந்த நிர்வாகத்தைச் சீர்திருத்திக் கொண்டு வரவேண்டுமென்று அரசை வலியுறுத்தி, இதை ஆதரித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையை அரசு ஏன் எடுத்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அறிவார்கள். அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுவான கோளாறுகளின் காரணமாக, அது எடுக்கப்பட்டது. அந்த நிர்வாகத்திலே இருக்கின்ற கந்தசாமி நாயுடு கல்லூரி, அது இயங்கி வருகின்ற வீட்டு வசதி வாரிய இடத்தை வாங்குவதாகச் சொல்லி, ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தப்படி அவர்கள் வாங்க முடியாத



நிலையில், அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலையும், அதைப்போலவே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பாடப் பிரிவுகளுக்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டாத காரணத்தாலே, அந்தப் பாடப் பிரிவுகளைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் மாணவர்களும், ஆசிரியர்களும் பாதிக்கப்படக் கூடுமென்ற ஒரு அச்சமும் ஏற்பட்டு, ஆசிரியர்களும், மாணவர்களும் போராட்டத்திலே இறங்கி, அந்த அடிப்படையிலே நம்முடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினை வந்தது. எல்லோருடைய கவனத்திற்கும் வந்தது. அன்றைக்கு அது ஒரு பெரிய போராட்டமாக நடந்து கொண்டிருந்த நிலையில்தான், அரசு இதில் தலையிட்டு அந்த நிர்வாகத்தையும், அந்த அறக்கட்டளையையும், ஒரு சட்டத்தின் மூலமாக எடுத்து, கடந்த 5 ஆண்டுக் காலமாக நடத்தி வருகிறது. எடுக்கின்றபோதும் சரி, கடந்த 5 ஆண்டுக் காலத்திலேயும், இப்படி இருக்கின்ற முறையை அங்கே நீடிக்க விடக் கூடாது; வேறு ஒரு முறையில் இதை நடத்த வேண்டும். அதாவது ஒரு அறக்கட்டளைக் குழுவைப் போட்டு, அரசே ஏற்று நடத்தாமல், அந்தக் குழுவிடம் தரவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே நாம் சில முயற்சிகளை மேற்கொண்டோம். நான் ஆரம்பத்திலே சொன்னதுபோல, அந்த முயற்சியை எதிர்த்து சில பேர் கோர்ட்டிலே வாதாட முன்வந்திருக்கிற காரணத்தால் தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அங்கே தாமதமான காரணத்தாலே இங்கே நாமே அதைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு இப்போது இன்னொரு ஆண்டுக் காலத்திற்கு அதை நீட்டிக்க வேண்டுமென்று இப்போது அவை முன்னாலே திருத்தத்தை வைத்திருக்கிறோம். ஆகவே இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக உயர் நீதிமன்றத்தினுடைய அனுமதி கிடைத்து அந்த அனுமதியின்படி அந்த அறக்கட்டளையை அமைத்து விடுவோமானால் அதற்குப் பிறகு அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நிலையும் அதற்காக அவை முன்னாலே வந்து இதுபோன்ற சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகின்ற நிலைமையும் நிச்சயமாக இருக்காது. ஆனால் நம்முடைய நோக்கம் இதற்கு முன்னாலே இருந்த நிலைமைகள் திரும்ப வந்து விடக் கூடாது. அதைப்போலவே இன்றைக்கிருக்கிற நிலைமைகள் நன்றாக இருக்கின்றன என்று பாராட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைவிட இன்னும் சிறப்பாக இருக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்றால் அதை உருவாக்கத்தான் அரசு விரும்புகிறதே தவிர வேறல்ல. ஆகவே இந்த நோக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் அறிந்து இதற்கு நல்ல ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். அங்கே சம்பளம் கிடைப்பதிலே தாமதமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தன் அவர்கள் சொன்னார்கள். அதைத் தவிர்ப்பதற்கு அந்தக் குழு த்தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேனேஜ்மெண்ட் கோட்டாவை பச்சையப்பன் கல்லூரி நிர்வாகங்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களின் குழந்தைகளுக்குத் தருவதை வரவேற்றுச் சொன்னார்கள். அப்படி வரவேற்கின்றபோது, இதற்கு முன்னாலே இருந்த நிலைமை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு முன்னாலே மாணவர்களை அவர் கள் இஷ்டப்படி சேர்த்துக் கொண்டிருந்தார்கள். இஷ்டப்படி சேர்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது மட்டுமல்ல, இவ்வளவுதான் எண்ணிக்கை என்றிருந்தால், அதைவிட அதிகமாகக்கூட சேர்க்கின்ற அளவுக்கு அவர்கள் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே அவையெல்லாம் அங்கே நடை பெற்றுக் கொண்டிருந்த நிர்வாகத் தவறுகள். இன்றைக்கு நம் அரசுக் கல்லூரிகளிலே இருப்பதைப்போலத்தான் அங்கேயும் இருக்க வேண்டும்; மாணவர்களைச் சேர்ப்பதில் சாதி அடிப்படையில் விகிதாச்சார அடிப்படை பின்பற்றப்பட வேண்டும். அதே நோத்தில் அதற்குட்பட்டு மார்க்குகளை வைத்துத்தான் தேர்வு செய்ய வேண்டுமே தவிர, உறுப்பினர்களோ, வேறு யாரோ சிபாரிசு செய்து இடங்களை வாங்கினார் என்ற நிலைமை இருக்கக் கூடாது, எந்தக் கல்லூரிக்கும் இருக்கக் கூடாது என்கிற நம்முடைய விருப்பத் திற்கேற்ப இன்றைக்கு அது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. **ஆனால் மேனேஜ்மென்ட் கோட்டா என்பது மேனேஜ்மென்டே கொடுக்கலாம் என்றிருக் கிறது.** அதையும் அவர்கள் இஷ்டப்படி கொடுக்கக் கூடாது என்கிற முறை யில் நாம் சொன்ன காரணத்தால், அதன் ஊழியர்களின் குழந்தைகள் யாராவது விண்ணப்பித்திருந்தால், அவர்களுக்குத் தந்து, மீதி இருக்கிற இடங்களை மார்க்கு அல்லது விகிதாச்சார அடிப்படையில் நியாயமான முறையில் அது தரும்; அதிலே சிபாரிசு இருக்காது. சிபாரிசை முழுவதுமாக அதிலே யிருந்து நீக்கியிருக்கிறோம்.

இங்கே பேசிய டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசும்போது, பச்சையப்பா கல்லூரி பல்கலைக் கழகமாக மாற வேண்டுமென்று குறிப்பிட் டார். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களும் ஆதரித்



துப் பேசினார். பல்கலைக் கழகங்களைப் பல இடங்களிலும் ஆரம்பிப்பது என்பது முடியாத காரியம் என்றாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழக அந்தஸ்து அந்தக் கல்லூரிக்கு ஏற்கெனவே வந்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அதற்கு இருக்கிற வசதி வாய்ப்புகள், அதற்கு இருக்கிற அறக் கட்டளைச் சொத்துக்கள், அதற்கு இருக்கிற செல்வாக்குகள் ஆகியவைகளை வைத்துப் பார்க்கும்போது, அந்தக் கல்லூரி ஏற்கெனவே பல்கலைக் கழக அந்தஸ்தைப் பெற்றிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் இன்றைய தினம் தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனங்கள் பல இருந்து வருகின்றன. இந்தியாவில் இருக்கிற 18 அல்லது 19 தன்னாட்சி கல்வி நிறுவனங்களில் இரண்டைத் தவிர மற்ற அனைத்துக் கல்லூரிகளுமே தமிழகத்தில்தான் இருக்கின்றன. மத்திய அரசும், பல்கலைக் கழக மானியக் குழுவும் மற்றும் கல்வி நிபுணர்களும் இந்தக் கொள்கையைத் தீவிரமாக ஆதரிக்கிறார்கள். இந்த முறை இந்தியா முழுவதும் பரவ வேண்டும் என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கல்வியமைச்சர்களின் மாநாட்டில்கூட இதைச் சொல்லியிருக்கிறார்கள். மேலைநாடுகளைப் பொறுத்தவரையில், 'அபிலியேடட் டைப்' கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இன்றைக்குப் பல இடங்களில் இல்லாமலே போயிருக்கிறது. எனவே மேல் நாடுகளில் இல்லாத, மேலை நாடுகள் விரும்பாது படிப்படியாக எடுக்கப்பட்டு வருகிற முறையை நாம் விடாப்பிடியாக இங்கே வைத்துக் கொண்டிருப்பதன் காரணமாக உண்மையான கல்வி வளர்ச்சிக்கு தடை போட்டு வருகிறோம் என்ற அடிப்படையில் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், பிரிட்டனில் எலிமென்ட்டரி ஸ்கூல்கள்கூட அட்டானமஸ் முறையில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. தன்னாட்சிக் கல்வி நிறுவனம் என்பது அறிவு வளர்ச்சிக்கும் ஆற்றல் வளர்ச்சிக்கும் உதவுகிறது என்ற அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. ஆனால் இங்கே இருக்கிற பல்வேறு பிரச்சினை காரணமாக அது ஒரு எதிர்ப்பைப் பெற்று வருகிறது என்பதனாலே பல இடங்களிலும் தன்னாட்சி கல்வி நிறுவனங்கள் வர இயலாத நிலையைப் பார்க்கிறோம். ஆனால் பல்கலைக் கழக மானியக் குழுவின் எண்ணம் அது தான், மத்திய அரசின் எண்ணமும் அதுதான். அந்த அடிப்படையில் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் நல்லபடியாக நடந்து ஒரு குறிப்பிட்ட கால கெடுவிற்குப் பின்னாலே பல்கலைக் கழக அந்தஸ்தைப் பெற வேண்டும்—டீம்டு யூனிவர்சிடி—அந்தஸ்தைப் பெற வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ் நாட்டில் உள்ள கல்லூரிகள் ஆக வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு செயல் பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, அந்தக் கல்லூரி களுக்கு பல்கலைக் கழகப் பொறுப்பு வந்துவிடுகிறது. தமிழ் நாட்டில் காந்தி கிராமத்தில் உள்ள பல்கலைக் கழகம் போன்ற நிலையை அடைய வேண்டும்.

அந்த வகையில் கல்லூரிகள் உயர வேண்டும். அந்த வகையில் பார்த்தால், சென்னையில் இருக்கிற மெயின் பச்சையப்பன் கல்லூரிக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இதுவரை அப்படி நடக்காததற்குக் காரணம் என்ன என்பதும் நமக்குத் தெரியும். ஏதோ பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கல்லூரியில் படித்தார்கள், டாக்டர் மு. வ. அவர்கள் அந்தக் கல்லூரியில் படித்தார்கள் அல்லது டாக்டர் சனார்த்தனம் அந்தக் கல்லூரியில் படித்தார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, கடந்த 2, 3 ஆண்டு காலமாகத்தான் பச்சையப்பன் கல்லூரி இங்கே நன்றாக நடக்கிறது என்ற அபிப்பிராயம் பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். முன்பெல்லாம் சென்னை நகரிலேயே தகராறு நடக்கிற இடமாக அந்தக் கல்லூரி இருந்து வந்தது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சிபாரிசின் அடிப்படையில் அங்கே மாணவர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டதே, அந்தக் கல்லூரி ஒழுங்கீனமாக நடைபெற்றதற்குக் காரணமாக இருக்கும். அதற்கு அந்தக் கல்லூரி ஒரு எடுத்துக்காட்டாகவே இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை மாறியிருக்கிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் நல்ல ஒத்துழைப்பைத் தந்தால், அதோடு இந்த நிர்வாகமும் சேர்ந்து பச்சையப்பன் கல்லூரியை ஒரு உயர் கல்வி நிலையமாக மேம்பாடு அடையச் செய்ய முடியும். படிப்படியாக பல்கலைக் கழக அந்தஸ்தை அந்தக் கல்லூரிக்குக் கொண்டு வருவதில் அரசுக்கு எந்தவிதமான எதிர்ப்புமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியெல்லாம் அந்தக் கல்லூரி உயர்வு அடைய வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசை. அந்தக் கல்லூரி நன்றாக நடந்து பல்கலைக் கழக அந்தஸ்தைப் பெறுவதன் மூலமாக தமிழ் நாட்டினுடைய அறிவு வளர்ச்சியைத் தடைபடாமல் பார்த்துக் கொள்ள முடியுமே தவிர வேறு வகையில் அல்ல என்று எண்ணுகிறேன். அந்தக் கருத்து வரவேற்கப்படத்தக்க கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, புதிய கட்டிடங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்காகப் பல்வேறு முறைகளில் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். சிதம்பரத்தில் ஆதாரப்பள்ளிக்கு 2 லட்சம் மதிப்பீட்டில் டென்டர் முடிவுசெய்யப்பட்டு, கட்டிடப் பணிகள் துவங்கப்பட இருக்கின்றன. காஞ்சீபுரத்தில் ஆதாரப் பள்ளி மேம்பாட்டிற்காக ரூ. 75,000 செலவில் கட்டுமானப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே காஞ்சீபுரத்தில் விளையாட்டு மைதானத்தில் சுற்றுச் சுவர் கட்ட ரூ. 2 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மைதானத்தில் ரூ. 7.1 லட்சம் செலவில்



அரங்கம் வைப்பதற்கான ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. மைதானத்தின் சுற்றுப்புறச் சுவரை ஒட்டி அங்காடிகள் வைக்க ஒரு லட்சம் அந்தக் குழு வழங்கியிருக்கிறது. இதற்கு முன்னே கட்டிடங்கள் கட்டப்படுவதிலே பல குறைபாடுகள் இருந்தன. கட்டிடமே கட்ட முடியாத நிலையும் இருந்தது. அந்த நிலைமை மாறி புதிய கட்டிடங்கள் கட்ட செலவு செய்கிற நிலை வந்திருக்கிறது.

அடுத்து, இந்து சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் அந்தக் குழுவில் இருந்து நிர்வகிக்க வேண்டும் என்று அந்த உயிலில் எழுதப்பட்டிருந்த காரணத்தால், நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும் என்று முன்னே அந்த முறை இருந்தது.

(முற்பகல் 11-45)

அரசு எடுத்துக்கொண்டாலும், அந்த முறைக்கு நாம் ஊறு தேடாத வகையில் போடப்படும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அத்தனை பேரையும் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாக போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களால் தரப்பட்ட சொத்துக்கள் இந்து சமயம் சம்பந்தப்பட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை இந்து சமயப் பணிகளுக்காகச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன்பு இருந்த குழு அத்தகைய செலவுகளைச் செய்யாமல் இருந்தது. அரசாங்கத்தின் குழு அந்தச் செலவுகளை செய்ய ஆரம்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். எந்த நோக்கத்தோடு முடிவுகள் எடுக்கப்பட்டனவோ, எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தார்களோ, அதை முழுமையாகச் செயல்படுத்தும் முயற்சிகளை பொறுப்புக் கழகம் செய்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் தியாகராயர் கல்லூரியை அரசு எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை எடுப்பதற்காக ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துவிட்டோம். சம்பந்தப்பட்ட நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கினார்கள். அந்தத் தடை நீங்கி இப்போது அந்த முயற்சி தொடர்கிறது. அந்தக் கல்லூரியின் நிர்வாகம் கோளாறுகளால் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை திரு. ஜேப்பியார் சொன்னார். அதைவிட மோசமாக நடந்திருக்கிறது. ஆசிரியர்கள் அடிக்கப்பட்டார்கள் என்ற செய்தி, புகார்கள் வந்தன. ஆசிரியர்களுக்குப் பல சங்கடங்களை உருவாக்கினார்கள். நிர்வாகமும் ஆசிரியர்களும் கல்வி வளர்ச்சிக்காக ஒன்றுபட்டு, ஒத்துழைப்புத்

தந்து நடத்தினால்தான், நிர்வாகம் சரியாக நடைபெறும். அதற்கு மாறாக அவர்களுக்கிடையே தகராறு, சண்டை வந்தால், தகராறு, சண்டைதான் மிச்சமாகுமே தவிர, நிர்வாகம் முறையாகச் செயல்பட முடியாது. மாணவர்களுக்கும் அதனாலே ஒழுங்கான பயன் கிடைக்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சர் தியாகராயா கல்லூரிக்கு மட்டுமல்லாமல், எல்லாக் கல்வி நிலையங்களுக்கும், எல்லா ஆசிரியப் பெருமக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே ஒவ்வொரு கல்வி நிர்வாகமும் சிறப்புற விளங்க வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது. அந்த முறையிலே இதை எடுத்துக் கொள்ள விருக்கிறோம். சேலம் சௌடேஸ்வரர் கல்லூரியை எடுக்கவும் முயற்சி மேற்கொள்ளவிருக்கிறோம். தவறாகக் கல்லூரிகள் நடந்தால், தவறான நிர்வாகம் இருக்குமானால், அரசு நிச்சயமாக எடுக்கும். அதே நேரத்தில் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிர்வாகம் தவறாக இருந்தால்தான், நடவடிக்கை எடுப்போம் என்று மட்டும் இல்லாமல், ஆசிரியர் தரப்பிலே தவறு நடந்தாலும், மாணவர்கள் தரப்பிலே தவறு நிகழும்போதும் நிர்வாகம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, அரசு நிச்சயமாக ஒத்துழைப்பு தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒழுங்கீனமான செயல்கள் நடைபெறும் போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, அரசும் ஒத்துழைப்புத் தரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தவறுகள் இல்லாமல் இருக்க வேண்டிய சூழ்நிலையினை ஏற்படுத்துவதில் எல்லோருக்கும் அரசு ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறது. நிச்சயமாக இதிலே யாரும் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை இல்லை. காரணம் லாப நோக்கத்தோடு நடத்தப்படும் காரியங்கள் அல்ல. பொது மக்களுக்காக, மாணவர்களுக்காக, அறிவு வளர்ச்சிக்காக நடத்தப்பட வேண்டும் என்கிற இத்தகைய நிர்வாகங்களில் சண்டை, தகராறு, வாதப் பிரதிவாதங்கள் இருக்க இடமில்லை. அப்படி வருகிறதென்றால், சம்பந்தப்பட்டவர்களுடைய பலகீனத்தின் காரணமாக, உண்மையான விவரங்கள் தெரியாததன் காரணமாக வரலாம். அதைத் தவிர்க்க நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே பணிபுரிகிறவர்கள் நல்ல முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். படிக்கிறவர்கள் நல்ல முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு இந்த நல்ல சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டி வரவேற்றிருப்பதற்காக நன்றி தெரிவித்து, இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,



**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரி பல்கலைக் கழகமாக ஆகும் என்று தெரிவித்ததற்காக மீண்டும் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே பழைய மாணவர்கள் உறுப்பினர்களாக இடம் பெறுவதற்கு ஏற்கெனவே இருக்கும் விதிகளின்படி ஐந்து ரூபாய் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. மேலவை பட்டதாரி தொகுதி உறுப்பினர்களுக்கு அப்படி ஐந்து ரூபாய் கட்ட வேண்டுமென்று இல்லை. ஆகவே அவற்றை மாற்ற வேண்டும். வேண்டுமானால் ஒரு ரூபாய் கட்டணம், அல்லது கட்டணமே தேவையில்லை என்ற அளவிற்கு வைத்து பழைய மாணவர்களை உறுப்பினராகச் சேர்க்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அத்தகைய யோசனை இந்த நேரத்திலே ஏற்படவில்லை. பழைய நிலைமைகளைக் கொண்டுவர வேண்டாம் என்று நாம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் யோசனை சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

[1986 ஜனவரி 29

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்துவருகின்ற மூன்று சட்ட முன்வடிவுகளும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்ததாக இருப்பதால், மூன்றையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு தனித்தனியாக நிறைவேற்றிக்கொள்ளலாம்.

**(3) 1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, அண்ணா பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

---

@ 521—525 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 ஜனவரி 29]

**திரு. அ. மயில்சாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவுகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. அந்தக் பல்கலைக்கழகங்களில் எல்லாம் துணை வேந்தர் நியமனம் வேந்தரால் செய்யப்படுகின்றது. இன்றைக்கு துணை வேந்தர் நியமனம் எல்லாம் வேந்தரால் செய்யப்படுகின்றபோது, பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன. அதிலே பல்வேறு சர்ச்சைகள் ஏற்படுகின்றன. பல்வேறு மாநிலங்களிலே, ஆந்திராவிலும், மேற்கு வங்காளத்திலும்கூட, இது பெரிய பிரச்சினையாக வந்திருக்கின்றது. அந்த அளவிற்கு இந்தப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்து அரசியல் ஆகியிருக்கின்றது. அதைப்பற்றி நமக்குத் தெரியும். ஏனென்றால் துணைவேந்தரை நியமிக்கக்கூடிய அதிகாரம் வேந்தரிடம் இருக்கின்றது, ஒரு மூன்று பேர்கள் அடங்கிய பேனல் போட்டு, அந்தப் பேனலிலே ஒருவரை நியமிக்கின்றார்கள். இந்த 3 பேர்களும், துணை வேந்தர்களாக நியமிக்கப் படலாம் என்பவர்கள் மிகப் பெரிய கல்வியாளர்களாக இருக்கின்றார்கள். அந்தக் கல்வியாளர்கள் பேனல் போடப்பட்டு, அந்தப் பேனலிலே யாரையாவது ஒருவரை நியமனம் செய்வது என்ற நிலை இருக்கின்றது. அப்படி இல்லாமல், பேனலே இல்லாமல் ஒரே ஒருவரை மாத்திரம் அரசோ, ஆட்சிக்குழுவோ சொல்லி, வேந்தர் அவரை நியமிக்கக்கூடிய ஒரு முறை இருந்தால் இப்பேர்ப் பட்ட பிரச்சினைகள் எல்லாம் எதிர்காலத்தில் எழாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதை என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன். அதே மாதிரி துணை வேந்தர் பதவிக்கு ஆட்சிக்குழு தான் முடிவாகச் செய்து இன்னாரைத் துணை வேந்தராக நியமிக்கலாம் என்று சொல்லி, வேந்தருக்குப் பரிந்துரை அனுப்ப வேண்டும். அதுதான் ஜனநாயக முறையாகும், அதுதான் சரியாக இருக்கும் என்பதையும் அதிலே பிரச்சினை இல்லாமல் இருக்க முடியும் என்பதையும் சொல்கிறேன். ஆக 3 பேர் கொண்ட பேனல் என்பது தேவையில்லை. அதனாலேதான் பல்வேறு நிலைமைகளிலே பிரச்சினைகள் எல்லாம் உருவாகியிருக்கின்றன. அதே மாதிரி துணை வேந்தராக நியமிக்கப் படுகின்றவர்கள் 3 ஆண்டுக்கு பொறுப்பிலே இருக்கின்றார்கள். இந்த மூன்று ஆண்டு காலத்திலே பல்கலைக்கழகத்திற்குத் துணை வேந்தர் முக்கியமானவராக இருக்கின்றார்கள். அந்தப் பல்கலைக்கழகம் சரியாக நடைபெறுவதற்கு, அந்தப் பல்கலைக்கழகம் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்குப் பயன்பட அவர் பொறுப்பாக இருக்க வேண்டும். சில பல்கலைக் கழகங்கள் துணைவேந்தர்களால் சரியாகவே நடைபெறுவதில்லை. அப்படிப்பட்ட

நிலைமைகளிலே அவரை வேந்தர் எடுப்பதற்கோ நீக்குவதற்கோ அதிகாரம் இல்லை. துணை வேந்தர் எப்படிவேண்டுமானாலும் 3 ஆண்டுக் காலம் இருந்து கொள்ளலாம் என்று இருக்கின்றது. அதை மாற்றவேண்டும். அவர் சரியாக இல்லை என்றால், அவரை நீக்குவதற்கு வேந்தருக்கு அதிகாரம் கொடுப்பதிலே தவறில்லை என்று, என்னைப் பொறுத்த அளவிலே, நான் கருதுகிறேன். அதே மாதிரி ஆட்சிக்குழு (சிண்டிகேட்) எடுக்கின்ற முடிவுகளை, தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும். துணை வேந்தர்கள் ஆட்சிக்குழு எடுக்கின்ற முடிவுகளை அமுல்படுத்தாமல் காலதாமதம் செய்கின்றார்கள். ஆண்டுக் கணக்கிலே அவ்வாறு இருக்கின்றது.

நான் இருக்கக்கூடிய பாரதியார் பல்கலைக்கழகத்திலே இன்றைக்கு பல துறைகளிலே பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. தேர்வு கட்டுப் பாட்டு அதிகாரி அங்கே நியமிக்கப்படவில்லை. ஆண்டுக்கணக்காக நியமிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. ஆட்சிக் குழுவும் கூட இன்னாரை தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக் கலாம் என்று பரிந்துரை செய்தபிறகும்கூட, இன்றுவரைக்கும் நியமிக்கப்பட வில்லை. இதுமாதிரி துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள் இத்தனை பொறுப்புகளுக்கும் ஆட்சிக் குழுவிலே பரிந்துரை செய்த பிறகு நியமிக்கக்கூடிய அதிகாரம் துணை வேந்தருக்கு இருந்தும்கூட, என்ன காரணத்தினாலேயோ அதெல்லாம் நீக்கப்பட்டு மீண்டும் 'அட்வர்ட்டைஸ்' செய்து, அவர்களே 'இன்டர்வியூ' செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. ஆண்டுக்கணக்கிலே இந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படாமல் அப்படியே இருக்கின்றன. ஆக ஆட்சிக் குழு முடிவெடுத்ததற்குப் பின்னர், அந்த ஆட்சிக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு 'டைம் லிமிட்' இருக்க வேண்டும். துணை வேந்தர் ஒரு 3 மாதம் அல்லது 6 மாதத்திற்குள் இந்தப் பணியிடங்களை எல்லாம் நிரப்பியாக வேண்டும் என்று விதிகளிலே இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆட்சிக் குழுவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிகமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்த முன்வடிவில் அரசினிடம் இருக்கக்கூடிய அதிகாரத்தை ஆட்சிக் குழுவிடம் கொடுப்பது என்பது தான் முக்கியமான நோக்கம். ஆகவே அந்த ஆட்சிக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிகமாக இருக்க வேண்டும். இன்றைக்கு கல்லூரிகளிலே பணியாற்றுகிற ஆசிரியப் பெருமக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில் பாரதியார் பல்கலைக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் 3 பேர்



(முற்பகல் 11-55)

தான் இருக்கிறார்கள். அதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேன். மேலவையில் ஆசிரியர் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக் கிறார்கள். அவர்களைக்கூட அங்கே 'எக்ஸ்-அபிஷியோ' உறுப்பினர்கள் என்று போடலாம். கல்லூரி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை அங்கே சொல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையிலே இந்தக் கருத்தை நான் சொல் கிறேன்.

அடுத்து, இன்றைக்கு தமிழக அரசு பல்வேறு கல்லூரிகளுக்கு தன்னாட்சி அதிகாரம் கொடுத்திருக்கிறது. தனியார் கல்லூரிகளுக்குத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசுக் கல்லூரிகளில் எத்தனையோ வசதிகள் இருந்தும், அவர்களுக்கு ஏன் இந்த அதிகாரம் கொடுக்கப்பட வில்லை என்பது புரியவில்லை. தனியார் கல்லூரிகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், அவர்கள் அதிகாரத்தைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தன்னாட்சி அதிகாரம் என்று கொடுக்கப்பட்டது, 'அடானமஸ்' என்று கொடுக்கப்பட்டது, கல்வியிலே மாற்றங்கள் செய்வதற்கு என்ற அடிப்படை யிலேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்திற்கு அதிகாரம் கொடுப் பதில்லையென்பது பொதுவான கருத்து. ஆனால் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் நினைத்தால், ஒரு கோர்சை ஆரம்பிக்கிறார்கள். 2 ஆண்டுகள் கழித்து அதை எடுத்துவிடுகிறார்கள். இதனால் ஆசிரியர்கள் மாத்திரமல்ல, மாணவர்கள்கூட பாதிக்கப்படுகிறார்கள். ஒரு பாடத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதற்கு பல்கலைக் கழகத்திடம் அனுமதி பெற வேண்டுமென்று விதி இருக்கிறது. இருந்தாலும், அப்படி அனுமதி பெறாமல், அப்படிப்பட்ட காரியங்களை இன்றைக்குச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் இருக்க பல்கலைக் கழகங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கு பாரதியார் பல்கலைக் கழகம் துவக்கப் பட்டு, 5 ஆண்டுகள் ஆகின்றன. இருந்தும், பல பணியிடங்கள் காலியாகவே இருக்கின்றன. 2 ஆண்டுகளாக அப்படி இருக்கிறது. அங்கே ஆட்சிக் குழு இருக்கிறது. சிண்டிகேட் இருக்கிறது. நேர்முகத் தேர்வு எல்லாம் வைத்து, எல்லாம் செய்தும்கூட, இன்னும் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக் கின்றன. பல்கலைக் கழகத்திற்கு நிலத்தைப் பலரிடமிருந்து ஆர்ஜிதம் செய் திருக்கிறார்கள். அந்த நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு பல்கலைக் கழகத்தில் வேலை தரப்படுமென்ற உத்தரவாதத்தை அப்போதிருந்த மாவட்ட ஆட்சித்

தலைவரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நிலத்தைக் கொடுத்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுப்பது என்பதை அமுல்படுத்தாத நிலைமை இருக்கிறது. வெளியே இருந்து பலரை, பல வேலைகளுக்கு எடுத்திருக்கிறார்கள். ஆனால், நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு வேலை தராமல் இருக்கிறார்கள். ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பல்கலைக் கழகத்தில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் இல்லை. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர்கூட ஆசிரியர் பணியிடத்தில் நியமிக்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே 2 ஆண்டுகளாக பட்டமளிப்பு விழா இல்லை. இதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்பது தெரியவில்லை. மற்ற பல்கலைக் கழகங்களிலே பெரிய அளவிலே நடத்துகிறார்கள். படித்த மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா பெரிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இங்கே அந்த நிலைமை இல்லை.

ஆட்சிக் குழு கூடும்போது, அதிலே அரசால் நியமிக்கப்படும் அதிகாரிகள் தான் அதிகமாக இருக்கிறார்கள். தமிழகத்திலே எட்டு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஆட்சிக் குழுக் கூட்டம் நடக்கும்போது, அதிகாரிகள் அதில் கலந்துகொள்ளச் செல்ல வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

ஒரு மாதத்திற்கு ஒரு முறை இவை கூட வேண்டுமென்ற விதி இருக்கிறது. எட்டு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் இரண்டு நாட்கள் என்றால், 10, 12 நாட்கள் அந்தக் கூட்டங்களுக்குச் செல்லவே அதிகாரிகளுக்குச் சரியாக இருக்கும். அவர்களால் தங்கள் பணிகளைக் கவனிக்க முடியாது. எனவே ஆட்சிக் குழுவில் இவர்களே இருக்கும் நிலைமை இல்லாமல், பரவலாக்கி, ஜனநாயக முறையில் மிகப் பெரிய அளவில் தேர்ந்தெடுக்கப்படும் நிலைமை உருவாக வேண்டும். இவர்கள் ஆட்சிக் குழுக் கூட்டங்களுக்குச் செல்வதால், இங்கே இருக்கும் பணிகளை இவர்களால் கவனிக்க முடியவில்லை.

அடுத்து, பொதுவாக பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே பட்டம் கொடுக்க மட்டுமல்ல, அந்தப் பகுதி மக்களுக்கு பல்கலைக் கழகம் பயன்பட வேண்டும் என்பதுதான். அந்த நல்ல எண்ணத்தில்தான் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இன்றைக்கு பல்வேறு பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டாலும், குறிப்பாக பாரதியார் பல்கலைக் கழகம்





பற்றிச் சொல்கிறேன். அங்கே பல துறைகள் ஆரம்பிக்கப்படவில்லை. தமிழுக்காக என்று புதிதாகத் துறைகள் துவக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்தப் பல்கலைக் கழகத்தின் எல்லை மூன்று மாவட்டங்கள். அந்த மூன்று மாவட்டங்களில் விவசாயத் துறை, தொழில் துறையைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள். எனவே தொழில் துறையிலே, விவசாயத் துறையிலே ஆராய்ச்சி செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு அது பயன்படும் வகையிலே, நல்ல காரியங்களை அந்தப் பல்கலைக் கழகம் செய்தால்தான், சரியாக இருக்கும். இதுவரையில் அப்படிச் செய்யவில்லை. மற்ற பல்கலைக் கழகங்களில் எல்லாம், அங்கே பணியாற்றும் ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து, அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிகளிலே இடம் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு முன்மாதிரியை இந்தப் பல்கலைக் கழகத்திலும் ஏற்படுத்த வேண்டும்.

(நண்பகல் 12-00)

இறுதியாக பாரதியார் பல்கலைக் கழகத்தில் விளையாட்டுத் துறை இருக்கிறது. விளையாட்டுத் துறைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் சிறப்பாக இல்லை என்றே சொல்லலாம். கேரளாவில் கள்ளிக்கோட்டை பல்கலைக் கழகத்தில், இந்தியாவிலேயே மிகச் சிறந்த முறையில் விளையாட்டுத் துறை இயங்குகிறது. இந்தியாவிலேயே பல்கலைக் கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடந்தால், முதல் இடம் கள்ளிக்கோட்டைக்குத்தான் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சிகளை நமது பல்கலைக் கழகங்களும் மேற்கொள்ள வேண்டும். அதுதான் மாணவர்களுக்குச் சிறந்த நன்மையைப் பயக்கும். ஆகவே விளையாட்டுத் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, அந்தத் துறையைச் சிறப்பாக்க வேண்டுமென்றும் சொல்லி, என்னுடைய ஆதரவை இந்தச் சட்டத் திருத்தத்திற்குத் தெரிவித்து அமருகிறேன்.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால், ஒரு துணை வேந்தரிடமிருக்கும் அதிகாரத்தை, நடைமுறையில் ஏற்பட்ட ஒரு சிக்கலை மையமாக வைத்து, ஆட்சிக் குழுவிற்கு நாம் மாற்றுகிறோம். ஆட்சிக் குழு எடுக்கும் முடிவுக்கு

துணை வேந்தர் மதிப்பளிக்க வேண்டும். அவ்வளவுதான். இருக்கிற ஜனநாயக அமைப்பே அதுதான். சிண்டிகேட் இருக்கிறது, செனட் இருக்கிறது. அதையெல்லாம் ஜனநாயக முறையில் வைத்திருக்கிறோம். ஒருவேளை சுதந்திரம் வருவதற்கு முன்பு, 1923-ல் சென்னைப் பல்கலைக் கழகம் சட்டம் வந்ததால், அன்றைக்கு ஓட்டுரிமை இருந்தவர்களுக்கு இந்த முறை இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு எப்படி அமைச்சரவை பொறுப்பு ஏற்கிறதோ, அந்தச் சட்டமன்றம் எப்படி மக்களுக்குப் பொறுப்பு ஏற்கிறதோ, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளவர்கள் இருக்க வேண்டும். அதிலே அடிப்படையில் ஜனநாயக முறை இல்லாததால், இப்படிப்பட்ட ஒரு குழப்பம் வருகிறது.

நம்முடைய துணை வேந்தர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி சொன்னதைப்போல, தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. அவர்கள் நியமிக்கப் படுகிறார்கள். அவர்களும் நியமிக்கப்பட்டு, துணை வேந்தர்களாக அமர்ந்த பிறகு, பல்கலைக் கழக நிர்வாகத்தை நடத்துவதற்கு இருக்கக்கூடிய ஆட்சிக் குழு (சிண்டிகேட், செனட் போன்றவை) நியமிக்கப்படுகிறதே தவிர இந்தக் குழுவுக்கு அவர் பொறுப்பு உடையவர் அல்ல என்ற நிலைமை இப்போது இருக்கிறது. இவர்கள் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு துணை வேந்தர் கட்டுப்பட வேண்டுமென்ற நிலைமை இல்லை. ஆகவே துணை வேந்தர் என்ன நினைக்கிறாரோ அது நடக்கிறது. அந்த அடிப்படையில்தான் நல்ல காரியங்கள் பல நடைபெறாமல் நின்றுபோய்விட்டது. பாரதியார் பல்கலைக் கழகத்தில் அல்லது அண்ணா பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் நியமனம் அல்லது ஆசிரியர்களை நீக்குவது என்ற பணியைக் கூட சிண்டிகேட் சொன்னால், அதற்கு ஒப்புதல் தர துணைவேந்தர் மறுக்கிறார் அல்லது காலதாமதம் செய்கிறார் என்பது வருந்தத்தக்க நிலை. அதேமாதிரி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் கூட சட்டக் கல்வித் துறையில் ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தப்பட்ட 'இன்டர்வியூ' வைத்து, ஆசிரியர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் ஆட்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, நியமிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் நியமிக்கப்படவில்லை. ஆசிரியர்கள் இல்லாமல் இரண்டாண்டுகளாக வகுப்புகள் நடக்கின்றன. ரொம்ப நல்லதுதான். மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். இது சென்னைப் பல்கலைக் கழகத்தின்



கீழுள்ள சட்டக் கல்லூரியில் நடப்பது. ஆசிரியர்கள் கிடையாது. ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் 'இன்டர்வியூ' நடந்து முடிந்தும், இரண்டாண்டு காலமாக ஆட்சிக் குழு கொடுத்த ஒப்புதலை அன்றைக்கு இருந்த துணைவேந்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியென்றால் என்ன காரணம்? இந்த செலக்ஷனே வைத்திருக்க வேண்டாம். துணை வேந்தரிடம் சொல்லியிருக்கலாம், "நீங்களே யாரையாவது போட்டுக்கொள்ளுங்கள்" என்று. இன்றைக்கு நாம் தேர்ந்தெடுக்கும்போது, ஆசிரியர்களுக்குத் தகுதி நிர்ணயிக்கிறோம். பி.எச்.டி. வேண்டும். அல்லது பி.ஜி. வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறோம். இந்தத் துணை வேந்தருக்குத் தகுதி தேவையில்லை, வேந்தருக்கே தேவையில்லை. தகுதி வேண்டாம். அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் மக்களுக்குப் பொறுப்புள்ளவர்கள் என்று வருகிறார்கள். துணை வேந்தரையே கேள்வி கேட்க முடியவில்லை என்று சொல்லும்போது, வேந்தரை எப்படிக் கேட்க முடியும்? மன்னர் ஆட்சி மாதிரி நடக்கிறது. இது பழைய காலத்து ஆட்சி முறை. இப்போது நடந்து கொண்டிருக்கிறது. துணை வேந்தரைக் கேள்வி கேட்க முடியாமல் இருக்கிறது என்பதால், பல நியமனங்கள் தாமதமாகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல முறைகேடுகள் இருக்கின்றன. ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு வழக்கில் தலைமை நீதிபதியும், திரு. வெங்கடசாமி என்ற நீதிபதியும் கொண்ட ஒரு பெஞ்ச் ஒரு தீர்ப்பைச் சொல்லியிருக்கிறது. ஒரு பத்திரிகையாளர் போட்டார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'டிபார்ட்மெண்ட் ஆப் மேனேஜ்மெண்ட்' சரியில்லை, எம்.பி.ஏ.-வில் அட்மிஷன் கேட்கும்போது, எவ்வளவு தவறு நடந்திருக்கிறது என்று கூறி, 1979-ல் ரிட் ஒன்று போட்டார்கள். அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டியும் திருத்த முடியவில்லை. கடைசியில் நீதிமன்றத்திற்குப் போனார்கள். என்ன நடந்தது என்று எம்.பி.ஏ. செலக்ஷன் கமிட்டியில் நடந்ததைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் கமிட்டி மார்க் போட்டதை, அந்த ஹெட் ஆப் டிபார்ட்மெண்டே, ஒரு புரபசரே அந்தக் கமிட்டிக்குத் தெரியாமல் மார்க்குகளை எரேஸ் செய்து, திருத்தி, இரண்டு பேருக்கு அதிகமாக மார்க் போட்டு, தனக்கு வேண்டியவர்களுக்கு அட்மிஷன் கொடுத்தார்கள். இதை ஒரு யுனிவர்சிட்டியில் நாம் எதிர்பார்க்க முடியுமா? மார்க்கைத் திருத்துகிறார்கள். திருத்தி அவர்கள் விரும்பும் மாணவர்களுக்கு 'அட்மிஷன்' கொடுத்திருக்கிறார்கள். இப்படி ரொம்ப மோசமாக நிலைமை இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த முறைகேடுகள் அன்றைய துணைவேந்தருக்கு எடுத்துச் சொல்லப்

பட்டது. அவர் முறையாக ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார். மறுபடியும் வேந்தருக்குச் சொல்லப்பட்டது. வேந்தர் துணை வேந்தரைக் கேட்டார். துணை வேந்தர் அப்படியே வைத்துவிட்டார். கடைசியில் நீதிமன்றத்திற்குப் போகும்போது, இன்றைக்கு தலைமை நீதிபதி அருமையாக, அழகாக ஒரு 'ஆப்சர்வேஷன்' எழுதியிருக்கிறார். என்னவென்றால், இந்த 'யுனிவர்சிட்டி யினுடைய புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் நற்பெயரைப் பாதுகாக்கவும் இவ்வளவு மோசமான நடவடிக்கை நடந்திருக்கிறது என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாததால், அதை வேந்தருக்கே நாங்கள் அனுப்புகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். வேந்தர் நடவடிக்கை எடுக்கட்டும் என்று சொல்லி, வேந்தருக்குத் திருப்பி யனுப்பியிருக்கிறார்கள். இனி வேந்தர் அதில் தலையிட வேண்டும். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு சாதாரண அட்மிஷனிலேயே சர்க்கார் தலையிட முடியவில்லை. சர்க்கார் கொடுக்க முடியுமா? ஒன்றும் கொடுக்க முடியவில்லை. சிண்டிகேட் கொடுக்க முடியுமா? கொடுக்க முடியாது. இந்த நிலைமைகள் இருக்கிற காரணத்தால், ஒரு அப்பாயின்ட்மென்ட் செய்ய முடியவில்லை. ஒரு தவறு நடந்தால், தட்டிக் கேட்க முடியவில்லை. ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றத்திற்குப் போக முடியுமா?

(பிற்பகல் 12-05)

1979-இல் நடந்ததற்கு 1985-இல்தான் நீதிமன்றத்திற்குப் போகிறோம். எப்போதோ நடந்ததற்கு இப்போது வந்து கொடுக்கிறீர்களே என்று நீதி மன்றத்தில் கேட்கிறார்கள். என்ன செய்வது? தொடர்ந்து கேட்டுக் கேட்டு, கடைசியாக நீதிமன்றத்திற்கு வரும்போது, இத்தனை ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. அதனால்தான் சிண்டிகேட்டுக்கு அதிகாரம் வேண்டும் என்று At least the Vice-Chancellor is accomtable and answerable to the Syndicate என்று இருக்க வேண்டும். சிண்டிகேட்டுக்குக்கூட சொல்லவில்லை என்றால், என்ன அர்த்தம்? குறைந்தபட்சம் செனட்டுக்கும் சொல்லப்பட வேண்டும். அந்த அடிப்படை யிலேதான் நல்லவேளையாக இப்போது இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இந்தத் திருத்தத்தை நடைமுறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை வைத்தே கொடுத்திருக்கிறோம். இது வைஸ் சான்சலரின் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக வரவில்லை. ஏனென்றால் இன்றைக்கே மற்றைய பல்கலைக் கழகங்களைப்பற்றியும் சட்ட முன்வடிவுகள் வந்திருக்



கின்றன. அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கிறோம். அவ்வளவுதான். பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகிய இந்தப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், ஷெட்யூல்களைத் திருத்தக் கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த அதிகாரங்களையும் நீங்கள் ஆட்சிக் குழுவிற்குக் கொடுத்துவிடுங்கள் என்று பல்கலைக் கழக மானியக் குழு சொல்கிறது. அது நல்ல உணர்வோடு சொல்லியிருக்கிறது என்கிற அடிப்படையிலே, நமது அரசாங்கம் அதையும் கொடுத்திருக்கிறது. இவ்வாறாக அதிகாரங்களை ஆட்சிக் குழுவிடம் ஒப்படைத்திருக்கிறோம். இவ்வாறு இதுவரை ஜனநாயகமே முற்றும் இல்லாதிருந்த அமைப்பில் ஜனநாயகத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் சொல்லியதுபோல, கொஞ்சம் democratise பண்ண வேண்டும் என்றுதான் ஆட்சிக் குழுவிற்குக் கொடுக்கிறோம். ஆனால் அது பூராவும் 'அப்பாயின்மென்ட்' ஆகவே இருக்கக் கூடாது. இப்போது அவற்றில் இருப்பவர்கள் எல்லாம் துறைச் செயலாளர்களும், இயக்குநர்களும்தான். இவர்கள் தங்களுக்கு இருக்கிற வேலைச் சுமையில் பல்கலைக் கழகங்களுக்கே போவதில்லை. இவர்கள் தங்கள் துணைச் செயலாளரை அனுப்பி வைப்பார்கள். துணைச் செயலாளர் தற்காலிகமாகப் போய் வருவார். ஆனால் நிரந்தரமாக ஒருவர் போய் வருகிற அளவில் இருக்க வேண்டும். செயலாளர்கள் போவதென்பது நடைமுறைச் சாத்தியமில்லை. எனவே அவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் அதிகமாக வந்தால் நல்லது. "எக்ஸ் அஃபிசியோ" உறுப்பினர்கள் போட்டுக் கொண்டு வந்தால், அதனால் நன்மை கிடைக்காது. அந்தக் கருத்திலே அவர் கருத்து தெரிவித்தார். இதில் மகிழ்ச்சிதரத்தக்க செய்தி என்னவென்றால், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், ரீடர்கள் ஆக எல்லோருக்குமே சிண்டிகேட்டிலே பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறது.

அதிலே மூன்று வகைப் பிரிவுகள் போட்டிருக்கிறது. முதல் பிரிவு, இராஜம் இராமசாமி ஐயர். ஏனென்றால் அவர்தான் இந்த மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியை உருவாக்கியவர். இரண்டாவது வகைப் பிரிவு, 'எக்ஸ் அஃபிசியோ' ஆகப் போட்டு சில பேரை சேர்த்துக்கொள்ளலாம். மூன்றாவதாக, இவர்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால்

அவர்களையும் 'நாமினேட்' பண்ண வேண்டுமென்று போட்டிருக்கிறோம். இவர்களை 'நாமினேட்' செய்ய வேண்டியது யார்? சான்சலர். அவர் யார் அறிவுரையின்படி செய்வார்? வைஸ் சான்சலர் அறிவுரையின்படி. வைஸ் சான்சலர், யார் அறிவுரையைக் கேட்பார்? இங்கேதான் பிரச்சினையே வருகிறது. எனவே அதுமாதிரி இல்லாமல் மேலும் அதை 'democratise' செய்கிறமுறையில் விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக வைஸ்-சான்சலர் அலுவலகத்திற்கு வரும்போது செய்கிற தர்பார் பிரமாதமாக இருக்கும். அந்தக் காலத்திலே இருந்தது அந்த தர்பார். அப்போது இருக்க வேண்டியதுதான். இப்போதும் ஏன் அப்படி இருக்கிறது? அதைப்போலவே ரிஜிஸ்ட்ரார் வரும்போதும் 'தர்பார்' நடக்கும். வரும் வழியில் யார் நின்றாலும்—நான் நின்றாலும்—ஒதுங்கச் சொல்வார்கள் ஆளுநருக்கு இருப்பதுபோல் பல்கலைக்கழக வைஸ்-சான்சலருக்கும் ரிஜிஸ்ட்ராருக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவர்களுப் குறைந்தபட்சம் நம்முடைய பொதுவான உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தத் திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இதில் இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இப்போதுள்ள விதிமுறைகளின்படி, நாம் யாரையும் கேள்வி கேட்க முடியாது. காரணம் நாட நடைமுறையில் பிரிட்டிஷ் ஆட்சி முறையைத்தான் பின்பற்றிக் கொண்டிருக் கிறோம். அங்கே மன்னராட்சி முறையைத்தான் ஒரு "சிம்பாலிக்"-ஆக வைத்திருக்கிறார்கள். ஏதோ மன்னர்கள் இருந்தார்கள் என்பதை நினைவு படுத்துவதற்காகத்தான் அவ்வாறு செய்துவிட்டு, ஆட்சி நடத்துகிறார்கள் அதனால்தான், 'The king can do no wrong' என்கிறார்கள் மன்னர் தவறே செய்ய முடியாது. ஏனென்றால் அவருக்கு அதிகாரமே கிடையாது. அதிகாரமே இல்லாததால் தவறே கிடையாது. எனவே அவர் தவறு செய்ய முடியாது. தவறே செய்ய முடியாததால், வழக்கும் போட முடியாது. அப்படி அங்கே வைத்திருக்கிறார்கள். நாமும் அதை பின்பற்றியோ என்னவோ அதே முறையைப் பின்பற்றுகிறோம் ஆளுநர்களாகட்டும், குடியரசுத் தலைவராகட்டும், அவர்கள்மீது வழக்கே போட முடியாது. வழக்குப் போட வேண்டுமானால், மத்திய அரசு மீதோ அல்லது மாநில அரசு மீதோதான் போடலாம். Executive power should



be answerable and accountable நடைபெறும் தவறுக்கு ஆளுநரைப் பொறுப்பாக்க முடியாது. ஆகவே அவர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்பது அவராக எடுக்கக்கூடியவை அல்ல. சான்சலர் என்ற முறையில் அவர் எடுக்கும் நடவடிக்கைகளை யாராவது கேள்வி கேட்க முடியுமா? முடியாது. ஏனென்றால் அது அவராக எடுக்கும் நடவடிக்கைகள் அல்ல. அமைச்சரவை யினுடைய ஆலோசனையின் பேரில்தான் அவர் செயல்படுகிறார்; செயல்பட வேண்டும். அவரால் தன் சொந்தக் கருத்துப்படி ஒருசில சமயங்களில்தான் செயல்பட முடியும். அதாவது சட்டமன்றத்தைக் கலைப்பது போன்ற சமயங்களில்தான் அவர் அவ்வாறு செயல்பட முடியும். அவர் எப்பொழு தெல்லாம் தன் விருப்பப்படி செயல்படலாம் என்று அரசியல் சட்டம் 377-ஐ- இலிருந்து சொல்லப்பட்டிருக்கிறது. தற்சமயம் ஒரு மாநாடு நடந்தது. அகில இந்திய அரசியல் விஞ்ஞான மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. என்ன கருத்து என்றால், "எனக்கு அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிற காரணங்களுக்காக மட்டும்தான் நான் அமைச்சரவை ஆலோசனையை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இது

(பிற்பகல் 12-10)

அரசியல் சட்டத்திலே இல்லை. ஒரு ஸ்டேட் ஆக்ட் படி அதிகாரம் இருக்கிறது" என்றுசொல்கிறார்கள் ஸ்டேட் ஆக்ட் என்றால் Head of State, whoever is Governor, he becomes the Chancellor of all the Universities எல்லா யுனிவர்சிட்டிக்கும் அவர்தான் சேன்சலர். எப்படி, யார் பிரைம்மினிஸ்டராக இருந்தாலும்—சாந்திநிகேதன் இப்படி எத்தனையோ யுனிவர்சிட்டிகள் இருக்கின்றன—அவரைத்தான் சான்சலராகப் போடுகிறோம். ஏன் அப்படிப் போடுகிறார்கள்? அது ஒரு மரியாதைக்காக. நாட்டினுடைய பிரதமரே சான்சலராக இருக்கிறார் என்றால், அது ஒரு மரியாதைக்காக. நிர்வாகம் பூராவும் அவர்களாலே நடத்தப்படுகிறது. அதுமாதிரி இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் புதிதாக இல்லை. பேனல் செலக்ஷன் ஆகி இங்கே யிருந்து போகும்போது, யாரைப் போட்டாலும் சான்சலருக்கு அரசாங்கம் தான் பேனல் கொடுக்கிறது. ஆட்சிக் குழுவுக்கும் இன்றைக்கு ஒரு வசதி இருக்கிறது. ஆட்சிக் குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் வருகிறார். பேனல் அனுப்புவதிலே அவரையும் சேர்த்துக் கொள்கிறோம். அந்தமாதிரி பேனல் அனுப்பி சேர்த்தாலும்கூட, இறுதியில் முடிவு எடுக்கும்போது, ஏது வருமென்றால், அரசாங்கம் சொல்வதுதான் வருகிறது. ஏனென்றால்

அரசாங்கம்தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பாகிறது. எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு எல்லாம் யார் தலையில் வந்து பொறுப்பு விழப் போகிறது? யார், என்ன செய்தாலும் சர்க்கார்தான் என்று பேசிக் கொண்டிருக்கிறோம். யுனிவர்சிட்டியிலே இருக்கிற முறைகேடுகளுக்கு அவர்களை நாம் பொறுப்பாகக் கேட்க முடியுமா? அரசாங்கம்தான் பொறுப்பு என்று சொல்கிறோம். அரசாங்கம்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. மக்களுடைய வரிப் பணத்திலே நடப்பது. யுனிவர்சிட்டி என்பது தனியாக வானத்திலே இருந்து கீழே வந்துவிடவில்லை. பாராளுமன்ற, ஜனநாயக முறைகளின்படி, இது நடந்தால்தான் சரியாக இருக்கும். இல்லையென்று சொன்னால், ரொம்ப வேதனையாகப் போய்விடும். நேற்றைக்குக்கூட நமது கல்வியமைச்சர் அவர்கள் அந்த அவையிலே பேசும்போது, மிகவும் நல்ல முறையிலே சொல்லியிருக்கிறார்கள். மத்திய, மாநில உறவுகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில் நம்முடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது ஒன்று சொல்லி விட்டால் அது மத்திய, மாநில உறவைக்கூட சமயத்திலே பாதித்து விடும். ஒருவேளை கவர்னருக்கு இருக்கக்கூடிய உறவைக்கூட பாதித்துவிடும். அப்படிப் பாதித்து விடக்கூடாது, சிக்கலாகிவிடக் கூடாது என்பதற்காக அவர் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு நாங்களும் ஒப்புக்கொண்டு போயிருக்கிறோம். நாம் ஏன் அப்படி நினைக்கிறோமென்றால், எங்கள் பவரைவிட சுப்ரீம் என்னவென்றால், பீஸ்ஃபுல்லாக இரண்டும் போய்க் கொண்டிருக்க வேண்டும். ஒரு இணக்கமான உறவு இருக்க வேண்டும். மத்திய, மாநில உறவாக இருந்தாலும் சரி, ஆளுநர் உறவாக இருந்தாலும் சரி, அதை நிலைப்படுத்துவதற்கு சில விஷயங்களில் விட்டுக் கொடுக்கலாம். ஆனால் மக்களுடைய உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது. விட்டுக் கொடுப்பதை விட்டுக் கொடுக்கலாம். மக்களுடைய உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது. அது மக்களுடைய உரிமை, அடிப்படைத் தத்துவம். அந்த அடிப்படைத் தத்துவத்திற்கு முரணாக எதுவும் போய்விட முடியாது என்பதை நாம் தெளிவுபடுத்தியாக வேண்டும். அந்த அடிப்படையில் நாம் நினைத்தால் இன்றே சட்டம் கொண்டுவரலாம். தமிழ் நாடு அரசு சட்டம் 10/23, மெட்ராஸ் யுனிவர்சிட்டி ஆக்ட் நாம் போட்டதுதான். இப்போது எல்லா யுனிவர்சிட்டிகளுக்கும் நாம்தான் சட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டத்தைத் திருத்தி, 'கவுன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ்' என்ன சொல்கிறார்களோ அந்த அட்வைஸுக்குக் கட்டுப்பட்டு சான்சலர் நடக்க வேண்டு



மென்று போட்டுவிடலாம். இன்னும் சொல்லப்போனால், சான்சலரை நாம் சிரமப்படுத்தக் கூடாது. ஆளுநராக இருப்பவரை நாம் சிரமப்படுத்தக் கூடாது. அதற்கு முதலமைச்சரையே சான்சலராகப் போட்டு விடலாம். அவர்தானே மக்களுக்கு 'ஆன்ஸர்' பண்ணனும். யார் இந்த நாட்டை நிர்வகிப்பது? யாருடைய அதிகாரத்தின்கீழ் நாம் வந்திருக்கிறோம்? மக்களுக்குப் பதில் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கும்போது, முதலமைச்சரே சான்சலராக இருந்து விட்டுப் போகலாம். அதுதான் சரியாக இருக்க முடியும். அப்படி சட்டத்தைத் திருத்தவேண்டும். புரோ-சான்சலராக ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதன்படி எடுத்துவிட்டால், மற்றதை பூராவையும் நாம் டெமாகிரடைஸ் பண்ணுவதற்கு ரொம்ப வசதியாக இருக்கும். ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம், மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம், கல்வியாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பது, இவைகள் எல்லாம் இருக்க வேண்டும். ஒரு ஆசிரியராக வருவதற்கே நாம் தகுதியை நிர்ணயித்த பிறகு, இதுக்கெல்லாம் தகுதி இல்லை என்று சொல்லக் கூடாது. குறைந்தபட்சம் தேர்ந்தெடுக்கப்படும் தைரியமாவது வர வேண்டும். அந்தத் தைரியமும் இல்லாமல் நியமனத்தில் போட்டால், யார் நியமனம் பண்ணுகிறார்களோ அவருக்குத்தான் பதில் சொல்லிக் கொண்டிருப்பார்களே தவிர வேறு எதுவும் சொல்லமாட்டார்கள். திரு. மயில்சாமி அவர்கள் ஒன்று சொன்னார்கள். பாரதியார் பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய பல குறைபாடுகளைச் சொன்னார்கள். தமிழ் துறையே அங்கில்லை. அவமானம் தான். பாரதியார் பெயரில் யுனிவர்சிட்டி வைத்துக்கொண்டிருக்கிறோம். அவர் என்ன சொன்னார், "சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வம் யாவும் கொணர்ந்து இங்கே சேர்ப்பீர்" என்று சொன்னார். நம்ம ஆட்கள் எல்லாத் திக்குக்கும் போகிறார்கள். ஆனால் அவர்கள் வாங்கி வரும் சாமான்கள் வேறாக இருக்கின்றன. மெட்ராஸில் இறங்கினால் வம்பாகப் போய்விடுமென்று பம்பாயிலிருந்து இறங்கி வருகிறார்கள். அங்கே இருக்கும் அதிகாரிகள் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். எங்கேயாவது ஒரு 'சான்ஸ்' கிடைத்தால் போதும், வெளிநாட்டுக்குப் போய்விடுகிறது. அங்கே 'ஒர்க்ஷாப்' நடந்தால் கூட போகிறார்கள். 'ஒர்க்ஷாப்' என்று சொன்னால், 'ஒர்க்ஷாப் ஆன் பேமிலி பிளானிங்'. ஒர்க்ஷாப்பின் 'டாப் மோஸ்ட்' ஆள் இங்கிருந்து ஓட வேண்டும். பேமிலி பிளானிங் ஒர்க் ஷாப்புக்குக் கூட ஓடவேண்டுமா? ஒர்க்ஷாப் என்றால் தொழிற்சாலையல்ல. அது ஒரு செமினார். அதை 'கன்டக்ட்' பண்ணுகிறார்கள். எங்கேயோ ஒரு இடத்திலே நடத்துகிறார்கள் என்று சொன்னால்,

அங்கே ஓடி விடுகிறார்கள். அங்கே ஓடுவதிலே பல அபாயங்கள் இருக்கின்றன. 'ரிவீலிங் பேக்ட்'. கேஸ் போட்டிருப்பதைப் பார்த்தால், மேலீடத்திலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக உளவு சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்தால், உண்மையிலேயே நாம் இதை நம்புவதா, நம்பாமல் இருப்பதா என்று எனக்கே தெரியவில்லை. பல ரிப்போர்ட்டுகள் முன்னாலே வந்தன. இங்கே கூட டாப் லெவல் போலீஸ் ஆபீசர் எங்களைப்பற்றி உளவு சொன்னார் என்று இங்கேயிருந்த அமெரிக்கத் தூதர் சொல்லி அது பத்திரிகையில் வந்து கொண்டிருந்தது. இன்றைக்குப் பார்த்தால், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே அந்த நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். பாவம் அலறி இருக்கிறார் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், 'எனக்கும் அதுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்று. தைய்வான் போனது, அங்கிருந்து ஜெர்மன், அமெரிக்கா போனது. இதற்கெல்லாம் ஒரு பின்னணி இருக்கிறது. சி.ஐ.ஏ. பணம் அங்கே நிறைய இருக்கிறது. சி.ஐ.ஏ. பணி. அவர்களுடைய கொள்கை; அமெரிக்காவிலே சட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் பல உருவங்களில் இந்தப் பணத்தைக் கொடுக்கிறார்கள். பல பேர்களை அழைத்துக் கொண்டு போகிறார்கள். அவர்கள் அழைத்துக் கொண்டு போனால் போகிறவர்கள் எல்லாம் மோசமல்ல. நாம் போய்க் கொண்டிருக்கிறோம். இவ்வளவு அபாயகரமான ஒரு போக்கு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதெல்லாம் இருக்கும்போது, கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அது பூராவும் நாட்டுக்கு எதிராகப் பேசினால், என்ன செய்ய முடியும்? யாரிடம் போய்ச் சொல்ல முடியும்? அதுமாதிரி இன்றைக்கு வந்திருக்கிற 'ரிவலேஷனை'ப் பார்த்தால், ரொம்ப அச்சம் அளிப்பதாக இருக்கிறது. அந்த மாதிரியான அச்சத்தைக் கூட நாம் தவிர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. சில நேரங்களிலே பாரதியார் பெயரில் படிக்கிறோமென்றால், இவர்கள் எல்லாம் பாரதியார் பெயரில் இருக்கிற யுனிவர்சிட்டியில் தமிழிலே பேசுவதில்லை. எந்த பப்ளிக் பங்ஷனாக இருந்தாலும் சரி, யார் போய் பேசினாலும் சரி அங்கே இருக்கிற துணை வேந்தர்கள் தமிழிலே பேசமாட்டார்கள். ஏன்? தமிழிலே ஒன்றுமில்லையா? சில பேருக்கு அப்படி இருக்கிறது. எப்போதோ ஒரு அக்கேஷனில் இங்கிலீஷில் பேசச் சொன்னால் பேசுங்கள், நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆங்கிலத்திலே ஆராய்ச்சி வேண்டும். அதெல்லாம் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனால் என்ன ஒரு மனப் போக்கு





(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-15)

அப்படி? பாரதியார் சொன்னதுக்கும், இதுக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் போய் என்ன கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? வீடியோ கேசட் எல்லாம் கலைச் செல்வங்களா? ஊரில் இருக்கிற சாமான்களையெல்லாம் வாங்கிக் கொண்டு வருகிறார்களே, அவைகள் எல்லாம் கலைச் செல்வங்களா? இல்லை, இவர்கள் வாங்கிவருகிற ரிபிரிஜிரேட்டர்களும் மற்றவைகளும் கலைச் செல்வங்களா? இதெல்லாம் நமக்குப் பெருமை தராது. பாரதி நம்மை எல்லா திக்குகளுக்கும் போகச் சொன்னான். ஒரு திக்குக்கு மட்டுமல்ல, எட்டுத் திக்குக்கும் போகச் சொன்னான். முடிந்தால் 16 திக்குக்கும் நாம் போகலாம். அப்படிப் போய் கலைச் செல்வங்களையெல்லாம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று சொன்னான். தேமதுரத் தமிழோசை திசையெல்லாம் பரவும் வகை செய்ய வேண்டுமென்று சொன்னான். பம்பாய்க்கு நான் சென்றிருந்தேன். அங்கே ஒரு பெரிய முருகன் கோயில் இருக்கிறது. அங்கே பார்த்தால், பக்தியோடு இருக்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அருமையான பெண்களைக் கொண்டு தமிழ்ப் பாடல்களை அங்கே பாடுகிறார்கள். பம்பாயில் தமிழ்ப் பாடலைக் கேட்கிறபோதுதான் தேமதுரத் தமிழோசையை நாம் கேட்க முடிகிறது. நாம் பாடக் கூடாது. நாம் கேட்கத்தான் வேண்டும். பாடினால் அது வேறு ஓசையாகத்தான் இருக்கும். எனவே நாம் பாடாமல் பிறர் பாடுவதைக் கேட்க வேண்டும். பாரதி அதைத்தான் சொன்னான். தேமதுரத் தமிழோசை கேட்க வேண்டும் என்று சொன்னான். ஆனால் நம்முடைய ஆட்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இங்கே தமிழர்கள் இருக்கிற இடத்திலேயே ஆங்கிலத்தில்தான் பேசுவோம் என்று பேசுகிறார்கள்.

இன்றைக்கு எனக்குத் திருத்துறைப்பூண்டியிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. நான் அண்மையில் பேசியதைப்பற்றிக் குறிப்பிட்டு ஒருவர் திருத்துறைப்பூண்டியிலிருந்து எனக்கு அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார். அதில் அவர் எழுதியிருக்கிறார்: "நீங்கள் சொன்ன கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் என்ன சொல்லுகிறோம் என்றால், தமிழை விடச் சிறந்த மொழி வேறு எதுவுமில்லை. அது ஒன்றே போதும் என்றுதான் நினைக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார். அதில் விஷயம் என்னவென்றால், அந்தக் கடிதத்தை அவர் தமிழில் எழுதவில்லை.

[திரு. க. சுப்பு] [1986 ஜனவரி 29

ஆங்கிலத்திலேதான் எழுதியிருக்கிறார். தலைவருடைய அனுமதியைப் பெறாத காரணத்தால், நான் அதை இங்கே கொண்டு வரவில்லை. அந்தக் கடிதம் என்னிடம்தான் இருக்கிறது. இப்படி ஆங்கிலத்தில் கடிதம் எழுதி தமிழாலே எல்லாம் முடியும் என்கிறார். எனவே எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். 'குவிட் இந்தியா மூவ்மென்ட்' இருந்தபோது, 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷம் எங்கேயும் வந்தது. அப்போதுகூட இங்கே சிலர் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'வெள்ளைக்காரன் வேறு ஊர்களைவிட்டு வெளியேறட்டும். ஆனால் எங்கள் ஊருக்கு அவன்தான் இருக்க வேண்டும்.' இப்படி அந்தக் காலத்திலேயே நமக்கு ஒரு மோகம். அந்த மோகம் நமக்கு இன்னும் போகவில்லை. பாரதியார் மிக நன்றாகச் சொன்னார். "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம், என்று மடியும் இந்த அடிமையின் மோகம்" என்று அழகாகக் குறிப்பிட்டார். இதைவிட அழகாக வேறு யார் பாட முடியும் 'என்று மடியும் இந்த அடிமையின் மோகம்' என்கிறார். அந்த மோகம், அடிமை மோகம் நம்மைவிட்டு இன்னும் போய்விடவில்லை. அப்படிப்பட்டவர்களைப் போய் நாம் பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும் நியமிக்கக் கூடாது. பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு நியமிக்கப் படுபவர் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு நியமிக்கப்படுபவர் ஆங்கிலத்தில்தான் பேசுவேன் என்றால், அவர் இங்கிலாந்துக்குப் போகட்டும். அங்கே உள்ளவர்கள் அவரை வரவேற்கக் காத்துக் கொண்டிருப்பார்கள். இங்கே தமிழர்கள் மத்தியில் தமிழில்தான் பேசவேண்டுமே தவிர ஆங்கிலத்தில் இல்லை. அந்த வகையில்தான் நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில், சிறந்த நாவலாசிரியரான இராஜம் கிருஷ்ணன் அவர்கள் என்னைச் சந்தித்தார். சாகித்ய அகாடமியின் பரிசு பெற்றவர். அவர் சொன்னார், நம்முடைய நல்ல பல நூல்கள் பிற மாநிலங்களில் உள்ள மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் மொழி பெயர்ப்பதற்கு இங்கே துறைகள் இல்லை என்று சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டார். அத்தகைய வசதிகள் நம்முடைய பல்கலைக் கழகங்களில் இப்போது இல்லை. கிரியேட்டிவ் ரைட்டர்ஸ் என்பது வேறு, கிரிடிக்ஸ் வேறு. படைப்பாளி வேறு கிரிடிசிசம் செய்வது என்பது வேறு. நம்முடைய தமிழகத்தில் உள்ள பல படைப்பாளிகளுக்கு வேறு மொழி தெரியவில்லை. ஆங்கிலமே கூட தெரியவில்லை.



1986 ஜனவரி 29] [திரு. க. சுப்பு]

அதனாலே கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் படைப்புகளை மொழி பெயர்ப்பதற்கான துறைகள் நமது பல்கலைக் கழகங்களில் இல்லை. நம்மாலே பொதுவாக ஆங்கிலமே சரியாகப் பேச முடிவதில்லை. நம்மில் ஒருசிலர் வேண்டுமானால் பேசலாம். நான் கூட பி.ஏ.பி.எல். படித்திருக்கிறேன். நன்றாக ஆங்கிலம் பேசுகிறேன் என்று சொல்ல முடியுமா? அச்சம் இல்லாமல் பேச முடிகிறதா என்றால் இல்லை. கிராமத்திற்குப் போனால், அங்கே இங்கிலீஷ் தெரியாதவர்கள் மத்தியில் இங்கிலீஷ் அச்சமில்லாமல் பேசுவேன். காரணம் அவர்களுக்கு இங்கிலீஷ் தெரியாது. ஆங்கிலத்தை ஒழுங்காகப் பேசுகிறவர்கள் மத்தியில் நம்மாலே அச்சமில்லாமல் பேச முடிகிறதா என்றால் முடியவில்லை. அச்ச உணர்வுதான் ஏற்படுகிறது. வேண்டுமானால் நம்முடைய துணைத் தலைவரைப் போல் ஒன்றிரண்டு பேர் ஆங்கிலத்தை நன்றாகப் பேசலாம். காரணம் அவர்கள் படிப்பே வேறு. பாரம்பரியமே வேறு. குடும்பப் பாரம்பரியம் அப்படி. நம்ம நிலைமை அப்படியா? ஸ்பெல்லிங் தெரியாத வாத்தியார்கிட்டே படித்தவர்கள் நாம். அவர் சொல்லிக் கொடுக்கிற தப்பு ஸ்பெல்லிங்கை வைத்துக் கொண்டு அதற்கு மேலே நாம் தப்புப் பண்ணுகிறவர்கள். கிராமத்தில் படித்தவர்கள். நான் கழக உயர்நிலைப் பள்ளியில் கள்ளிக்குடிசத்திரத்தில் படித்தவன். அங்கெல்லாம் நல்ல வாத்தியார்களே கிடைக்க மாட்டார்கள். கிடைத்தாலும் நாங்கள் விடுவதில்லை. எனவே நாம் ஒன்றும் இங்கிலீஷ் கான்வென்ட்டில் படித்து நல்ல ஆக்சென்டோடு பேச முடியாது. ஆனாலும் நம்முடைய ஆட்கள் அதை விடாமல் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. நடைமுறைக்கு ஒவ்வாததைச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எனவே நான் என்ன சொல்லுகிறேன் என்றால், நாம் முடிந்த இடங்களில் எல்லாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் வசதி செய்ய வேண்டும். அந்த அம்மையார் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் என்னிடம் ஒரு விவரத்தைச் சொன்னார்கள். கிழக்குத் தாம்பரத்தில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வகுப்பிற்கு அனுமதி கேட்டு கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அலைந்து கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆங்கில வகுப்பைத் தொடங்க அவர்கள் அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆங்கிலம் என்றால் வேண்டாம் என்று சொல்லுகிறோம். ஆனால் அந்தப் பள்ளியில் இங்கிலீஷ் மீடியம் செக்ஷனில் 120 மாணவர்களுக்கு மேலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆங்கில வகுப்புதான் தேவை

[திரு. க. சுப்பு] [1986 ஜனவரி 29

என்று போகிறார்கள். நாம் ஒரு பாலிசியாக வைத்துக்கொண்டு, தமிழ் வகுப்பில்தான் படிக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். மாணவர்கள் ஆங்கில வகுப்பு வேண்டும் என்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? தமிழின்மீது அவர்களுக்கு அவ்வளவு மோகம்! ஆங்கிலம் படித்துவிட்டு எப்படியாவது பல இடங்களுக்கும் போக ஆசை அவர்களுக்கு வருகிறது. அதனாலே ஆங்கில வகுப்பு வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் கேட்கும்போது, நாம் தமிழ் வகுப்பில்தான் படிக்க வேண்டும் என்று சொல்வது பாவம். ஆங்கிலமும் கற்றுக் கொள்ளட்டும். ஆங்கிலத்தில் கொஞ்சம் கமாண்டு இருந்தால்தானே, சண்டையாவது போட முடியும். ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் நமது பல்கலைக் கழகத்தில் மொழி பெயர்ப்புத் துறையும் இருக்க வேண்டும். அதிலே இப்போது நாம் மிகவும் பின்தங்கி இருக்கிறோம். இன்றைக்குக் கூட காலையில் நான் இந்து பத்திரிகையைப் பார்த்தேன். 'லெட்டர் டு தி எடிட்டர்' என்ற பகுதியில் தமிழ் நாட்டில் 200-க்கும் மேற்பட்ட சென்ட்ரல் ஸ்கூல்கள் இருக்கின்றன. அங்கும், நர்சரிப் பள்ளிகளிலும் இங்கிலீஷ் மற்றும் இந்திதான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. பஞ்சாபி அசோசியேஷன் ஸ்கூல் என்று நல்ல தரமான பள்ளிகள் என்று நாம் சொல்லுகிறோம் அல்லவா, அங்கெல்லாம் ஆங்கிலமும் இந்தியும்தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அதன் காரணமாக பல தனியார் பள்ளிகள் டெவலப் ஆகின்றன. இந்த நேரத்தில் திரும்பத் திரும்ப நான் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். மொழிகளைப் படிப்பதில் எந்தவிதமான ஊசலாட்டத்திற்கும் இடமில்லாமல் வசதி செய்து தர வேண்டும். யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் இப்படிப் பட்ட திருத்தங்கள் உதவும் என்ற அடிப்படையில் மேலும் மேலும் இத்தகைய திருத்தங்கள் வர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 12-20)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தை மேலும் திருத்து வதற்கான சட்ட முன்வடிவை நான் வரவேற்று சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்னதாக இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். பொதுவாக மேலவையில் பேசுகின்ற உறுப்பினர்கள், கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து சொல்கிறேன்.



1986 ஜனவரி 29]

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member should not address the gallery. He should not address anything to the press while in the House. It does not add to the decorum of the House.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு வேண்டுகோள். உறுப்பினர்கள் பல ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு பல கேள்விகளைப் போடுகிறார்கள். அந்தக் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். உங்கள் மூலமாக பத்திரிகையாளர்களுக்கு, வானொலிக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். வானொலியில் சொல்லும் போது, கேள்விகளுக்கு இந்த அமைச்சர் பதில் சொன்னார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் யார் அந்தக் கேள்வியைக் கேட்டார் என்று சொல்வதில்லை. இதனால் நாங்கள் உழைத்த உழைப்பெல்லாம் 'விழலுக்கு இறைத்த நீர்' என்பதைப் போல ஆகிறது. எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாங்கள் அவர்களுக்காக வேலை செய்கிறோமா என்பது தெரிவதில்லை. ஆசிரியர் பிரதிநிதிகள் பொங்கல் பரிசுபற்றிக் கேட்கிறார்கள், அதற்கு அமைச்சர்கள் பதில் அளிக்கிறார்கள்—சாதகமாகவும் அளிக்கிறார்கள், பாதகமாகவும் பதில் அளிக்கிறார்கள். கேள்வி கேட்டவர்களுடைய பெயர்களை பத்திரிகைகள் போடாததாலும், வானொலியில் அறிவிக்காததாலும், நாங்கள் வேலை செய்தோம் என்பதே வெளியில் உள்ளவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே வானொலியும், பத்திரிகைக்காரர்களும் நாங்கள் கேட்பதை இருட்டடிப்புச் செய்யாமல், கூடுமான வரையில் இன்னார் கேட்டார் என்பதையும் போட வேண்டும் என்றும் அப்படிப் போட்டால் எங்களுக்கும் நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அதே கருத்தை நானும் வலியுறுத்த விரும்புகிறேன். இதை ஒரு பாலிசியாகவே அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெயர் போடக்கூடாது என்று நினைக்கிறார்கள். உறுப்பினர்கள் செயலாற்றுவது அவர்களை அனுப்பிய மக்களுக்குத் தெரிய வேண்டும். நாங்கள் என்ன செய்கிறோம், எதைப் பேசுகிறோம் என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும். நேற்றுகூட நான், 50 சிசி மொபெட்களில் செல்லுபவர்கள் ஹெல்மெட் அணிவதைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். ஆனால் அமைச்சர் பதில் மட்டும் வந்திருக்கிறது.

எங்களுடைய பெயரையும் போட்டால், எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நாங்கள் என்ன வேலை செய்கிறோம் என்று தெரியும். அதுவும் குறிப்பாக சட்டமன்றப் பேரவைச் செய்திகளை முழுவதுமாகப் போடுகிறார்கள். மேலவையைப்பற்றி முழுமையாகப் போடுவதில்லை. ஆகவே தேர்தல் நோத்தில் சட்டசபையைக் கலைத்தவுடனே, நீங்கள் எம்.எல்.சி. இல்லையா என்று கேட்கிறார்கள். பொது மக்களுக்கு சட்டமன்றப் பேரவை, மேலவை என்று இரண்டு அவைகள் இருப்பதே தெரியவில்லை. ஆகவே நானும் தங்கள் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** செய்திகளை எப்படிப் போடுவது என்பதில் அவர்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது. ஆனாலும் கேள்வி கேட்ட உறுப்பினர்களுடைய பெயர் வருவது நல்லது. அப்போதுதான் யார் கேள்வி போட்டார் என்பது பொது மக்களுக்குத் தெரிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதுபற்றி அவர்கள் கவனிப்பார்கள், அதுபற்றி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டத் திருத்தம் என்ற அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றுத்தான் பேச விரும்புகிறேன். பொதுவாக தமிழுக்கு முக்கியத்துவம் தமிழ் நாட்டிலே தரப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே, 'கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக் குடி தமிழ் குடி' என்று சொல்லுகிற பொன்மொழிக் கேற்ப, "வையம் ஈன்ற தொன்மக்கள் உளத்தினை கையினால் உறைகாண் இருந்திட பைய நாவை அசைத்த பசுந்தமிழ் ஐயை தாள்தலை பணிந்து வணங்குவோம்" என்று புலவன் சொல்லுவான். நாவை அசைத்ததே தமிழ் தான். முதலில் பிறந்தது தமிழ்தான். "அந்தத் தமிழுக்கு அமுதென்று பேர்; அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதி பாடினார். அதற்கு முக்கியத்துவம் தரும் வகையில், நீண்ட காலமாக தமிழ் மக்கள் மனதிலே இருந்த எண்ணம் ஈடேறும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை இந்த அரசு ஏற்படுத்தியதற்காக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ, எந்த நோக்கத்திற்காக அது செயல்பட்டு வருகிறதோ அந்த நோக்கத்திலே சிறிது கூட வழுவி நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கக்



கடமைப்பட்டிருக்கிறோம் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், சிலபல குறைகள் தோன்றுவதாகச் செய்திகள் வருகின்றன, அவைகளை கல்வி யமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலனை செய்து அதன்மீது நடவடிக்கை எடுத்து தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழை வாழ்விக்கின்ற பல்கலைக் கழகமாக, தமிழை வளர்க்கிற பல்கலைக் கழகமாக, தமிழ் மக்களுக்குப் பயன்படுகிற பல்கலைக் கழகமாக, தனியார் சொந்த இலாபத்திற்குப் பயன்படவிடாத அளவிற்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக

(பிற்பகல் 12-25)

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆசிரியராகவே இருந்து அமைச்சரான காரணத்தினாலேயே, கல்வித் துறையை மிகத் தெளிவாகத் தெரிந்து பல்வேறு நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள் என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவையும் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்திலே . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இப்போதுதான் நான் உங்கள் வாயிலாக ஒரு வேண்டுகோள் விட்டேன். எல்லா நிருபர்களும் வெளிநடப்பு செய்து விட்டார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவர்கள் மீது எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் அந்தப் பத்திரிகைகளை நடத்துபவர்கள்தான் இந்த அவை நிகழ்ச்சியை முக்கியமல்ல என்று கருதுகிறார்களோ என்று கருதுகிறேன். நான் இந்த வேண்டுகோளை உங்கள் மூலம் வைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பத்திரிகை நிருபர்கள் எப்போது வெளியே போவது, எப்போது உள்ளே வருவது என்பது அவரவர் களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. ஒருவேளை உறுப்பினர் அவர்கள் சொன்னதை போடுவதற்காகப் போயிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைக்காரர்கள் எடுக்கின்றார்களோ எடுக்கவில்லையோ எங்களுடைய கடமை பேசித் தீர்க்க வேண்டும். ஒரு பெரிய புயல் வெள்ளத்திற்கு இடையிலே தத்துவ விளக்கம் சொல்வதற்காக விவேகானந்தர் அவர்கள் கடற்கரைக்கு வந்தாராம். அங்கே புயல் அடித்தது, மழை பெய்தது, வெள்ளம் வந்தது, ஆனால் ஆட்கள் இல்லை. ஆனாலும்கூட விவேகானந்தர்

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10, 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கடந்த 23 நிமிடங்களாக. . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இவ்வளவு நேரமும் மேற்படி பல்கலைக் கழகத்தைப்பற்றி எவ்வளவு மோசமாகப் பேச முடியுமோ அவ்வளவு மோசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்கள் அப்படி இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து நேரடியாகவே போய் அங்கே நடப்பதைப் பார்த்து, அங்கே என்ன நடக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தியாவிலேயே இப்படி ஒரு பல்கலைக் கழகம் இல்லை, என்று எல்லோராலும், குறிப்பாக மத்திய அரசாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமாக அது இன்றைக்கு இருக்கிறது. மொழி வெறியுடன் இருக்கும் என்று நினைத்தவர்கள் எல்லாம் அதைப் பார்த்துவிட்டு, அது ஒரு 'மாடல் பல்கலைக் கழகமாக' இருக்கிறதென்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு நிறுவனங்கள் பாராட்டியிருக்கின்றன. அத்தனைக்கும் காரணம் தமிழ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள்தான். அப்பெருமகன் தலைமையில் தஞ்சாவூரிலே அப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிறோம் என்றால், அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். திராவிட இயக்கத்தினர் அத்தனை பேரும் இதனை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் ; அவரது புலமையை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் சரியாக வேலைசெய்யாததனால், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் காரணம் காட்டி ஒழுங்காக வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு சிறந்த பல்கலைக் கழகத்தைப்பற்றி இவ்வாறு உறுப்பினர் பேசுவதை நான் கேட்பதில் மிகவும் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்கலைக் கழகத்தைப்பற்றி நீர விசாரித்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரஷ்ய மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கும் கம்ப்யூட்டர்கள் வந்திருப்பது ஒரு சாதாரண காரியம் அல்ல. இவ்வாறான பல்வேறு முயற்சிகள், ஆக்க பூர்வமான முயற்சிகள், அங்கே நடைபெற்று வருகின்றன. இவ்வாறு பல்வேறு துறைகளில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.



(பிற்பகல் 12-45)

தமிழ் பல்கலைக் கழகம் வந்ததற்குப் பிறகுதான், என்ஜினியரிங் கல்வி தமிழிலே நடைபெற வேண்டுமென்று சொல்லக்கூடிய அளவுக்கு கல்வித் துறையிலே இருக்கின்ற ஒருவர் தைரியமாக முன்வந்திருக்கிறார். மருத்துவக் கல்வியை தமிழிலே தர முடியுமென்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு அறிஞர் பெருமகன் முன்வந்திருக்கிறார். ஆகவே தமிழை வளர்க்கிறோம், தமிழைக் காப்பாற்றப் போகிறோம், தமிழே எங்கள் உயிர் என்று சொல்லிக் கொண்டு, வெறும் வார்த்தைகளாலே மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதைவிட உண்மையிலேயே தமிழ் மக்களுக்குச் சேவை செய்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அவருடைய தாய் மொழியின் மூலம் அறிவைப் பெறுவதுதான். எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்களைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னது, இலக்கியங்களை மட்டுமல்ல, அறிவுச் செல்வங்களையும்தான். ஆகவே அறிவைக் கொண்டு வந்து தமிழ்படுத்தி, தமிழ் மூலமாக தமிழனுடைய அறிவை வளப்படுத்துவதற்கான காரியத்தைச் செய்து இன்றைக்கு தமிழ் நாட்டில் தமிழ் பல்கலைக் கழகம் ஒரு நிறுவனமாக இருக்கிறது. இந்தியாவிலே பல்வேறு மொழிகளுக்கும் அது வழிகாட்டும் நிறுவனமாக இருந்துகொண்டிருக்கிறது. எல்லோரும் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பல்வேறு கலைகளை இன்றைக்கு அதனால் காப்பாற்றுகின்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள், இசை இவைகளைப் பற்றி எல்லாம் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நடைபெறுகின்ற நல்ல காரியங்களை எல்லாம் மூடி மறைக்கின்ற வண்ணம் அங்கே வேலை செய்வதற்கு ஒத்துழைப்புத் தராமல் இருக்கின்ற சில அதிருப்தியாளர்கள்—எந்த இடத்திலும் இருப்பார்கள்—அவர்களுடைய கோரிக்கையை மட்டும் அடிப்படையாக வைத்து, ஒரு மிகப்பெரிய நிறுவனத்தை, தமிழர்களுடைய சொத்தை, தமிழனுடைய எதிர்காலத்திற்காக வளர்ந்து வருகிற ஒரு நிறுவனத்தை நாம் எப்படி வேண்டுமானாலும் பேசுவது என்று ஆரம்பித்தால், தமிழ் நாட்டிலே ஒரு நல்ல நிறுவனத்தைக் கொண்டுவருவது மிக மிகக் கடினமாகப் போய்விடும். ஆகவே ஒருசிலருடைய நன்மைக்காக அல்லது அவர்களுடைய பிரச்சினைக்காக, தமிழனுக்காக என்று வருகிற தேசிய நிறுவனம்—இந்த நாட்டுத் தமிழர்களுக்குமட்டுமல்ல, உலகளாவிய அளவிலே இருக்கின்ற அத்தனை தமிழர்களுக்காகவும்—அந்தத் தமிழ் பல்கலைக் கழகம் இன்றைக்கு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கும்போது, குறைகூறுவது சரியாக இருக்காது. மலேசியா தமிழருடைய தமிழைப்பற்றி இதுவரை யார்

கவலைப்பட்டார்கள்? ஸ்ரீலங்காவிலே இருக்கிற தமிழைப்பற்றி யார் கவலைப் பட்டார்கள்? ஆகவே பல்வேறு நாடுகளிலுள்ள தமிழை வளர்க்கின்ற ஒரு பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு சர்வ தேச நிறுவனமாக அதை இன்றைக்கு மாற்றிக் கொண்டிருக்கிறோம். அங்கே யாரும் அவர்களுடைய இஷ்டப்படி நடக்க விட்டுவிடவில்லை. இன்றைக்கு அவருடைய ராஜினாமா கடிதம் எழுதி அவருடைய அலுவலகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. யார் வேண்டுமானாலும் அதை எடுத்து கவர்னருக்கு அனுப்பலாம். அவர் வேலையிலிருந்து போகத் தயார் என்று சொல்லி, அன்றிலிருந்து அந்த அளவுக்கு மான ரோசத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற துணை வேந்தரைப்பற்றி நாம் தாறுமாறாக, சகதியை வாரி இறைப்பது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற கடமைக்குப் பொறுப்பானதுதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு யார் ராஜினாமா கடிதத்தை எழுதி வைத்து விட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்? யார் வேண்டுமானாலும் அதை எடுத்து அனுப்பலாம் என்று சொல்லிக்கொண்டு யார் இருக்கிறார்கள்? ஒரு நாள், இரண்டு நாள், ஒவ்வொரு நாளும்—மூன்று ஆண்டுக் காலத்திற்கு டைரி எழுதிவைத்துக் கொண்டு இன்றைக்கு நான் இதைச் செய்வேன், இன்றைக்கு நான் இதைச் செய்வேன் என்று சொல்லி விடுமுறை நாளே இல்லாமல் யார் இன்றைக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்? ஆகவே அப்படிப்பட்ட ஒரு மிகச் சிறந்த தமிழ் அறிஞரைப்பற்றி, தமிழ் மகனைப்பற்றி—ஒரு பியூன் பேசியிருக்கலாம் அல்லது அங்கே இருக்கின்ற ஒரு தமிழ் ஆசிரியர் சொல்லியிருக்கலாம்—அதை வைத்துக்கொண்டு நாம் கேவலப்படுத்துகின்ற முயற்சியிலே வருவது என்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட முயற்சிகளிலே நாம் இறங்குவோமானால், தமிழ் நாட்டிற்கு ஒரு அறிஞர் பெருமகன் கிடைப்பது மிக மிக அரிதாகும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவு உட்பட இன்னும் 3 சட்ட முன்வடிவுகளை நாம் நிறைவேற்றித் தரவேண்டும். ஆகவே உறுப்பினர் அவர்கள் மிக விரைவாக முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இறுதியிலே பதில் அளிப்பதற்கு வாய்ப்பு இருந்தும், இப்போதே நீண்ட நேரம் எடுத்துக்கொண்டார்கள். ஆகவே எனக்கு 'டைம்' கிடைக்கவில்லை. வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு தலைசிறந்த அறிஞரை மோசமாகப் பேசுவதிலிருந்து நான் காப்பாற்றாமல் இருப்பேனானால், அதுவே நான் தமிழுக்குச் செய்யும் துரோகமாகும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முதலிலே அமைச்சர் அவர்கள் பேசினால், இறுதியிலே பேசுவதைக் குறைத்துக் கொள்வார்கள். அதனால் அது கூடுதலாக இல்லை. (குறுக்கீடு) . . . உறுப்பினரவர்கள் 23 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். ஒரு சட்ட முன்வடிவின் மீது எவ்வளவு நாழி பேசுவது?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, நான் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற தமிழ் அறிஞரைக் குறை சொல்ல வேண்டுமென்று பேசவில்லை. எனக்கும் தமிழ் உணர்வு உண்டு. தமிழ் வளர வேண்டுமென்று கருதுகிறோம். அந்தக் காரணத்தாலேதான், தமிழ் பெயரிலே இந்தத் தவறு நடந்துவிடக் கூடாதென்ற அடிப்படையிலே, அதற்கு நாம் காரணமாக இருந்து விடக்கூடாது என்ற அடிப்படையிலே எங்களுக்குக் கிடைத்த சில தகவல்களை நாங்கள் இங்கே சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்ற முறையிலே சொல்கிறோம். அப்படிச் சொல்கின்றபோது, சிலர் கொஞ்சம் வேகமாகச் சொல்லலாம், சிலர் கொஞ்சம் மெதுவாகச் சொல்லலாம். அது அவரவர்களுடைய பாணியிலே சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆகவே அந்த உணர்வை நான் மதிக்கிறேன். கல்வி அமைச்சர் அவர்களுடைய உணர்வை ஒரு தமிழுக்கு . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, கட்டிடம் கட்டுகிறார்கள்; அதில் கொள்ளையடிக்கிறார்கள் என்று பச்சையாகவே சொல்கிறார்கள். ஆனால் கட்டிடம் கட்டும் பொறுப்பை 'டெக்னிகல் எஜுகேஷன் டிபார்ட்மெண்ட்' எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே சிக்கனத்திற்குப் பெயர் போன ஒரு துணை வேந்தராக அவர் இருந்து கொண்டிருக்கிறார்.

(பிற்பகல் 12-50)

இதையெல்லாம் நேரடியாகத் தெரிந்த நிலையில், நாங்கள் இருக்கிறோம். ஆகவே, யாரைப்பற்றி எதைச் சொல்வது என்றில்லாமல், எதை வேண்டுமானாலும் சொல்வது என்பது நல்ல முறையல்ல. தவறுகள் நடந்தால், எடுத்துச் சொல்லக்கூடாது, குறைபாட்டைச் சுட்டிக்காட்டவே கூடாது என்று நான் சொல்லவில்லை. அவரிடத்திலே எல்லா அதிகாரத்தையும் நாம் விட்டுவிட்டு இங்கே இல்லை. செனட் இருக்கிறது, மற்ற அமைப்புகள் இருக்கின்றன. அதோடு அதிகாரிகள் போகிறார்கள், கேட்கிறார்கள். அதற்கு எல்லாவிதமான வாய்ப்பும் இருக்கிறது. யாருக்கும் சர்வாதிகாரமான அதிகாரம் வழங்கப்பட்டு விடவில்லை. அப்படிப்பட்ட சட்டத்தை நாம் நிறைவேற்றிவிடவில்லை. ஆனால் யாரைப்பற்றி எப்படிப் பேசுவது, என்பதற்கு ஒரு வரைமுறை இருக்க வேண்டும். அதுவும் இப்படிப்பட்ட மாமன்றத்தில் பேசும்போது, மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாளைக்கே அவர் ராஜிநாமா செய்துவிடுவாரானால், அது தமிழகத்திற்குத்தான் நட்டம். அங்கே இருக்கிற பியூனுக்கு அல்ல. 2,000 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு தன்னுடைய குடும்பத்திற்காகப் பாடுபடுகிற ஆசிரியருக்கு அல்ல. யார் 24 மணி நேரமும், வருஷத்தில் 365 நாளும் தமிழ் தமிழ் என்று பேசிக்கொண்டு பாடுபடுகிறாரோ அவரோடு இணையாக வைத்துப் பேசக்கூடிய அளவுக்கு யார் உறுப்பினர் அவர்களிடத்திலே அத்தகைய தவறுகளைச் சுட்டிக் காட்டினார் என்று அறிய விரும்புகிறேன். எனவே இந்தக் குறுக்கீடு செய்யவில்லை என்றால், ஒரு மிகப் பெரிய அறிஞருக்கு நாம் பாதுகாப்புத் தரவில்லை என்பது மட்டுமல்ல, என்னுடைய தாய்மொழியான தமிழ் மொழிக்குத் தீமை செய்வதைக் கண்ணாறக் கண்டு கொண்டிருப்பதைப் போல் இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** யார் மீதும் குற்றஞ்சாட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நான் இங்கே அவரைக் குறை சொல்லிக் கொண்டிருக்கவில்லை. அதிலே தொடர்புடையவர் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

சங்க இலக்கியங்கள் என்ற பெயராலே பல நூல்கள் வந்திருக்கின்றன. அதிலே 50 நூல்கள்கூட விற்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் 25 லட்ச ரூபாய் செலவில் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு என்று சொந்த அச்சகமே



இருக்கிறது. அதன் மூலம் 11 நூல்கள் மட்டும்தான் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதிலே 2 மட்டும்தான் இந்தப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டவை. மற்றவை அனைத்தும் வெளி நிறுவனங்களாலே வெளியிடப்பட்டன. இதை நான் சொல்லுவதற்குக் காரணம் நூல்களை இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலமாக அங்குள்ள அச்சகத்தைப் பயன்படுத்தி வெளியிட முயற்சிக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அதிலே இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே நன்னூல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் விலை 65 ரூபாய். வெளியே வாங்கப் போனால் அதன் விலை 14 ரூபாய். அப்படி 65 ரூபாய் என்று விலை போட என்ன காரணம் என்றால், நூலின் விலையை ஏற்றினால்தான், தமிழின் தரத்தை உயர்த்துவதாக விளக்கம் சொல்லப்படுகிறது. நூல்களை மலிவு விலையில்கூட கொடுக்கலாம். அதுமட்டுமல்ல. அங்கே நூலை விற்பதற்குப் பரிசுப் பொருள்கள் கொடுக்கப்படுகின்றன. பேனா, பிளாஸ்டிக் பை, கை வானொலிப் பெட்டி போன்றவை கொடுக்கப்படுகின்றன. அதாவது சோப்புக் கம்பெனியில், இவைகளைக் காட்டி 'வாங்கு' என்று விளம்பரப்படுத்துவதைப் போல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு கலைவிழாகூட அங்கே நடத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவின்மீது பேசும்போது சொல்லப்படுகிற கருத்துக்கள் சட்டத் திருத்தத்தை ஒட்டியதாக, அதற்குத் தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். பல்கலைக் கழகம் பற்றிய சட்ட முன்வடிவு என்றாலே, கல்வி மான்யத்தில் பேசுவதை எல்லாம் இங்கே பேசிவிடக் கூடாது. ஒவ்வொரு விஷயமாகப் பேசுவது என்றால், 1½ அல்லது 2 மணி நேரம்கூட ஆனாலும் விவாதம் முடியாது. உறுப்பினர் பொதுவான கருத்தை, சட்ட முன்வடிவிற்கு உட்பட்டு அதில் என்ன இருக்கிறதோ அதை எடுத்துச் சொன்னால், நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு பல்கலைக் கழகத்தைப் பொறுத்து எல்லா விவரங்களையும் எடுத்துச் சொல்லுவது என்று ஆரம்பித்தால், இன்னும் 3 மணி நேரம்கூட ஆகும். ஆனால் நாம் 1½ மணிக்கு முடித்தாக வேண்டும். எனவே உறுப்பினர் அவர்கள் மிக விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்னுடைய பேச்சை விரைவில் முடித்துக் கொள்ளத்தான் விரும்புகிறேன். அந்தக் கலைவிழாவிலே 60,000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். நூல் விற்பனைக்காக விழா நடக்கிறது.

அதற்கு ரூ. 60,000 செலவு செய்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக அந்தப் புத்தகங்களை மலிவு விலையில் வெளியிட்டால், அதிக அளவுக்கு நூல் விற்பனையாகும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தமிழ் அறிஞர் மீது பொதுவாகக் குறை சொல்ல வேண்டுமென்று நான் எதையும் இங்கே குறிப்பிடவில்லை. ஆனால் அவராலே பல தமிழ் அறிஞர்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தமிழ் அறிஞர் உலகத்திலேயே அவர் ஒருவர்தான் என்றில்லை. பலர் இருக்கிறார்கள். அவரும் இருக்கிறார். எனவே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்று தமிழறிஞர்கள் சார்பில் இதைச் சொல்ல முன்வருகிறேன். நம்முடைய கொள்கை என்ன? அது அங்கே நிறைவேற்றப்படுகிறதா? நம்முடைய திட்டம் என்ன? அது அங்கே செயல்படுத்தப்படுகிறதா? அங்கே இருக்கிற நடைமுறை சரியாக உள்ளதா? நியமனங்கள் முறையாக உள்ளனவா? எங்காவது தவறு நடக்கிறதா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று சொல்லி இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த 3½ ஆண்டுக் காலத்தில் அந்தப் பல்கலைக் கழகத்தைவிட்டு 9 பேராசிரியர்கள் வெளியேறினார்கள் அல்லது வெளியேற்றப்பட்டார்கள். இணைப் பேராசிரியர்கள் நால்வர் வெளியேறியிருக்கிறார்கள். விரிவுரையாளர்கள் மூவர் வெளியேறியிருக்கிறார்கள். அலுவலகப் பணியாளர்கள் 21 பேர். முதுநிலை ஆய்வாளர்கள் 6 பேர், மொழி படித்த மாணவர்கள் 11 பேர், வாழ்வியல் களஞ்சியப் பகுதியைச் சார்ந்தவர்கள் மூவர் மற்றும் அறிவியல் களஞ்சியத்தைச் சார்ந்தவர்கள் 9 பேர் என்று ஆக மொத்தம் 66 பேர் இதுவரை ராஜிநாமா செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-55)

வெளியேறியிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட நிலை அங்கே ஏற்படுத்த வாய்ப்பு இருக்கக் கூடாது. மூன்றாண்டுகளாக நிரந்தரப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் இல்லாத துறைகள் 12 இருக்கின்றன. இப்படியெல்லாம் குறைபாடுகள் இருக்கின்றன. குறைபாடுகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். பல்கலைக் கழகச் செலவில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி இந்து மத கலாச்சாரம் பற்றி ஆய்வு செய்ய கிழக்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று





வந்தார். அதற்கான செலவு ஐம்பதாயிரம் ரூபாய். அதனால் பலன் என்ன? அவரால் கொடுக்கப்பட்ட மடல் உண்டா, அறிக்கை உண்டா? இப்படி ஓய்வு பெற்ற அதிகாரிகள் உலகம் சுற்ற பணத்தை வாரி கொடுக்கிறோம். இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன், குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை.

தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே உண்மையிலேயே தமிழ் உணர்வோடு தமிழை வளர்க்கக்கூடிய காரியங்களைச் செய்திருப்பதற்காக பாராட்டுகிறேன். இத்தகைய குறைகள் இல்லாமல் இருக்க, மக்கள் வரிப் பணத்தை வீண் ஆக்காமல், அனைத்து நியமனங்களிலும் இட ஒதுக்கீடு விதியைப் பின்பற்ற, ஆராய்ச்சி நூல்களை நியாய விலையில் கொடுக்க, பணியில் இருக்கும் அனைவரையும் நிரந்தரம் ஆக்க, இளைஞர்களுக்கு வாய்ப்பு அளித்து, தகுதிகாண் பருவ சீர்தூக்குக் குழுச் சட்டத்தை அகற்ற, ஆராய்ச்சி மாணவர்களுக்கு யூ.ஜி.சி. ஊதியமும் வேலையில் முன்னுரிமையும் தர, தகுதியுடைய கடைநிலை ஊழியர்களுக்குப் பதவி உயர்வு தர, பல்கலைக் கழகச் சட்டங்களை ஜனநாயகப்படுத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை பணிவோடு தெரிவித்து அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம், ஆரம்பத்திலேயே பேசித் தீர்க்கிறேன் என்று சொல்லி, அதிலே கொஞ்சம் மாற்றம் செய்து ஏசித் தீர்த்திருந்தாலும், தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கியதற்காக நாம் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், டாக்டர் சுப்பிரமணியம் அவர்களை நீண்டகாலமாக அறிவேன். அவருடைய தமிழ்ப் பற்றும், கடமையாற்றும் உணர்வும் போற்றுவதற்குரியதாகும். பல்கலைக் கழகத்திலே ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருப்பதால், அதைப்பற்றிக் கேட்க நமக்கு உரிமை இருக்கிறது. அதுவும் கம்யூனிஸ்ட் கட்சி என்பதால் நீக்கிவிட்டார்கள் என்று சொல்வதால் சொல்லுகிறேன். அப்படியென்றால் திரு. ஜெயகாந்தன் அவர்களுக்கு ராஜராஜன் விருதை எதற்காக தமிழ்ப் பல்கலைக் கழகம் தந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு ஓவியரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், எத்தனையோ ஓவியர்கள் மனுச் செய்வார்கள். ஏனென்றால் எத்தனையோ வார இதழ்கள் இருக்கின்றன. ஐம்பது வார இதழ்களில் நான் ஓவியம் தீட்டியிருக்கிறேன் என்று கூறுவார்கள். ஆனால் ரவி வர்மா வந்தால் அப்படிப்பட்ட கருத்தைச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவருடைய காலத்திலே அவ்வளவு பத்திரிகைகள் கிடையாது. அதைப் போல முதுபெரும் தமிழ் புலவர்களைப் பார்க்கிறேன். தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவன் நான். ஆகவே கூறுகிறேன், எம்.ஏ. (தமிழ்) படித்த இளைஞர்களைக் காட்டிலும் முதுபெரும் புலவர்கள் பரவாயில்லை. அவர்கள் பல ஆசிரியர்களிடம் பயின்றவர்கள். அப்படிப்பட்டவர்களுடைய திறமையை, புலமையை நிச்சயமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற முறையை நான் வலியுறுத்துகிறேன்

நமது பாரதப் பிரதமர் அவர்கள் தென்னகப் பண்பாட்டு மையத்தை தஞ்சையிலே துவங்க இருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு காலத்திலே திராவிட நாகரீகம் இல்லை என்று சொன்னபோது, பேரறிஞர் அண்ணா அவர்களும், பெரியார் அவர்களும் அதை எதிர்த்து வாதாடிய நிலைகள் மாறி இப்போது திராவிட நாகரீகம் அங்கீகரிக்கப்பட்ட நாகரீகமாக, ஆய்வு செய்யும் நாகரீகமாக, பெருமைப்படத்தக்க நாகரீகமாக இருந்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது. அந்த மையம் குறிப்பாக திராவிட நாகரீகத்தை மட்டும் எண்ணி, செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, பல்கலைக் கழகங்கள் எப்படி இயங்க வேண்டும் என்பதிலே மனித நேயத்தை பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள் பல பல்கலைக்-கழகங்கள் உருவாகியிருக்கும் நேரத்தில் இதை நினைவு கூர்வது நல்லது என்று கருதி குறிப்பிடுகிறேன் :—

"A University stands for Humanism, for reason for adventure of ideas and for the search of truth. It stands for the onward march of the human race towards even higher fields. If the Universities discharge their duties adequetely, than it is well with the Nation and the people."

மனித நேயம் என்று கருதும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மனித நேயத்திற்காக டாக்டர் பட்டம் வழங்கியபோது துணை வேந்தர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.



'Thiru M. G. Ramachandran has been fighting for the cause of humanism. He did not hesitate to use films in politics for that purpose. Therefore, he has become Makkal Thilagam, Puratchi Thalaivar, Ponmana Chemmal of the Tamils. In fact Rajaji had called him a crusadar like Arjuna; Periyar described him as a man with larger heart; and Anna admired him as a poem with beauty."

(பிற்பகல் 1·00)

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவையின் அனுமதியுடன் அவையின் அலுவல்கள் முடியும் வரை, நேரம் நீடிக்கப்படுகிறது.

*டாக்டர் இரா. சனார்த்தனம் :* நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரிய முயற்சியினாலே கல்வி நிலை வளர்ந்திருக்கின்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியினாலும் பல பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். நான் 'ஜர்னல் ஆப் ஹையர் எஜுகேஷன்' என்ற நூலிலே ஒரு கருத்தைப் பார்க்க நேரிட்டது :—

"Education is primarily a teaching learning process and not an ingenious device for elminating the unworthy from the system and it is surely not a process of paper certification."

பல்கலைக் கழகம் என்பது அறிவை வளர்க்கின்ற இடமாக இருக்க வேண்டுமே தவிர ஆளைப் பிரிக்கின்ற இடமாக இருக்கக் கூடாது. இவன் பட்டம்பெற்றதாலே அறிவாளி என்பதும், பட்டம் பெறாதவருக்கும் பட்டம் பெற்றவர்க்கு அல்லது பல்கலைக் கழகத்திலே உள்ள முதல் மாணவனுக்கும் அந்தத் தகுதி பெறாத மூன்றாவது நிலையில் இருக்கின்ற மாணவனுக்கும் இடையில் வேறுபாடுகளை உருவாக்குவது என்ற அளவில் பல்கலைக்கழகங்கள் இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். அறிவை வளர்க்கின்ற, ஆசிரியர்களுடைய முயற்சியினாலே மாணவர்கள் அறிவைப் பெறுகின்ற நிலைக் கூடமாக அவைகள் அமைய வேண்டும் என்ற கருத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அந்த நிலையிலேதான் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் தேர்வுகூட தேவையில்லை என்ற அளவிலே கருதுகின்றார்கள். தேர்வு முறையால் எந்த மனிதனுடைய அறிவையும் எடைபோட முடியாது

என்று கருதுகின்றார்கள். அவர்கள் ஒரு புதிய நோக்கத்திலே சிந்திக்கின்றார்கள். இந்தப் பல்கலைக்கழகங்களுக்கும் அந்தச் சிந்தனைகள் வர வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது வேலையில்லாத பட்டதாரிகளுடைய நிலையை நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் பல்கலைக் கழகங்கள் பயிற்சி அளித்துக்கொண்டு அங்கே ஆராய்ச்சிகள் செய்வதற்கும் நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கும் நாம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்துகொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கம் வேலையில்லாத பட்டதாரிகளை நாம் உருவாக்குவதால், சமுதாயத்தில் பெரிய பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார். பட்டம் பெறாமல் இருந்தால், சிறப்பாக இருக்கும் என்று சொன்னார். எங்களை ஒரு பி.காம். டிகிரியோடு, பி.எஸ்.சி. டிகிரியோடு உருவாக்கிவிட்டு, பிறகு எந்த வங்கியிலே வேலை என்பதில்தான் அது முடிகிறது. ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர்கள் என்ற அளவில், ஆசிரியர்கள் வேலையைத் தான் நாடவேண்டியிருக்கிறது. "எங்களுக்கு ஒரு வகையிலே பயிற்சி கொடுத்து எங்களை ஒரு வழியிலே வெளியே விடுகின்றீர்கள். நாங்கள் அந்த வழியிலே வேலை இல்லாதவர்களாக இருப்பதைக் காட்டிலும் படிக்காமல் இருப்பதே மேல்" என்று சொல்கின்ற நிலை இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்டது. அதிலே எண்ணிப்பார்க்கின்றபோது வேலையற்றவர்களைப்பற்றி ஒரு குறிப்பு கிடைத்தது.

The Planning Commission estimated that there were 3.47 million unemployed matriculates, graduates and above in 1980. The Commission expects the number to go up to 4.66 millions by 1985.

அந்த அளவுக்கு வேலையில்லாத பட்டதாரிகள் தொகை பெருகிக்கொண்டிருக்கின்றது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இதை நாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் பல்கலைக் கழகங்கள் படிப்புத் தருகின்ற நேரத்தில், அவர்கள் வேலையை உருவாக்கிக் கொள்ள, இப்படிப் பெருகி வருகின்ற வேலையில்லாத பட்டதாரிகளைக் காப்பாற்றுகிற முயற்சியில் மத்திய அரசும் மாநில அரசும் எதிர்காலத்தில் ஈடுபட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

குறிப்பாக தொழில் பயிற்சிக் கூடங்களுக்கும் கல்விக் கூடங்களுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அதன்மூலமாக ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இதை அந்த நூலிலேகூட சொல்லி



யிருக்கின்றார்கள். 'தி அப்பிரண்ட்டீஸ் ஸ்கீம்ஸ்'. அதாவது பயிற்சி பெறுவதற்காக தொழிற்சாலைகளைப் பயன்படுத்தும் நிலை இருக்கின்றது. இப்போது அது சரிவர இயங்கவில்லை என்பதை நாம் இங்கே பார்க்கிறோம். அதனாலே தொழிலிலே ஈடுபடுவதற்கு, தொழில் அறிவு பெறுவதற்கு கல்விக் கூடங்களும் தொழில் கூடங்களும் இணைப்பாக இருக்கவேண்டும் என்பதை இந்தப் பல்கலைக் கழகங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக மகளிர் கல்வி என்று பார்க்கின்றபோது, அதற்கு தமிழகத்திலே பெரிய சிறப்பு இருக்கின்றது. உலக நாடுகளை எண்ணிப் பார்க்கின்றபோது, இந்தியாவைப்பற்றி, குறிப்பாக சென்னையைப் பற்றிச் சிறப்பாகச் சொல்கின்றபோது, ஒரு குறிப்பை டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள், ஒரு மகளிர் கல்வி தொடர்பான கருத்தரங்கில் பேசுகின்றபோது, குறிப்பிட்டார்கள் :—

"Madras has been retaining this pre-eminent position in affording educational opportunities for women not only in India but even amongst many other nations of the world. The Madras Government was the first State Government in India to come out in favour of family planning by declaring its support for it even as early as 1932. The Madras Medical College was the first Medical College in the then British empire to admit women students to the certificate course in Medicine in the year 1875. On the recommendation of Surgeon-General Balfour, Mary Scharleib came to India to do medicine and was the first woman student to be admitted because Britain would not admit women in its Medical Colleges.".

அதாவது இங்கிலாந்திலேயே பெண்களை மருத்துவக் கல்லூரியிலே சேர்க்க முடியாது. அங்கே மருத்துவக் கல்லூரியில் இடம் பெற முடியாது இருந்த ஒருவர் இங்கே தமிழ் நாட்டில், அதுவும் சென்னைக்கு வந்து பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி பெற்றிருக்கின்றார் என்பதைப் பார்க்கின்றபோது, அந்தக் காலத்திலேயே பெண்களுக்கு தமிழ் நாடு முதலிடம் தந்திருக்கின்றது என்பது தெரிகிறது. அந்த அளவிலே அன்று பல்கலைக் கழகம் உருவாகியிருக்கின்றது. அந்தப் பல்கலைக் கழகங்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பெண்களின் உரிமைகளைப் பற்றியும் எண்ணினோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1986 ஜனவரி 29

(பிற்பகல் 1-05)

அதிலே குறிப்பிட்டிருப்பது,

Centre for extension: Taking of specific cases of injustice to women and generating efforts to get justice done to the victim. பெண் உரிமையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறபோது, இந்தப் பல்கலைக் கழகம் சிறந்த பணியாற்ற வேண்டுமென்று கருதுகிறேன். செய்தித்தாள் களில் பார்க்கிறோம், ஸ்டவ் வெடித்து பெண் இறந்தாள் என்று. மாமியார் மருமகள் சண்டை இருக்குமிடத்தில் ஸ்டவ் வெடிக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் பெண் உரிமைக்காக இந்தப் பல்கலைக் கழகம் செயல்பட்டு வருகிறது என்பதை அறியும்போது உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து, பல்கலைக் கழகத்தினுடைய நடைமுறைகளிலே ஆசிரியர் களுக்கும், மாணவர்களுக்கும் முக்கிய இடம் தர வேண்டும். அது வெளி நாட்டுப் பல்கலைக் கழகங்களில் நடைமுறையில் இருக்கிறது. அது இப் போது இங்கே தவிர்க்க முடியாத ஒன்று, தேவையான ஒன்று. முன்பெல் லாம் அப்படியில்லை. புதிய சலுகை என்று வரும்போது, தயக்கம் இருக் கிறது. ஆசிரியப் பிரதிநிதிகள், மாணவப் பிரதிநிதிகளை வைத்து பல்கலைக் கழகங்களை இயக்க வேண்டுமென்பது நீண்ட நாளாக என்னைப் போன்ற வர்கள் வற்புறுத்தி வருவதாகும். ஆசிரியர் பிரதிநிதிகள், மாணவப் பிரதி நிதிகள் இடம் பெற வேண்டும். அது பல்கலைக் கழகத் திட்டங்களுக்கு, நடைமுறைகளுக்கு துணையாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால், திருமணம் ஆகாதவர்கள் பலர் தங்க இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே 'கெஸ்ட் ஹவுஸ்' இருக்கிறது. அங்கே பெரிய, சிறப்பான விருந்தாளிகளை கவனிப்பதுதான் தங்கள் வேலை என்று கருதுகிறார்கள். அதைவிட, அங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் தங்க வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். திருமணம் ஆகாத பெண்களுக்கு தங்க இடம் போன்ற வசதிகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேந்தர் பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே அது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். பல காலகட்டங்களில் எவ்வளவோ மாற்றங்கள் உருவாகியிருக்கின்றன. சென்னை ராஜதானி என்று பெரிய சென்னை மாநிலம் இருந்தபோது கொள்ளேகால், கடப்பா எல்லாம்



1986 ஜனவரி 29] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

இருந்தன. அப்படிப்பட்ட பெரிய ராஜதானிக்கு 3 பேர்கள், திரு. பி. டி. ராஜன் உள்பட அமைச்சர்களாக இருந்தார்கள். இப்போது மக்கள் தங்களுடைய உரிமைகளை, நியாயங்களைக் கேட்கிற அளவுக்கு விழிப் புணர்ச்சி ஏற்பட்டிருப்பதால், நிறைய அமைச்சர்கள் இருக்கிறார்கள். இயற்கைச் சூழல் கட்டுப்பாட்டுக்குக்கூட ஒரு துறை இருக்கிறது, அமைச்சர் இருக்கிறார். கோவையிலிருந்து வெளியேறும் சாக்கடை நீரை எந்த ஊரிலே கொண்டுபோய் விடுவது என்று சொல்லும்போது, சுற்றுப் பகுதிகளில் உள்ள அத்தனை கிராமங்களைச் சேர்ந்தவர்களும் எங்கள் ஊர் கெட்டுவிடும், இங்கே விடாதீர்கள் என்று சொல்லும் அளவுக்கு கிராமங்களில் விழிப் புணர்ச்சி வந்துள்ளது. அந்த நிலைமையில் இந்த 'வேந்தர்' விவகாரம் இருக்கிறது. ஊட்டியில் 'அசெம்ப்ளி ஹால்' என்ற சினிமாக் கொட்டகை இருக்கிறது. அது ஆளுநருடைய பொறுப்பிலே இருக்கிறது. 'லாலி இன்ஸ்டி டியூட்' இருக்கிறது. அது சூதாட்ட கிளப். அது ஆளுநருடைய பொறுப் பிலே இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் காலத்தில், இங்கேயிருந்து ஊட்டிக்குப் போவார்கள். ஊட்டியிலே கிளப்புக்குப் போவார்கள், அசெம்பிளி ஹாலில் நடனம் ஆடுவார்கள். அதனால் அந்த அதிகாரம் ஆளுநரிடம் இருந்தது. இப்போது அந்த அதிகாரம் ஆளுநருக்கு வேண்டுமா என்றால், அது நியாயமில்லை என்றுதான் சொல்லுவார்கள். கல்வியிலே மிகுந்த அக்கறை கொண்டுள்ள நேரத்தில், அகில இந்தியாவிலும் புதிய கல்விக் கொள்கையில் அதிக அக்கறை கொண்டுள்ள இந்த நேரத்தில், பல்கலைக் கழக வேந்தர்களாக மாநில முதல்வர்களே இருக்கலாம். பிரதமர் அவர்கள், மத்திய அரசின் பல்கலைக் கழகங்களிலே அந்தப் பொறுப்பிலே இருக்கலாம். ஆளுநர் அவர்களுக்கு தேவையற்ற சிரமத்தைக் கொடுக்கக் கூடாது. ஆளுநர் அவர்கள் விழாக்களுக்குத் தலைமை வகிக்கலாம். வேறு பல பணிகள் அவருக்கு இருக்கும்போது, பல்கலைக் கழகச் சிக்கலில் அவரைக் கொண்டு வந்து, ஒவ்வொன்றுக்கும் அவர் பதில் சொல்லும் தர்மசங் கடமான நிலை வந்துவிடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தமிழ் பற்றிச் சொன்னார்கள். நல்லவேளை, இந்தியில் அவருக்குக் கடிதம் எழுதவில்லையே என்று தோன்றுகிறது. தமிழிலேயே கருத்தரங்குகள் நடத்துவது என்ற நல்ல மரபை மேற்கொள்ள வேண்டு மென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழுக்கு வந்துள்ள சங்கடத்தை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பத் திலே ஆக்சிஜன், ஹைட்ராஜன் ஆகியவற்றுக்கு தமிழிலே சொற்கள் இல்லையே,

சொற்கள் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். கலைச் சொற்கள் இல்லையே என்று முதலில் கூறினார்கள். கலைச் சொற்கள் வந்த பிறகு, விஞ்ஞானம் தமிழில் வருமா என்று சொன்னார்கள். தனித் தமிழிலிருந்து கொஞ்சம் மீறினால், தமிழ் அறிஞர்கள் அதைக் குறை கூறுகிறார்கள். சரி.

(பிற்பகல் 1-10)

விஞ்ஞான ரீதியாக எதையும் செய்யலாம் என்றாலும் சட்ட ரீதியாக எதைச் செய்யலாம் என்றாலும், தமிழில் மாற்றம் செய்ய முடிகிறதா என்று கேட்கிறார்கள். பொறியியல் துறையில் முழுவதுமாக தமிழில் செய்யலாம் என்றால், அதற்கும் இன்னொரு பக்கத்தில் எதிர்ப்பு. மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப்போல, தமிழுக்கும் ஏற்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளைப் பயன்படுத்துவதில் ஒரு கவர்ச்சி இருக்கிறது. இல்லையென்று சொல்லமாட்டேன். நர்சரி பள்ளிகளுக்கு கூட்டம் அதிகம் போகிறது என்றால், அங்கே சுகாதாரமாக இருக்கிறது. நாம் எவ்வளவுதான் நல்ல உணவு கொடுத்து பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பினாலும், பள்ளி வாசலில் விற்கும் ஜவ்வு மிட்டாயைத்தான் பிள்ளைகள் விரும்புகிறார்கள். அவர்கள் மணியடித்துக் கொண்டேயிருக்கிறார்கள். குழந்தை ஆசைப்படுகிறது. குழந்தைகளைப் பராமரிப்பதில் வீட்டில் இருக்கிற பெற்றோருக்கு இருக்கிற சிரமத்தைப்போலத்தான் தமிழ் மொழியைக் காப்பாற்றுவதிலும் அரசுக்குப் பொறுப்பும் சிரமமும் இருக்கிறது. யார் மேலும் தவறு கிடையாது. ஆகவே இந்த அரசு மகளிருக்காகவும், அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காகவும் முயற்சிகள் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். நிறைய பல்கலைக்கழகங்கள் உருவாக்கியிருக்கிற மாநில அரசுக்கு மத்திய அரசும் உதவியாக இருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் சொல்கிறேன். ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் இப்போது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. பள்ளிக் கூடங்களை எடுத்துக்கொண்டால், ஆசிரியர்களின் உடல் நலமே கெட்டுவிடுகிற நிலைமையில் மாணவர்கள், ஆசிரியர்கள் விகிதாச்சாரம் இருக்கிறது. 60 மாணவர்களின் பெயர் பட்டியலைப் படித்து, பிறகு அவர்கள் அனைவருக்கும் கேட்கிறமாதிரி கத்தி சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு மீது பேச வேண்டும். சட்ட முன்வடிவின் மீது மட்டும் சுருக்கமாகப் பேசி, ஒத்துழைக்க வேண்டும்,



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** முடித்துக் கொள்கிறேன். தலைமையாசிரியர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் வேலைகளை முடித்து விட்டு வீட்டுக்குக் கிளம்பும்போது, மாலை 7 மணி ஆகிவிடுகிறது. தவிரவும் ஊரில் ஏதாவது நடந்தாலும் அதிலும் இவர்தான் பங்கு ஏற்க வேண்டும். இப்படி பல நிலைகளில் ஆசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்களுக்கும் பொறுப்புக்கள் அதிகமாக இருக்கின்றன.

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, அதிக அளவில் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தி, பாரதியார், அண்ணா, பாரதிதாசன் போன்றவர்கள் பெயர்களில் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தி வரலாறு படைத்திருப்பதைப்போல, பச்சையப்பன் பெயரிலும் பல்கலைக் கழகத்தை உருவாக்கும் என்று நம்பி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று பல்கலைக் கழகங்களுக்கான சட்டத் திருத்தத்தில், அரசு அதிகாரத்திலிருந்தும் துணைவேந்தருடைய அதிகாரத்திலிருந்தும் மாற்றி அதை ஆட்சிக் குழுவுக்குக் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன். ஆனால் நண்பர்கள் திரு. சுப்பு அவர்களும், திரு. மயில்சாமி அவர்களும் ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த புதிய கல்விக் கொள்கை பற்றிய கருத்தரங்கில் துணைவேந்தர்கள் கூறியதைப் பற்றிச் சொன்னார்கள். பல்கலைக் கழகங்கள் சுயாட்சி பெற வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பதைப் பார்த்தால், இப்போது பல்கலைக் கழகங்களுக்கு சுயாட்சி இல்லை என்று ஒத்துக்கொள்கிறார்கள். ஆட்சிக் குழு இருந்தால் சுயாட்சி இருக்க முடியாது. ஆட்சிக் குழு உறுப்பினர்களுடைய வேலைகளையும் ஆராய்ந்து கொடுக்கவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. ஆட்சிக் குழுவுக்கும் மக்களுக்கும் இப்போது சம்பந்தமில்லை. ஆட்சிக் குழுவிற்குச் செல்கிற உறுப்பினர்கள்—தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம்—பயணப் படிக்கும், பஞ்சப் படிக்கும்தான் போகிறார்கள் என்று சொல்லலாம். 10 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஒரு பல்கலைக் கழகத்திற்கு 2 நாள் என்று வைத்துக்கொண்டாலும், 20 நாளைக்குச் சுற்றலாம். இந்த அதிகாரங்கள் ஆட்சிக் குழுவுக்குச் சென்றால், அதிகாரிகளுடைய வேலை எப்படி நடக்கும்? ஆனால் எக்ஸ்-அபிஷியோ என்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குறைவு. இப்போது அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களுக்கும் கிடைக்கிற மரியாதை மதுரை

காமராஜ் பல்கலைக் கழகத்திற்குக் கிடைக்கவில்லை. காரணம் அங்கே தேர்தலே நடக்கவில்லை. ஐந்தாண்டுக் காலமாக தேர்தல்கள் நடக்கவில்லை. அதனால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுகுறித்து அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன். போன ஆண்டே பணம் காலி என்று சொன்னார்கள். அது உண்மையா? அங்கே சிண்டிகேட் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்ட முன்வடிவு. உறுப்பினர் அவர்கள் காமராஜர் பல்கலைக் கழகம் பற்றிப் பேசுகிறார்கள்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** இதைச் சொன்னால்தான் அது தெரியும் என்பதற்காகச் சொல்கிறேன். வெளியில் நான் போகவில்லை. அங்கு 5 ஆண்டுகளாக சிண்டிகேட் எலெக்ஷன் இல்லை. தொழில் வரி வசூல் மீதான 'ஸ்டே'யை தமிழக அரசு 'வெகேட்' பண்ணவில்லை. நானும் இங்கே வந்ததிலிருந்து. . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** "ஸ்டே" கொடுத்திருப்பது கோர்ட், சர்க்கார் அல்ல.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** நீதிமன்றம்தான் "ஸ்டே" கொடுத்திருக்கிறது. நன்றாகத் தெரியும். ஆனால் அதை 'வெகேட்' செய்ய அரசாங்க

(பிற்பகல் 1-15)

வக்கீல் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்? இந்த அரசு அதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதில் அரசுக்குப் பொறுப்பு இல்லையா? பல்கலைக் கழகங்கள் மக்கள் வரிப்பணத்தால் நடைபெறுகின்றன. அவை சரியாக நடைபெறுகின்றனவா, இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டியது அரசின் பொறுப்பு. ஐந்தாண்டுகளாக ஸ்டே நிச்சயமாக இருக்க முடியாது. அந்த நிலைமைகளை மாற்றியமைத்து, சிண்டிகேட்டை மாற்றியமைத்து, தேர்தல் நடத்த வேண்டாமா?

சிண்டிகேட் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நாங்கள் சில பரிந்துரைகள் கொடுத்திருக்கிறோம். இப்போது அதில் கல்விக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள்தான் இருக்கிறார்கள். அனைத்துத் துறைச் செயலாளர்களும் இருக்கிறார்கள். சுகாதாரத் துறைச் செயலாளர் இருக்கிறார் என்று



நினைக்கிறேன். ஆனால் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறைச் செயலாளர் மட்டுமல்ல. மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இவ்வாறு செயலாளர்கள் மட்டும் ஆட்சிக் குழுவில் இருந்தார்களானால், இதனால் கண்டிப்பாக எந்த நன்மையும் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாற்றம்கூட பல்கலைக் கழக மானியக் குழுவின் யோசனையின்படிதான் செய்திருக்கிறார்கள். ஆனால் எல்லாம் அவர்கள் யோசனையின்படி செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

இந்தப் பல்கலைக் கழகம், மூன்றாண்டு பட்டப்படிப்புக்குத் தேர்வு நடத்தி ஒரு வேலை கிடைக்காத ஒரு பட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆராய்ச்சி பண்ணுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு தமிழக அரசு தடையாக இருந்துகொண்டிருக்கி-து. இந்தியாவிலேயே இங்கேதான் அந்த நிலைமை இருக்கிறது. அதுதான் ஆச்சரியம். இது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மூன்றாண்டுகள் முடிந்தாலும் அதற்குள் அவர்கள் ஆராய்ச்சி முடியாவிட்டால் மேலும் ஓராண்டிற்கு அவர்கள் படிக்கலாம் என்று பல்கலைக் கழக மானியக் குழுவே அனுமதி கொடுத்திருக்கிறது. அதைத் தமிழக அரசு நிறுத்தி இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்குள் முடித்துவிட வேண்டுமென்று தமிழக அரசு சொல்கிறது. பி.ஏ. படிப்பை மூன்று ஆண்டுகளில் முடிக்கவில்லையா? எம்.ஏ. படிப்பை இரண்டு ஆண்டுகளில் முடிக்கவில்லையா? அதுபோல் ஆராய்ச்சிப் படிப்பையும் மூன்று ஆண்டுகளில் முடித்துவிடு என்கிறது. எப்படி முடியும்? ஆராய்ச்சியை விலைக்கு வாங்க முடியாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆராய்ச்சியை முடிக்கிறார்களா, முடிக்கவில்லையா என்பது அல்ல பிரச்சினை. வேலையில் இல்லாமல் இருப்பவர்களுக்குச் சம்பளம் தருவது எதற்காக என்றுதான் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் நிறைய நஷ்டம் ஏற்படுகிறது. இவைகளை எல்லாம் கணக்கிலேகொண்டுதான் வரையறை ஏற்படுத்தியிருக்கிறோம். பத்து பதினைந்து ஆண்டுகளுக்குக்கூட ஆராய்ச்சி செய்யலாம். அதற்காக அத்தனை ஆண்டுகளுக்கும் அரசாங்கம் செலவு செய்வது என்பது முடியாத காரியமாகும். ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்களுக்கு, குறிப்பிட்ட காலத்திற்குத்தான் அரசாங்கம் செலவு செய்யும். அதற்குப் பிறகு அவர்கள்தான் தங்கள் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆராய்ச்சிப் பட்டத்திற்குப் பணம் கொடுப்பது பல்கலைக் கழக மானியக் குழு. படிக்கப் போகிறவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது தமிழக அரசு. ஏற்கெனவே கொடுத்துக்கொண்டிருக்கிற பணம் . . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இவர்கள் எந்தச் சம்பளத்தை வாங்குகிறார்களோ அந்தச் சம்பளத்தை அரசாங்கம் தர வேண்டும்—சப்ஸ்டிட்யூட்டுக்குத் தருவது, வந்து சேர்கின்றவர்களுக்குத் தருகிற புதிய சம்பளம். ஆரம்ப சம்பளத்தைத்தான் பல்கலைக் கழக மானியக் குழு தருகிறது. அவர்கள் வாங்குகிற சம்பளத்தை நாங்கள் தருகிறோம். இது ஒரு பிரச்சினையாக ரொம்ப நாட்களாக வந்துகொண்டிருக்கிறது என்பதையும் ஆசிரியர்கள் உணர்வார்கள்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எல்லா மாநிலத்திலும் இது கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் மட்டும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் ஏன் மூன்று ஆண்டுகாலத்திற்குள்ளே முடிக்க முடியாது? ஆசிரியர் தொழிலில் இருக்கக்கூடியவர்கள் மற்ற மாணவர்களைப் போல மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எடுத்துக்கொள்ள வேண்டுமா என்ன? ஆசிரியர்கள் மூன்று ஆண்டு காலத்திற்குள்ளே முடித்து ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டாமா?

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் இதை அதிகமாக ஆராய்ச்சி செய்வோமானால், ஆராய்ச்சிப் படிப்பில் வாங்க வேண்டிய கம்ப்யூட்டர்கள் போன்ற பொருள்கள் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. அதனாலேயே இந்த நிலைமை ஏற்படுகிறது. எனவேதான், ஆராய்ச்சிப் படிப்பை மூன்று ஆண்டு காலத்திற்குள் முடிக்க முடியாதவர்களுக்கு மேலும் ஓராண்டு காலநீட்டிப்புக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால்தான், பல்கலைக் கழகம் வளர முடியும் என்பதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மூன்று ஆண்டுகளில் முடிக்க வேண்டுமென்று ஆசிரியர்களுக்குக் கடமை இருக்கிறது. ஆனால் தவிர்க்க



முடியாமல் மூன்று ஆண்டுகளில் முடிக்க முடியவில்லை என்றால், அவர் ஒரு ஆராய்ச்சிக்காக மேலும் 25,000 ரூபாய் செலவு செய்து நஷ்டமடைய வேண்டியிருக்கிறது. அப்படி நஷ்டம் அடைந்து, அதை வாங்க வேண்டுமா என்கிற நிலைமை வருகிறது. அதைத் தடுத்து நிறுத்தத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு இதைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்காவிட்டால், மேலும் ஓராண்டு படிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது துணை வேந்தருக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் சட்டங்கள் வந்திருக்கின்றன. வேந்தர் என்கிறபோதே ஆச்சரியமாகப் பார்த்தேன். 4½ கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் முதலமைச்சர்தான். மன்னர் மானியத்தை ஒழித்திருக்கிறோம். ஆனால்

(பிற்பகல் 1-20)

தமிழ்நாட்டில் மட்டும் மன்னர் போகவில்லை. வேந்தர் என்பது முதலமைச்சரைவிட பெரிய ஆளா என்று சிந்திக்கக்கூடிய யோசனை வருகிறது. இப்போது திட்டக் குழுவில் ஐந்தாவது செக்ஷன் இருக்கிறது. இதில் 8 பேர் கல்வியாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். யார் தேர்ந்தெடுப்பார்கள்? வேந்தருக்கு யார் தமிழ் நாட்டில் கல்வியாளர் என்று கண்டிப்பாகத் தெரியாது. அவருக்குத் தமிழ் பேசத் தெரியாது. யாரிடமும் உறவாட முடியாது. அவர் அறையிலேதான் இருக்க வேண்டும். அதாவது மாளிகையிலேதான் இருக்க வேண்டும். மாளிகையிலே இருப்பவருக்கு இது கண்டிப்பாகத் தெரிந்திருக்க முடியாது. பிறகு அரசாங்கமே சொல்லுமா என்று கேட்டால், அதுவும் இல்லை. அவருக்கு யார் 'அட்வைஸ்' பண்ணுவது? யாரும் 'அட்வைஸ்' பண்ண முடியாது. அவரே அவருக்கு யோசனை வந்தபடி, 8 பேரை பிளானிங் கமிஷனுக்குத் தேர்ந்தெடுப்பார். பிளானிங் கமிஷனுக்குப் பெரிய பொறுப்பு கூட இருக்கிறது. சிண்டிகேட், அகடமிக் கவுன்சில், செனட் இவைகளுக்கெல்லாம் ஆலோசனை சொல்லவேண்டியது. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சட்டமுன்வடிவில் சான்சலர் பற்றி இருப்பதாலே, ஆளுநரைப்பற்றிப் பேசுகிறார்கள். அதை அனுமதிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் அதைத் தொடர்பாக வைத்துக் கொண்டு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்லலாம், என்ன சொல்லக் கூடாது

என்பதைப்பற்றிப் பார்த்துப் பேசுவது நல்லது. (குறுக்கீடு.) வேந்தர் என்பவர் உலகம் தெரியாதவர் என்பது போன்று பேசுவது நல்லதல்ல. ஆளுநரைப்பற்றிப் பேசுவதை நான் தடை செய்யவில்லை. சட்டமுன் வடிவிலே அவரைப்பற்றி வருகிறது. அது தொடர்பாகப் பேசுவது நல்லது.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :* துணைத் தலைவரவர்களே, இங்கே ஆளுநரைப்பற்றி விமர்சனம் செய்யப்படவில்லை. பல்கலைக் கழகத்தின் சட்டத்தின்படி, நம்முடைய தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தின்படி, வேந்தர் என்பவர் சான்சலர் என்ற அடிப்படையில் அந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டுப் பேசுவதை தாங்கள் அனுமதிக்கலாமென்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* ஆளுநரைப்பற்றிப் பேசக் கூடாது என்பது மரபு. சட்டமுன்வடிவில் அவர் சான்சலராக இருப்பதாலே, உறுப்பினர்கள் பேசுவதை அனுமதிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அதனாலே அவர் அறையிலே இருப்பவர், வெளியிலே இருப்பவர், விவரம் தெரியாதவர் என்றெல்லாம் பேசுவது நல்ல மரபாகாது.

*திரு. ஆர். டி. சீத்தாபதி :* துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆளுநரைப்பற்றி விமர்சிக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.

*டாக்டர் இரா. சனார்த்தனம் :* துணைத் தலைவரவர்களே, எங்களுக்கு ஆளுநர் மேலே இருக்கிற மிகுந்த பிரியத்தால், நிறைய பல்கலைக் கழகம் வரும்போது, இன்னும் அதிகமான வேலைகள் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறோம்.

*திரு. மு. செ. சங்கரலிங்கம் :* துணைத் தலைவரவர்களே, ஆளுநருக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியவர் யார்? அந்த 8 பேரை அவரே தேர்ந்தெடுப்பதாக இருந்தால், யாரைத் தேர்ந்தெடுப்பார்? எப்படித் தேர்ந்தெடுப்பார்? ஏற்கெனவே தமிழகத்தில் இந்தப் பிரச்சினை வந்து ஒரு துணை வேந்தர் நியமனத்திலே ஆளுநர் ஒன்று சொல்ல, அதை அரசு சார்பாக கல்வி அமைச்சர் மறுக்க, அது பல்வேறு சிக்கலை உண்டு பண்ண, ஒரு துணை வேந்தர் பெயரே கெட்டுப் போகும் நிலைக்கு வந்தது. இந்த நிலைமையை மாற்ற பிளானிங் கமிஷன் என்று வந்தால், நிச்சயமாக அவர்கள் ஒரு நல்ல



நிலைமையில் இருந்து தேர்ந்தெடுப்பார்கள். ஒரு கல்வியாளராக இருப்பவர்களுக்கே இப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்பதால், இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டியது என்று தெரிவித்துக்கொள்கிறேன். துணை வேந்தரே தேர்ந்தெடுக்கப்படுவதுதான் நியாயம். 4½ கோடி மக்களை ஆளுபவர்களே தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்படாத நிலை இருப்பதால், ஆட்சிக் குழுவுக்கும், வேந்தருக்கும் அந்தக் கல்லூரிகள் எப்படி நடந்து கொண்டிருக்கின்றன என்றே தெரியாது. உதாரணமாக ஒன்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் இங்கிருந்து விலகாமலும், விலகியும் சொல்ல வேண்டியிருக்கிறது. அனுமதியுடன் பேசுகிறேன். மதுரைப் பக்கத்திலே கமுதியில் ஒரு கல்லூரி இருக்கிறது. அதில் மகளிரும் மாணவர்களும் படிக்கின்றனர். அங்கு கழிவறை கிடையாது. அந்தக் கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்து விழுந்துவிடும் என்று பிரின்சிபால், அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இது யுனிவர்சிட்டிக்குத் தெரியுமா? தெரியாது. யுனிவர்சிட்டி பக்கத்திலேதான் இருக்கிறது. மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தால் அது தெரிந்திருக்கும். கழிவறை எங்கே இருக்கிறது என்றால், அந்தப் படத்தைக் காட்டுவதற்கு தலைவர் அவர்களிடம் அனுமதி பெற்றிருக்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :* படத்தைக் காட்டுவது என்றால் ஒரு 'எக்சிபிட்' மாதிரி காட்டக் கூடாது. தாங்கள் படத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதை என்னிடத்திலே கொடுத்து, யாரிடத்திலே கொடுக்க வேண்டுமோ அதாவது அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்க வேண்டுமானால் அவர்களிடத்திலே கொடுக்கலாமே தவிர, அதை எடுத்து எல்லோருக்கும் தெரிகிறமாதிரி செய்யக் கூடாது.

Nothingshould be exhibited within the House.

*திரு. மு. செ. சங்கரலிங்கம் :* துணைத் தலைவரவர்களே, நான் எடுக்கும் போது தெரிகிறது. அந்தக் கட்டிடம் விழுந்துவிடக் கூடாது என்று கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். ஒரு முட்டுக்கட்டை. இந்தப் பக்கம் மகளிர் இருக்க வேண்டும். அந்தப் பக்கம் மாணவர்கள் இருக்க வேண்டும். இது இங்கு ஒரு கதவு கண்டிப்பாக இடிந்து விழுந்து விடும் நிலை, மற்றும் பல்வேறு நிலைகளையும் தெரிவித்து இதை, துணைத் தலைவர் அவர்கள் மூலமாக, கல்வி அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அது அவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது.

(பிற்பகல் 1-25)

சிண்டிகேட் உறுப்பினரோ அல்லது யூனிவர்சிடியின் துணை வேந்தரோ இந்த நிலைமையைப் போய்ப் பார்த்தார்களா என்றால் இல்லை. காரணம் அவர்கள் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியத்தில் இல்லை. அவர்களை ஆளுநர் நியமிக்கிறார். அவரைப் போய்ப் பார்த்தால் போதும். அதுவும் 3 ஆண்டு கழித்து பதவிக் காலம் முடியும்போது போய்ப் பார்த்தால் போதும். எனவே அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்ற அடிப் படையில் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூற விரும்பு கிறேன். செனட், சிண்டிகேட், அகடமிக் கவுன்சில் ஆகிய அனைத்திற்கும் பல்வேறு துறைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இடம் அளிக் கப்பட வேண்டும். அப்போதுதான் கல்வியைப் பரவலாக்க முடியும். இல்லை யென்றால் யாருக்கும் அதனாலே பயனில்லை. இந்தச் சட்ட முன்வடிவில் வரவேற்க வேண்டிய அம்சங்கள் பல இருந்தாலும்கூட, இன்னும் வரவேற்கத் தக்க வகையில் இது மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழக முதல்வர் அவர்களேகூட கூறியிருக்கிறார்கள். சுயாட்சிக் கல்லூரிகள் என்று பார்த்தால், இந்தியாவில் உள்ள மொத்த கல்லூரிகளில் 100 க்கு 98 சதவிதம் தமிழ் நாட்டில்தான் இருக்கின்றன. ஆனால் அவைகள் சுயாட்சி நிறுவனங்களாக இருக்கின்றனவா என்றால் இல்லை. அத்தகைய கல்வி நிறுவனங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுடைய 'டிக்டேடர்ஷிப்' ஆக இருக்கிறது. அதற்குப் பெயர்தான் சுயாட்சியா? உதாரணத்திற்கு இந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம் மகளிர் கல்லூரி யில் ஒரு மாணவி 1984-85 ஆம் ஆண்டு முதலாண்டு படித்தார், பாட்டனி முதல் செமஸ்டரில் பாஸ் செய்துவிட்டார். 2 மற்றும் 3 வது செமஸ்டர் வரும்போது, அவருக்கு ஒரு மேஜர் ஆப்பரேஷன் நடந்தது. அதன் காரண மாக அவர் கல்லூரிக்கு வர முடியவில்லை. அதைக் குறித்து கல்லூரிக்கு அவர் மெடிகல் சர்ட்டிபிகேட் கூட கொடுத்துவிட்டார். பிறகு 4-வது செமஸ்டர் ஆரம்பிக்கும்போது தான், மீண்டும் 2 வது செமஸ்ட்ரில் சேர்ந்து கொள்ளுகிறேன் என்று பிரின்சிபாலிடம் கேட்டார். அந்தப் பிரின்சிபால் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இதற்காக மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் வைஸ்-சேன்சலரே தொலைபேசியில் அந்த பிரின்சி பாலோடு டெலிபோனில் பேசி அந்த மாணவியைச் சேர்த்துக்கொள்ளும்படி





கேட்டார். ஆனால் அந்தக் கல்லூரியைப் பொறுத்த வரை, "யாரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், யாரைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது என்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. இதில் யாரும் தலையிட முடியாது" என்று அந்த அம்மையார் சொல்லிவிட்டார்கள். இதற்குப் பெயர்தான் தன்னாட்சியா என்று நான் கேட்க விரும்புகிறேன். தன்னாட்சி என்ற பெயரில் இதுபோன்ற நிலைமைகள் இருக்கக் கூடாது என்பதற்காக நான் இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய நிலைமையில் சுயாட்சிக் கல்லூரிகள் என்பவை இப்படித்தான் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டில் 4 விதமான கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றின் தரம் 4 விதமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் பல்கலைக் கழகத் தால் நிர்ணயிக்கப்பட்ட படிப்பைக் கொண்ட கல்லூரிகள். அபிலியேட்டட் காலேஜ் எஜுகேஷன் இன்னொரு வகை. மூன்றாவது வகை செல்ப் ஃபைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்கள். அடுத்தது 4-வது வகை அட்டானமஸ் கல்லூரிகள். அட்டானமஸ் கல்லூரிகளில் அதிகாரிகளுடைய பிள்ளைகளும் வசதியுடையவர்களின் வீட்டுப் பிள்ளைகளும்தான் படிக்க முடிகிறது. சாதாரணமானவர்களின் வீட்டுக் குழந்தைகள் அங்கே படிப்பதற்கு வாய்ப் பில்லை. இது போதாதென்று இப்போது செல்ப் பைனான்சிங் இன்ஸ்டி டியூஷன்கள் என்று சொல்லி நிறைய வளர்ந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், வேலையில்லாத் திண்டாட்டம் தமிழகத்திலே அதிகமாக இருக்கிறது. ஆண்டு தோறும் புதிய பட்டதாரிகள் பட்டங்களை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். பட்டங்கள் பறந்து கொண்டிருக்கின்றன. பரவாயில்லை. இந்த நிலையில் 2,000 எஞ்சினீயரிங் கிராஜுவேட்ஸ் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று வேலை தேடித்தரும் நிலையங்களில் உள்ள லைவ் ரிஜிஸ்டர்களில் அவர்கள் பெயர்கள் இருக்கின்றன. இந்த அளவுக்கு படித்த எஞ்சினீயரிங் கிராஜுவேட் டுகளுக்கே வேலை இல்லாத நிலையில்தான் புதிதாக 27 எஞ்சினியரிங் கல்லூரிகளைத் துவக்குவதற்காக யூனிவர்சிடி ரெகக்னிஷன் கொடுத்திருக் கிறது. எனவேதான் சொல்லுகிறேன், இந்த அமைப்புகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் சம்பந்தமே இல்லை. 2,000 பேருக்கு ஏற்கெனவே வேலை இல்லாத நிலை இருக்கும்போது, புதிதாக 27 எஞ்சினீயரிங் கல்லூரிகளுக்கு நாம் அனுமதி கொடுக்கலாமா? இவர்களும் வேலை இல்லாமல் அலையட்டும் என்று கொடுத்திருக்கிறார்களோ என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, அட்டானமஸ் கல்லூரிகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதற்கான சிலவற்றை மட்டும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் தமிழகத்தில் வெள்ளம் வந்ததையொட்டி எல்லோருக்கும் வெள்ள நிவாரண நிதி அளிக்கப்பட்டது. இந்த நிதி உதவி தனியார் கல்லூரிகளுக்குப் பொருந்தாதா என்ன? அங்கே பணியாற்றும் அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அந்த நிதியுதவி அளிக்கப்படவில்லை. கேட்டால் 'உங்களுக்கு வெள்ளம் வரவில்லை' என்கிறார்கள். இது நியாயமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதைப் போலவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பொங்கல் பரிசாக ஒரு குறிப்பிட்ட தொகையை அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். இந்தப் பணமும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டது. கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஒரு சர்குலர் போட்டு பணம் இல்லை என்றே சொல்லியிருக்கிறார்கள், இவையெல்லாம் கூட யூனிவர்சிடி கவனிக்க வேண்டும். இதற்காக என்று பணம் ஒதுக்கி அரசாங்கம் ஆணையிட்ட பிறகும்கூட ஆசிரியர்களுக்கு இது மறுக்கப்படுகிறது என்றால், இதைப் பார்க்க வேண்டாமா? எனவேதான் யூனிவர்சிடியின் ஸ்டிரக்சரையே மாற்றுவதுதான் நியாயமாக இருக்கும் என்ற அடிப்படையில் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

அண்மையில் திருநெல்வேலிக்கு ஒரு கல்லூரியில் (எக்ஸ்டென்ஷன் கவுண்டர்) விரிவு மையம் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது. அந்த விரிவு மையம் இருக்கிறதா என்றால்-இல்லை. 500 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

வாங்கி இரண்டாண்டுகள் ஆகின்றன. இப்போது அந்த நிலம் தகுதியான இடத்திலே இல்லையென்று மாற்றப்பட வேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் மாற்றவில்லை. 500 ஏக்கர் நிலம் வாங்கி எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த நிலம் பயன்படுகிற வகையில் திருநெல்வேலியில் ஒரு யூனிவர்சிடியை ஏற்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது, கட்டபொம்மன் என்ற பெயர் வைக்கலாம் என்று தெரிவித்தார்கள். அவருடைய பெயரில் யூனிவர்சிட்டி வரவில்லை. ஏன் திருநெல்வேலியில் யூனிவர்சிட்டி வரவில்லை என்பதற்கான விளக்கத்தை மாண்புமிகு கல்வி





யமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். 500 ஏக்கர் நிலம் வாங்கி எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது, தாங்கள் குறுக்கிட்ட காரணத்தாலே, அவர் சொல்ல வந்த கருத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று கருதுகிறேன். ஆகவே உங்கள் மூலமாக ஒன்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதிலே என்ன 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' இருக்கிறது?

திரு. ஆர். டி. சீத்தாபதி: அவர் சொல்ல வந்தது சேன்சலராக முதல்வர் இருக்க வேண்டும், ஆளுநர் வேண்டாம் என்பது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்றால், விதிக்குப் புறம்பாக அவையில் ஏதாவது நடந்தால்தான், எழுப்பலாம். சரியாக இருக்கும்போது 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' இல்லை.

திரு. ஆர். டி. சீத்தாபதி: அவர் சொல்ல வந்தது ஆளுநர் சேன்சலராக இருக்க வேண்டுமா அல்லது முதலமைச்சர் இருக்க வேண்டுமா என்பது பற்றி. தாங்கள் குறுக்கிட்டதன் மூலமாக அது நின்றுவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஆளுநர் பற்றிப் பேசக் கூடாது என்பது மரபு. அவர் சேன்சலராக இருக்கிற காரணத்தால், இங்கே பேச அனுமதிக்க வேண்டும். ஆனால் வரம்பிற்குள் பேச வேண்டும் என்று சொன்னேன். ஆளுநர் பற்றிப் பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. 'வரம்பிற்குள் நின்று பேசுங்கள், ஜாக்கிரதையாகப் பேசுங்கள்' என்று சொன்னேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சேன்சலராக முதலமைச்சர் வர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறாரா என்று அவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1986 ஜனவரி 29

திரு. மு. செ. சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதிலே 'பாயிண்ட் ஆஃப ஆர்டர்' இல்லை. பதில் சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவுகளின் மீது கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித் திருக்கிறார்கள். ஆக்கபூர்வமாக கருத்துக்களைத் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே ஒரு பிரச்சினை. ஆளுநர் பற்றிச் சொன்னார்கள். ஒரு பல்கலைக் கழகத்தினுடைய வேந்தராக இருக்கின்ற காரணத்தால், இப் போதுள்ள சட்ட நிலைமையில் அவர்கள் செய்யலாம் என்று இருப்பதால், அவர்கள் செய்கிறார்கள். நாமும் அதை ஏற்றுக்கொள்கிறோம். பல்வேறு மாநிலங்களில் இது போன்ற நிலைமைகள் வரும்போது, பெரிய பிரச்சினை யாக மாறுகிறது. அதன் காரணமாக மாநில, மத்திய அரசுகளுக்கிடையே சௌஜன்யமான உறவு கெடுகிறது என்பது மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சமீபத்திலே நடந்த கல்வி யமைச்சர்கள் மாநாட்டில் துணை வேந்தர்கள் நியமனம் குறித்த முறையை மாற்றி சிறந்த முறையைக் கொண்டு வந்தால், நன்றாக இருக்கும் என்ற கருத்து கல்வியமைச்சர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதைப் பற்றி மேற்கொண்டு சந்தர்ப்பம் வரும்போது, மத்திய அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக் கழக நிர்வாகத்தில் கவர்னருடைய அதிகாரம் இருக்க வேண்டுமா, மாநில அரசின் அதிகாரம் இருக்க வேண்டுமா, சிண்டிகேட்டிற்கு அதிகாரம் இருக்க வேண்டுமா என்றால், தன்னாட்சி என்ற முறையில், பல்கலைக் கழக அமைப்புகளுடைய அதிகாரம்தான் இருக்க வேண்டும். அதை மீறி வெளியே இருந்து வருகிற அதிகாரத்தைக் குறைத்துக்கொண்டு வர வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும்.



1986 ஜனவரி 29] [திரு. செ. அரங்கநாயகம்]

இன்னுமொன்று. இந்தப் பல்கலைக் கழகங்களினுடைய நிர்வாகத்தில் ஆசிரியர்கள் அதிகமான அளவிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும், அவர் களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட தற்குப் பிறகுதான் அதற்குப் பிறகு வந்த புதிய சட்டங்களில் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த விதத் திலேதான் இந்தச் சட்ட முன்வடிவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. பழைய பல்கலைக் கழகங்களில் அப்படி கொண்டுவராத காரணத்தால், மதுரை பல்கலைக் கழகம், சென்னை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆசிரியர் களுக்குப் போதுமான அளவிற்கு அந்த வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தருவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கே ஆசிரியர்களுடைய கவனத்திற்கும், ஆசிரியர் சார்பாகப் பேசுபவர்களுக்கும் சொல்லிக் கொள்வது:—உரிமையைத் தரும்போது அந்த உரிமையை நம்முடைய நன்மைக் காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நிறுத்திக்கொள்ளாமல், எந்தக் காரணத்திற்காகச் செயல்படுகிறதோ அதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்பது மேலோங்கி நிற்க வேண்டும். நமக்கு மேலே பல்கலைக்கழகம், நமக்கு மேலே சொசைட்டி, நமக்கு மேலே நாடு என்கின்ற அளவிலே அந்த

(பிற்பகல் 1-35)

உரிமைகள் பயன்பட வேண்டும். அந்த ஒரு அச்சத்தின் காரணமாகத்தான் நாங்கள் ஓரிரண்டு நிறுவனங்களிலே இதைக் கொண்டுவந்திருக்கிறோம். கொண்டுவந்ததனுடைய அனுபவத்தைப் பார்க்கின்றபோது, யார் தேர்ந் தெடுத்தார்களோ, அவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கு, அந்த நிறு வனங்களை மிகவும் பயன்படுத்திக்கொள்கின்றபோது, ஆரம்பிக்கின்றபோது, எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அதற்கு அந்த நிறுவனம் முழுமையாகப் பயன்படாமல் போகக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. நான் ஆசிரியர் களை வேண்டிக்கொள்வதெல்லாம், எங்களைப்பற்றி மட்டுமல்ல, பொதுவான அந்த நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டதே, அதற்காக நாங்கள் பாடுபடுவோம் என்று சொல்கின்ற நிலைமைக்கு அவர்கள் முன்வர வேண்டும். அதிலே முன்னேற்றம் இருந்துகொண்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவைகள் எல்லாம் இப்போது இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட பகுதியினர் மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. அப்படி யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். வளர்ந்துவருகின்ற சமுதாயத்தில் இப்போதுள்ள பழக்கவழக்கங்களில் இருக்கின்ற குறைபாடுகள்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஜனவரி 29

அது என்னிடத்திலே இருக்கலாம், ஆசிரியர்களிடத்திலே இருக்கலாம்; மற்றவர்களிடத்திலே இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவைகளைக் களைந்துகொள்ள வேண்டும், திருத்திக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் இன்றைக்கு எல்லோரும் கூட்டாகச் சிந்திக்கின்றபோது, நமக்கு நிலைமைகள் தெளிவாகத் தெரிகின்றன. அந்த அடிப்படையில் நாங்கள் இந்த உரிமைகளைத் தந்திருக்கிறோம். அந்த உரிமைகளை முதல்படியாக நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும். உதாரணத்திற்காகக்கூட நான் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறேன். தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் என்று சொல்வது, கடந்த 36 ஆண்டு காலத்தில் உயர் கல்வியாக இருக்க ஏதாவது ஒரு மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறோம் என்றால், அது இது ஒன்றுதான் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு இதிலே ஆர்வமாக இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, பல்கலைக்கழகங்களும் இதிலே ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். வெளிநாடுகளில் அப்பிளியேட்டிங் டைப், மறைந்துகொண்டு வருகின்றது. பல்கலைக்கழகம் என்றால், 10 கல்லூரிகளை நடத்திக்கொண்டிருக்கின்ற ஒரு மேனேஜ்மெண்ட் என்பதல்ல. பல்கலைக் கழகம் என்பது ஆய்வு நடைபெறுகின்ற, சமுதாயம் சம்பந்தப்பட்ட ஆய்வு நடைபெறுகின்ற, சமுதாயத்தினுடைய பல்வேறு துறைகளைப் பற்றி, சிக்கல்களைப் பற்றி, யோசனை சொல்கின்ற, வழிமுறைகளைச் சொல்கின்ற ஒரு அறிவுக் கேந்திரமாக இருக்க வேண்டும். அந்தக் கருத்தே இந்தியப் பல்கலைக்கழகங்களிலே இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றது. அந்த நிலைமைக்கு நாம் வந்தாக வேண்டும். நான் உதாரணத்திற்காகக்கூடச் சொல்லியிருக்கிறேன். அலபாமா பல்கலைக் கழகத்திற்குப் பக்கத்திலே ஜெனரல் மோட்டார் கம்பெனி என்று இருக்கின்றது. அந்த நிறுவனத்தை மூடிவிடக்கூடிய நிலைமை வந்தபோது, அந்த அலபாமா என்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்தப் பிரச்சினையைக் கையிலே எடுத்துக்கொண்டு 'கார்பொரேட்டர்' சம்பந்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியைச் செய்து அதிலே ஒரு மாறுதலைச் சொன்னதன் காரணமாக, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்த அந்த கம்பெனி மறுபடியும் வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்ற நிலைமையைச் சொல்லியிருக்கிறேன். இதைப்போலவே மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லைப் சையன்ஸ் பிரிவினர் எவ்வளவு அற்புதமான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அப்படிப்பட்ட வகையில் சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற



1986 ஜனவரி 29] [திரு. செ. அரங்கநாயகம்]

அறிவுக் கேந்திரமாக இருக்கின்றது என்று சொல்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், நாம் இதை விட்டால் வேறு வழியில்லை. இதை நாம் உணர்ந்தாக வேண்டும். இன்றைக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் சர்விசை நம்பியோ, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களை நம்பியோ பிரச்சினைகளைத் தீர்த்துகொண்டிருப்பதுபோல இருக்கின்றது. அந்த பாவனை இருந்தாலும்கூட, அறிஞர் பெருமக்கள், சமுதாயத்திலே 4 சதவிகிதம், 2 சதவிகிதமாகத்தான் இருப்பார்கள். அவர்களுடைய அறிவை நம்பித்தான், ஆற்றலை நம்பித்தான், இந்த நாடு மட்டுமல்ல, எந்த நாடும் இருந்துகொண்டிருக்கின்றது. அதற்கு வாய்ப்பு இங்கே இருக்கின்றது. அதற்குப் புகலிடம் எங்கே இருக்கின்றது என்றால், அது இந்தப் பல்கலைக்கழகத்தில் தான். பல்கலைக்கழகங்கள் அந்தப் பணியைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். அந்தக் குற்றச்சாட்டிலேயிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அதற்கு பல்கலைக் கழகங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ்ப் பல்கலைக் கழகம், மற்ற பல்கலைக்கழகங்களைப்போல் இல்லை என்றால், அப்படி இருக்கக் கூடாது என்ற காரணத்திற்காக இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இது ஒரு பல்கலைக் கழகம். பெரிய கல்லூரி அல்ல. பல்கலைக் கழகம் என்பதை ஆய்வு செய்து சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அவைகள் மெல்ல மெல்ல முன்மாதிரியாக பல்கலைக் கழகங்களாக வளர்ந்து கொண்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் நாம் பார்க்கிறோம். மத்திய அரசு சொன்னதற்காக ஆதரிக்கின்ற சுபாவம் எங்களுக்கு இல்லை. மத்திய அரசு சொன்னதைக் கேட்காத மாநிலங்கள் எத்தனையோ இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, நாம் மட்டும் அதை எடுத்துக் கொண்டு செய்கிறோம் என்றால், நல்லது விளையும் என்ற காரணத்திற்காகத் தான். மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அட்டானமஸ் கல்லூரியிலிருந்து வெளியே வருகின்ற மாணவர்கள் அபிலியேட்டட் கல்லூரிகளிலே இருந்து வெளியேறுகின்ற மாணவர்களைவிட தேர்விலே உயர்ந்திருக்கின்றார்கள் என்பதை நாம் கேள்விப்படுகிறோம். ஆகவே இந்த அட்டானமஸ் கல்லூரி இருக்க வேண்டும், ஆனால்

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஜனவரி 29

(பிற்பகல் 1-40)

இந்தப் பிரச்சினைகளைப் பேசுகிற ஒவ்வொரு காலத்திலும் அபிலியேட்டட் கல்லூரிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றிப் பேசாமலேயே இருக்கிறோம். அதில் உள்ள குறைபாடுகளை மனம் திறந்து பேசாமல் இருந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. செ. சங்காலிங்கம் அவர்கள் ஒரு போட்டோ காட்டினார்கள். அது ஒரு அபிலியேட்டட் டைப் கல்லூரி. அதைப்போல பராசக்தி மகளிர் கல்லூரி பற்றிச் சொன்னார்கள். அது ஒரு அட்டானமஸ் கல்லூரி. அதனால் ஏற்படுகிற தவறல்ல. அது இல்லாமல் ஏற்படுகிற தவறும் அல்ல. எங்கும் நடைபெறுகிறது. குறிப்பிட்ட அங்கேயும் நடைபெற்றிருக்கிறது. தன்னாட்சி உரிமை என்பது 'அகடமிக் ப்ரீடம்' தரவும், 'அகடமிக் எக்ஸலன்ஸ்' பெறுவதற்கும் பாடுபடக்கூடிய உரிமையைக் கொடுக்கிறது. அட்டானமஸ் கல்லூரியில் போதிக்கிற ஆசிரியர்கள், படித்தாக வேண்டும், நன்றாகப் படித்தாக வேண்டும். அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற பாடத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டாக வேண்டும். கொஞ்சம் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். அபிலியேடட் டைப் கல்லூரிகளில் என்ன நடக்கிறது என்பதை வேதனையோடு சொல்கிறேன். எத்தனை ஆசிரியர்கள் 'டிக்டேஷன்' செய்து கொண்டிருக்கிறார்கள்; எத்தனை ஆசிரியர்கள் ஒரே நோட்சை வைத்து, பேசிக் கொண்டிருக்கிறார்கள்; எத்தனை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் முறையில் பாடங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? இந்தக் குறைபாடுகள் எல்லாம் ஒரு சிஸ்டத்திலே வருவது. இதில் ஆசிரியர்களைக் குறை சொல்வது என்பது மிகச் சுலபம். சிஸ்டத்தில் குறை வந்துவிட்டதால், அதை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறோம். அட்டானமஸ் என்று மாற்றுகிறபோது அதற்கு முன்னாலே சரியாக வேலை செய்யாத ஆசிரியர்கள் கூட நல்லபடியாக வேலை செய்ய வாய்ப்பு இருக்கிறது. சரியாகப் படிக்காமல் இருந்த மாணவர்கள்கூட நன்றாகப் படிக்கும் நிலைமை இருக்கிறது. காம்படிடிவ் எக்சாமினேஷன்களில் அட்டானமஸ் கல்லூரி மாணவர்கள் நல்ல முறையில் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது, இதை ஆதரிப்பதா, எதிர்ப்பதா?

(திரு. மு. செ. சங்காலிங்கம் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சரவர்கள் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கலாமே!



1986 ஜனவரி 29]

**திரு. மு. செ. சங்காலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசி முடித்த பிறகு, விளக்கம் கேட்பதற்கு நேரமில்லாமல் போகலாம். அமைச்சர் அவர்கள் பேசுவதிலிருந்து அபிலியேடட் கல்லூரி ஆசிரியர்கள் வேலை பார்க்காத மாதிரி நாட்டு மக்களுக்குத் தெரியும் வாய்ப்பு இருக்கிறது. அமைச்சரவர்கள் அப்படிக் கூறுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். தன்னாட்சிக் கல்லூரி ஆவதற்குமுன் அந்தக் கல்லூரிகளிலிருந்து படித்து வெளியேறியவர்கள் எல்லாம் திறமையானவர்கள்தான். அப்போது அவை அபிலியேடட் கல்லூரிகள்தான். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்துத்தான் மாணவர்கள் இத்தனை ஆண்டுகளாக வெளியே வந்திருக்கிறார்கள். பேறிஞர் அண்ணா அவர்கள்கூட ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்துத் தான் வந்திருக்கிறார்கள். அபிலியேடட் கல்லூரியில் வேலை பார்த்தவர்கள்தான் அட்டானமஸ் கல்லூரியிலும் இருக்கிறார்கள். குற்றாலம் பராசக்தி கல்லூரி, பாத்திமா கல்லூரி, மதுரை கல்லூரி ஆகியவை மாத்திரம் கல்லூரிகள் அல்ல; ஆலங்குளத்திலும், கூடுவாஞ்சேரியிலும்கூட கல்லூரிகள் இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை கொடுக்கப்படவில்லை. நான் தன்னாட்சி உரிமை கொடுப்பதை எதிர்க்கவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் இதைத்தான் சொல்கிறேன். குறைபாடுகளைச் சொல்லுங்கள். தன்னாட்சி உரிமை தரப்படுகிறது, அந்த முறையை வரவேற்கிறோம் என்று சொன்னால், இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. அப்படி இல்லாமல், ஆசிரியர்களுக்குள்ள குறைபாடுகளைச் சொல்லி, தன்னாட்சி உரிமை தரப்படுவதை எதிர்க்கிறோம் என்று சொல்லி, மக்களுக்கு ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பேசுகிற ஒவ்வொரு நேரத்திலும், கல்லூரி ஆசிரியர்கள் சார்பாகப் பேசும்போது, தன்னாட்சி உரிமையை எதிர்க்கவில்லை என்பதைச் சொல்லிவிட்டு, குறைபாடுகளைச் சொல்லுங்கள். இவ்வளவும் நான் பேசியதற்குப் பிறகுதான் நீங்கள் அதைச் சொல்லுகிறீர்கள். ஆரம்பத்திலேயே, தன்னாட்சி உரிமையை எதிர்க்கவில்லை, அதில் இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லியிருந்தால், இதில் பேசுவதற்கே இடமில்லை. மற்றவற்றைப் பற்றிப் பேசுவதற்கு இடமில்லை. லயோலா கல்லூரி ஏன் நல்ல கல்லூரி? கமுதி கல்லூரி ஏன் அப்படி இருக்கிறது? யாருடைய தவறு? நாங்கள் சம்பளம் தருவதில்லையா? 80 சதவிகிதம் இருந்ததை இப்போது நூறு சதவிகிதமாகத்

தருகிறோம். லயோலா கல்லூரி நன்றாக நடைபெற்று, கமுதி கல்லூரி ஏன் மோசமாக இருக்க வேண்டும்? அதற்கு யார் பொறுப்பு? அரசு தன் கடமையைச் செய்யவில்லை என்று சொல்ல முடியுமா? பிரின்சிபால், ஆசிரியர்கள் தவறு இது. இதற்கு யார் பொறுப்பு ஏற்றுக் கொள்வது? எப்படியும் நம்முடைய நிலைமையை உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். பேசுகிற பேச்சுக்கள் மூலமாக ஆசிரியர்களைப்பற்றித் தவறான கருத்து வரவேண்டுமென்பதல்ல. நான் பேசுகிற பேச்சுக்களால் நிலைமைகள் நல்ல முறையில் மாற வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நிர்வாகம் பற்றிச் சொன்னார்கள். பல்கலைக் கழகம் கவனிக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அதையும் ஏற்றுக்கொள் கிறேன். பல்கலைக் கழகம், ஒவ்வொரு கல்லூரியிலும் ஆசிரியர்கள் சொல்லித் தருகிறார்களா என்று பார்க்கின்ற காரியத்தைச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-45)

இப்படிப் பேசுகிற நேரத்தில் ஏதோ இந்தக் காலத்திற்காகச் சொல்லவில்லை. இது நாட்டு முன்னே இருக்கிற மிக முக்கியமான பிரச்சினை. சம்பளம் வாங்குகிற ஒருவர், தன்னுடைய கடமையை ஒழுங்காக நிறைவேற்றுகிறாரா என்ற 'அக்கவுண்டபிளிடி' யைப் பார்க்க வேண்டும். எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் சரியாகப் பணியாற்றுகிறாரா என்று பார்க்க டிபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் இருக்கிறார். ஹையர் செகண்டரி பள்ளி ஆசிரியர் ஒழுங்காகப் பாடம் சொல்லித் தருகிறாரா என்று பார்க்க மாவட்ட அளவில் அதிகாரி இருக் கிறார். ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்கு என்ன ஏற்பாடு இருக்கிறது? ஏன் பல்கலைக் கழகங்கள் இதைச் செய்யக்கூடாது? ஏன் அத்தகைய அதிகாரங் களை பல்கலைக் கழகங்களுக்குக் கொடுக்கக்கூடாது? கல்லூரி ஆசிரியர்கள் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்று கேட்கக்கூடாதா? சங்கங்கள் என்ற பெயரால், நல்ல ஆசிரியர்கள் சில பேர் சொல்லிக் கொடுப்பதைப் பயன் படுத்திக்கொண்டு, அந்தப் போர்வையில் இவர்கள் ஏன் ஒளிய வேண்டும்? வெறும் டிக்டேஷன் போன்ற முறைகளால் ஏற்படும் அபாயம் புரிகிறதா? டிக்டேஷனை விட தவறான முறை இருக்கிறதா? அப்படியென்றால் அதற்கு மாற்றுவழி 'டேப்' இருக்கிறது. அதற்கும் மாற்றுவழி, புத்தகங்கள் இருக் கின்றன. பின் எதற்காக இவர்களுக்குச் சம்பளம்? ஆகவே இவைகளை எல்லாம் மேற்பார்வை பார்க்கும் பொறுப்பை பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் உயர் கல்வி என்று, எம்.ஏ. படித்துவிட்டாலேயே





எல்லாம் தெரிந்துவிடும் என்று பொறுப்பைத் தந்துவிடுகிற நிலைமையில் இப்போது இருக்கிறது. அறிஞர் அண்ணா போன்றவர்கள் இங்கே படித்த தால், அந்தக் கல்லூரி உயர்ந்ததாகிவிடுமா? படித்துவிட்டு ஊர் சுற்றிக் கொண்டு இருந்தவர்கள் யார் என்று நமக்குத் தெரியாது. எத்தனை பேர் மேலே வந்தார்கள் என்பதுதான் கணக்கே தவிர, ஒருவர் இரண்டு பேரை வைத்து ஒரு முறையை நாம் ஆதரிக்க முடியாது. நாம் செலவு செய்கிற பணம் பெரும் பகுதி சம்பளத்திற்குப் போகிறது. மாணவர்களின் நலனுக் காக அந்தப் பணம் எப்படிப் போக வேண்டுமென்று சொல்கிற பொறுப்பு சங்கங்களுக்கு இருக்கிறது. ஆகவே இந்தக் குறைபாடுகள் இருக்கக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், நாங்கள் வந்ததற்குப் பின்தான் இத்தனை பல்கலைக் கழகங்கள் கொண்டுவந்து, அதற்கான சட்டத் திருத்தங்கள் எல்லாம் கொண்டு வருகிறோம். இப்போதும் சொல்கிறேன், ஆண்டுக்கு ஒருமுறை பல்கலைக் கழக மசோதா கொண்டுவந்து, இருக்கிற அதிகாரங் களைப் பிரித்துத் தரவேண்டுமென்று இந்த அரசுதான் செய்கிறது. இல்லை யென்றால், பல்கலைக் கழகங்கள் பற்றிய மசோதாவே இந்த அவைமுன் வராமல் இருக்கும். உரிமைகளை நல்லபடியாகச் செயல்படுத்துவதற்கு உங்களுக்குக் கடமை இருக்கிறது. பல்கலைக் கழகங்கள் செம்மையாக நடத்துவதற்கும் உங்கள் சங்கம் ஆலோசனை சொல்லவேண்டும். கல்லூரிகள் பற்றியோ, கல்லூரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கும் முறைகள் பற்றியோ எங்கள் கவனத்திற்கு வராமல் இருக்கலாம். அதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். கூப்பிடுகிற நேரத்தில் வந்து நீங்கள் அதைச் சொல்லவேண்டும்.

இன்றைக்குக் கூட சென்னையில் தேசியக் கல்விக் கொள்கை எதிர்ப்பு மாநாடு நடக்கிறது என்றும் அதில் ஆசிரியர்கள் கலந்துகொள்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டேன். என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். தேசியக் கல்விக் கொள்கையில் இருக்கிற சில குறைபாடுகளை எதிர்த்துச் சொல்லக்கூடிய கருத்துக்களை சொல்ல வேண்டுமென்றுதான் இதற்கு முன்பு இருந்ததை விட பரவலான முறையில் விவாதம் நடக்க வேண்டுமென்று மத்திய அரசும் மாநில அரசும் விரும்பி, இந்தப் புத்தகங்களையெல்லாம் மொழி பெயர்த்து எல்லோருக்கும் தந்திருக்கிறோம். விமரிசனம் செய்யுங்கள். அதை வரவேற்கிறோம். நீங்களேகூட டெல்லிக்கு உங்களது கருத்துக்களை அனுப்பினாலும், அந்தக் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு, பயன்படுத்தக்கூடிய அளவிற்குச் செய்கிறார்கள். யாருடைய கருத்தும் அங்கே உதாசீனம்

செய்யப்படுவதில்லை. ஆகவே விமரிசனம் செய்வதை நான் வரவேற்கிறேன். இதை குறைபாடு இல்லாத கொள்கை அறிவிப்பாக யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம். நானேகூட பலவற்றைச் சொல்லியிருக்கிறேன். ஆனால் வெளியில் போஸ்டர் அடித்து ஒட்டுகிறபோது, "தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்து" என்று வருகிறபோது, மக்கள் என்ன நினைப்பார்கள்? தேசிய கல்விக் கொள்கை என்ற ஒன்று புதிதாக வருகிறது. ஆசிரியர்கள் எல்லாம் அதற்குப் பாதுகாப்பாக வந்துவிட்டார்கள் என்று அதைப்பற்றி மக்கள் நினைக்கிற அளவுக்கு அது இருக்கக்கூடாது என்றுதான் சொல்கிறேன். நான் கேட்கிறேன், தேசியக் கல்விக் கொள்கை நமக்குத் தெரியாமல் எப்படி வரும்? தொடக்கக் கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு என்னென்ன செய்வது? இது அதிலே வருகிறது. இதை எதிர்க்கிறீர்களா? பெண்களுக்குக் கல்வி கற்க அதிக வாய்ப்புத் தரவேண்டும். அதை எப்படி செய்வது? அதை எதிர்க்கிறீர்களா? தொழில் கல்வி தரவேண்டும். இல்லையென்றால் ஊர் சுற்றிக்கொண்டிருப்பார்கள். லட்சக்கணக்கில் வேலையில்லாமல் திரிவார்கள், ஆகவே அதற்கு தொழில் கல்வி தேவை என்று இருக்கிறது. இதை எதிர்க்கிறீர்களா? இப்படிப் பார்க்கிறபோது, ஒவ்வொரு அம்சமாகப் பார்க்கிறபோது, அது நிறைவேற்றப்படவேண்டியது, பாராட்டப்படவேண்டியது மட்டுமல்ல, இங்கேயே நாம் ஏற்று நடத்திக் கொண்டிருப்பதைத்தான் அவர்கள் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

(பிற்பகல் 1-50)

மற்ற மாநிலங்களில் நடக்காமல் இருக்கலாம். முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அப்படி இல்லையென்றால், கி.பி. 2000-ல் உலகத்தில் உள்ள எழுத்தறிவில்லாதவர்களில் சரிபாதிப் பேர் இந்தியாவில்தான் இருப்பார்கள். அவர்கள் முன்னேறி வருகின்ற சமுதாயத்திற்குப் பாரமாக உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். இதை நாம் எதிர்க்கிறோமா?

ஆகவே "எதிர்க்கிறோம்" என்று மொட்டையாக நான்கு பேர் பேசுகிறார்கள் என்று சொல்கிறபோது, பொது மக்களிடத்திலே ஒருவித பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறார்கள். தேசியக் கல்விக் கொள்கையை நாம் விமர்சனம் செய்கிறோம்; பேசுகிறோம். ஆனால், "எதிர்த்து" என்று வருகிறபோது, இந்தத் தவறு வருகிறது. நாங்களும் சில அம்சங்களை எதிர்க்கி-





றோம். "மாடல் ஸ்கூல்"-இல் இந்தி மீடியம் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். நாம் அதை எதிர்க்கிறோம் என்று சொன்னோம். மும்மொழிக் கொள்கை என்று சொன்னார்கள். அதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னோம். மும்மொழிக் கொள்கை என்றால், எல்லோரும் உலகத்தில் ஒரு மொழி படித்து, முன்னேறிக்கொண்டிருக்கிற இந்த உலகத்தில் இரு மொழிகள் அல்லது மூன்று மொழிகள் படித்து, பல மொழிப் பண்டிதர்களாக இந்த நாட்டில் இருக்க முடியுமே தவிர, நோபல் பரிசு பெறக்கூடிய அறிஞர்களாக வளரக்கூடிய வாய்ப்புகள் தடுக்கப்படுகின்றன என்ற கருத்தை இங்கு அல்ல, அமைச்சர்கள் மாநாட்டிலே தெரிவித்து வந்திருக்கிறோம். நாங்கள் எதிர்க்காமல் இல்லை. இது ஒரு கல்விக் கொள்கைகூட அல்ல. இது ஒரு "ஸ்டேடஸ் பேப்பர்". இருக்கிற நிலைமைகளைச் சொல்கிற பேப்பர். கொள்கை என்றால் கொள்கையைச் சொல்ல வேண்டும். ஆகவே கொள்கையைச் சொல்லுங்கள் என்று நாம் சொல்லி வந்திருக்கிறோம். நான் சொல்லிவிட்டு வந்த பின்னாலேதான் துறையின் பெயரையே மாற்றியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் சொல்லியிருக்கிறோம்.

அனைவருக்கும் கல்வி என்று சொல்லுங்கள். சாகும் வரைக்கும் படிக்க வேண்டும் என்று சொல்லுங்கள். இல்லையென்றால் அறிவு தேக்கமாக ஆகிவிடும். விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு பெறவேண்டும். Literacy என்பது மட்டுமல்ல; They must be literate scientifically and Technologically" இதுதான் இன்றைய உலகத்தினுடைய போக்கு. சராசரி இந்தியர்களை உருவாக்குகிற கல்வி நிறுவனங்களாக இருக்கக்கூடாது. "Men of Excellence" உயர்ந்த அறிவு படைத்தவர்களை உருவாக்கும் வகையில் இருக்க வேண்டும். இதை நாங்கள் சொல்லியிருக்கிறோம். வெறும் கல்வி என்றால் அறிவை, ஆற்றலை வளர்த்துவிடலாம். அது சமுதாயத்திற்குப் பயன்படுவதாகவும் இருக்கலாம், பயன்படாமலும் இருக்கலாம்; சமுதாயத்திற்கு விரோதமாகவும் இருக்கலாம். படித்துவிட்டு வெளிநாட்டுக்கும் சென்று விடுகிறார்கள். ஆனால் கல்வியின் நோக்கம், நம்முடைய குழந்தை, படித்து, ஆளாகி அறிவு, ஆற்றல் பெற்று நமக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் கல்விக்காக, கோடிக் கோடியாகச் செலவு செய்கிறோமே தவிர, வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போவதற்காக அல்ல. அந்த உணர்வு வரவேண்டுமென்றால், வெறும் கல்வியால் மட்டும் செய்ய முடியாது. கலாச்சாரத்தையும் தந்தாக வேண்டும். தேசபக்தியை ஊட்டியாக வேண்டும். இது சோஷலிச நாடு. எனவே சோஷலிச உணர்வைத் தர வேண்டும். இது மதச் சார்பற்ற

நாடு. எனவே மதச் சார்பின்மை உணர்வைத் தந்தாக வேண்டும். பெரியோர்களை மதிக்கிற பண்புகளைச் சொல்லியாக வேண்டும். இவற்றையெல்லாம் நாங்கள் சொல்கிறோம். இதில் எல்லாம் இருக்கிறது. எனவே நாங்கள் ஆதரிக்கிறோம் என்று பொருள் அல்ல. அல்லது அதில் இருக்கிற எல்லாவற்றையும் எதிர்க்கிறோம் என்று பொருள் அல்ல. எது தவறோ அதை எதிர்க்கிறோம். இவ்வாறு எல்லாவற்றையும் சொல்கிறோம். ஆகவே ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கடமைகளை ஆற்றுகிறபோது, மக்கள் மத்தியிலே வந்து பேச வருகின்றபோது, நாம் எப்படிப் பேசினால் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதைச் சிந்தித்துப் பேச வேண்டும் என்று .கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு இந்த நோத்திலே கேட்டுக்கொள்வது என்னுடைய கடமையாகும்.

அதற்கு அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக் கழகம் பற்றியெல்லாம் குறைபாடுகளைச் சொன்னார்கள். அவற்றை விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு நிச்சயமாக முயற்சிகளை எடுப்போம் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் பேசினார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களைப் பொறுத்தவரையில், ஓராண்டுக்கு அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை அறிஞர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் அவர்கள் சரியாகப் பணி செய்யாவிடில், அவசியமானால் மேலும் சிறிது காலம் வரை நீட்டிக்கப்படும். பணி சரிவர இல்லை என்றால் வெளியே அனுப்பப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஓய்வு பெற்ற அலுவலர் வெளிநாடு சென்று வந்ததைக் குறித்து அவரது அறிக்கை பெற்று தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. வெளிநாடு அனுப்பப்பட்ட ஓய்வு பெற்ற அலுவலர், முன்பு தமிழ் நாடு அறநிலையத் துறையில் ஆணையராகப் பணியாற்றியவர். அவர் கோவிலைப் பற்றி ஆய்வு செய்து எழுதுவதற்குத் தகுந்த திறமையானவர் என்று பல்கலைக்கழகம் கருதியிருக்கலாம். அந்த நிலையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப் பட்டிருக்கிறார். முதலில் நாம் இந்த முயற்சியைப் பாராட்ட வேண்டும்.





இதற்கு முன்னால் இப்படியெல்லாம் சிந்திக்கிற எண்ணமே பல்கலைக்கழகத்திற்கும் இல்லை; பல்கலைக்கழகத்தைத் தலைமை ஏற்று நடத்துகிறவர்களும் இல்லாமல் இருந்தது. நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவதென்னவெனில், மலேசியாவில் எவ்வளவோ சிறந்த தமிழ் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தமிழ் எழுத்தாளர்களுடைய கதைகளைப் படிக்க வேண்டும் என்கிற வாய்ப்போ அல்லது எண்ணமோ நமக்கில்லை. அவர்கள் படைப்புகளையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணம்கூட இல்லாத தமிழர்களாகத்தான் தமிழர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கேயும் தமிழ் இருக்கிறது. அங்கேயும் தமிழ் இலக்கியம்

(பிற்பகல் 1-55)

இருக்கிறது. அங்கேயும் தமிழ் வளர்ந்து கொண்டிருக்கிறது அல்லது வளராமல் இருக்கலாம். அதற்கெல்லாம் செய்ய வேண்டிய பொறுப்பை தமிழ் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே திரு. தொண்டமான் அவர்களைக் கூட சில அமைப்புகளிலே உறுப்பினராகப் போட்டிருக்கிறோம். ஆகவே தஞ்சையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். தமிழ்நாட்டிலே ஏற்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனால் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்பது சர்வ தேச அளவில் பல்வேறு நாடுகளில் இன்றைக்கு குடியமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களினுடைய தாய் மொழியான தமிழுக்கான பல்கலைக்கழகம், அந்தப் பொறுப்பை நிச்சயம் நிறைவேற்றுமென்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்ப் பல்கலைக்கழகம் சுமார் 30 வெளியீடுகளை அச்சடித்திருக்கிறது. இவைகளில் மருத்துவப் படிப்புக்கு வெளியிடப்பட்ட நூல்களும் இருக்கின்றன. புதிய இராகங்கள் கண்டுபிடித்து வெளியிடப்பட்டிருக்கின்றது. மருத்துவக் கல்வி இன்றைக்கு தமிழிலே இல்லாமல் இருக்கலாம். அதற்குப் பல காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மருத்துவக் கல்லூரியை இன்றைக்கு தமிழிலே தர விரும்பினால், அதற்குத் தேவையான புத்தகங்கள் இன்றைக்கு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இது சாதாரணமான காரியமல்ல. தமிழ் பல்கலைக்கழகம் கட்டிடப்பணிகளை தமிழ் நாடு அரசின் பொறியியல் துறையே செய்து வருகிறது. ஆகவே அதற்கும் அங்கிருக்கிறவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் ஆட்டனாமஸ் கல்லூரியைப்பற்றிச் சொன்னார்கள். அரசு கல்லூரிகளிலே இருக்கிற ஆசிரியர்கள் மாற்றப்படுகிறார்கள் என்பதற்காகத்தான் அங்கும் அரசுக் கல்லூரியில் இருப்பதைப்போல், கொண்டுவராமல் இருந்தோம். அதோடு அங்கே கல்லூரியிலே இருந்து 'புரபேசல்' வரவேண்டும். அப்படி

வாாத நிலைமையும் அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் நம்முடைய நோக்கம் அரசுக் கல்லூரிக்குக் கொண்டுவரக்கூடாது என்பதல்ல. நன்றாக, முறையாக நடந்து கொண்டிருக்கிற கல்லூரியில் இந்த முறையைக் கொண்டு வந்தால், முதலில் இந்த முறை வெற்றி பெறும்; தோல்வியடைந்து விடாது. அதனால் ஆரம்பத்திலே மோசமான கல்லூரி என்று நாம் நினைக்கிற கல்லூரி யிலே கொண்டுவந்து இந்தத் திட்டமே தோல்வியடைந்துவிட்டால், இன்றைக்கு அந்த நல்ல திட்டத்திற்கு ஒரு பிடிப்போ ஆர்வமோ இல்லாமல் போய்விடும். ஆகவேதான் நல்ல கல்லூரியாகத் தேர்ந்தெடுத்து, நாம் அதைக் கொண்டு வந்தோம். அதுமட்டுமல்லாமல் அதற்குத் தகுதி படைத்த கல்லூரிகளாகவும் இருக்கிறது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு 'டீம்டு யுனிவர்சிட்டி' ஆகக் கூடிய தகுதியைப் பெறக்கூடிய வாய்ப்பும் இருக்கக்கூடிய காரணத்தால், அதற்கு ஏற்ப நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த முறையிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. பாலிடெக்னிக்கூட சிலவற்றிற்கு அட்டானமஸ் உரிமைகள் தந்திருக்கிறோம். சில அரசு பொறியியல் கல்லூரிகளிலே சில பிரிவுகளுக்குத் தந்திருப்பதாக நினைவு இருக்கிறது. அதை சரிபார்க்க வேண்டும். மற்றப்படி இதை விரிவாக்க வேண்டும் என்றும் வேறுபல கல்லூரிகளும் இந்த அந்தஸ்துக்கு வர வேண்டுமென்றும் பச்சையப்பன் கல்லூரி போன்று சில கல்லூரிகள் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கூட நான் முன்பு கேட்டுக் கொண்டதை மறுபடியும் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஆசிரியப் பெரு மக்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு நல்ல சமுதாய மாற்றத்திற்காக உயர் கல்வி அளவில் ஒரு நல்ல மாறுதல் வருகின்றபோது, அதை நாங்கள் எதிர்க்கவில்லை, வரவேற்கிறோமென்று சொல்லும்போது, அதை இன்னும் தெளிவாகச் சொல்லி இப்போது கேட்டு வாங்குவதைப்போல இல்லாமல், நீங்கள் அதை வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு இதில் என்ன குறைபாடு இருக்கிறது என்று சொன்னால், குறைபாடுகளைக் களை வதற்கு எங்களுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். மக்களுக்கும் இது ஒரு திட்டம், அதில் ஏதோ தப்பு இருக்கிறது, எனவே பெருத்த முயற்சி எடுக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்துக்கொள்வார்கள். இல்லையென்றால், மொத்தமாக நாம் பேசும்போது ஒரு நல்ல திட்டம் பொதுமக்களுடைய கவனத்தில் ஒரு தப்பான திட்டமாகக் கருதப்படும். ஆனால் அபிலியேட் காலேஜைவிட ஆட்டானமஸ் காலேஜ் பலவிதத்தில் சிறந்திருக்கிறது என்பது தான் என்னுடைய கருத்து. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் சென்று



பார்க்கலாம். சென்று பார்த்து தங்களுடைய சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்து இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச் சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, அண்ணா பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986 நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 526-534 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) 1986 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 535-552 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986, நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.





(பிற்பகல் 2-01)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

இல்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

43. 1976-77 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொருள் கணக்குக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை.

44. தமிழ்நாடு அரசின் 1966-67, 1968-69 முதல் 1971-72 ஆம் ஆண்டு கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை.

45. தமிழ்நாடு அரசின் 1967-68 முதல் 1969-70 மற்றும் 1971-72 ஆம் ஆண்டு கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது வருவாய்த்துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை.

*46. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1986).

*47. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1986).

*48. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1986).

*49. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1986).

*50. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1986).

*51. பச்சையப்பன் பொறுப்புக்கழக நிர்வாகக் குழுவின் அறிக்கை. (தமிழ்).

---

*28—1—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.



## இணைப்பு I

(403 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை மீனம்பாக்கத்திலுள்ள பின்னி லிமிடெட், இன்ஜினியரிங் டிவிஷன், மெட்ராஸ் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்தில் அரிசி ஆலை இயந்திரங்கள், சர்க்கரை ஆலை இயந்திரங்கள், சிறிய சிமெண்ட் ஆலை, காஸ்ட் அயர்ன் காஸ்டிங்ஸ், போர்ஜிங்ஸ், எலக்ட்ரிக் ஸ்மெல்டிங் பர்னர்ஸ் மற்றும் பேப்ரி கேஷன் ஆப் ஸ்டீல் ஸ்டிரக்சரல்ஸ் ஆகியவைகள் செய்யப்படுகின்றன. இந் நிறுவனத்தில் சுமார் 1,270 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இந்நிறுவ னத்தில் பின்னி பிச் இன்ஜினியரிங் ஓர்க்கர்ஸ் யூனியன் மற்றும் பின்னி எம்ப்ளாயீஸ் யூனியன் ஆகிய இரு தொழிற் சங்கங்கள் செயல்படுகின்றன.

இந்நிறுவனத்தில் 1982-ம் ஆண்டில் ஏற்பட்ட சம்பள உயர்வு, பஞ்சப்படி மற்றும் சில கோரிக்கைகள் அடங்கிய ஒப்பந்தம் 1985 ஜனவரியில் முடிவடைந்ததை அடுத்து தொழிலாளர்கள் பொதுக் கோரிக்கைகள் அடங்கிய தொழிற்தாவா ஒன்றினை 30—8—1985 அன்று எழுப்பினர். இத்தாவா மீது தொழிலாளர்துறை தனித் துணை ஆணையர் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

இதற்கிடையில் நிர்வாகம் நிறுவனத்தில் அதிகத் தொழிலாளர்கள் இருப்ப தாகவும், குறைந்த உற்பத்தி மற்றும் அதிக சம்பளம் வழங்கப்படுதல் ஆகிய காரணங்களைக் காட்டி நிறுவனத்தை 1—3—1986 முதல் மூட அனுமதி வேண்டி 28—11—1985 நாளிட்ட விண்ணப்பம் ஒன்றினை தொழில் தகராறு சட்டம் பிரிவு 25-0-ன் கீழ் சமர்ப்பித்துள்ளனர். தொழிலாளர் துறை ஆணையர் இம்மனுமீது விசாரணை நடத்தி வருகிறார்.

ஆக மேலே குறிப்பிட்டுள்ளபடி தொழிலாளர்கள் எழுப்பியுள்ள தொழிற் தாவா மீதும் நிர்வாகத்தினர் நிறுவனத்தை மூட அனுமதி கோரி சமர்ப்பித் துள்ள விண்ணப்பத்தின் மீதும் தொழிலாளர் துறையின் அலுவலர்கள் முன்பு தொழில் தகராறு சட்டத்தின் கீழ் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் முழுமையாக இப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டுள்ளனர். இவ்வாறு தொழில் தகராறு சட்டத்தின் கீழ் முறையான விசாரணைகள் இந்நிறுவனத் தொழிலாளர்கள் பிரச்சனைகள் மீது நிலுவையில் உள்ளன.

இணைப்பு II

([405-ஆம் பக்கத்தில் இனம் 4(1) க்கான அடிக் குறிப்பைக் காண்க]

L.A. BILL No. 10 OF 1986.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Prohibition Act,* 1937.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Prohibition (Amendment) Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 8th day of October 1985.

2. *Amendment of section* 22-C, *Tamil Nadu Act X of* 1937.—In section 22-C of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) (hereinafter referred to as the principal Act), in sub-section (1),—

(1) in the first proviso,—

(i) in clause *(a)*, for the expression " 15th day of October 1985 ", the expression " 15th day of November 1985 " shall be substituted ;

(ii) in clause *(b)*,—

*(a)* for the expression " 15th day of October 1985 ", the expression " 15th day of November 1985 " shall be substituted ;

*(b)* for the expression " 16th day of October 1985 ", the expression " 16th day of November 1985 " shall be substituted;

(2) the following proviso shall be added at the end, namely :—

" Provided also that where the licence for selling, by retail, arrack is valid on the 15th day of October 1985, and the licensee concerned is not willing to continue to sell, by retail, arrack beyond the 15th day of October 1985, it shall be open to the licensee to surrender his licence to the licensing authority, and thereupon the Tamil Nadu State Marketing Corporation Limited shall arrange for the sale, by retail, of arrack by any of the methods specified in item (A), (B) or (C) of the immediately preceding proviso. ".



3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Prohibition (Second Amendment) Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 7 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு III

[421-ஆம் பக்கத்தில் இனம் 4(2)க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 12 OF 1986.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Pachaiyappa's Trust (Taking over of Management) Act,* 1981.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Pachaiyappa's Trust (Taking over of Management) Amendment Act, 1986.

(2) It shall be deemed to have come into force on the 21st December 1985.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 11 *of* 1981.—In section 3 of the Pachaiyappa's Trust (Taking over of Management) Act, 1981 (Tamil Nadu Act 11 of 1981) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), for the words "five years", the words "six years" shall be substituted.

3. *Amendment of section* 8, *Tamil Nadu Act* 11 *of* 1981.—In section 8 of the principal Act, for the words "five years", occurring in two places the words, "six years" shall be substituted.

4. *Repeal and saving.*—(1) The Pachaiyappa's Trust (Taking over of Management) Second Amendment Ordinance, 1985 (Tamil Nadu Ordinance 14 of 1985) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு IV

ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.

L.A. BILL No. 13 OF 1986.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Anna University Act,* 1978.

BE it enacted by the legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Anna University (Amendment) Act, 1986.

2. *Amendment of section* 12, *Tamil Nadu Act 30 of* 1978.—In section 12 of the Anna University Act, 1978 Tamil Nadu Act 30 of 1978) (hereinafter referred to as the principal Act), for sub-section (7), the following sub-section shall be substituted, namely:—

"(7) The Vice-Chancellor shall give effect to the decisions of the Syndicate".

3. *Amendment of section* 17, *Tamil Nadu Act* 30 *of* 1978.—In section 17 of the principal Act,—

(*a*) for sub-section (3), the following sub-section shall be substituted, namely:—

"(2) The Syndicate shall be addition to the Vice-Chancellor, consist of the following persons, namely:—

*Class I—Life Member.*

Thiru C. R. Ramaswamy (Son of Thiru C. Rajam, Founder of the Madras Institute of Technology, Chrompet, Madras).

*Class II—Ex-Officio Members.*

(1) The Secretary to Government in-charge of Education;

(2) The Secretary to Government in-charge of Health and Family Welfare; and

(3) The Director of Technical Education.

*Class III—Other Members.*

(1) Two persons from among the Deans and Directors of the University nominated by rotation by the Chancellor;

(2) One person from among the Heads of Department and Professors of the University nominated by rotation by the Chancellor on the recommendation of the Vice-Chancellor;

(3) One Reader and One Lecturer from among the Readers and Lecturers, respectively, of the University nominated by the Vice-Chancellor according to Faculty Seniority by rotation on Faculty basis.

(4) Four persons representing public and private sectors, industries and research institutions having special knowledge and practical experience in industry and commerce, nominated by the Chancellor;

(5) One member elected by the Academic Council from among its members;

(6) One member elected by the members of the Legislative Assembly of the State from among themselves; and

(7) One member elected by the members of the Legislative Council of the State from among themselves ";

(*b*) after sub-section (3), the following sub-section shall be inserted, namely :—

"(3-A) (i) In case the Secretary to Government in-charge of Education, or the Secretary to Government in-charge of Health and Family Welfare, is unable to attend the meetings of the Syndicate for any reason, he may depute any officer of his department not lower in rank than that of Deputy Secretary to Government, to attend the meetings;

(ii) In case the Director of Technical Education is unable to attend the meetings of the Syndicate for any reason, he may depute any officer of the department not lower in rank than that of Deputy Director to attend the meetings. ";

(*c*) in sub-section (4),—

(i) for the words, 'ex-officio members', the words "life member and the ex-officio members" shall be substituted;

(ii) in the second proviso, after the word "held", the words "for not less than one year" shall be inserted.



4. *Amendment of section 17-A, Tamil Nadu Act 30 of 1978.*— In section 17-A of the principal Act,—

(*a*) in sub-section (1),—

(i) for the portion commencing with the words "Notwithstanding anything contained" and ending with the words "shall be eligible for election or nomination to any of the said two authorities", the following shall be substituted, namely :—

Notwithstanding anything contained in section 17 or 18 or statute 9 of Schedule II, no person who has held office as a member for a total period of six years.—

(*a*) in any one or both of the following authorities of the University, namely :—

(i) the Syndicate; and

(ii) the Academic Council; or

(*b*) in any one or more of the following three authorities of any other University in the State of Tamil Nadu established by, or under, any law in force, namely :—

(i) the Senate;

(ii) the Syndicate; and

(iii) the Standing Committee on Academic Affairs; or

(*c*) in any one or more of the authorities specified in clauses (*a*) and (*b*)

shall be eligible for election or nomination to any of the said two authorities of the University. ";

(ii) *in Explanation II* the words "of the University" shall be added at the end;

(iii) in the first proviso for the words "held office in any one of the said two authorities", the words "held office for a period not less than one year in any one of the said two authorities" shall be substituted :

(*b*) in sub-section (2), for clause (i), the following clause shall be substituted, namely :—

"(i) the life member and *ex-officio* members referred to in sub-section (2) of section 17; and ".

5. *Amendment of section 29, Tamil Nadu Act* 30 *of* 1978.—In section 29 of the principal Act, after clause (xi), the following clause shall be inserted, namely :—

"(xi-a) the powers to be exercised and the duties to be performed by the teachers and other persons employed in the University; ".

6. *Amendment of Schedule II, Tamil Nadu Act* 30 *of* 1978.—In Schedule II to the Principal Act,—

(1) in statute 3, in clause (2) for the word "ordinances", the word "regulations" shall be substituted;

(2) in statute 9,—

(*a*) in clause (1),—

(*i*) under the heading "*Ex-officio Members*", *for items (d)* to (*h*) the following items shall be substituted, namely :—

"*(d)* The Librarian of the University;

(*e*) All Heads of Departments and Heads of Centre of the University; ";

(ii) under the heading "Other Members"—

(A) before item (i) the following items shall be inserted, namely :—

(f) Fifteen Professors of the University nominated by the Chancellor on the recommendations of the Vice-Chancellor;

(*g*) Seven Teachers other than Professors, Deans and Directors nominated by the Chancellor on the recommendation of Vice-Chancellor;

(h) Three educationists having proficiency in matters relating to education, research and educational administration general and technical nominated by the Chancellor;

(hh) One officer dealing with the subject of Higher Secondary Education in the Education Department to be nominated by the Government";

(B) item (ss) shall be omitted;

(C) in item (t), the expression "and item (ss)" shall be omitted;

(*b*) in clause (3), in the proviso, after the word "held", the words "for not less than one year" shall be inserted.



7. *Cessation of office of disqualified persons, etc.*—Any person, elected or nominated to the Syndicate or the Academic Council, as the case may be, of the Anna University.—

(i) who has been classified as ex-officio member under the principal Act, as it stood prior to the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, but has become a member other than an ex-officio member, under the principal Act, as amended by this Act, and whose term of office of three years has expired; or

(ii) who has become disqualified under the provisions of the principal Act, as amended by this Act.

shall cease to be such member of the Syndicate or the Academic Council, as the case may be, of the Anna University, with effect on and from the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette.*

8. *Removal of doubts.*—For the removal of doubts, it is hereby declared that members of the Syndicate or of the Academic Council, as the case may be, of the Anna University, except those who shall cease to be such members of the Syndicate or the Academic Council, as the case may be, of the Anna University under section 7, elected or nominated as such members before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, shall continue to be such members till the term of office expires.

இணைப்பு V

[512ஆம் பக்கத்தில் இனம் 4(4) க்கான அடிக் குறிப்பைக் காண்க]

L.A. BILL No. 14 of 1986.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil University Act,* 1982.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-seventh Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil University (Amendment) Act, 1986.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 1, Tamil Nadu Act 9 of* 1982.—In section 1 of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act 9 of 1982) (hereinafter referred to as the principal Act), in sub-section (2) the figures "48" shall be omitted.

3. *Substitution of section 14, Tamil Nadu Act 9 of* 1982.—For section 14 of the principal Act, the following section shall be substituted, namely:—

"14. *The Registrar.*—(1) The Registrar shall be a wholetime salaried officer of the University appointed by the syndicate and the terms and conditions of service of the Registrar shall be as follows:—

(*a*) The holder of the post of Registrar shall be an academician not lower in rank than that of professor of College affiliated to any University".

(*b*) The Registrar shall hold office for a period of three years:

Provided that the Registrar shall retire on attaining the age of fifty-eight years or on the expiry of the period specified in this clause, whichever is earlier;

(*c*) The emoluments and other terms and conditions of service of the Registrar shall be such as may be prescribed;

(*d*) When the office of the Registrar is vacant, or when the Registrar is, by reason of illness, absence or any other cause, unable to perform the duties of his office, the duties of the office of the Registrar shall be performed by such person as the Vice-Chancellor may appoint for the purpose.



(2). (*a*) The Registrar shall have power to take disciplinary action against such of the employees, excluding teachers of the University and academic staff, as may be specified in the orders of the Syndicate and to suspend them pending inquiry, to administer warnings to them or to impose on them the penalty of censure of withholding of increments:

Provided that no such penalty shall be imposed unless the person concerned has been given a reasonable opportunity of showing cause against the action proposed to be taken in regard to him;

(*b*) An appeal shall lie to the Vice-Chancellor against any order of the Registrar imposing any of the penalties specified in clause (*a*);

(*c*) In any case where the inquiry discloses that punishment beyond the powers of the Registrar is called for, the Registrar shall, upon conclusion of the inquiry, make a report to the Vice-Chancellor along with his recommendation:

Provided that an appeal shall lie to the Syndicate against an order of the Vice-Chancellor imposing any penalty;

(*d*) No appeal under clause (*b*) or clause (*c*) shall be preferred after the expiry of sixty days from the date on which the order appealed against was received by the appellant.

(3) The Registrar shall be the *ex-officio* secretary of the Senate, the Syndicate, the Faculties and the Boards of studies, but shall not be deemed to be a member of any of these authorities.

(4) It shall be the duty of the Registrar,—

(*a*) to be the custodian of the records, the common seal and such other property of the University as the Syndicate shall commit to his charge;

(*b*) to issue all notices convening meetings of the Senate, the Syndicate, the Faculties, the Boards of studies and of any Committee appointed by the authorities of the University.

(*c*) to keep the minutes of all the proceedings of the meetings of the Senate, Syndicate, the Faculties, the Boards of studies and of any committee appointed by the authorities of the University;

(*d*) to conduct the official correspondence of the syndicate;

(*e*) to supply to the Chancellor, copies of the agenda of the meetings of the authorities of the University as soon as they are issued and the minutes of the proceedings of such meetings; and

(*f*) to exercise such other powers and perform such other duties as may be specified in the statutes or as may be required, from time to time, by the Syndicate or the Vice-Chancellor.

(5) In all suits and other legal proceedings by or against the University, the pleadings shall be signed and verified by the Registrar and all processes in such suits and proceedings shall be issued to, and served on, the Registrar."

4. *Amendment of section* 15, *Tamil Nadu Act* 9 *of* 1982.—In section 15 of the principal Act,—

(*a*) in sub-section (1), the words "and the terms and conditions of service of the Finance Officer shall be such as are specified in the first statutes" shall be omitted;

(*b*) after sub-section (2), the following sub-sections shall be added, namely:—

"(3) The emoluments and other terms and conditions of service of the Finance Officer shall be such as may be prescribed. The Finance Officer shall retire on attaining the age of fifty-eight years or on the expiry of the period specified by the syndicate under sub-section (1), whichever is earlier:

Provided that the Finance Officer shall, notwithstanding his attaining the age of fifty-eight years, continue in office until his successor is appointed and enters upon his office or until the expiry of a period of one year, whichever is earlier.

(4) When the office of Finance Officer is vacant or when the Finance Officer is by reason of illness, absence or any other cause, unable to perform the duties of his office, the duties of the Finance Officer shall be performed by such person as the Vice-Chancellor may appoint for the purpose.

(5) The Finance Officer shall be the ex-officio Secretary of the Finance Committee, but shall not be deemed to be a member of such Committee.

(6) The Finance Officer shall—

(*a*) exercise general supervision over the funds of the University and shall advice the University as regards its financial policy; and

(*b*) exercise such other powers and perform such other financial functions as may be assigned to him by the syndicate or as may be prescribed:



Provided that the Finance Officer shall not incur any expenditure or make any investment exceeding such amount as may be prescribed without the previous approval of the syndicate.

(7) Subject to the control of the syndicate, the Fnance, Officer shall—

(*a*) hold and manage the property and investments of the University including trust and endowed property;

(*b*) ensure that the limits fixed by the syndicate for recurring and non-recurring expenditure for a year are not exceeded and that all moneys are expended on the purposes for which they are granted or allotted;

(*c*) be responsible for the preparation of annual accounts financial estimates and the budget of the University and for their presentation to the syndicate;

(*d*) to keep a constant watch on the cash and bank balances and of investments;

(*e*) watch the progress of the collection of revenue and advice on the methods or collection employed;

(*f*) ensure that the registers of buildings, land, furniture and equipment are maintained up-to-date, and that stock-checking is conducted, of equipments and other consumable materials in all offices and other places maintained by the University;

(*g*) bring to the notice of the Vice-Chancellor any unauthorised expenditure or other financial irregularity and suggest appropriate action to be taken against persons at fault; and

(*h*) call from any office or other place maintained by the University, any information or returns that he may consider necessary for the performance of his duties.

(8) The receipt of the Finance Officer or of the person or persons duly authorised in this behalf by the syndicate for any money payable to the University shall be sufficient dicharge for payment of such money".

5. *Amendment of section* 16-*A*, *Tamil Nadu Act* 9 *of* 1982.—In section 16-A of the principal Act for sub-section (2) the following sub-sections shall be substituted, namely:—

"(2) The Planning Board shall consist of the following members, namely:—

(i) the Vice-Chancellor, who shall be the Chairman of the Board; and

(ii) not more than eight persons of high academic standing.

(3) The members of the Planning Board shall be appointed by the Chancellor and shall hold office for such period as he may determine.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவர் அவர்களே, சென்னை பாண்டிச்சேரி வழித்தடத்தைப் பொறுத்தவரையில், அந்த குளுகுளு வசதியுடன் உள்ள பேருந்து செப்பனிடும் பணிகளுக்காக அனுப்பப்பட்டிருக்கின்றது. தற்போது சாதாரணப் பேருந்துகள் 1—12—1985-லிருந்து விடப்பட்டிருக்கின்றன. செப்பனிடும் பணி முடிந்த பிறகு முடிவெடுக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, சீர்வளிப் பேருந்துகள் விடுவதனால் ஓரளவுக்கு ஆதாயம் இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் ஆதாயத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு விடப்படுவதில்லை. மக்களுக்கு, பல்வேறு பிரிவினருக்கும் சேவை செய்வது என்பதுதான் மிக முக்கியமான நோக்கம். அந்த அடிப்படையிலே இப்படிப்பட்ட பேருந்துகளை விடலாம். மக்கள் ஆதாயம் இருப்பதால்தான், ரெயிலில் செல்வதைவிட்டு பேருந்துகளில் போகின்றார்கள், கட்டணம் குறைவாக இருப்பதால்,

ரெயில்வேயில் ஏ.சி. வண்டியில் போகும்போது கட்டணம் அதிகமாகவும், ஆனால் பஸ் கட்டணம் குறைவாகவும் இருப்பதால், பஸ்களில் போகின்றார்கள். ஆகவே முக்கியமாக பல்வேறு நகரங்களில் இப்படிப்பட்ட பேருந்துகளைவிட வருங்காலத்திலாவது அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவர் அவர்களே, சென்னை-ஈரோடு பகுதியில் மட்டுமல்ல, பொதுவாகவே மக்கள் ஏ.சி. பஸ்ஸில் பிரயாணம் குறைவாகத்தான் செய்துகொண்டிருக்கின்றார்கள். காரணம் ரெயில்வே கட்டணம் அதிகமாக இருந்தாலும், ரெயிலிலே படுத்துக்கொண்டே போகலாம் என்று சொல்லி போகின்றார்கள். ஆகவே இந்த நிலைமைகள் இருப்பதால், கொஞ்சம் யோசித்துத்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த சீர்வளிப் பேருந்துகள் சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்குச் சென்றுகொண்டிருக் கின்றன. பாண்டிச்சேரியிலிருந்து தென்னாற்காடு தலைநகர் 25 கிலோ மீட்டரில் இருக்கின்றது. நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் அந்த மேனேஜிங் டைரக்டர் அவர்களைப் பார்த்துக்கூட சொல்லியிருக்கிறோம். அந்த சீர்வளிப் பேருந்துகளை, சொகுசுப் பேருந்துகளை கடலூர் வரை நீடிக்குமாறு கேட்டுக்கொண்டோம். அதற்கு ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே அந்த சீர்வளிப் பேருந்துகளை பாண்டிச்சேரியிலிருந்து கடலூர் வரை விடுவதற்கு அரசு வழிவகுக்குமா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அவர்கள் அதிகாரிகளுடன் பரிசீலனை செய்ததாகச் சொல்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அரசும் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்.

### திருத்துறைப்பூண்டி-வேளாங்கண்ணி சாலை.

*** 66 வினா.—திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி-வேளாங்கண்ணி சாலையை, மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?



**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சார்பில்) :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

### பண்ணுருட்டியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்.

*** 67 வினா.—திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்) :** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பண்ணுருட்டி நகரில், வீட்டுவசதி வாரியம் சார்பில், வீடுகள் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** இல்லை.

### தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

*** 68 வினா.—திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், எந்தெந்த மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படவிருக்கின்றது ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் இதுவரை 16 மாவட்டங்களில் 43 இடங்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் ஆகிய இரு பகுதிகளுக்கு தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகளை விரிவுபடுத்துவது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-10)

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும் குடிசைகளை மாற்றும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசிடம் திட்ட முள்ளதா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, இப்போதே வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, இராமநாதபுரம், நீலகிரி, தஞ்சை, கோயம்பத்தூர், தர்மபுரி, நெல்லை, புதுக்கோட்டை, காமராஜ், மதுரை மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சில ஊர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

D*2 C*103—2

திரு. ஆர். டி. சீத்தாபதி : தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் இப்போது தென் சென்னை, வட சென்னை, மத்திய சென்னை என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. எனவே இப்போது இருக்கும் குடிசை மாற்று வாரியத்தை மூன்றாகப் பிரித்து, மூன்று தலைவர்களை அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி : தலைவரவர்களே, தற்போது அப்படிப் பட்ட எண்ணமில்லை.

ஆதி திராவிடர்களுக்கு இலவச நிலப்பட்டா

* 69 வினா.—திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக நிலப்பட்டா வழங்கும் பொருட்டு, தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்த, நிபந்தனைகள் அல்லது விதிமுறைகள் எவையேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு அ. அருணாசலம் : (அ) மற்றும் (இ) ஆம். 1894-ம் ஆண்டு மைய அரசு நில ஆர்ஜிதச் சட்டம் மற்றும் 1984-ம் ஆண்டு மைய அரசு நில ஆர்ஜித திருத்தச் சட்டம் ஆகியவைகளின் விதிகள் குறிப்பிடப் பட்டுள்ள விதிமுறைகளும் மற்றும் வருவாய் வாரிய நிலை ஆணைகளும் பின்பற்றப்படுகின்றன.

கல் உடைக்கும் தொழிலாளர்கள்

* 70 வினா.—திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்) மற்றும் திரு. சி. இராமலிங்கம் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்) : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) சென்னை மாநகருக்கு அருகிலுள்ள குன்றத்தூரில் கற்குகை குழிகளில் (Quarries) கல் உடைக்கும் தொழிலாளர்கள், கொத்தடிமை முறையில் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இந்த முறையை ஒழிக்க, அரசு எடுத்த நடவடிக்கை யாது ?





மாண்புமிகு திரு. அ. அருணாசலம் : (அ) திருப்பெரும்புதூர் வட்டம் குன்றத்தூரில் கல் உடைக்கும் குவாரியில் கல் உடைக்கும் தொழிலாளர் எவரும் கொத்தடிமையாக இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 28—1—1986 ஆம் நாளுக்கான வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினாக்கள்.

குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து கோயில்களுக்கு விலக்கு.

*41 வினா—திரு. மிசா. ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து, கோயில்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வக்போர்டு மற்றும் கோவில்கள், மத சம்மந்தமான நிறுவனங் களின் கட்டிடங்களுக்கு மேற்படி சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரின. அந்த வேண்டுகோள் அரசின் பரிசீலனை யில் இருக்கின்றது.

ஓய்வு பெற்றவர்களுக்கு பண்டிகை முன்பணம்

* 42. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (செல்வி ஆ. லீலாவதி சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பண்டிகை முன்பணம், ஓய்வு பெற்றவர்களுக்கு தற்பொழுது எவ்வளவு வழங்கப்படுகிறது ?

(இ) அதனை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ரூபாய் 100 அல்லது ஒரு மாத ஓய்வூதியம் அதில் எது குறைவோ அதை ஓய்வு பெற்றவர்களுக்கு தற்போது பண்டிகை முன்பணமாகக் கொடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, இந்த முன்பணம் அவர்களுடைய ஓய்வூதியத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்படுகிற அந்த முன்பணத்தை, மற்ற அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல முழு அளவுக்குக் கொடுக்கலாம். அல்லது, இதை உயர்த்தி, அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற முன் பணத்தில் பாதியைக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா? இந்த முன்பணம் அவர்கள் பென்ஷன் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இதனால் அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமையில்லை. எனவே இதைப் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இப்படி முன்பணம் வழங்கும் முறை இல்லாமல் இருந்தது. இப்போதுதான் இதைப் புகுத்தியிருக்கிறோம். அவர்களுக்கு ரூபாய் 100 அல்லது ஓய்வூதியம் இதில் எது குறைவோ அதைத் தருவது என்று வைத்திருக்கிறோம். இதனால் மாநில அரசுக்குச் சங்கடம் என்பதல்ல. வட்டியில்லாத கடனாக இதைத் தர வேண்டும். அரசினுடைய பணம் 10 மாதம் அவர்களிடம் இருக்கும். ஆனால் இப்போது வந்திருக்கிற புதிய சம்பள விகிதங்கள், ஓய்வூதியத் தொகை போன்றவற்றை எல்லாம் வைத்து, இதை ஓரளவுக்கு உயர்த்தலாமா என்று பிறகு பரிசீலனை செய்யலாம். இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





(முற்பகல் 10-15)

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்:—

(1) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு.

(2) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

(3) 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

3. பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச்சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம்மேலவையின் பரிந்துரைக்காகப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்:

1. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986).

2. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1986).

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1986 சனவரி 30

1. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986).

2. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1986).

3. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1986).

4. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1986).

5. 1986 ஆம் ஆண்டு கூலிவழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1986).

6. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகம் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1985).

### 3. கவன ஈர்ப்பு.

(1) மெரினா கடற்கரை துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு அளிப்பது குறித்து.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மெரினா கடற்கரையில் துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோன மீனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு அளிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து"

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 643-644ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 சனவரி 30]

திரு. மு. செ. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுள்ளது குறித்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது போல, காவல் துறையினரின் அதிகாரத்திற்கு அதிகமாகவே அவர்கள் ஈடுபட்டு, அதன்காரணமாக மீனவர்களின் பல்வேறு குடும்பங்களில் பல்வேறு பொருள் நஷ்டமும், இழப்புகளும் ஏற்பட்டதோடு, வீடுகளும் எரிக்கப்பட்டிருக்கின்றன. பலர் கை, கால் இழந்திருக்கிறார்கள். ஆகவே அத்தகையவர்களுக்கும் தகுந்த நஷ்ட ஈடு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததையொட்டி, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் காயமடைந்தவர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு, பலத்த காயம் அடைந்த ஐந்து பேர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், சாதாரணக் காயம் அடைந்த 8 பேர்களுக்கு ஆயிரம் ரூபாயும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி, காவல் துறையினரின் எல்லை மீறிய நடவடிக்கைகள் நடந்துள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் பற்றி எல்லாம் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த விசாரணைக்குப் பிறகுதான் முடிவு செய்ய இயலும்.

(2) சென்னையில் பாதாள சாக்கடை துப்புரவு செய்தபோது, மூவர் இறந்தது குறித்து.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "அண்மையில் சென்னையில் பாதாள சாக்கடை துப்புரவின்போது விஷவாயு தாக்கி, மூவர் உயிரிழந்தது குறித்து"

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அண்மையில் இவ்வாறு சென்னையில் மூன்று தொழிலாளர்கள் உயிரிழந்ததாக செய்திகள் வந்துள்ளன. அடையாறில் உள்ள தனியார் ஓட்டலில் (அடையார் கேட் ஓட்டல்) தொழிலாளி ஒருவர், அந்த ஓட்டலின் உட்புற கழிவுநீர் அடைப்

பினை நீக்குவதற்காக அந்த நிர்வாகத்தினரால் நியமிக்கப்பட்டு, கழிவு நீர் அடைப்பு நீக்கும் பணியினை மேற்கொண்டிருந்தபோது அவர் உயிரிழந்திருக்கிறார்.

தண்டையார் பேட்டை பகுதியில் தனியார் வீட்டில் ஏற்பட்ட கழிவு நீர் அடைப்பை நீக்குவதற்காக தொழிலாளி ஒருவரும் அங்கு அப்பணியினை மேற்கொண்டு வேலை செய்யும்போது சிக்கிக்கொண்டு உயிரிழந்திருக்கிறார்.

சென்னை, பெரம்பூரில் உள்ள தனியார் ஆலை (செஞ்சுரி ஃப்ளோர் மில்) ஒன்றில் ஏற்பட்ட உட்புற கழிவு நீர் அடைப்பினை நீக்குவதற்காக சென்னை குடிநீர் வாரியத்தின் தொழிலாளி ஒருவர், வாரியத்தின் அனுமதி இல்லாமல் மேற்படி தொழில் நிறுவனத்தினரால் தற்காலிகமாக அமர்த்தப்பட்டு, கழிவு நீர் அடைப்புப் பணியினை மேற்கொள்ளும்போது அவர் உயிரிழந்திருக்கிறார்.

(முற்பகல் 10-20)

எனவே மேலே குறிப்பிட்டுள்ள மூன்று தொழிலாளிகளும் சென்னை பெரு நகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவல் பூர்வமான அன்றாட பணியில் ஈடுபட்டிருக்கும்போது இறக்கவில்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய மூன்று பேரைப்பற்றி எண்ணிப் போடவில்லை. அதற்கு முன்பாகவே சென்னையிலுள்ள ஒரு மருத்துவ மனையில் இரண்டு பேர் இறந்து, அதற்கு அடுத்து சில தினங்களில் மூன்றாவதாகவும் ஒருவர் இறந்திருக்கிறார். அது குறித்துத்தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் போட்டேன். ஆனால் அது குறித்து ஒன்றும் இதில் இல்லை. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலைப் பார்க்கும்போது, அந்த மூன்று பேர் இல்லாமல் மேலும் மூன்று பேர் இறந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இது மிகவும் வருந்தத் தக்கது. இந்த மூன்று தொழிலாளர்களும் சென்னை பெரு நகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் அலுவல் பூர்வமான அன்றாட பணியில் ஈடுபட்டிருக்கும்போது, இறக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தாலும், இவ்வாறு கூறுவதிலிருந்து அவர்கள் இறந்ததற்கான பொறுப்பு அரசுக்கு இல்லை என்று கூறுவது போல் இருக்கிறது. இருந்தாலும் இதுபோன்று கழிவுநீர் துப்புரவுத் தொழிலாளர்கள் தொடர்ந்து இறந்து கொண்டிருக்



கிறார்கள். இவ்வாறு அவர்கள் இறப்பது அரசினுடைய அன்றாடப் பணியில் ஈடுபடும்போது இல்லை என்றாலும்கூட, அவர்கள் எதிர்காலத்தில் இறக்காமல் இருக்கும்பொருட்டு நிரந்தரமாகத் தீர்வு காண அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் நிறுவனத்தில் பணியில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள் இறக்கும் நிலை ஏற்படுகிறபோது, தனியார் நிறுவனம்தான் இறந்தவருக்கு நிவாரண ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மற்றபடி சென்னை, பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக பணியில் ஈடுபட்டிருக்கும்போது, தொழிலாளர்கள் இறப்பார்களானால் அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகைகளை வழங்குகிறோம். இவற்றை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடுதான் முடிவு எடுக்கிறோம் என்றாலும், விதிகளுக்குப் புறம்பாக நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்று துப்புரவுத் தொழிலாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடும்போது, முகமூடி ( m sk ) அணிந்துதான் ஈடுபட வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் துப்புரவுத் தொழிலாளர்கள், தனியார் நிறுவனத்தில் பணி புரிந்தாலும் சரி அல்லது அரசு நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் சரி, அவ்வாறு முகமூடி அணிவதாகத் தெரியவில்லை. அதனால்தான் இதுபோன்று அடிக்கடி அவர்கள் இறப்பதற்கு வாய்ப்பு நேரிடுகிறதென்றும் கூறுகிறார்கள். எனவே துப்புரவுத் தொழிலாளர்கள் துப்புரவுத் தொழிலில் ஈடுபடுகிறபோது, கட்டாயம் முகமூடி அணிய சட்டம் கொண்டுவந்து, அரசு அதை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தைப் பரிசீலிக்கலாம்.

**(3) சென்னை திரு.வி.க. நகரில் தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியிருப்போரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் வெளியேற்றம் செய்யும்படி கொடுத்த அறிவிப்பினைக் குறித்து.**

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு பேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்—

## சென்னை திரு. வி. க. நகரில் தொழிலாளர் மலிவு வீட்டு வசதி திட்டத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியிருப்போரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெளியேற்றம் செய்யும்படி கொடுத்த அறிவிப்பினை குறித்து

[திரு. க. சுப்பு] [1986 சனவரி 30

"சென்னை திரு.வி.க. நகரில் தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் குடியிருப்போரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஜனவரி 1986 முதல் வாரத்தில் வெளியேற்றம் செய்யும்படி கொடுத்த அறிவிப்பினைக் குறித்து."

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று அவர்கள் வாடகை கட்ட வில்லை என்கிற காரணத்திற்காக, அவர்களை வெளியேறும்படி கோரப் பட்டிருக்கிற ஓர் அறிவிப்பு. இரண்டாவது இந்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டுமென்று அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை. இதில் முதலில் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் கூறியிருக்கிறபடி, அந்த ஊழியர்கள் ரூ. 500-க்கு மேல் சம்பளம் பெறுகிற காரணத்தால், தகுதி இழக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில் அரசாங்கமே ரூபாய் 500-லிருந்து ரூபாய் ஆயிரமாக ஏற்கெனவே உயர்த்தி ஆயிரம் ரூபாய் வரைக்கும் சம்பளம் வாங்குகிறவர் களுக்கு தகுதியை வைத்திருக்கிறார்கள். இப்போது அதையும் நாம் ரூ. 1,600-ஆக உயர்த்தியாக வேண்டும். காரணம் ஈ.எஸ்.ஐ. வரம்பை மத்திய அரசு ரூ. 500-இலிருந்து ஆயிரமாக உயர்த்தியபோது, நாமும் அதை ஆயிரமாக உயர்த்தினோம். இப்போது ஈ.எஸ்.ஐ. வரம்பை மத்திய அரசு ரூ. 1,600-ஆக உயர்த்தியிருக்கிறது. எனவே இதற்கான வரம்பை நாமும் 1,600-க்கு உயர்த்தியாக வேண்டும். அப்படி நாம் இன்னும் கொண்டுவராத காரணத்தினால், அங்கேயுள்ளவர்கள் தகுதி இழக்கிறார்கள் என்கிற அடிப்படையில், வீட்டுவசதித் துறை நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிகிறேன். எனவே அவர்களது சம்பள வரம்பை ரூ. 1,600-ஆக உயர்த்தி, அந்த அடிப்படையிலே அவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கிட்டத்தட்ட இந்தத் திட்டத்தின் அடிப்படையில், 350 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரைக்கும் சம்பளம் பெறுகிறவர்களுக்குத்தான் வீடுகள் வாடகைக்குத் தருகின்ற முறைகளை இப்போது நாம் கடைப்பிடித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில்,

@ 644 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 சனவரி 30] [திரு. ந. நல்லுசாமி]

ரூ. 500-லிருந்து ரூ. 1,000 அல்லது ரூ. 1,600 வரை சம்பளம் பெறுகின்றவர் களுக்கும் இப்படிப்பட்ட வீடுகளை குறைந்த வாடகைக்குக் கொடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலிப்பதற் கென்றே ஒரு குழு இருக்கிறது. இந்தக் கருத்தை மனதிலே கொண்டு அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வீடுகள் எல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. இப்படிப்பட்ட வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்குவதற்கு மாநில அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது; நாங்கள் சிபாரிசுதான் செய்ய முடியும் என்று மத்திய அமைச்சர் கூறியிருக்கிறார். அந்த அடிப்படையிலே இதுபோன்ற வீடுகளை அங்கே குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கிவிடலாம் என்று மத்திய அமைச்சரவை முடிவெடுத்திருப்பதாக ஒரு கடிதத்தை மத்திய அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் எழுதியிருப்பதாக, மத்திய அமைச்சர் நம் அரசுக்கு

(முற்பகல் 10-25)

1980-ல் எழுதியிருக்கிறார். நம்முடைய அரசாங்கமும் குடியிருப்போருக்கு எழுதிய 29—12—1978, 30—10—1979 மற்றும் 22—12—1979 தேதிய கடிதங்களில் அவர்களுடைய கோரிக்கை கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது; நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பாண்டிச்சேரி, கர்நாடகாவில் ராஜாஜி நகர் மற்றும் பட மாநிலங்களில் இந்தத் திட்டத்தின்கீழ் வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு அவைகளைச் சொந்தமாக்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்து சொந்தமாக்கிவிட்டன. நம்முடைய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதில் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றது. அரசாங்கம் அந்த வீடுகளில் குடி யிருப்பவர்களுக்கு, வீடுகளைச் சொந்தமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருத்தை இந்த அரசு ஏற்கெனவே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக்குறையினால் பயிர்கள் அழிந்து கொண்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவையில் இல்லாததால், அவர் சார்பில் திரு. மிசா ஆர். கணேசன் என்கிற ஆர். கணேசன் அவர்கள் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்.

**திரு. மிசா ஆர். கணேசன் என்கிற ஆர். கணேசன்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:—

"தஞ்சை திருச்சி மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக்குறையினால் பயிர்கள் அழிந்து கொண்டிருப்பதால் அல்லல்படும் விவசாயிகள் நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** தலைவரவர்களே, ஒரு மிகப் பெரிய ஆறு பக்கங்களுக்கான அறிக்கையை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. அங்கு 7.5 லட்சம் ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ள சம்பாப் பயிருக்கு இரண்டு அல்லது மூன்று தடவை தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல மூன்று லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள தாளடிப் பயிருக்கு பிப்ரவரி மூன்றாவது வாரம் வரை தண்ணீர் விட வேண்டுமென்று ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. மேலும் 7—1—1986-ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களை சென்னையில் சந்தித்து ஒரு மனு அளித்த தாகவும், 10—1—1986 அன்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், கர்நாடக முதலமைச்சர் அவர்களை டில்லியில் சந்தித்துப் பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் அளிக்கப் பட்டுள்ள விவரங்கள் என்ன என்பதையும், இதற்கு நிரந்தரமான தீர்வு காண என்ன நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

@644–649 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, இந்த மனு ஒன்றும் ரகசியமான ஒன்றல்ல. ஏற்கெனவே பத்திரிகையில் வந்த செய்திதான். தமிழக அரசு தனக்கு பாசனப் பயிர்களுக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்காக அதாவது 30 டி.எம்.சி. தண்ணீர் தேவை என்று கோரிக்கை வைத்தது. தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும், காவிரிப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதால், இதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் அரசுக்குக் கிடையாது. வேறு எந்த இயக்கத்தினரையும் விட இந்த இயக்கத்தினர் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சளைத்தவர்கள் அல்ல. இருந்தாலும் இருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், அத்தனை பேரும் தமிழகத்திற்குத் தண்ணீர் பெறுவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று கர்நாடக மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும், துரதிருஷ்டவசமாக அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்கக்கூடாது என்ற நிலையில் இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், அவர்களிடம் நாம் கெஞ்சிக் கெஞ்சி பெற வேண்டிய அவசியம் இல்லை. 1974-வது ஆண்டு இந்த நீர்ப்பாசன, காவிரி ஒப்பந்தம் முடிவுற்ற ஒப்பந்தம் என்று கர்நாடக அரசால் மட்டுமல்லாமல், அங்குள்ள அத்தனை அரசியல் கட்சிகளாலும் வலியுறுத்தப்பட்டாலும் கூட, தமிழகம் எந்தக் காலத்திலும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டது கிடையாது. இந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட முடியாத ஒப்பந்தம்தான் என்பது நம்முடைய கருத்தாகும். அதற்குரிய நடவடிக்கைகளிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். நீண்டகாலமாகப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும் கூட, முற்றுப் பெறாத அளவுக்கு பேச்சுவார்த்தைகள் இருக்குமா என்றால், நிச்சயமாக அப்பேற்பட்ட நிலைமைகள் இருக்காது. அதற்காகத்தான் அண்மையில் கூட முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்ற கோரிக்கையை தமிழக அரசு வைத்திருக்கிறது. விரைவிலே நாம் தேதியை கர்நாடக அரசிட மிருந்து எதிர்பார்க்கிறோம். அநேகமாக பிப்ரவரி மாதத்திற்குள் அந்தத் தேதி கிடைக்கக்கூடும். அந்தத் தேதியிலே பெரும்பாலும் பிரச்சினை முற்றுப் பெறும் அல்லது வேறு எந்தவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அரசு மேற்கொண்டு விரைவிலே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்:** தலைவரவர்களே, அப்படிப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற அந்தக் குறுகிய கால கட்டத்திலாவது, ஏற்கெனவே இங்கு தெரிவித்திருப்பதைப்போல்,

[திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 சனவரி 30

மின்சாரத்தைக் கொடுத்து, கபினியிலே இருந்து ஏதோ நீரைக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறை தொடர்ந்து மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, மின்சாரத்தை நாம் கொடுத்து நீரைப் பெறுவோமானால், நம்முடைய உரிமையை அங்கே இழப்பதற்கு சமமாக இருக்கும். ஆனால் இந்தமுறை கேட்டதற்குக் காரணமே கபினித் திட்டத்தைப் பொறுத்தவரையிலும், தமிழகத்திற்கு வரக்கூடிய தண்ணீரை அவர்கள் தேக்கி வைத்து அவர்கள் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தி, அதற்குப் பிறகு அவ்வப்போது நீரை தமிழகத்திற்கு விடுகிறார்கள். அதை எப்படி விடுவது என்பதுதான் பிரச்சினை. விடக்கூடிய தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே அப்படி அவர்கள் தேக்கி வைத்திருக்கின்ற தண்ணீரை நாம் உடனடியாக அவசரத்திற்குக் கேட்போமேயானால், அவர்கள் விடக்கூடிய நேரத்திலே மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதைத்தான் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். "உங்களுக்கு தண்ணீரை நாங்கள் ஒரேயடியாக கபினியிலிருந்து விட்டு விட்டால் எங்களுக்கு மின்சார உற்பத்தி பாதிக்கப்படும். ஆகவே அதை ஈடுகட்ட வேவண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், நானும் பேசி நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு ஏற்றுக்கொண்டு இருக்கிறோமேயொழிய, இதையே நாம் நிரந்தரமான முடிவாக ஏற்றுக்கொண்டால், அது நம்முடைய ஒப்பந்தத்தைப் பாதிப்பதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@649-651 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.



1986 சனவரி 30]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்",

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (2) தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1986).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 652-653 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை.—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1986) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை.—

"சட்டமன்றப பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1986) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 21 பிரிவு (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 3-க்கு முன்---
இனம் 6 எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்ற மேலவை விதி 21 பிரிவு (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில் இனம் 3-க்கு முன்பாக இனம் 6 எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக அமைச்சர்களுக்கும், பேரவைத் தலைவர் மற்றும் மேலவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவைக் கொறடா அவர்களுக்கும் உரிய சம்பள விகிதத்தை அதிகப்படுத்த இருக்கிறது. இது நியாயமானதாக இருந்தாலும்கூட, நம்முடைய பொறுப்பில் இருக்கிற கஜானாவை நாமே

@654–655 ஆக அச்சிடப்பட்டுள்ளது. ஆம் பக்கங்களில் இணைப்பு

முடிவெடுத்து காலி செய்வது என்பது அவ்வளவு சரியாக இருக்குமா என்றும் இதைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்றும் சிந்திக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். அண்மையில்தான் அரசு ஊழியர்கள் எல்லாம் தங்களின் சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் ஐந்து ரூபாய் 'இன்கிரிமென்ட்' வேண்டும் என்பதற்காக 47 நாட்களுக்கு மேல் போராடினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் கோரிக்கை ஒரு நபர்க் குழுவிற்கு விடப்பட்டிருக்கிற இந்த நிலையில் என்னைப் போன்றவர்கள் அதிகமான சம்பளத்தை வாங்கிக் கொண்டு ஊருக்குப் போவது என்பது நியாயமாக இல்லை. ஊருக்குப் போய் இறங்க முடியுமா என்ற சந்தேகமே எனக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அதற்கு இதுதான் நேரமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொங்கல் பரிசு அறிவிக்கப்பட்டு, அது ஏறத்தாழ 10 லட்சம் பேர்களுக்கு வழங்கப் பட்டிருந்தாலும்கூட, முழு நேரமும் வேலை பார்க்கிற பார்ட் டைம் ஆசிரியர் களுக்கு அது கிடைக்கவில்லை. அந்த 100 ரூபாய் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நாம் நமது சம்பளத்தைக் கூட்டிக் கொண்டே போவது சரியா என்றுதான் கேட்கிறேன். அவர்களுக்கும்

(முற்பகல் 10-35)

கொடுக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். சத்துணவு அமைப்பாளர் களுக்கும் ஒரு முறை கொடுக்கலாம் என்று முன்னர் சொல்லியிருக்கிறார்கள். இது ஆண்டுக்காண்டு கொடுக்கப்படும் என்று பிறகு சொல்லியிருக்கிறார்கள், அதை வரவேற்கிறோம். அவர்களுக்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்ற முடிவை இப்போது அறிவித்தால், அந்த ஊழியர்கள் சந்தோஷப்படுவார்கள். எல்லோருக்கும் வெள்ள நிவாரணம் வந்தது. ஆனால் கல்லூரி ஆசிரியர் களுடைய வீட்டுக்குள் மாத்திரம் வெள்ளம் புகாமல் இருந்ததோ என்னவோ அவர்களுக்கு வெள்ள நிவாரணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த மாதிரியான குறைபாடுகளை நிவர்ரணம் செய்த பிறகு நாம் வாங்கினால், நியாயமாக இருக்கும். அல்லது அவர்களுக்கும் சேர்த்து இப்போதே அறிவித்தால், அது வரவேற்கக் கூடியதாக இருக்கும்.





நான் காஷ்மீர் சென்றிருந்தேன், அரசு செலவிலேதான். அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். நான் முரண்பாடாகச் சொல்லவில்லை. இப்போது இருக்கின்ற விலைவாசியில் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பது நியாயம். இங்கே 1,400 ரூபாய் கொடுக்கப்படுகிறது, அது செலவிற்குக் காணாது. இன்னும் அதிகமாகக் கொடுக்கலாம். அப்படி உயர்த்துவதன் மூலம் சில சமுதாயத் தீங்குகளை நிவர்த்தி செய்யலாம். இப்போது உயர்த்துவது சரியான நேரம் அல்ல. மக்கள் பாதிக்கப்பட்ட நேரம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரம். அதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 12—7—1985 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றும் அமைச்சர்கள் ஆகிய பல்வேறு பிரிவினர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்படும் என்று சட்ட மன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க இந்தச் சட்ட முன்வடிவு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். 12—7—1985 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபோது, பத்திரிகைகளில் அதை பெரிய கொட்டை எழுத்துக்களில் போட்டார்கள். நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த போதும், அதே கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் கொடுத்து போட்டிருக் கிறார்கள். இதனால் பொதுமக்களிடையே ஒரே ஆண்டில் இரண்டு முறை அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்படுகிறது என்ற உணர்வு இந்த பத்திரிகைச் செய்திகளைப் படிப்பவர்களுக்கு வருகிறது என்பதுதான் என்னுடைய வருத்தம். நுட்பமாகப் படிக்கிறவர்களுக்கு இது தெரியும். ஆகவே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புக்கிணங்க இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது என்ற செய்தியை செய்தியாளர்கள் விளம்பரப்படுத்தினால், மக்களிடையே தவறான அபிப்பிராயம் உருவாகாமல் இருக்கும் என்ற கருத்தை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக பத்திரிகைகளுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் போன்ற சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரையில், அறிவிப்பு வந்த உடனே சட்ட முன்வடிவுகளை அறிமுகப்படுத்தி நிறைவேற்றினால், இந்தப் பிரச்சினை எழாது. மார்ச் மாத பட்ஜெட் தொடர் கூட்டத்தில் நிச்சயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்னும் பல கோரிக்கைகளை நிறைவேற்றப் போகிறார்கள். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற வார்கள். இதை முன்பே மேலவையில் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வரும்போது, பொது மக்கள் மூன்றாவது முறையாக இன்னுமொரு சலுகையைப் பெறப்போகிறார்கள் என்று நினைப்பார்கள். ஆகவே அறிவிப்புகள் வந்தவுடனேயே சட்ட முன்வடிவுகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று முன்னெச்சரிக்கையாகச் சொல்கிறேன். ஏனென்றால் இது தேவை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது 'நாங்கள் ஊருக்கு எப்படிப் போவது?' என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். நாம் எல்லாத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் பற்றிப் பேசுகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை என்பது இரகசியமானது. நிதியமைச்சர் என்ன செய்யப் போகிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். எப்படி இரகசியம் வெளியானது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்தேன். அவர்கள் அந்த அளவிற்கு அனுதாபத்தோடு இருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். சமுதாயத்தில் உள்ள எல்லாத் தரப்பு மக்களுடைய பிரச்சினைகளையும் பற்றிப் பேசுகிறோம். இந்தச் சமுதாயத்தில் நாமும் ஒரு பிரிவினர். தலைவர் உட்பட இந்தச் சமுதாயத்தில் அனைவரும் ஒரு பிரிவினர். ஆகவே எல்லோருக்கும் தேவை இருக்கிறது. ஆடம்பர வாழ்க்கைக்கேற்ற சலுகையைக் கொடுத்தால் தவறு. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதிகளும், வாய்ப்புகளும் நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும், மேலவைத் தலைவருக்கும், பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவர்களுக்கும், கொறடாவிற்கும் ஆக எல்லோருக்கும் செய்து கொடுக்க வேண்டும். இதிலே வீணான வறட்டுக் கௌரவம் என்ற முறையில் சிலர் வெளிப்படையாகப் பேசுவதற்குத் தயங்குகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளம் ஒன்றும் இல்லாமல் பொதுமக்களுக்குச் சேவை செய்கிறோம் என்று நினைக்கிறார்கள். இது அடிப்படையிலேயே தவறு. நம்முடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து அரசாங்கம் வாய்ப்பு, வசதிகளைச் செய்து கொடுத்தால், இவ்வாறான புகார்களுக்கு இடமிருக்காது. பலவிதமான



(முற்பகல் 10-40)

புகார்கள், குற்றச்சாட்டுக்கள் வராது. இன்றைய நிலைமையைப் பார்த்தால், அமைச்சர் வீட்டிலே போய்ப் பார்த்தால், ஒரு நாளைக்கு நூற்றுக் கணக்கானவர்கள் வந்திருப்பதைப் பார்க்கலாம். அவர்களிலே முக்கியமானவர்களுக்கு குறைந்தபட்சம் டீ என்றாவது கொடுக்கவேண்டியதாக இருக்கும். அது 'லக்கரி' அல்ல. அதை ஆடம்பரமாகக் கருத முடியாது. எல்லோருக்கும் இல்லையென்றாலும், சிலருக்குத்தான் என்றாலும், அந்தச் செலவை யார் ஏற்பது? இதுபோன்ற தேவைகள் இருக்கின்றன. தேவை என்பது வேறு, ஆடம்பரம் என்பது வேறு. 'நீட்ஸ், கம்பர்ட்ஸ், லக்சரீஸ்' என்று மூன்று விதங்கள் இருக்கின்றன. பொருளாதாரத்தில் மூன்றுவிதமாகப் பிரித்திருக்கின்றார்கள். இது 'நீட்ஸ்' என்ற வகையில்தான் வருகின்றது. அந்த அடிப்படையிலே தேவை இருப்பதால், அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. தினப்படியை உயர்த்த வேண்டும். பாராளுமன்றத்திலேகூட கொடுத்திருக்கின்றார்கள். சென்னையிலே செலவைச் சமாளிக்க முடியவில்லை. அதுபோலவே ஊதியத்தையும் கூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும். டெலிபோன் அலவன்ஸ் இன்னும் ரெயில்வே கட்டணம் இப்படி பல்வேறு அலவன்ஸ் இப்போது கொடுக்கின்றது போதவில்லை. அதை இப்போது இருப்பதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தினப்படி, அலவன்ஸ், ஊதியம் எல்லாவற்றையும் உயர்த்துவதற்கான நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரொம்ப நாளாகவே சொல்லிக்கொண்டுவருகிறேன். உறுப்பினர்களுக்கு அவர்கள் தொகுதியிலே அலுவலகம் வேண்டும், அதில் வேலை செய்ய ஒரு உதவியாளர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகின்றேன். அமைச்சர்களுக்கும் அந்த வசதிகள் இருக்கின்றன. மற்றவர்களுக்கும் இருக்கின்றன. ஆனால் உறுப்பினர்களுக்கு அந்த வசதிகள் இல்லை. உறுப்பினர்களுக்கு ஏராளமான பொறுப்புக்கள் இருக்கின்றன. அவர்களிடம் கொடுக்கப்படுகின்ற புகார்கள்பற்றி சரியான முறையிலே கவனித்துச் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு அலுவலகமும் ஒரு உதவியாளரும் வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் ஜனநாயகப் பணிகளை சரிவரச் செய்ய முடியும். இதை நிறைவேற்றும்படியாக வலியுறுத்துகின்றேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 சனவரி 30

அடுத்தது வாகனக் கடன். பல மாநிலங்களில் இது கொடுக்கப்படுகின்றது. டிக்கிலே வாகனக் கடன் வாங்குகின்றபோது 14 பர்சென்ட் வட்டி கொடுக்க வேண்டியிருக்கின்றது. வட்டியில்லாத வாகனக் கடன் கொடுக்க வேண்டும். அந்தக் கடனை ஊதியத்திலேயே பிடித்துக்கொள்கின்ற ஏற்பாட்டைச் செய்யலாம். இங்கேயே மாதந்தோறும் பிடித்தம் செய்துகொள்ளலாம், டெலிபோன் செலவுகளைப் பிடித்துக்கொள்வதுபோல இந்தக் .கடனையும் பிடித்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். வாகனக் கடன் கொடுக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

ஏற்கெனவே ரெயில்வே டிராவல் கூபன், இப்போது ரூ. 4,000 மதிப்பிற்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த ரூ. 4,000 மதிப்பிற்கு ரெயில்லே டிராவல் கூபன் கொடுப்பதற்குப் பதிலாக இந்த ரூ. 4,000-ஐ தொகையாகவே கொடுத்து விடலாம். இதனாலே பல்விதமான நிர்வாகச் சங்கடங்களை நாம் தவிர்க்கலாம். ஆகவே இந்த ரூ. 4,000-ஐத் தொகையாகக் கொடுத்துவிடலாம். இதை நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ரெயில்வே டிராவல் கூபன் என்று கொடுப்பதற்குப் பதிலாக 'ரெயில்வே டிராவல் அலவன்ஸ்' என்று தொகையாகவே கொடுத்துவிட்டால், இங்கே நம்முடைய துறைக்கும், ரெயில்வே துறைக்கும், உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய பல சங்கடங்கள் தவிர்க்கப்படலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியில் அந்தப் புதிய ஹாஸ்டல், பழைய ஹாஸ்டல், எர்ஸ்ட்ஒயில் நியூ ஹாஸ்டல் (Erstwhile New Hostel) அதாவது ஈ.என்.எச். E.N.H. என்று சொல்கின்றார்கள் சுருக்கமாக பழைய ஹாஸ்டல், புதிய ஹாஸ்டல், ஈ.என்.எச். என்று இப்படி மூன்று ஹாஸ்டல்கள் இருக்கின்றன. இந்த ஹாஸ்டல்களுக்கு எல்லாம் தனித்தனியாகப் பெயர்கூட கொடுத்துவிடலாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ரெயில்வே கூபன் கொடுக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அதை வலியுறுத்திச் சொன்னார்கள். கூபன் கொடுத்து, அந்தக் கூப்பனுக்கு ரெயில்வே டிக்கெட்டு எடுத்து அதற்கு ரெயில் பயணம் செய்யவேண்டியது என்பது உறுதியில்லாத ஒன்று ஆனால் மேற்கு வங்காலத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் எப்போது வேண்டுமானாலும் ரெயிலிலே போவதற்கான அனுமதியை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். எப்படிப் பேருந்துகளிலே நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர் [illegible]



1986 சனவரி 30] [திரு. எஸ். ஆர். இராதா]

அந்த போல ஒரு ரெயில் வகுப்பிலே போவதற்கு வசதி இருக்கிறது. அந்த வசதிகளைக் கோர வேண்டுமே தவிர, கூபன் வேண்டாம், பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்பது அவ்வளவு நன்றாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10-45 மணியளவில் உரையை முடிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலே மட்டுமல்ல, உத்தரப்பிரதேசத்திலேயும் இருக்கிறது. அங்கே 'பாஸ்' கொடுத்துவிடுகின்றார்கள். அந்த மாநிலத்திற்குள்ளே எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்று இருக்கின்றது. அது ஒரு கோரிக்கை. அது நல்ல ஒரு கோரிக்கைதான். இப்போது சுலபமாகச் செய்யக்கூடியது. இந்தக் கூப்பனுக்குப் பதிலாக தொகை கொடுப்பதுதான். அதைக் கொடுத்துவிடலாம். அதனாலே பல சங்கடங்கள் தவிர்க்கப்படும்.

அடுத்து, பழைய ஹாஸ்ட்டல், புதிய ஹாஸ்ட்டல், எர்ஸ்ட்ஒயில் நியூ ஹாஸ்ட்டல் என்று இருக்கின்றன. ஒரே குழப்பமாக இருக்கின்றது. இந்த மூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கும் நல்ல பெயர் கொடுத்துவிடலாம். நல்ல தலைவர்கள் பெயர்களை வைத்துவிடலாம். எர்ஸ்ட்ஒயில் ஹாஸ்டலில் சரியான வசதிகள் இல்லை. அதன் அறைகளிலே வசதி இல்லை. புதிய பலமாடிக் கட்டிடத்திலே கிடைக்கின்ற வசதிகள் இங்கே கிடைப்பதே இல்லை. சோபா இல்லை, கேன்டீன் இல்லை, ஆவின் பால் கிடையாது. இதையெல்லாம் செய்யலாம். அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்னதையெல்லாம் பரிவுடன் பரிசீலனை செய்து, நல்ல அறிவிப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, நான் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து மீண்டும் 11-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(முற்பகல் 10-45)

(மீண்டும் முற்பகல் 11-30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் அவை கூடியது.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையினுடைய அனுமதியைப் பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்

டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பை நடைமுறைப் படுத்த வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவாகும். இப்போது இதைக் கொண்டு வந்து, இப்போது ஊதிய உயர்வு, மற்றவைகளை எல்லாம் தரும் நிலை ஏற்படவில்லை. அப்போது வந்த அறிவிப்புக்கு, இப்போது சட்ட முன்வடிவு கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாண்புமிகு திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் உடனுறை எழுத்தர் தந்தால் நல்லது என்று சொன்னார்கள். கடைசி மானியக் கோரிக்கையாக சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கை வந்தது. அப்போதுதான் இந்தச் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. அறிவித்த இரண்டு நாட்களில் சட்டமன்றக் கூட்டத் தொடர் அப்போது முடிந்துவிட்டது. அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் தான் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும். அந்த அடிப்படையில் இப்போது இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக் கிறது. அதற்கான நிதியைப் பெறுவதற்கான வாய்ப்பாக இது அமைகிறது. அதனால்தான் கொண்டு வருகிறோம். இப்போது இதை நிறைவேற்றினாலும், சென்ற ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து கிடைக்க வேண்டிய பாக்கித் தொகை முறைப்படி எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சம்பள உயர்வு பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருக்கு நானே பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாத அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அடிக்கடி இப்படி பதில் சொன்னால், இந்தச் சபையிலே சவுகரியங்கள் எங்களுக்கு ஏற்படும். ஆசிரியர் பிரதிநிதிகள் எழுப்புகிற பிரச்சினைகளுக்கு, ஆசிரியர் பிரதிநிதிகளே பதில் சொல்லி முடித்தால், எங்களைப் போன்றவர்களுக்கு அதிக சங்கடங்கள் ஏற்படாமல் இருக்கும். இந்தச் சம்பளத்தைப் பொறுத்து ஒன்றைக் கவனிக்க வேண்டும் மற்றவர்கள் வாங்கும் சம்பளத்தைச் சொல்லக்கூடாது. மற்றவர்கள் விண்ணப்பித்து வேலைக்கு வருகிறார்கள். அப்படி வருகிற வேலைக்கு இவ்வளவு சம்பளம்; ஆண்டுதோறும் இவ்வளவு 'இன்கிரிமென்ட்' என்று தரப்பட்டிருக்கிறது. அதற்கு ஓய்வு பெறும் வயது வைக்கப்படுகிறது ஓய்வூதியமெல்லாம் வழங்கப்படுகிறது. இந்தச் சட்டதிட்டங்களுக்கு அடங்கி வரும் வேலைகள் அவை. ஆனால் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நாம்தான் இதைப்பற்றி முடிவு செய்ய





வேண்டுமே தவிர நமக்கென்று ஊதியக் குழு வைக்க முடியாது. தேவையுமில்லை; அது முறையுமில்லை. நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக் கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னது, நிதி அமைச்சர் என்ற முறையில் நான் ஒத்துக்கொள்ளக் கூடியதுதான். அவர்கள் கருத்தை ஏற்று, இனி சம்பளத்தை ஏற்ற வேண்டாம், இதோடு நிறுத்தலாம் என்ற ஒருமித்த கருத்து வந்தால், அது ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்துதான். ஆனால் மற்றவர்களோடு இதை ஒப்பிடக்கூடாது. ஆசிரியர்கள் ஐந்து ரூபாய் கூடுதலாகக் கேட்டது பற்றிப் பேசியிருக்கிறார்கள். இனியும் பேசலாம். அவர்கள் கேட்டது 30 சதவிகித உயர்வு. அரசு ஊழியர்கள் 25 சதவிகிதம் உயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். பத்து கோரிக்கைகள் என்று ஆசிரியர்கள் தந்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகளை எண்ணிப் பார்க்கும்போது, 77 கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆரம் பித்தது 10 கோரிக்கைதான். ஆனால் 40 சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கொடுத்த கோரிக்கைகளை இணைக்கும்போது, 77 கோரிக்கைகள் வந்திருக் கின்றன. முதல் கோரிக்கை 25 சதவிகிதம் சம்பளத்தை உயர்த்த வேண்டு மென்பதுதான். 25 சதவிகிதம் உயர்த்தினால், ஆண்டொன்றுக்கு 340 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். 30 சதவிகிதம் உயர்த்தினால், 388 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். எனவே இன்றைக்கு இருக்கும் நிலைமையில், அதை ஒப்பிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அமைச்சர்களைப் பொறுத்தவரையில், 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பு ஏற்றபோது, 1,000 ரூபாய் என்று சம்பளம் இருந்தது. அண்ணா அவர்கள், படி அரிசித் திட்டம் நிறைவேற்றும் வரையில் 500 ரூபாய் தான் வாங்குவோம் என்று சொல்லி, 5, 6 திங்கள்களுக்கு 500 ரூபாய் சம்பளம் வாங்கப்பட்டது. பிறகு 1,000 ரூபாய் சம்பளம் வாங்கப்பட்டது. கிட்டத் தட்ட 15 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது 2,100 ரூபாய் மாதச் சம்பளம் வருகின்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பேரவை உறுப்பினர்களுக்கு ஆரம்ப காலத்தில் மாதம் 150 ரூபாய்தான் சம்பளம். 12 ரூபாய்தான் படி இருந்தது. வேறு பல சலுகைகள் கிடையாது. ஆகவே இருக்கிற சூழ்

(முற்பகல் 11-35)

நிலைகள் மற்றவைகளை எல்லாம் பார்க்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதுமாதிரி, பொறுப்புகளும் செலவினங்களும் இப்போது அதிகமாகியிருக்கின்றன. இது ஒன்றும் விண்ணப்பித்து வேலை பார்க்கக்கூடிய நிலைமையிலும் இல்லை. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் எல்லாம் ஓய்வு பெறுவது என்பது, மக்களுடைய விருப்பத்தைப் பொறுத்து, அவர்களிடம் இருந்து வாக்குகளை வாங்குவதைப் பொறுத்து அமைகிறது. ஐந்தாண்டுகளுக்குத்தான் இந்தப் பதவி. பிறகு அதை விடுவார்களேயானால், ஓய்வூதியம்தான் பெற முடியும். அதுவும் அதிகபட்சமாக 600 ரூபாய்தான் தருகிறோம். ஏற்கெனவே ஓய்வூதியம் என்பது கிடையாது. இப்போதுதான் சில பல ஆண்டுகளாக எம்.எல்.ஏ.-க்களுக்கும், எம்.எல்.சி.-க்களுக்கும் ஓய்வூதியம் தரலாம் என்ற முறையைக் கொண்டுவந்திருக்கிறோம். இதிலே வெட்கப்படவோ துக்கப்படவோ யாருக்கும் எந்தவித அவசியமும் இல்லை. காரணம், 3,600 கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவு நடத்துகிற ஒரு மாநிலத்தில், 1 கோடியே 67 லட்சம் ரூபாய், பேரவை, மேலவைத் துறைகளுக்கு, அதுவும் நிர்வாகச் செலவு, அலுவலர்களுக்குச் செலவு, அதிகாரிகள் செலவு, இங்கே வைக்கப்படுகிற ஏடுகளுக்கான செலவுகள், சம்பளம், படி ஆக இத்தனையும் சேர்த்து, இந்தச் சட்டமன்றத் துறைகளுக்கு பொதுவாக ஒதுக்கப்படுகிறது. இந்த ஒரு கோடியே 67 லட்ச ரூபாய் செலவில்தான் இவ்வளவையும் கவனிக்க வேண்டும். இது எல்லா வகைகளிலும் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களின் மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றுகிற அளவுக்கு இருக்கிற காரணத்தினால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் சொன்னமாதிரி, பல்வேறு பணிகளை கவனிக்கவேண்டியிருக்கிறது. மிகமிகக் குறைந்த சம்பளம் வாங்குகிற மாநிலமாக மேற்கு வங்கம்தான் இருக்கிறது. அவர்களே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவை உறுப்பினராகட்டும், மேலவை உறுப்பினராகட்டும், மன்றத்தில் உறுப்பினராக ஆகிவிட்டால், அவர்கள் டாக்டர்களானாலும் சரி, பொறியாளர்களாக இருந்தாலும் சரி, வழக்கறிஞர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பணிகளை ஒழுங்காகப் பார்க்க இயலாது. இதைத்தான் முழு நேரப் பணியாகப் பார்க்க முடியுமே தவிர, அவர்களுடைய வாழ்க்கையின் செலவுகளை எந்த வகைகளில் ஈடேற்ற வேண்டும் என்று



பார்த்தால், ஒன்று பரம்பரையாக சொத்து இருந்து அதிலிருந்து வருமானம் வருகின்ற நிலை இருந்தால்தான், இந்தப் பணிகளை அவர்கள் நிம்மதியாகப் பார்க்க முடியும். அல்லது அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிற வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. அந்தஸ்தில் தூக்கி உட்கார வைத்துவிட்டு, பிறகு அதைக் காப்பாற்றுவதில் பல சங்கடங்கள் அவர்களுக்கு ஏற்படுமென்ற காரணத்தால்தான், சம்பளத்தையோ படியையோ உயர்த்துவதில் எவ்வித வெட்கமும் படத்தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல மாநிலங்களில் நம்மை விடக் குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள், சில பல மாநிலங்களில் நம்மைவிட வசதிகளையும், வாய்ப்புகளையும் அதிகமாகவும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதைப் பொறுத்தவரையில், சம்பளத்தைப் பெறுவதும் பெறாததும் அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. உறுப்பினர்களுக்கான சம்பளமே வேண்டாம், ஒரு ரூபாய் மட்டும் கொடுத்தால் போதும் என்று சொல்லி பல உறுப்பினர்கள் ஒரு ரூபாய் மட்டும் சம்பளமாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வசதி வாய்ப்புக்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கத்திற்கு இருக்கின்றனவோ என்னவோ தெரியவில்லை. "ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர் ஈயேன் என்றல் அதினினும் இழிந்தன்று; கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று, கொள்ளேனெனில் அதனினும் உயர்ந்தன்று" என்று புறநானூற்றில் அழகாகக் கூறியிருக்கிறார். ஈயென இரத்தல் இழிவானதுதான். அவர்கள் கேட்டுவிட்ட பிறகு, தரமாட்டேன் என்று சொல்வது அதைவிட இழிந்தது என்று சொல்கிறார்கள். "ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று" என்று எடுத்துச் சொல்லி, எடுத்துக்கொள் என்று கொடுப்பது உயர்வானது, அதை விட உயர்வானது, எனக்கு வேண்டாம் என்று சொல்வது. (சிரிப்பு) இப்போது அரசு மூன்றாவது கட்டத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், மூன்றாவது கட்டத்திலிருந்து நான்காவது கட்டத்திற்குப் போகலாம். ஆகவே அது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. யாரும் சொல்லவேண்டியதில்லை. வேறு பலவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய அவசியமும் இல்லை. இது தனி இயல்பு கொண்டது, தனித்தன்மை வாய்ந்தது. அந்த வகையிலும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களானாலும், மேலவை உறுப்பினர்களானாலும் சரி, உறுப்பினர்களுடைய மதிப்பு என்பது, பணத்தை மட்டும் வைத்து அல்ல, அது அவர்களுடைய வாழ்க்கை முறை, அவர்களுடைய நடவடிக்கைகளைப் பொறுத்து, அவைகளைக் காப்பாற்றுகிற முறையில் அத்தகைய சூழ்நிலைகள்

ஏற்படவேண்டுமென்றுதான் நினைக்கிறோம். வேறுபல நாடுகளில் பல்வேறு சலுகைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். யு.எஸ்.ஏ. வானாலும் சரி, யு.கே. யானாலும் சரி, பக்கத்தில் இருக்கிற சிங்கப்பூர், மலேசியாவை எடுத்துக் கொண்டாலும் சரி, பல்வேறு வசதிகளை, நம்மைவிட பலமடங்கு அதிகமாகச் செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாநிலத்தில் மந்திரிகளின் சம்பளம் 1935, 1936-ல் ஐயாயிரம் ரூபாயாக இருந்திருக்கிறது. அப்போதிருந்த 5,000 ரூபாய் என்பது இன்றைக்கு ரூபாய் மதிப்பில் கிட்டத்தட்ட 60,000 ரூபாய் என்று வருகிறது. நாம் அப்படி வாங்குகிறோமா என்றால் இல்லை. ஆனால் நாட்டின் நிலைமை, மற்றவைகளைக் கருதி, இருக்கிற சூழ்நிலையையொட்டி, ஓரளவுக்குத்தான் வாங்கிக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களிலும் அப்படிப்பட்ட நிலைமை இருப்பதையும் பார்க்கிறோம். ஆகவே முழு நேரமும் உறுப்பினர்கள் மக்களுக்காகப் பணியாற்றிட வேண்டியிருக்கிறது. மக்களால் மதிக்கப்படத் தக்க அளவுக்கு அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 11-40)

சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களுக்கு 25, 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பொறுப்புக்களைவிட, கடமைகளைவிட இப்போது அதிகமாக இருக்கின்றன. ஜனநாயக அமைப்பு அந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது. அவர்கள் எந்தத் தொகுதியின் பிரதிநிதிகளாக இருக்கிறார்களோ அந்தத் தொகுதிவாழ் மக்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுபவர்களாக, அவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்துகொள்ள வேண்டியவர்களாக, அவர்கள் வீடுகளிலே நடைபெறுகின்ற திருமண நிகழ்ச்சிகளிலே பங்கு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் தங்களுடைய தொகுதிவாழ் மக்களுக்கு பல்வேறுவிதமான உதவிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருகிறபோது அவர்களுக்கு அதிகமான அளவில் செலவு ஏற்படுகிறது.

உதாரணமாக அவர்கள் சென்னை மாநகருக்கு வருகிறபோது, கார் வைத்துக்கொண்டோ அல்லது டாக்சி வைத்துக்கொண்டோதான் எங்கேயும் செல்ல முடியும். பல இடங்களுக்கும் சென்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். ஆசிரியப் பெருமக்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கோ, கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கோ செல்ல வேண்டுமென்றால், அவர்கள் நடந்து போவ



தென்பது நன்றாக இருக்காது. அவர்கள் பேருந்துகளில் இடிபட்டுக் கொண்டு செல்வதென்பதும் நன்றாக இருக்காது. எனவே அவர்கள் டாக்சியில்தான் போக வேண்டியிருக்கிறது. அவ்வாறு டாக்சியில் போய்விட்டு வருகிறபோது எவ்வளவு ஆகியிருக்கிறதென்று கணக்குப்போட்டுப் பார்க்கிறபோதுதான், உண்மை நிலைமை தெரியவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அதனால்தான் சென்னையில் போக்குவரத்துச் செலவே அதிகமாக ஆகிறது என்று சொன்னார்கள்.

நாம் ஐம்பது ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னால், அந்த ஐம்பது ரூபாய்க்கும் சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள். (சிரிப்பு) சாதாரணமாக கணக்குப் போட்டுப் பார்த்தால், சாப்பாட்டிற்கு அவ்வளவு ஆகாது என்றாலும் கூட, பல இடங்களுக்கும் சென்று காரியங்களை ஆற்ற வேண்டியிருப்பதால், போக்குவரத்திற்கே அதிகமாகச் செலவு ஆகிறது. ஆகவே தான் விரலுக்குத் தக்க வீக்கம் என்பது போலவும், தலைக்கு ஏற்ற தலைப்பாகை போலவும் நாம் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

எல்லா மாநிலங்களின் நிலைமைகளையும் அறிந்து ஆராய்ந்தபின்தான் நாம் இதைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சிலபல கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். நான் முதலிலேயே சொன்னதைப்போல, 1986-87 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வந்து, சட்டமன்ற மானியக் கோரிக்கை வருகிறபோது, அவர் கூறிய கருத்துக்களை உள்ளத்திலே வைத்து எந்த அளவுக்கு அவற்றை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிறைவேற்றிட ஆராய்ந்து முடிவு எடுக்கலாம். அப்போது என்னுடைய விளக்கங்களையெல்லாம் சொல்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றி, திருப்பி அனுப்பி வைக்க மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

[1986 சனவரி 30

பிரிவுகள் 2 முதல் 7 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986).**

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@655-656 ஆம் பக்கங்களில் இணைப்பு VIIஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 சனவரி 30]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ் நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-45)

**(5) 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1986).**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.".

**திருமதி வி. ஜெயலட்சுமி :** துணைத் தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு இங்கே ஆய்விற்கு வந்திருக்கும் சட்டமுன்வடிவைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். 1976-லே கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு, 1983-லே அதன் தேர்தலுக்காக சட்டங்களை நல்ல வகையிலே திருத்தம் செய்து கொடுத்து, சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்ட பின்னரும்கூட, இன்னும் ஏன் அந்த அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்தாது, தனி அலுவலர்கள் நியமனத்திற்காக சட்டமன்றத்தின் முன் மீண்டும் வந்திருக்கிறது என்பது மிகவும் வியப்பாக இருக்கிறது. 1983-லே நிறைவேற்றிய சட்டம்—இப்போது 1986 கூட வந்துவிட்டது—அதற்கான விதி முறைகள் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி, தனி அலுவலர்களின் நியமனத்திற்கு காலத்தை நீட்டித்துக் கொடுக்கும்படி இங்கே கேட்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக விதி முறைகளை மாற்றியமைப்பதற்கு இந்த அரசுக்கு ஏன் காலதாமதமாகிறது? அந்த விதி முறைகளை மாற்றி அமைக்க முடியாத அளவிற்கு அதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இப்போது தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துச் சங்கங்களிலும் தனி அலுவலர்களை நியமித்து, அவையின் ஒப்புதலுக்கு அது வந்திருக்கிறது. இவ்வாறு நியமிக்கப்பட்ட தனி அலுவலர்கள் இந்தக் குறிப்பிட்ட காலவரைதான் அங்கு இருப்பார்களா; இல்லை அதற்குப் பின்னால் அவர்களெல்லாம் பணியிலிருந்து நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பப்படுவார்களா? அல்லது கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரமான பணியில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா, என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க ஆசைப்படுகிறேன். கூட்டுறவுச் சங்கங்களை எடுத்துக்கொண்டால், எல்லாச் சங்கங்களினுடைய நிர்வாகத்தையும் அரசால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஒருசிலர் அவசரமாக நீதிமன்றத்திற்குச் சென்று இடைக்கால அல்லது தடை உத்தரவைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்னும் தங்களுடைய நேரடிப் பார்வையிலே அவைகளை வைத்திருக்கும்போது, அநேகமாக பெரும்பான்மையான சங்கங்கள் மட்டும் அரசினுடைய நேரடிப் பார்வையில் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன. நீதிமன்றங்கள் அந்தச் சங்கக் குழுக்களை கலைத்தது என்று சொன்னால், தனி அலுவலர்களுடைய நிலைமை என்னவாகும் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

@ 656—657 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மேலும் இந்தச் சட்டமுன்வடிவுக்குப் பொருந்தாது இருந்தாலும்கூட, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேளாண்மை உயர்மட்டக் குழு என்று திரு. முனு ஆதி அவர்கள் தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, அது அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்யலாமென்றும், குறுகிய காலக் கடன்களை எல்லாம் நீண்ட காலக் கடன்களாக மாற்றி அவைகளை வசூலிக்கலாம் என்றும் ரிப்போர்ட் தந்திருப்பதாக அறிகிறேன். திரு. முனு ஆதி அவர்கள் ரிப்போர்ட் என்னவாயிற்று? அந்த ரிப்போர்ட்டை ஏன் சட்டமன்றத்திலே வைக்கவில்லை? சட்டமன்றப் பேரவையிலோ, சட்டமன்ற மேலவையிலோ உள்ள உறுப்பினர்கள் ஒன்றும் தெரியாத நிலைமையில் இருக்கின்றோம்.

அவர்கள் நியாயமாகப் பரிந்துரை செய்த கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்து, விவசாயப் பெருங்குடிமக்களுக்கு அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

கடந்தமுறை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய மாவட்டத்திலே சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள். அப்போது தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து அங்கே அனைத்துப் பயிர்களும் பாழடைந்து விட்டன என்கிற நிலை இருக்கும்போது, எங்கள் காமராஜர் மாவட்டத்திலே எங்களுக்கு ஏற்பட்ட துரதிருஷ்டம் என்னவென்றால் இந்த ஆண்டு முழுவதும் வறட்சி ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக, குறுகிய காலக் கடன்கள், பயிர்க் கடன்கள் ஆகியவற்றையெல்லாம் விவசாயிகள் பெற்று, அந்தத் தொகைகளையெல்லாம் நிலத்திலே போட்டு, அதன் மூலம் எந்த விதமான பிரதி பலனும் (ரிட்டர்னும்) இல்லாமல் கஷ்டப்படுகிறோம். இங்குள்ள அனைத்துப் பயிர்களும் மழை இல்லாமல் காய்ந்து போய்விட்டன. ஆகவே எங்கள் மாவட்டத்தில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்களை வசூலிப்பதை எல்லாம் ஒத்தி வைக்க வேண்டுமென்றும், எங்கள் மாவட்டத்தையே வறட்சி மாவட்டமாக அறிவிக்கவேண்டுமென்றும், மாவட்ட கலெக்டர் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் உடனடியாக வறட்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு உத்தரவிட வேண்டுமென்றும் அந்தச் சந்தர்ப்பத்திலே நாங்கள் அனைவரும் கேட்டுக்கொண்டோம். ஆனால் இதுவரை எங்கள் காமராஜர் மாவட்டம் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. அங்கேயிருந்து அன்னவாரி சார்ட்டிபிகேட் கூட கொடுக்கப்படவில்லை. அடுத்த ஆறு மாதத்தில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் வசூலுக்கு வந்துவிடுவார்களே என்று அங்கே இருக்கிற விவசாயிகள் இப்போதே வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்ட அமைச்சர் என்கிற காரணத்தால், நான் எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை என்பது அவருக்கே தெரியும். ஆகவே விரைவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே சிவகாசி, சாத்தூர் போன்ற பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு வந்துவிட்டது. தமிழகத்தில் பல இடங்களில் வறட்சி இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே அனைத்து விவசாயிகளின் சார்பிலும் இந்த வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகிறேன். இத்தகைய வறட்சியான பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்[illegible]ட்டுக்கொள்கிறேன்.



பெரிய மாவட்டங்கள் எல்லாம் ஏற்கெனவே சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. அப்படி பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகும்கூட, கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரையில், அவை இன்னும் பிரிக்கப்படாமலே இருக்கின்றன. பெரிய மாவட்டங்களில் உள்ள ஹெல்த் டிபார்ட்மென்ட் ஆனாலும் சரி, சமூக நலத் துறை (டிபார்ட்மெண்ட்) அலுவலகங்கள் ஆனாலும் சரி அனைத்து அரசு செயலகங்களும் முறையாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கூட்டுறவு வங்கி ஆர்.டி.சி.சி பேங்க் என்று இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் சென்ட்ரல் கோவாப்பரேட்டிவ் பேங்க் என்ற அளவில் தனி அதிகாரியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஏன் அந்த வங்கியைப் பிரிப்பதற்கு இவ்வளவு கால தாமதம் ஆகிறது என்று எனக்குப் புரியவில்லை. அப்படிப் பிரிப்பதால் அரசுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்படுகிறதா என்றும் எனக்குப் புரியவில்லை.

மேலும் கூட்டுறவுத் துறையில் உள்ள சங்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் தொடர்ந்து இவ்வாறு தனி அலுவலர்களை நியமித்துக் கொண்டே போவது என்றால், கூட்டுறவு இயக்கத்தின் தத்துவமே அடிபட்டுப் போய்விடும் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த காரணத்திற்காகக் கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கமே பொய்த்துப் போய்விடும் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவிற்கான காரண காரியங்களைப் பற்றிச் சொல்லும் போது "பொது நலனை முன்னிட்டு தமிழ் நாடு மாநிலத்திலுள்ள வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அலுவலர்களை நியமிப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்" என்றும் இங்கே கொண்டு வரப்பட்டிருப்பதால், அதையும் சேர்த்தே பேசிவிடுகிறேன்—அதிலேயே சொல்லப்பட்டிருக்கிறது—அதாவது "பொது நலனை முன்னிட்டு அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களை நிருவகிப்பதற்கும், 1983 ஆம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் குழுக்களுக்கோ, நிருவாகக் குழுக்களுக்கோ சுதந்திரமான, நேர்மையான தேர்தல்களை நடத்துகின்ற நோக்கத்திற்காகவும் அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறிப்பிட்டதொரு வரம்புக்குட்பட்ட கால அளவுக்குத் தனி அலுவலர்களை நியமிப்பதற்கு வகை செய்வது . . . " என்ற காரணத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசும் ஒப்புக் கொள்கிறது. பொதுநலனை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்கள் அலுவலர்களால் நல்லமுறையில் நிர்வாகம் செய்யப்பட வேண்டும் என்று அரசு

சொல்லுகிறது. இப்படி தனி அலுவலர்களை நியமித்தால் மட்டுமே நிர்வாகம் நல்லமுறையில் நடந்துவிடுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். இதற்கு முன்னால் பஞ்சாயத்து யூனியன்களில் மக்கள் பிரதிநிதிகள் இருந்த போது, எவ்வளவு நிதியை வைத்துவிட்டுப் போனார்கள் என்பதை நாம் அறிவோம். இப்போது அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தால், இன்றைக்கு அங்கே நிர்வாகமும் சரியில்லை, கிராமப்புறங்களில் எந்த வேலையும் நடக்கவில்லை, அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியனில் நிதியும் இல்லை. அதே நிலைக்குத் தான் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தனி அதிகாரிகளிடம் நிர்வாகத்தை விட்டுவிடுவீர்களானால் அவர்கள் உங்களையும் பொய்யர்களாக ஆக்கிவிட்டு பொதுமக்களுக்கும் இடையறாமல் இன்னல்களைக் கொடுத்துவிடுவார்கள் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவு இயக்கம் என்பது மக்களுக்காக, மக்களால் ஏற்படுத்தப்பட்டு நடத்தப்படுகிற இயக்கம். அவர்களுடைய பொறுப்புக்களை அவர்களே உணர்ந்து சுயசார்புள்ள நிலையை உருவாக்கவேண்டும் என்ற அடிப்படையில் கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. அந்த எண்ணமே மாறுபடுகிற வகையில் எல்லா இடங்களிலும் தனி அதிகாரிகளையே நியமித்தால், கூட்டுறவு இயக்கத்தின் நிலை என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நிலை எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக முறையில் நம்பிக்கை உள்ளவர்கள். ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால்தான் அதற்கு மரியாதை

(முற்பகல் 11-55)

உண்டு என்ற அடிப்படையில்தான் புரூக்ளின் மருத்துவ மனையில் படுத்திருந்த போதும்கூட மக்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் கட்சித் தலைவராகவும் முதலமைச்சராகவும் வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஜனநாயக முறையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தகைய தலைவர் ஆட்சியில் எதற்காக தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே தனி அதிகாரிகளை நியமிப்பதை விட்டுவிட்டு, நல்ல முறையிலே எல்லா துறைகளிலும் அதாவது கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், பால்வள கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய அனைத்திற்கும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டு,



இந்த ஆறு மாதங்களுக்கு மேல் மேலும் நீட்டித்துச் செல்லாத வகையில், "இனிமேல் இப்படி காலத்தை நீட்டிப்பதற்காக சட்டமன்றத்தில் கேட்க மாட்டோம். இதுவே இறுதி" என்று அரசு சொல்ல வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது சிறப்பான முறையில் செயலாற்றுவதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் ஒரு காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருந்தன. கூட்டுறவுத் தந்தை என்று அழைக்கப்பட்ட டாக்டர் நடேசன் போன்றவர்கள் எல்லாம் அந்தக் காலத்திலே கூட்டுறவுத் துறையில் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். டாக்டர் நடேசன் அவர்கள் தலைமையில் கூட்டம் ஒன்று நடந்தபோது, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன என்று பேறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதாவது 1968 ஆம் ஆண்டிலேயே பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் 1972 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையில் சீர் கெட்டுவிட்டன என்பதை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். 1970 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக நான் இருந்தேன். அப்போதே இந்தச் சீர்கெட்ட நிலைகளை எடுத்துக்கூறியிருக்கிறேன். அப்போது தீவிரமான நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகுதான், தமிழகத்திலே கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டுள்ள ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடுகளையும் பரிசீலனை செய்ய, மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக கூட்டுறவு அமைச்சராக இருந்த திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தீவிரமான பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகுதான் எங்கெங்கே கூட்டுறவு இயக்கங்களில் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை தணிக்கை

செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அவைகளையெல்லாம் சீர் செய்வதற்கு இதுவரையில் முடியவில்லை. ஆகவேதான் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. காரணம் தலைவர்களாக இருந்தவர்கள் பல தவறுகளைச் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சர்க்காருடைய பணத்தையெல்லாம் கொள்ளையடித்திருக்கிறார்கள். இப்படிச் செய்த பல கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, இல்லையென்று கூற முடியாது. அவைகளைப் பரிசிலனை செய்து கூட்டுறவுத் துறை செம்மையாக நடைபெற வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

அது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகள், சிறப்பங்காடிகள் போன்றவற்றை ஏற்படுத்தி வருகிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியில் பல கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன, இல்லையென்று கூற முடியாது.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மையார் அவர்கள் 'ஏன் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டித்துக் கொண்டே போகிறார்கள், ஏன் தேர்தலை நடத்தக்கூடாது?' என்று கேட்டார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மேலும் தலைவர்களை நியமித்துக் கொண்டிருந்தால், தவறுகள் மேலும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்; அதிகாரிகளை நியமித்தால்தான் சீராக நடைபெற வாய்ப்பு ஏற்படும். சென்னையிலே மட்டுமல்லாமல், மற்ற மாவட்டங்களிலும்கூட பால்வள கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறுகின்றன. அவைகள் சிறந்த முறையில் இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அங்கே தவறுகள்கூட

(நண்பகல் 12-00)

ஏற்படும். அதை ஓரளவுக்குச் செம்மைப்படுத்த வேண்டும். அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செம்மைப்படுத்தப்பட்ட பிறகுதான் தலைவர்களை நியமிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் செயல்களிலே வெற்றி காண முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனி அதிகாரிகளை நியமித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. நிச்சயமாக ஜனநாயக முறையிலே தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நலிந்த மக்களுக்காக, தமிழகத்திலே பல கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஏழை அருந்ததியர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. சலவைத் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் செயல்படாமல் இருக்கின்றன. தமிழகத்தில் ஏறத்தாழ 18 சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் ஒன்றுகூட செயல்படவில்லை. காரணம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரக்கூடியவர்கள் திறமையுள்ளவர்களாக இருப்பது கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றது. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டு, மாநில சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவு இணையம் என்று ஆரம்பித்து, அதன் தலைமைச் செயலகம் சென்னையிலே இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலமாகச் செயல்படுத்தினால், நிச்சயமாக சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட வாய்ப்பு இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் நலிந்த மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்ய முடியும். பேரறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் கூறியிருக்கின்றார்கள். அதையெல்லாம் செயல்படுத்த சிறப்பான முறையில் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சர்வாதிகார முறையிலேகூட ஒரு நடவடிக்கை எடுப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், அந்த அளவுக்கு கூட்டுறவு இயக்கங்களிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இந்த சபையிலே தெரிவித்துக்கொள்கிறேன். சலவைத் தொழிலாளர்கள் சங்கங்களை ஒன்றாக இணைத்து அதன்மூலமாக சலவைத் தொழிலாளர்களுக்கு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான் சலவைத் தொழிலாளர்கள் மற்றும் சமுதாயத்திலே நலிவுற்று இருக்கின்ற மக்கள் முன்னேற வாய்ப்பு இருக்கின்றது. அவர்கள் ஆட்சிக்காலத்திலேதான் அவர்கள் முன்னேற முடியும் என்பதை நான் இந்த சபையிலே வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையிலே கூட்டுறவு சங்கம் நல்லமுறையிலே செயல்பட அதற்கு என்று ஒரு குழுவை நியமிக்க வேண்டும். அதன் மூலமாக இந்த சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அருந்ததியர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆதிதிராவிடர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை எல்லாம் செம்மையாக நடத்திட அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கின்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தீவிரமாக சிறப்பான முறையிலே பணியாற்றிக்கொண்டு வருகின்றார்கள். காரணம் அவருடைய வயதுதான். நல்லமுறையிலே தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் செய்து பார்த்திருக்கின்றார்கள். காரணம் சமீபத்திலே தான் அவர்கள் அதனால் மருத்துவ மனையிலே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தத் துறையிலே, சலவைத் தொழிலாளர் துறையிலே, அருந்ததியினர் துறையிலே ஆதிதிராவிடர் துறையிலே அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு அந்த சமுதாய மக்களுடைய கூட்டுறவுச் சங்கங்களை சிறப்பான முறையிலே நடத்த தீவிர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறை பதிவாளர்கள் பதவிக் கால நீட்டிப்புக்கான சட்ட முன்வடிவின்மீது என் கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை முழுமையாக வரவேற்று, என் கருத்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுத் துறை சட்ட முன்வடிவின்மீது என் கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் கூட்டுறவுத் துறையிலே செய்துள்ள நல்ல பணிகளுக்காக அவரை நான் பாராட்டுகிறேன்.

கிராமப் பணி கூட்டுறவுச் சங்கம் மூலமாக ஏழை விவசாயிகளுக்கு ரூபாய் 3,000 என்று கொடுக்கப்பட்ட நகைக் கடன் தொகையை ரூபாய் 5,000 என்று உயர்த்தியிருக்கின்றார்கள். குறிப்பாக கிராம மக்கள், ஏழை விவசாயிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கும் விவசாயப் பணிகளுக்கும் வேண்டியபோது இச்சங்கத்தை நம்பியிருக்கின்றார்கள். அவர்கள் நம்புவது இந்த விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்தான். அவர்களுக்கு நகைக் கடன் ரூபாய் 3,000 என்று இருந்ததை ரூபாய் 5,000 ஆக உயர்த்தியிருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-05)

அடுத்தபடியாக, தமிழகத்திலும் சரி, அகில இந்திய ரீதியிலும் சரி, ஜனத்தொகைக்கு அடுத்த பெரிய பிரச்சினை வேலையில்லாத பிரச்சினைதான். அதைத் தீர்ப்பதற்காக, கிராமப்புறங்களில் வேளாண்மையைச் சார்ந்துள்ள துணைத் தொழில்களைத் துவங்குவதற்கு கடன் கொடுக்க முன் வந்திருக்கின்





றார்கள். அதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அரசே எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பது என்பது மிகவும் கடினம். எனவே வேலை வாய்ப்புக்காக துணைத் தொழில்களைத் துவங்குவதற்கு கடன் கொடுப்பதற்காக நான் அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, குறுகிய காலக் கடன் மற்றும் மத்திய காலக் கடன்களை, அதற்குரிய கால அவகாசத்திற்குள் திருப்பிக் கொடுத்தால், 2 சதவிகிதம் தள்ளுபடி செய்கிறார்கள். குறிப்பாக கூட்டுறவு மூலம் கடன் வாங்குகிறவர்கள், பெரிய விவசாயிகள் எல்லாம் இன்று அந்தக் கடனைக் கொடுக்க ஏதாவது காலதாமதப்படுத்த முடியுமா என்று எண்ணும் நேரத்தில், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கிறவர்களுக்கு இன்சென்டிவ்வாக 2 சதவிகிதம் கொடுப்போமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவும் அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வருங்காலத்தில் பல பணிகளைச் செய்ய வேண்டும். அந்த முறையில் கூட்டுறவுத் துறையிலே என்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பதற்காக என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கிராமப்புறங்களில் சிறு தொழில் துவங்குபவர்களுக்குக் கடன் கொடுத்ததற்கு நான் பாராட்டு தெரிவித்தேன். அதைப்போல நகரங்களில் இருக்கிறவர்களுக்கும் கடன் தர வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அந்த வங்கிகள், தொழில் துவங்குபவர்களுக்கு எந்தக் கடன் வசதியும் அளிப்பதில்லை. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில் 25,000 ரூபாய் தொழில் துவங்குகிறவர்களுக்கு கடனாகக் கொடுத்தார்கள். தமிழக அரசும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் மையங்கள் துவங்கி நல்ல பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தொழில் துவங்குபவர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும், மற்ற நிதி நிறுவனங்களும் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த மாவட்ட வங்கிகள் இதுவரை எந்த விதக் கடனும் தொழில் துவங்கக் கொடுத்ததில்லை. எனவே நகரங்களில் சிறு தொழில்களைத் துவங்குபவர்களுக்கு கூட்டுறவு வங்கிகளும் கடன் கொடுத்தால், அதன்மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்த நல்ல வழி வகை ஏற்படுமென்பதைக் கூறிக்கொள்கிறேன். அந்தக் கடனைத் திரும்பப் பெறுவதுபற்றி எந்தவித அச்சமும் தேவையில்லை. அதை வசூலிக்க பல்வேறு வரையறைகளைச் செய்திருக்கிறார்கள். மேலும் அப்படி கடன் கொடுக்கும்போது, பட்டதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதை என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தை பொறுத்தவரையில், அது அனைத்து மாவட்டங்களிலும் பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு முறையும் அமைச்சர்கள் ஒவ்வொரு துறையைப் பற்றிப் பேசும்போது, பல் வேறு கோரிக்கைகள் கூறி, ஒவ்வொரு வசதியை ஏற்படுத்தி வந்தாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தென் ஆற்காடு மாவட்டம் இன்னும் பின் தங்கியிருக்கிறது. எந்த ஒரு துறையாக இருந்தாலும், அந்த மாவட்டத் தைக் கவனிக்காமல் இருக்கிறார்கள். அங்கே கூட்டுறவுப் பயிற்சி நிலையம் இல்லை. தமிழகத்திலே 4, 5 இடங்களிலேதான் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறவர்கள் அந்தப் பயிற்சிக்காக வேலூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கை 100-லிருந்து 200 வரை இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத் திலே எங்கே இடம் கிடைக்கிறதோ அங்கே இந்தப் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்சினை இது. இந்த மாமன்றத்திலேயே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். தமிழக அரசு, கூட்டுறவுத் துறையில் உள்ள இளநிலை ஆய்வாளர்களைப் பணி வரன்முறை செய்து தர வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சரவர் களைக் கேட்டுக்கொண்டோம். முன்பு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது, அரசு இள நிலை ஆய்வாளர்களை விரைவில் பணி நிரந்தரம் செய்யுமென்று வாக்குறுதி தந்தார்கள். இப்போது பொறுப்பேற்றிருக்கும் அமைச்சரவர்களும் அந்த உறுதி மொழியைத் தந்தார்கள். கூட்டுறவுத் துறையிலுள்ள அமைச்சுப் பணி யாளர்களை பணி நிரந்தரம் செய்யும்போது, அதே துறையிலுள்ள இளநிலை ஆய்வாளர்களைப் பணி நிரந்தரம் ஏன் செய்யவில்லை என்று கேட்க விரும்பு கிறேன். 7, 8 ஆண்டுக்காலம் வேலை செய்தும், இன்னும் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இப்போது தமிழ் நாடு பப்ளிக்

(பிற்பகல் 12-10)

சர்வீஸ் கமிஷன் மூலமாக ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அவர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டால், இப்போது அங்கே பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கும் ஜூனியர் இன்ஸ்பெக்டர்களின் கதி என்ன, அவர்களின் குடும்பங்கள் என்ன ஆவது என்ற நிலை வரும். ஆகவே இப்போது பணியில் இருப்பவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இந்தக் காரணத்தைக் காட்டி, கோர்ட்டுக்கு எல்லாம் போய்விடவில்லை. கடந்த ஆண்டு ஏப்ரல் 11-ஆம் தேதி இதே அவையில் ஆசிரியர்களின் பிரச்சினை ஒன்றில் பேசிய நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அரசுப் பணி



யாளர்கள் ஒருவருட காலமாகத் தொடர்ந்து ஒரு பணியில் இருந்து சலுகை களையும் மற்றவைகளையும் பெற்றிருந்தார்களேயானால், அவர்களை எந்தக் காரணம் கொண்டும் நீக்கிவிடாமல் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதிமொழியைத் தந்தார்கள். அந்த உறுதி மொழிக்கேற்ப, இப்போது அந்த இளநிலை ஆய்வாளர்களையும் நிரந்தரப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் 600-லிருந்து 700 பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். மேலும் கூட்டுறவுத் துறை வங்கிகள் மூலம் வாகனங்கள் வாங்கக் கடனுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்கும் கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் தமிழக அரசுக்கு பாராட்டுத் தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிற நேரத்தில், தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீடித்துக் கேட்கும் வழக்கம் நீண்டகாலமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். கூட்டுறவு இயக்கமானது சாதாரண மக்கள் தங்களை அதிலே ஈடுபடுத்திக்கொண்டு, மக்களை மக்களே ஆட்சி செய்கிற மாதிரியான இயக்கமாகும். அந்த இடத்திலே ஒரு தனி அதிகாரியை அமர்த்திவிட்டால், அவர் நல்லவராகவே இருந்தாலும், அதிகார வர்க்கத்தின் சாயலோடு நடக்கிற நிர்வாகம்தான் அமையும். இப்படி தனியதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதன் காரணமாக, கூட்டுறவு இயக்கத்தின் தன்மை மறைந்து போகிறது. ஆகவே எவ்வளவு சீக்கிரமாக தனி அலுவலர்களை எடுத்து விட்டு, இதையே கடைசி நீட்டிப்பாகக் கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அங்கே தேர்தல்களை நடத்த வேண்டும். காரணம் இப்போது அரசே ஒரு தீர்மானத்திற்கு வந்து, நகராட்சித் தேர்தல்களை நடத்த நினைக்கிறது. அதைப்போலவே கூட்டுறவு இயக்கத்திலும் அந்த நிலைமை யைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. மாசிலாமணி-மன்னிக்கவும், கோலப்பா அவர்கள் பேசும்போது, அமைச்சர் இளைஞராக இருப்பதால் அதை நடத்துவார் என்று நம்புவதாகக் குறிப்பிட்டார். அதையே நானும் சொல்லிக்கொண்டு, நல்லமுறையில் இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முதியவர்களாக இருந்தால் தடுமாற்றம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார் போல இருக்கிறது (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், அடிக்கடி இதுபோன்ற நீட்டிப்பு சட்டங்கள் வரக்கூடாது என்ற உணர்வையும், விரைவில் அங்கே மக்களாட்சி மலர வேண்டுமென்ற உணர்வையும் எடுத்துக்காட்டினார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கொள்கையில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்பு நீட்டிப்பு கேட்கிற காலத்தில், ஒரு ஆண்டுக் காலத்திற்கு நீட்டிப்புக் கோருவார்கள். ஆனால் இப்போது நான்கு மாதம், ஆறு மாதம் என்று நீட்டித்து காலத்தை சுருக்கிக் கொண்டு வருகிறோம். அதிகாரிகளைப் பொறுத்தவரையில், நாம் விதிகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகளுக்கு அத்தகைய உணர்வுகள் வரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்த வரையில், தனி அதிகாரிகளை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் மக்கள் நிர்வாகத்தை உண்டாக்குவதில் மிக வேகமான உறுதியோடு இருக்கிறார்கள் என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். தனி அதிகாரிகள் மாற்றப்

(பிற்பகல் 12-15)

பட்டு, ஜனநாயக முறையில் நிர்வாகம் அமைகிறபோதுதான் பொது மக்களுக்குச் சிறப்பாக நல்லமுறையில் பணியாற்ற முடியும் என்பதை தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையில் நிச்சயமாக மிக வேகமாக தனி அலுவலர்களை அகற்றுவதற்கு, புதிதாகத் தேர்தல் நடத்தும் பணிகளை வேகமாகச் செய்வோம் என்று இந்த நேரத்தில் உறுதி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். சிறப்பான கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தவறுகளையும் சுட்டிக் காட்டினார்கள். தவறுகள் எந்தப் பகுதியிலிருந்து சொல்லப்பட்டாலும், அதை கவனத்தில் கொண்டு அவற்றைக் களைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் பேசுகிற நேரத்தில், விதிகளை அமைக்க ஏன் இரண்டு ஆண்டுகள் தேவை என்று கேட்டார்கள். இப்போது பதிவாளர்கள் பன்னிரண்டு பேர்தான் இருக்கிறார்கள்.



அவர்கள் பல துறைகளிலே இருக்கிறார்கள். அவர்களின் கொள்கைகளும் மாறுபட்ட கோணங்களில் இருப்பதால், இத்துறையினுடைய சட்டங்களையும், விதிகளையும் கொடுத்து, அவற்றில் எது எது சரியாக இருக்கிறதென்று பார்க்கச் சொல்லியிருக்கிறோம். எனவேதான் கால தாமதம் ஏற்படுகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் அதையும் மிக வேகமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் ஒன்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு இளநிலை ஆய்வாளர்கள், நிரந்தரமாக இருப்பார்களா அல்லது தற்காலிகமாக இருப்பார்களா என்று கேட்டார்கள். அரசுத் துறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் முதலில் தற்காலிகமாகத்தான் இருக்க முடியும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். நிறைய சங்கங்களை தனி அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஒரு சில சங்கங்களை அதன் தலைவர்கள் இன்னும் தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னார்கள். இதற்கு ஒரு திருத்தத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 73 சங்கங்களைச் சார்ந்தவர்கள்தான் உயர்நீதிமன்றத்தில் "ஸ்டே" வாங்கியிருக்கிற நேரத்தில், நாம் அத்தனை சங்கங்களையும் எடுத்துவிட்டோம். ஆனால் ஒரு சில தலைவர்கள் கணக்குப் புத்தகங்களையும், சங்கத்தின் ஒரு சாவியையும் ஒப்படைக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனைத்து கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளையும் தனி அதிகாரிகள்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ரேஷன் பொருள்களையும் நாம் தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

தலைவர்கள் வந்தால், நிர்வாகம் நியாயமாக இருக்கும் என்று சொல்கிறவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களில் சிலர் இன்னும் கணக்குப் புத்தகங்களை, சாவியை ஒப்படைக்கவில்லை. அவர்கள் சங்கங்களை சொந்த லேவாதேவியை நடத்துவது போலத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அவர்கள் ஆதரவு கொடுப்பதில்லை. பொதுமக்களுக்குப் போய்ச் சேரக் கூடிய வாய்ப்பு வசதிகளுக்கு இவர்கள் குறுக்கே இருந்தால்தான், இவர்களை நீக்கிட வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தோம். இவர்கள் பினாமி பெயரில் நிறைய கடன்களை வாங்கியிருக்கிறார்கள். சங்க உறுப்பினர்கள் எல்லாம் நியாயமான முறையில் இல்லை. ஊரிலுள்ள பலரை உறுப்பினர்களாகச் சேர்க்காமல் இருந்திருக்கிறார்கள். இதுவெல்லாம் மாண்புமிகு உறுப்

பின்னர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஒருதடவை அவர்களே என்னிடம் ஒரு சில தலைவர்களைப்பற்றிக் குறை சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் அவற்றைக் கலைத்தோம் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உயர்மட்டக் குழுபற்றிச் சொன்னார்கள். அதிலிருந்து சுமார் நூறு கோடி ரூபாய்க்கு மேலாகத் தர வேண்டுமென்று பரிந்துரை வந்திருப்பதாகப் பேசி, வருகிற காலத்தில் எதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்று தெளிவாக உத்தரவிட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்திருக்கிற இயக்கத்தின் அரசாங்கத்திடமும் சொல்லியாக வேண்டும். மத்திய அரசு ஒவ்வொரு தடவையும் நாம் கூறுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுத்துள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய நாம் மத்திய அரசின் அனுமதி கோரினால், அது அனுமதி தர மறுக்கிறது. இதையெல்லாம் மீறித்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு விவசாயிகளுக்கு சுமார் 200 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகள் அளித்திருக்கின்றன என்று சொன்னால், "எங்களால் முடிந்ததைச் செய்துகொண்டிருக்கிறோம்" என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர் மட்டக் குழுவின் பரிந்துரையை ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்போம் என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 12-20)

அடுத்து, இன்றைக்கு வறட்சிபற்றிப் பேசுகிற நேரத்தில் அமைச்சர் என்ற முறையில் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறோம். அவர்கள் அதைச் சரி பார்த்து விதியின் கீழ்தான் வறட்சி என்று அறிவிக்க முடியும். அப்படி வறட்சி என்று அறிவிக்கிற நேரத்தில் நிச்சயமாக இந்தக் கூட்டுறவுக் கடன்களுக்கு எல்லாம்—குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன்—இவைகளுக்கெல்லாம் வழி வகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பிரிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் நாம் அத்தனை பேரும்தான். சிவகங்கைக்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தனித் தனியாக வங்கிகளைப் பிரித்தால், தகுதியே இல்லாமல் இருக்கிறது. காமராசர் மாவட்டத்தின் வங்கி மட்டும்தான் தகுதியாக வரும். அந்த இரண்டு வங்கிகளைப் பிரித்துக் கொடுத்தால், இரண்டு வருட காலத்திலே பிரித்துக் கொடுத்ததுபோல, இரண்டு வருட காலத்திலே வேகமாக மூட வேண்டிய சூழ்நிலையும் அங்கே இருக்கிறது. காரணம் அந்தப் பகுதியிலே வசூல் இல்லை. எல்லோரும் சேர்ந்துகொண்டு கடன்களைக் கட்ட வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் . . .



திருமதி வி. ஜெயலட்சுமி : துணைத் தலைவரவர்களே, வளமையான பயிர்களுக்கு மத்தியிலே களைகள் இருந்தால், வளமையான பயிர்களின் வளத்தைப் பாதித்துவிடும். அப்படி இருக்கும்போது காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், வங்கிகளைப் பிரித்தால், காமராசர் மாவட்டத்தின் வங்கி ஒன்றுதான் ஆரோக்கியமான வங்கியாக இருக்குமென்று அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். காலங்காலமாக காமராசர் மாவட்டத்திலுள்ள மக்கள் மட்டும்தான், மற்ற மாவட்ட மக்களுடைய பலகீனங்களையும் சேர்த்துச் சுமக்க வேண்டுமா ? ஏன், எங்களுக்கென்று சுயச் சார்புள்ள வங்கியாக, மத்திய வங்கியாக அமைத்துக்கொள்ளக் கூடாதா என்பது அந்த மாவட்டத்திலுள்ள ஏழை விவசாயிகள் முதற்கொண்டு அந்தக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவரின் அபிப்பிராயமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அமைச்சர் அவர்களும் காமராசர் மாவட்டம் விருதுநகர் பகுதியிலிருந்துதான் வருகிறார்கள். காமராசர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரையிலும் எந்தக் கூட்டுறவுச் சங்கமும் நலிந்த நிலைமையில் இருந்தது கிடையாது. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே இயங்கிக்கொண்டு வருகின்றன. அப்படி இருக்கும்போது, ஒரு பரிசு போன்றாவது, அமைச்சர் அவர்கள் சீக்கிரம் அதை அந்த மாவட்டத்திற்குப் பிரித்துக்கொடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, அரசு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய வேலைகள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. அதிலே கருத்து வேறுபாடு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதெல்லாம் அரசு கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பது. அந்த இரண்டு மாவட்டங்களிலும் அரசால் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. தள்ளிவைத்த கடனே வசூலாகவில்லை. 40 சதவீத வசூல்கூட இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், வசூல் செய்வது பெரும்பாடாக இருக்கின்ற காரணத்தால்தான்,

அதையெல்லாம் கருத்திலே வைத்துக்கொண்டு, அந்த மாவட்டத்திலுள்ளவர்களையும் காப்பாற்ற வேண்டும், காமராசர் மாவட்டத்திலுள்ளவர்கள் வலுவாக இருக்கிறார்கள், அவர்களும் நன்றாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது அரசு. மிக வேகமாக மத்திய வங்கிகளைப் பிரிக்க இருக்கிறது அரசு.

அண்ணா மாவட்டத்திலுள்ள மத்திய வங்கிகளைப் பிரிப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் இன்றைக்கு அரசு எடுத்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கோலப்பா அவர்கள் பேசும்போது, நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளின் அடிப்படையில் அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்கும். அதிலே குறிப்பாக பின் தங்கிய சலவைத் தொழிலாளர்களின் பிரச்சினை சம்பந்தமாக மிகத் தெளிவாக அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நல்ல கருத்துக்களை ஏற்று அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் பேசும்போது, நகரத்திலே தொழில் தொடங்குவதற்கு கடன் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால்தான், நகரத்திலே இருக்கின்ற அர்பன் வங்கிகளுக்கு அரசு உத்திரவிட்டிருக்கிறது. அர்பன் வங்கி என்று சொன்னால், ஒரு காலத்திலே வட்டிக் கடை, லேவாதேவிக்காரர்களாக இருந்து தங்கக் கடன் மட்டும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அதை மாற்றி நகரத்திலே இருக்கும் அர்பன் வங்கிகள் எல்லாம் சிறு தொழில்கள் புரிவதற்கு தொழிலின் தன்மையைப் பொறுத்து, 25 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சமானாலும் சரி, இரண்டு லட்சமானாலும் சரி, அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதுபோல் லாரி, ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா, பஸ் முதலியவைகள் வாங்க வேண்டுமென்று சொன்னால்கூட, அதற்கும் பணம் வழங்கச் சொல்லி, இன்றைக்கு அர்பன் வங்கிகளுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. மத்திய வங்கிகளுக்கு அரசு சொல்லாததற்குக் காரணம், மத்திய வங்கிகளின் நிதி நிலைமை மிக மோசமாக இருப்பது. அங்கேயிருந்து பணத்தை எடுத்து தொழில் செய்வோருக்குக் கொடுக்கும் நேரத்தில், விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் தகுதி குறைந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அதை அரசு நிறுத்தி வைத்திருக்கிறது என்பதை நான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,



இன்றைக்கு அவர்களுடைய கோரிக்கையைச் சொல்லிய நேரத்தில், கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி அவர்களுடைய மாவட்டத்திற்கு வேண்டுமென்று சொன்னார்கள். நிச்சயமாக அரசாங்கம் பரிசீலித்து மிக வேகமாக அந்த நடவடிக்கையை எடுக்கும் என்பதை அவருக்கு நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளநிலை ஆய்வாளர்களை நிரந்தரமாக அமர்த்துவது பற்றி இதற்கு முன்னாலேயும் கேள்வி போட்டார்கள் என்று நினைக்கின்றேன். அப்போதும் அதை அனுதாபத்தோடு அரசு பார்க்குமென்று சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக அவர்களுடைய பிரச்சினையை ஒரு தாய்மை உணர்வோடு ஆய்ந்து பார்த்து வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்யுமென்பதை நான் இந்த நேரத்தில் அவர்களுக்குப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் பேசும்போது, இதுபோன்ற அவசரச் சட்டங்கள் மறுபடியும் வரக்கூடாதென்ற நல்ல கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை எல்லாம் ஏற்றுக்கொண்டு நிச்சயமாக வருங்காலத்தில் இப்படி தள்ளி வைக்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகளுக்கெல்லாம் வேகமாகத் தேர்தல்களை நடத்தவேண்டுமென்ற உணர்வு வந்து கொண்டிருக்கிறது ஆகவேதான் இரண்டு மாதம், நான்கு மாதம் என்று காலத்தைக் குறைத்து நீட்டிப்புக் கேட்கிறோம். ஆகவே வேகமாகத் தேர்தலைச் சந்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தனி அலுவலர்கள் போட வேண்டிய ஒரு அவசியமோ அல்லது உணர்வோ இல்லை. ஏறத்தாழ 27 ஆயிரத்திற்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் 5,100 சங்கங்களுக்குத்தான் தனி அதிகாரிகளை அரசு போட்டிருக்கிறது. மீதியுள்ள சங்கங்களில் எல்லாம் இன்றைக்கு நிர்வாகக் குழுதான் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே அரசுக்குக் கலைக்க வேண்டுமென்ற உணர்வு இல்லை. கலைக்க வேண்டிய காலகட்டம் வரும் நேரத்தில், அதை அரசு செய்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-25)

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, கூட்டுறவுத் துறையே இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தக் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்திய நாடு முழுவதுமாக எடுத்துக்கொண்டு பார்த்தாலும், பால் வளத் துறையானாலும்

சரி, நுகர்வோர் கூட்டுறவுத் துறையானாலும் சரி, தமிழகம்தான் எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. வங்கித் துறையில் மட்டும்தான் கொஞ்சம் சுணக்கம் இருக்கிறது என்று மட்டும் சொல்லி, இங்கே நல்ல முறையில் சொல்லப்பட்ட அனைத்துக் கருத்துக்களுக்கும் இந்த அரசாங்கம் செவி சாய்க்கும் என்று சொல்லி, ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** தற்போது ஜூனியர் இன்ஸ்பெக்டரை தற்காலிகமாகத்தான் நியமித்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. அவர்களை நிரந்தரப்படுத்த முடியாது என்றும் தற்போது அலுவலர்கள் இருக்கிற இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வந்து விட்டால் நிச்சயமாக அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம் என்றும் அமைச்சர் சொன்னார். இப்போது அவர்களை அனுப்பிவிட்டாலும்கூட, பின்னாலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும்போது—அதாவது இன்னும் 6 மாதம் அல்லது ஒரு வருஷம் கழித்து தேர்தல் நடந்து முடிந்த பிறகு—இன்னும் 6 மாதத்தில் தேர்தலை நடத்திவிடுவோம் என்று இங்கே சொல்லப்பட்டாலும்கூட, அது முடியுமா என்ற சந்தேகம் இருக்கிற காரணத்தால் ஒரு வருஷம் என்று முன் ஜாக்கிரதையாக நான் குறிப்பிட விரும்புகிறேன்—ஆறு மாதத்தில் நடத்தி முடித்துவிட்டால் நான் நன்றி உடையவளாக இருப்பேன். அப்படி தேர்தலை நடத்தி—அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டாலும், அவர்களின் சர்வீசை மனதில் கொண்டு பிறகு வேலை வாய்ப்பு கொடுக்கும்போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். பின்னாலே எப்படி வேலை கொடுக்கப் போகிறீர்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நாங்கள் விதிகளுக்கு உட்பட்டுதான் செயல்படுத்த முடியும். அவருடைய கருத்து நல்ல கருத்துதான் என்றாலும், பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கலந்துதான் செய்ய முடியும். எனவே அதனைக் கலந்து உதவி செய்ய நடவடிக்கை எடுப்போம்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) நிறைவேற்றப்பட வேண்டும்.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986).**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1986 சனவரி 30

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு துறைகளில் சர்வீஸ் கூட்டுறவு சொசைடிகள் இருந்து வருகின்றன. எங்கள் காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். தீப்பெட்டி சர்வீஸ் கோவாப்பரேட்டிவ் சொசைடிஸ் என்று பல சங்கங்கள் இருக்கின்றன. 40-க்கும் மேற்பட்ட சங்கங்கள் அங்கே இருந்தாலும் கூட, 7 அல்லது 8 சங்கங்கள்தான் செயல்படுகின்றன. மற்றவை எல்லாம் 'டார்மென்ட்' ஆக இருக்கின்றன. அத்தகைய சொசைடிகளுக்கு எல்லாம் தனி அலுவலர்களை அரசாங்கம் நியமிக்கப் போகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன் நிர்வாகக் குழு உறுப்பினர்களையெல்லாம் வெளியே அனுப்பிவிட்டு, சங்கத்தின் கணக்கு வழக்குகளை எடுக்கும்போது, சங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான தகுதி இருக்கிறதா என்று பார்த்து, நல்ல முறையில் உள்ள சங்கங்களுக்கு மட்டும்தான் அலுவலர்களை நியமிக்கப் போகிறார்களா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். சங்கங்கள் என்று பெயர் அளவில் மட்டும் இருந்து கொண்டு செயல்படாத நலிந்த சங்கங்களுக்கும் சேர்த்து, தனி அலுவலர்கள் நியமித்து, அதற்கும் அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஊதியம் கொடுக்கப் போகிறார்களா என்றும் அறிய விரும்புகிறேன். பால் வளத் துறையில் அப்படிப்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. நெசவாளர் கூட்டுறவு சொசைடிகளும் அப்படி பல இருக்கின்றன. எனவே அனைத்துச் சங்கங்களையும் அரசு ஒட்டுமொத்தமாக தகுதியைப் பார்த்து ஆராய்ந்து, தகுதி இல்லாத சங்கங்களுக்கு அலுவலர்களைப் போட்டு அரசாங்க நிதியை வீணாக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

@ 657-662ஆம் பக்கங்களில் இணைப்பு IXஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 சனவரி 30]

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் அத்தனை பேரும் கூட்டுப் பொறுப்பிலே இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பொருள் பற்றிய துறைக்கு மரியாதைக்குரிய திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்கள் பொறுப்பு வகிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவரிடத்திலே கேட்டிருக்கலாம். நான் அந்த ஊரைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அதை நான் சொல்லுவது சரியாக இருக்காது. இப்போது என்ன பின்னணி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுத்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், எந்த அமைச்சர் அறைக்கும் உரிமையோடு சென்று விவரங்களைக் கேட்டுப் பெறலாம் என்பதை எடுத்துச் சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை அவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(7) 1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986)**

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கூலி வழ்ங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். முதலிலேயே இது வரவேற்கத்தக்க சட்டத் திருத்தம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுள்ள நிலைமையை விட கொஞ்சம் முன்னேறிப் போவதற்குரிய அடிப்படையிலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற தென் பிராந்திய தொழிலாளர் நலத் துறை ஆணையர்கள் மாநாட்டையொட்டி இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாக காரண நோக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

@ 662 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.





இப்போதுள்ள நடைமுறைப்படி, பிடித்தம் செய்வதற்கு முதலாளிகளுக்கு உரிமை இருக்கிறது. ஒரு காலத்திலே முதலாளி—தொழிலாளி என்று இருந்த காலத்திலே அது போடப்பட்டது. 1936 ஆம் ஆண்டு போடப்பட்ட சட்டம் இது. அப்போது சுதந்திரம் இல்லை. அந்தக் காலத்திலே பொதுத் துறை, அரசுத் துறை இல்லை. அந்தக் காலத்திலே நிர்வாகத்தில் முதலாளிகள்தான் இருப்பார்கள். அவர்களிடத்திலே வேலை பார்க்கும் தொழிலாளிக்கு முதலாளி சம்பளம் கொடுக்க முன்வரவில்லை. எந்த அளவிற்குத் தொழிலாளி ஏமாந்திருப்பாரோ அந்த அளவிற்கு லாபம் என்று நினைத்தார்கள். ஒரு காலத்திலே, முதலாளித்துவம் இருந்த காலத்திலே நிலப்பிரபுக்களுக்கு ஓசியாக வேலை செய்ய வேண்டுமென்று வைத்திருந்தார்கள். விவசாயிகள் ஒரு நாளாவது ஓசியில் உழைக்க வேண்டும் என்பதை நிலப்பிரபுக்களின் உரிமையாக வைத்திருந்தார்கள். சம்பளம் கொடுக்காமல் வேலை செய்ய வேண்டும் என்பதை உரிமையாக வைத்துக் கொண்டு வளர்ந்து வந்தவர்கள் நாம். ஆகவே முதலாளிகளிடம் விசுவாசமுள்ள தொழிலாளி சம்பளம் வாங்காமல் வேலை பார்க்க வேண்டும். அப்படியே வழங்கினாலும், உடலும் உயிரும் ஒட்டியிருக்கக் கூடிய அளவிற்குக் கொடுத்தால் போதும் என்ற கருத்துக்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. 1936 ஆம் ஆண்டுக்கு முன்பு தொழிற்சாலைகள் ஆரம்பித்தால், தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலே சங்கடங்களை உண்டாக்கினார்கள். அதனாலேதான் சம்பளப் பட்டுவாடா சட்டம் என்று கொண்டு வந்தார்கள். இப்போது கூலி வழங்கும் சட்டம் என்று போட்டிருக்கிறோம். இப்படி வேலை செய்ததற்குச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம். இந்த நாட்டைத் தவிர வேறு எங்கும் இந்த மாதிரியான சட்டம் கிடையாது. இந்த ஊரில்தான் சம்பளம் இல்லாமல் வேலை பார்க்க வேண்டும் என்கிற பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போதுள்ள சட்டத்தைக் கொஞ்சம் 'இம்ப்ரூவ்' செய்து யாரிடம் வேலை வாங்கினாலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களிடம் சம்பளம் பிடிக்கும் அதிகாரம் கொடுத்தார்கள். அதிலே சில பேர் இருக்கிறார்கள்—இன்கிரிமென்ட் கட் பண்ணுவது, புரோமோஷன் கட் பண்ணுவது, சஸ்பண்ட் செய்வது என்று. அப்போது பணத்தை வாங்க முடியாது. அதை நிர்வாகத்தினுடைய உரிமையாகக் கொடுத்துவிடுகிறார்கள். நிர்வாகம் நினைத்தால் அபராதம் போடலாம். இது போன்று இன்னும் சில விதி முறைகள். யாரும் அதைக் கேட்க முடியாது. ஏனென்றால் அவர்தான் நீதிபதி. அந்தக் காலத்திலே அப்படி முதலாளிகள் இருந்திருக்கலாம். ஒரு நிர்வாகம் என்றால் மேனேஜ்மென்ட், தொழிலாளி அவ்வளவுதான். இன்று இருக்கக்கூடிய நிலை பணத்தைப் பூராவும்

[திரு. க. சுப்பு] [1986 ஜனவரி 30

(பிற்பகல் 12-35)

நிர்வாகம் போடுவதில்லை. பணம் போட்டால் விவரம் தெரியாதவன் என்று அர்த்தம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிர்வாகத்தில், சிறந்த நிர்வாகி யார்? எப்படி அந்த கேபிட்டலை 'மேனுபுலேட்' பண்ணுவது என்பதிலே கை தேர்ந்தவர்கள்தான். அதிலே வங்கிகள் இருக்கின்றன. இன்ஸ்ட்டிட்யூஷனல் வங்கிகள். பணம், பைனான்ஸ் கொடுக்கக்கூடிய வங்கிகள். இந்த மாதிரி வங்கிகளிடமிருந்து அரசாங்கம், பொதுமக்கள் இவர்கள் பணம் இதையெல்லாம் சேர்த்து கம்பெனி, கார்ப்பரேஷன் பணத்தையெல்லாம் போட்டு நிர்வாகம் நடத்திக்கொண்டிருப்பார்கள். இந்த நிர்வாகத்திலே இருப்பவர்க்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டியதன் அவசியம் என்ன? அதுவும் அவர்கள் என்ன நினைத்தாலும் செய்யலாம். அவர்கள் "பைன்" போடலாம். தொழிலாளி ஒரு நாளைக்கு வேலைக்கு வராவிட்டால், 8 நாட்கள் சம்பளத்தைப் பிடிக்கலாம். அவனுடைய அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக, ஒரு நாளைக்கு தொழிலாளி வேலைக்கு வரவில்லை என்றால் 8 நாட்கள் சம்பளத்தைப் பிடிக்கலாமா? இன்றைக்கு இருக்கின்ற சமுதாயத்திலே பிடிக்கலாமா; நாம் அதை சட்டமாகக் கொண்டுவந்துவிட்டோம். இப்போது 3 மாதங்கள்வரை சஸ்பென்ட் பண்ணப்பட்டவருக்கு அரைச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும், 6 மாதம் என்றால் முக்கால் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அதை ஏன் கொண்டு வந்திருக்கிறோம்? சம்பளத்தில் பிடிக்க உரிமை இல்லை. என்ன காரணம்? அதிலே ஒரு பழமொழி இருக்கின்றது. தலையிலே அடிக்கலாம், ஆனால் வயிற்றிலே அடிக்கக்கூடாது என்று சொல்வார்கள். வயிற்றிலே ஏன் அடிக்கக்கூடாது? அவர் எதற்காக வேலை செய்கின்றார்? சாப்பிடுவதற்காக வேலை செய்கின்றார். அப்படி இருக்கும்போது, அவன் வயிற்றிலே அடிக்கக்கூடாது. அவன் வேலை செய்ததற்குச் சம்பளம் கேட்கிறான். ஆகவே தவறு செய்தால், அதற்குச் சம்பளத்தைப் பிடிக்கக் கூடாது. தவறுக்கு வேறு தண்டனையை கொடுக்கலாமே தவிர, வேறு அல்ல. அவன் செய்த வேலை நியாயம் அல்ல என்று வாதாடினோம். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக்கொண்டுதான் அதிலே சில மாற்றங்களைச் செய்து சட்டம் கொண்டுவந்தார்கள். அந்த அடிப்படையிலே இங்கே தொழிலாளி தவறு செய்தான் என்றால், அவன் சம்பளத்தைப் பிடித்துக் கொள்ளும் அதிகாரத்தை யாருக்கும் கொடுக்கக்கூடாது. அதுவும் மோசமான நிர்வாகங்கள் எவ்வளவோ இருக்கின்றன. எடுத்ததற்கெல்லாம் 'பீபைன்ஸ்' போடுவான். 8 நாட்கள் சம்பளத்தைப் பிடிப்பான். எடுத்ததற்கெல்லாம் 'சஸ்பென்ட்' பண்ணுவான். அவனுடைய தொழிற்சாலையில்



1986 சனவரி 30] [திரு. க. சுப்பு]

உள்ள பொருள்கள் சேதம் அடைந்துவிட்டால், அதற்கும் அபராதம் என்று சொல்வான். இப்படிப்பட்ட நிலைமையிலே செய்கின்றார்கள். விவரம் இல்லாத தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களை ஏமாற்றுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதனாலேதான் பல நேரங்களில் இந்தத் தகராறு வருகிறது. அவர்களைக் கொத்தடிமையாக நடத்துகின்றார்கள். அந்தத் தொழிற்சாலையில் உள்ள பகுதி தொழிலாளர் மற்ற பகுதி நிர்வாகம் இந்த இரண்டுமே சேர்ந்துதான் செய்ய வேண்டுமென்ற நிலை உருவாகியிருக்கின்றது. அப்படி இருக்கும்போது, நிர்வாகம் அவர்களை அடிமைகளாக நடத்துகின்றார்கள். காலையிலேகூட அமைச்சர் அவர்கள் கொத்தடிமை முறை ஒழிந்துவிட்டது என்று சொன்னார்கள். அப்படி இல்லை. அது வேண்டுமானால் வேறு பெயராக இருக்கலாம். இப்படி கொத்தடிமைகளாக இருப்பவர்கள் முதலாளிகளிடம் பேச முடியாது. விசாரணை யார் நடத்துவது? தவறு செய்தார் என்று யார் தீர்மானிப்பது? அந்த நிர்வாகத்தை நடத்துகின்றவர்கள். அந்த நிர்வாகமே தண்டனை கொடுக்கின்றது. அந்த நிர்வாகமே வெளியேற்றுகின்றது. இது என்ன கோர்ட்டுக்கு இல்லாத அதிகாரம். சட்டமன்றத்திற்கே இல்லாத அதிகாரம். நிர்வாகத்திற்கு இல்லாத அதிகாரம். இந்த மூன்றுக்கும் இல்லாத அதிகாரத்தை முதலாளிகளுக்கு ஏன் கொடுக்கின்றார்கள்? அந்த முதலாளி மோசமானவனாக இருந்தால், என்ன ஆகிறது? அவன் கையிலே ஒப்படைத்தால், என்ன ஆகிறது? அந்த அதிகாரத்தை முதலாளிக்குக் கொடுக்கின்றார்கள். அவன் செய்த உற்பத்திக்கு என்ன கூலி? அதைக் கொடுக்க மாட்டேன் என்கின்றார்கள். அது அநியாயம். சமூக அநீதி. அப்படிப்பட்ட பொருள் நம் சட்டங்களிலே இடம் பெற்றிருக்கிறது. எப்போது? 1936-லே. அதனாலே நாம் கொஞ்சம் மெதுவாகப் பேசவேண்டியிருக்கின்றது. இந்தக் காரணத்தை முன்னிட்டு சம்பளத்தைப் பிடிக்கின்ற அதிகாரத்தை யாருக்கும் கொடுக்கக்கூடாது. அதனாலேதான் தொடர் ஊதியத் திட்டம் என்று வைத்திருக்கிறோம். இப்போது டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே வைத்திருக்கிறோம். ஏன் வைத்திருக்கிறோம்? வேலை செய்யச் செய்ய, 10 வருடமாகச் செய்தால், ஆட்டோமேடிக்காக இன்னொரு கிரேடுக்கு அவன் போக வேண்டும் 'சூட்டபிளிட்டி' எல்லாம் பார்க்கின்றதில்லை. ரெவ்யூ பண்ண வேண்டும். என்ன காரணம்? அவன் குடும்பம் பெருகிக் கொண்டு வருகிறது. அவனுடைய தேவையை ஒட்டி வருகிறது. அதிகமாகிறது. தேவையை ஒட்டி சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று ஜப்பானில் வைத்திருக்கின்றார்கள். அப்படி ஜப்பானியத் திட்டம் என்று கொண்டு வந்திருக்கிறோம். அதெல்லாம் இப்போது வளர்ந்திருக்கிற ஒரு 'கான்செப்ட்'. அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தை 'ரெவ்யூ' பண்ண வேண்டும். அவன் பணி பார்த்திருந்

தால், சம்பளத்தைப் பிடிக்கக் கூடாது. வேறு தண்டனை வேண்டுமானால் கொடுக்கலாம். அப்படிச் செய்வதால், அவன் பட்டினி கிடப்பது மட்டுமல்ல, அவனைச் சார்ந்த குடும்பத்தையும் தண்டனைக்குட்படுத்தக்கூடாது. அதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று சொன்னபோது கூட, குடித்தவனை சிறையிலே போடுகின்றார்கள். அவனை நம்பியிருக்கின்ற குடும்பத்தை என்ன செய்வது? அவர்கள் பட்டினியாக இருப்பார்களே? குடித்தவனைத் தண்டிப்பதாக நினைத்துக்கொண்டு அவன் குடும்பத்தைத் தண்டிப்பதா? என்ன செய்கின்றார்கள் என்றால் எந்தத் தொழிலாளரையும் டிஸ்மிஸ் செய்வதில்லை. அவன் வேலை செய்ய வேண்டும். 'ரைட் டு ஓர்க்' அது அவனுக்கு 'பண்டமன்டல் ரைட்'. அரசாங்கம் அவனுக்கு வேலை கொடுத்தாக வேண்டும். அவன் தவறு செய்தால், அவனை 'சஸ்பெண்ட்' செய்வதில்லை. வேலையைவிட்டு நீக்குவதில்லை. ஊதியத்தை முடக்கவில்லை. வேறு தண்டனை கொடுக்கலாம். வேறு இடத்திற்கு 'டிரான்ஸ்பர்' பண்ணலாம். வேறு ஏதாவது செய்யலாம், அதைத் தவிர 'சம்பளத்தைப் பிடித்துக்கொள்', 'வேலையைவிட்டு நீக்குங்கள்' என்பதற்கு இடமே இல்லை அந்த சோஷலிச சமுதாயத்திலே. அதனாலே அங்கே அந்தப் பிரச்சினை கிடையாது. அவர்கள் அங்கே எப்படி உற்பத்தியைப் பெருக்குவது, எப்படி உற்சாகப்படுத்துவது என்று நினைக்கின்றார்களே தவிர எப்படி தண்டிப்பது என்று எண்ணுவது கிடையாது. அங்கே தொழிற்சாலைகளில் என்ன வைத்திருக்கின்றார்கள்? வரிசையாக போட்டோக்கள் வைத்திருக்கின்றார்கள். நான் அது அமைச்சர்களுடைய போட்டோ என்று நினைத்தேன். ஒரு அமைச்சர் போட்டோகூட கிடையாது. யார் படத்தை வைத்திருக்கின்றார்கள் என்றால், வேலை செய்கின்ற ஒரு தொழிலாளியினுடைய போட்டோவை வைத்திருக்கின்றார்கள். அங்கே வேலை பார்க்கின்ற சிறிய தொழிலாளியினுடைய, உழைப்பாளியினுடைய போட்டோவைத் தான் வைத்திருக்கின்றார்கள். அவனை 'ஹீரோ ஆஃப் சோசியலிஸ்ட் லேபர்' என்று சொல்கின்றார்கள். அந்த உரிமையைக் கொடுக்கிறார்கள். இங்கே பத்ம பூஷன், பத்ம விபூஷன் என்றெல்லாம் பட்டம் கொடுக்கிறோம். அதுமாதிரி பட்டம் கொடுப்பது நடந்து கொண்டிருக்கின்றது. அது நாட்டிடும். அங்கே உழைப்பாளிகளை ஊக்குவிக்கின்ற வகையில், அவன் என்ன 'கான்ட்ரிபியூட்' பண்ணியிருக்கின்றான், தொழிற்சாலையிலே எப்படி அவன் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றான் என்பதைப் பார்த்து, தீர்மானம் பண்ணி, அவனுக்குப் பரிசு கொடுக்கின்றார்கள். மற்றவர்கள் அவனை மதிக்கின்றார்கள். அவனை ஹீரோவாகக் கருதுகின்றார்கள். மற்றவர்கள்



எல்லாம் ஜீரோதான். அங்கே அவன் படத்தை 'எக்சிபிட்' பண்ணியிருக்கின்றார்கள். இவன்தான் சிறந்த தொழிலாளி என்று காட்டுகின்றார்கள். அவன்தான் பிறகு நிர்வாகியாகிறான்.

(பிற்பகல் 12-40)

அப்படிப்பட்ட முறையை அங்கே வைத்திருக்கிறார்கள். தொழிலாளி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், நிர்வாகம் எடுக்கக்கூடாது. தொழிற்சங்கமும் இணைந்துள்ள அமைப்பு அங்கே இருக்கிறது. அப்படி இருந்தால தான், தொழிலாளிக்கும் பாதுகாப்பு இருக்கும். அப்படிப்பட்ட அமைப்பு இருப்பதால், உற்பத்தியைப் பெருக்குவதோடு, தொழில் உறவு சீர் கெட்டதாக வரலாறு கிடையாது. ஒரு குடும்பம் என்று நினைத்து, வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கே அப்படி இல்லை. உடனே சம்பளத்தைப் பிடிக்கிறார்கள். அதைப் பிடிக்கலாமென்று சட்டம் போடுகிறோம். நாம் போடவில்லை. மத்திய அரசு 1936-லேயே போட்டிருக்கிறது. இப்போதுகூட நாம் மாற்றிக் கொள்ளலாம். அதைத்தான் இப்போது கொண்டு வருகிறோம். 15 ஆம் செக்ஷன், 5 ஆம் உட்பிரிவை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இன்றைக்கு இருக்கும் நடைமுறையில் அநியாயமாக சம்பளத்தைப் பிடிக்கிறார்கள் என்றால், அப்படி சம்பளம் பிடித்தது செல்லாது என்று சொல்லும் அதிகாரம் ஒரு அத்தாரிட்டியிடம் வருகிறது. அதாரிட்டி, சம்பளம் பிடித்தது நியாயமல்ல, பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு என்று சொல்லுவார்கள். திருப்பிக் கொடுக்க மாட்டேன் என்றால் விட்டுவிடுவார்கள். கொடுக்க வேண்டுமென்று கேட்பார். மயிலே மயிலே இறகு போடு, போட்டா சந்தோஷம், போடாவிட்டால் பரவாயில்லை. தொழிலாளிக்குச் சம்பளம் தராமல், சம்பளத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். பின்னி இன்ஜினியரிங் கம்பெனியில் சம்பளம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அது பிரிவிலேஜ் ஆகிவிட்டது. என்ன சொல்லுகிறார்கள் என்றால், என் இஷ்டம் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரி நிலைமையை அனுமதிக்கலாமா? பின்னி இன்ஜினியரிங் கம்பெனி ஏறக்குறைய பப்ளிக் செக்டார் கம்பெனிதான். மத்திய அரசு, மாநில அரசு, வங்கிகள் எல்லாம் பணத்தைப் போட்டு வைத்திருக்கிறார்கள். டிலேய்ட் பேமெண்ட் இஸ் டினைட் பேமென்ட். அதாரிட்டி, சம்பளத்தைக் கொடுங்கள் என்று சொல்லலாம். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப்புக்கு வந்த பிறகு, நல்லதொரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்ன திருத்தம் என்றால், விசாரிக்கும் அத்தாரிட்டியே சர்ட்டிபிகேட்டை 'இஷ்யூ' பண்ணலாம். லேபர் விஷயத்தில் எப்படி என்றால், ஒருவருக்கு வர வேண்டிய பணத்திற்காக லேபர் கோர்ட்

டுக்குப் போனால், அங்கே 'டிசைட்' பண்ணுகிறார்கள். பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அதை வசூல் பண்ணும் அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. கொடுக்கலாம் என்று சொல்லும். அந்தக் கோர்ட்டுக்கு என்ன அதிகாரம் கொடுத்திருக்கிறோம்? 'க்ளெயிம் பெட்டிஷன்' போட்டால், இவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். சிவில் நீதி மன்றங்களுக்கு அதையெல்லாம் வசூலிக்கும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். எக்சிகியூஷன் பெட்டிஷனை எல்லாம் 'எக்சிகியூட்' பண்ணும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆனால் தொழிற் தகராறுகளைப் பொறுத்தவரையில், 'க்ளெயிம் பெட்டிஷன்' போட்டு, 'அவார்ட் பாஸ்' ஆனாலும்கூட அதை வசூல் செய்யும் உரிமை நீதி மன்றங்களுக்கு இல்லை. அந்த உரிமையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றைக்குள்ள மரபு, நீதிமன்றத்திடம் அவார்ட் வாங்கி, அது சர்க்காருக்குப் போக வேண்டும். சர்க்கார் அதைப் பார்த்து சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும். தொழிலாளி அந்த சர்ட்டிபிகேட்டை வாங்கி கலெக்டரிடம் கொடுக்க வேண்டும். கலெக்டர் அதை தாசில்தாருக்கு அனுப்புவார். தாசில்தார் ஆர்.ஐ.-க்கு அனுப்புவார். ஆர்.ஐ. வசூலுக்குப் போவார். போன இடத்தில் இந்த வசூலை விட்டுவிட்டு, வேறு வசூல் செய்வார். 'இந்தா, 100 ரூபாய் வாங்கிக்கொள்' என்று சொல்லுவான். அந்த 100 ரூபாயை வாங்கிக்கொண்டு, அந்த ஆள் 'அவுட்' என்று வந்துவிடுவார். இல்லையென்றால் ஏதாவது ஒரு தப்பு சொல்லுவார். இன்றையவரையில் க்ளெயிம் பெட்டிஷனில் வசூல் ஆகாமல் இருந்ததுதான் அதிகம். நம்முடைய வரலாற்றிலேயே போன முறை ஒரு பத்திரிகையில் வேலை பார்த்த ஊழியருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதன்மூலம் மொத்தமாக வசூலாயிற்று அந்தத் தொகை. நம்முடைய ஹிஸ்டரியிலேயே அப்படி கிடையாது. அது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் பெருமைதான். ஆனால் எனக்கு அதனால் பாதிப்பு ஏற்பட்டது. அந்தப் பத்திரிகை முதலாளி என்னை ரொம்பக் கடுமையாகப் பார்க்கிறார். அதிலிருந்து 'சுப்பு' என்று பெயர் போடச் சொன்னால், 'சூப்பு' என்று போடுகிறார். அப்படித்தான் வந்துவிடுகிறது. அவருக்கு நம்பமேலுள்ள ஆத்திரத்தை அப்படிக் காட்டுகிறார். எனக்கு தனிப்பட்ட முறையில் யார்மீதும் கோபமில்லை. எனக்கும்கூட ஒரு காலத்தில் விளம்பரம் கொடுத்த பத்திரிகைதான் அது. இப்படி இன்னும் பல கேஸ்கள் இருக்கின்றன. இந்த வசூல் நடக்க வேண்டும். ஆனால் நடக்கமாட்டேன் என்கிறது. தொழிலாளி பல நாள் நடக்கிறான். எத்தனையோ பேர்



செத்துப் போகிறார்கள். அவார்ட் பாஸ் ஆகிறது. அதோடு இவனும் பாஸ் ஆகிவிடுகிறான். 'பாஸ்டு அவே' என்று வருகிறது. அந்த அவார்ட் கொடுத்து என்ன பிரயோசனம்? அப்படி இருக்கக்கூடாது. அந்த 'அமவுன்ட்' வர வேண்டும். அது 'ரியலைஸ்' ஆகவேண்டும். அந்த அதிகாரம் கடுமையாக இருக்க வேண்டும். இந்த அதிகாரமெல்லாம் போதாது. நம்ப முதலாளிகளுக்கெல்லாம் இந்த அதிகாரம் போதுமா? பெரிய பெரிய ஆட்கள் அவர்கள். அவர்கள் சாதாரண ஆட்கள் கிடையாது. இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு, 'சர்ட்டிபிகேட்' கொடுத்தால் வசூலாகிவிடாது. இன்றைக்கு அதுவும் இல்லாமல் இருந்தது. இப்போது என்ன செய்திருக்கிறார்கள் என்றால், இந்தத் திருத்தத்தின் மூலமாக சர்ட்டிபிகேட் 'இஷ்யூ' பண்ணும் அதிகாரத்தை அதாரிட்டிக்கு கொடுத்துவிட்டோம். கவர்ன்மென்டுக்கு அது போகாது. கலெக்டருக்குப் போகும். யூஷுவல் ப்ரொசீஜர் அவர் எடுப்பார். அதன் பிறகு எப்படி வசூல் செய்ய வேண்டுமென்றால், ரெவின்யூ ரிக்கவரி ஆக்டின்கீழ் வசூல் செய்ய வேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் சப்சிகுவன்டாக வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் விடும் வேண்டுகோள், சம்பளப் பிடித்தம் என்ற அடிப்படையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சம்பளப் பிடித்தம் என்றால், அந்த அதிகாரத்தை யாரிடம் கொடுப்பது? ஜாயின்ட் மெஷினரி இருக்க வேண்டும். ஜாயின்ட் மெஷினரியாக ஒர்க்கர்ஸ் ரெப்ரசென்டேடிவ், மேனேஜ்மென்ட் ரெப்ரசென்டேடிவ், கவர்ன்மென்ட் ரெப்ரசென்டேடிவ் என்று மூன்று பேரும் சேர்ந்து முடிவு பண்ணக்கூடிய அடிப்படையை ஏற்படுத்த வேண்டும். தன்னிச்சையாக, யூனிலேட்டரலாக—அதுவும் ரெக்லசாக இருந்தால், அந்த நிர்வாகமே சம்பளத்தைப் பிடிக்க அனுமதிக்கக்கூடாது. அப்படி சம்பளத்தைப் பிடிப்பதை விட்டுவிட்டு, வேறு தண்டனை கொடுக்க முடியுமா என்று பார்க்கலாம். 'பப்ளிக் சென்ஷர்' கொடுக்கலாம். சம்பளப் பிடித்தம் என்பது, நிலப் பிரபுத்துவத்திலிருந்து வளர்ந்து வரும் முறை. அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

(பிற்பகல் 12-45)

இதற்கு முற்றுப்புள்ளி வைத்தால்தான் நமக்குப் பெருமை. இன்றைக்கே நாம் அதை ஒரேயடியாகச் செய்ய முடியாது. நாம் கொண்டு வந்திருப்பதே ஒரு திருத்தம்தான். அந்தத் திருத்தத்தையே பிறகு வேறுமாதிரியாகச் சொல்கிற மாதிரி ஆகிவிடக் கூடாது. இந்தத் திருத்தம், ஒன்றும் இல்லாத இடத்தில் ஏதோ ஒன்று என்று வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கிருக்கிற நிலைமையில் ஒன்றுமே வசதி செய்ய முடியாது என்ற

நிலைமையில் ஒரு சர்ட்டிபிகேட்டாவது கையில் கொடுக்கிறார்களே, அது வரவேற்கத்தக்கது. அதை கலெக்டரிடம் கொடுக்க வேண்டும். கலெக்டர்களிலும் நல்ல மனிதனாக ஒருத்தர் இரண்டு பேர் சமயத்தில் வந்துவிடுகிறார்கள். அப்படி நடக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் கீழே அனுப்பும்போது, தாசில்தார் நல்லவராக இருக்க வேண்டும். பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நல்லவராக அமைந்திருக்க வேண்டும். இதெல்லாம் நடந்து, ரூபாய் வசூலாகிவிட்டால், கடவுள் காப்பாற்றிவிட்டார் என்று அவன் பாட்டுக்குப் போயிடுவான். ஆனால் ஒன்று, அந்தக் கடவுள் காப்பாற்றிவிட்டார் என்று சொல்வதற்காவது இந்தச் சட்டத் திருத்தம் ஓரளவுக்கு உதவுகிறது என்ற அடிப்படையில்தான், இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். இதை மேலும் செழுமையாக்குவதற்கு, முழுமையாகத் திருத்த வேண்டும். நடைமுறையில் சிரமங்கள் இருக்கின்றன. அந்த சிரமங்களையெல்லாம் போக்குவதற்கு இந்தத் திருத்தங்கள் உதவும் என்று சொல்லி, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு பற்றி, தொழிலாளர் வர்க்கத்திற்கு ஆற்றப்படுகிற நல்ல பணிகளையெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கமே இதுவரையிருந்த கடுமையைப் போக்கி, சற்றுத் தளர்த்தி, தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகையைப் பெற்றுத் தருவது. அந்த முயற்சிகளை இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக அரசு எடுத்து, தொழிலாளர்கள் நியாயம் பெறுவதற்கு இடமிருக்கிறது என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கூலி வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கூலி வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, கூலி வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**3. தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1985).**

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 48/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஜேப்பியார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான மருந்துகளும் ஏனைய பொருட்களும் வெளியிலே சென்று, சில தனியாருக்கும் சில மருத்துவமனைகளுக்கும் தாராளமாக விநியோகிக்கப்படு

@ 663–666 ஆம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கின்ற சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்பு இந்தச் சட்ட முன்வடிவை அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது. அரசு முத்திரை பதிக்கப்பட்டு மக்களுக்குக் கொடுக்கிறதற்காக அரசு மருத்துவ மனைகளுக்குக் கொண்டு வரப்பட்டு, அதன் பிறகு வெளியே அவைகள் எடுத்துச் செல்லப்பட்டு, தனியாருக்கு தாராளமாக விநியோகம் செய்யப்படுகிற நிலைமைகள் அரசின் கவனத்திற்கு வந்திருப்பதாகக் கருதுகிறேன். பொதுவாக கிராமப்புறங்களில், பப்ளிக் ஹெல்த் சென்டர், சப்-சென்டர் என்ற சிறிய மருத்துவ மனைகள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே ஒன்றியத்திற்கு ஒன்றிரண்டு என்ற அளவில் சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் கிராமப்புறங்களில் சில பேர் தங்களை ஹோமியோபதி டாக்டர்கள் என்று கூறிக்கொண்டு, கும்பகோணத்தில் '100 ரூபாய் பணம் செலவிட்டால் டாக்டர் பட்டம் கிடைக்கிறது' என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு, அவர்கள் மருத்துவ மனைகளுக்குப் போக வசதியில்லாத காரணத்தால், தாங்களே சைக்கிளில் சென்று மருந்து கொடுத்து வருவதையும் நாம் காண்கிறோம்.

(பிற்பகல் 12-50)

இப்படி மருந்து தருவதால் பலர் இறந்துகூட போயிருக்கிறார்கள். அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து எடுத்து வருகிற மருந்துகளின் மேல் அது இன்ன நோய்க்கு என்று எழுதி வைத்துக்கொள்வார்கள். 'இது காய்ச்சலுக்கு', 'இது இன்ன நோய்க்கு' என்று எழுதி வைத்துக்கொண்டு, வருகிறவர்களிடம் அந்த மருந்தைக் கொடுத்து காசாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வருகிறவர்களிடம் "இவை அரசு முத்திரை போட்ட மருந்துகள், எனவே நல்ல மருந்துகள்" என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் இந்த மருந்துகளை கலப்படம் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்படி அரிசியோடு கல் சேர்ப்பதற்காக கற்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இருக்கிறதோ, அதைப் போல இவர்களும் அரசு மாத்திரைகளை வாங்கி தாங்கள் தயார் செய்யும் மாத்திரைகளுடன் கலந்து இரண்டையும் சேர்த்து அப்பாவி மக்களுக்கு விற்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து வேலைநீக்கம் செய்தால், கோஷங்கள் போடுவதன்மூலம் மீண்டும் அவர்கள் வேலைக்குப் போகும் நடைமுறை இருக்கிறது. எனவேதான் இவ்வாறு மருந்துகளை எடுத்துச் செல்கின்றவர்களைக் கண்டுபிடித்துவிட்டால், அவர்களுக்கு சாதாரண தண்டனை



அல்ல, சிறைத் தண்டனை தரவேண்டுமென்று முடிவு எடுத்தால்தான், இதைத் தடுத்து நிறுத்த முடியும் என்கிற சூழ்நிலை வரும். ஆகவேதான் இவ்வாறு தவறு செய்பவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்யலாம் என்று இருப்பதை மாற்றி, அவர்களைக் கைது செய்யலாம், சிறைக்கு அனுப்பலாம் என்று கொண்டு வருகிற இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிறேன்.

ஆனால் இப்போதும் அவ்வாறு தவறு செய்கின்றவர்களுக்குப் பாதுகாப்புத் தர சில சங்கங்கள் பெயரால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. "அவர்கள் தவறுகளே செய்யவில்லை, வேண்டுமென்றே பழி சுமத்துகிறார்கள்" என்று கூறி கோஷங்கள் போடுவதையும், உண்ணாவிரதங்கள் இருப்பதையும், போராட்டங்கள் செய்வதையும், இதுபோன்ற சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.

பொது மருத்துவமனைகளிலும், மற்ற மருத்துவமனைகளிலும் இது போன்று மருந்துகள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு விற்கப்படுவது உண்மை. இதைச் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும் என்கிற முறையில் அரசு எடுத்திருக்கிற முடிவை ஆதரித்து, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவை முதற்கண் ஆதரித்து, அதன் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவமனைகளில் உள்ள மருந்துப் பொருட்கள் மற்றும் பண்டகப் பொருட்கள் களவாடிச் செல்லப்பட்டு வெளியே விற்கப்படுகிற நிலைமைகளை நாம் கடந்த சில ஆண்டுகளாக இங்கே குற்றச்சாட்டாகச் சொல்லி வந்திருக்கிறோம். அவற்றைத் தடுக்கும்பொருட்டு, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மருந்துகள் எப்படி வெளியே போகின்றன, அவற்றை வெளியே கொண்டு போகின்றவர்கள் யார், அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் இந்தச் சட்ட முன்வடிவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா, அதன் முடிவு என்னவாயிற்று என்பதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். ஜெயச்சந்திரன்] [1986 ஜனவரி 30

இந்த மருந்துகளை எடுப்பவர்களை மட்டுமல்ல, அந்த மருந்துகளை வாங்குபவர்களுக்கும் தண்டனை அளிக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி திருட்டுப் பொருள்களை வாங்குபவர்களும் குற்றவாளிகளோ அதுபோல் இம் மருந்துகளை வாங்குபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு ஏழை எளியவர்கள் மருந்துகள் வாங்க வருகிறபோது, அவர்களுக்கு மருந்துகளே கொடுப்பதில்லை; அதிலும் குறிப்பாக உயிர் பாதுகாப்பு மருந்துகள் கொடுப்பதே இல்லை. "வெளியே சென்று வாங்கி வா" என்று அனுப்பிவிடுகிறார்கள். எனவே அனைத்து மருந்துகளும் கிடைக்க வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

(பிற்பகல் 12-55)

முக்கியமாக இன்று தமிழகத்தில் மட்டுமின்றி, அகில இந்திய அளவிலும் தேவைப்படும் பெரிய மருந்து தமிழகத்தில் குன்னூரில் உள்ள பாஸ்டர் இன்ஸ்டிடியூட்டில் மட்டும்தான் தயாரிக்கப்படுகிறது என்று அறிகிறேன். அந்த மருந்து கிடைக்காததனால், பல சமயங்களில் நோயாளிகளுடைய உயிர்களைக் காப்பாற்றுவதற்கு வசதிகள் இல்லாமல் போய்விடுகிறது என்பதற்காக கவன ஈர்ப்புகூட முன்பு கொண்டுவந்தேன். அது விரைவாகவும், நல்ல முறையில் கிடைப்பதற்கும் அரசு வழி வகை செய்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். தமிழகத்தின் அனைத்து மருத்துவ மனைகளிலும் 'ராபி இன்ஜெக்ஷன்' மருந்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். அந்த ராபி இன்ஜெக்ஷன் மருந்து மற்ற இடங்களில் கிடைப்பதில்லை. அரசு மருத்துவமனைகளில் மட்டும் தான் கிடைக்கிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். வட்டத் தலைநகரத்திலுள்ள மருத்துவ மனைகளிலும் அதுபோன்ற மருந்து கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'டிரக் இன்ஸ்பெக்டர்ஸ்' தமிழக அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு கெமிஸ்ட் ஷாப்பையும் பார்வையிட்டு, தவறுகள் இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுடைய பணியை நல்ல முறையிலே செய்கிறார்களா என்பதையும் அரசு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இப்போது தமிழகத்தில் பல்வேறு மருந்துப் பொருட்களிலும் கலப்பட மருந்துகள் வந்துவிட்டன என்று அறிகிறேன். உயிர் பாதுகாப்பு மருந்துகளாக இருப்பவைகளில்கூட,



1986 ஜனவரி 30] [திரு. எல். ஜெயச்சந்திரன்]

கலப்படம் செய்துவிடுகிறார்கள். அவைகளை மக்களுக்குக் கொடுத்தால், நிச்சயமாக அது அவர்கள் உயிரைக் காப்பதற்குப் பதிலாக உயிரைத்தான் போக்குமென்று கூறிக்கொள்கிறேன். மேலும் காலாவதியாகிவிட்ட மருந்துகளை கடைகளிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது அரசு மருத்துவமனைகளிலேகூட இருக்கிறது என்று பேசுகிறார்கள். 'ஆப்டர் எக்ஸ்பைரி டேட்' உள்ள மருந்துகளைக் கொடுக்கக்கூடாது, விநியோகிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN : Hon. Deputy Chairman, Sir, I congratulate the Government on their bringing forward this Bill which seeks to punish the people who take away drugs, linen and other things, which should come under the heading "other Stores" from the Government Hospitals. It is not a little too early and I am sure the Hon. the Minister for Health will remember that a few months ago, there was a terrible scandal in a very big Hospital and many people were involved in the offence of stealing medicines in spite of the Government's special mark on them. Therefore, I welcome this Bill. Not only those who steal but also those who accept them, namely, people running smaller dispensaries or smaller dispensaries or smaller hospitals are to be punishel for their criminal act.

I do not know the reason why for so many years, the non-official Committee that used to do wonderfully good work in the various hospitals has not been appointed. On more than one occasion, I have mentioned it in this House. I request him to see that the non-official Committee which will be above party politics and which will not interfere with the internal administration but will still be a watchdog and will be able to do tremendous good work is appointed early.

One of the hon. Members mentioned about anti-rabi treatment. I personally took a boy for having anti-rabi injection and I can tell the Hon. Minister that the medicine was not available there. Besides, the personnel available in the particular department are not enough. When I took the boy, there was a man who had a pierced wound on account of dog-bite and he was not attended to after the 4th injection. I am not blaming the personnel there. My husband had been a Government Doctor, and I know their difficulties. The Government could appoint the non-official Committee which would function without fear or favour.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை அலுவல்கள் முடிவடையும் வரை, அவையின் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப் படுகிறது.

Thirumathi TARA CHERIAN : If the Government can appoint this kind of a committee, it would be of great help to the people as well as the Government. I want to point out another thing also. Some time ago, I took a young boy to the hospital. His eyes needed to be looked into. He needed dilatation of the pupils of his eyes. The doctor in the hospital told me plainly that there was no medicine available in the hospital for dilating and contracting the pupils in a short time and that the process would take more than a week. Many of the poor people cannot afford to spare so many days to get their eyes tested. Perhaps, the medicine for dilating the pupils quickly may be a little bit expensive. But, if it is made available to the Government hospitals, it would be of great help to the public.

The other thing which I want to mention to the Hon. Minister, through you, is that linen is not provided to the Government hospitals in adequate quantities. The linen used in most of the hospitals is not also very clean. I have myself seen many in-patients refusing to use the linen in the hospitals and, in fact, one patient told me that she would much rather get back to her home than being an in-patient in a hospital. I think only Khadi linen is being supplied to the Government hospitals. It would be a good thing if the supply is increased. The other thing which seems to be in short supply in our Government hospitals is the electric bulbs. Of course, the power cut is always there. Probably, indents for bulbs are not placed in time. So, there may be more than one reason for our finding the wards dark all the time. I would appeal to the Hon. Minister to see that this situation is remedied.

The other problem relates to regulating the crowd of persons who come to see the in-patients in our Government hospitals. At present, we do not find gate-keepers in adequate numbers in our hospitals. The in-patients in the hospitals are having so many relations and friends that we always find a huge crowd. We have to see that the crowd is regulated. This can be done easily by putting voluntary workers on the job. It seems that the NSS volunteers have now been asked to do this job. But, there will be definite improvement if voluntary workers are also entrusted with the job of regulating the crowds at the entrance to hospitals. Similarly, there are so many little things which could be set right, if only there is a small committee to help the Government in these matters.



With these words, I have great pleasure in very strongly supporting this Bill. Thank you.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகச் சிறப்பான கருத்துக்களையெல்லாம் சொல்லி ஏன் இந்தச் சட்ட முன் வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களையும் சொல்லி, அரசாங்கத்தின் தரப்பை வலுப்படுத்தியதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல பல யோசனைகளைக் கூறியிருக் கிறார்கள். மதிப்பிற்குரிய அரசுக் கொறடா அவர்கள் இத்தகைய அரசு மருந்துகளை விற்பனை செய்யக்கூடியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் போது, யார் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களோடு அந்த மருந்தை விற்பதற்கான வகையில் யார் உடந்தையாக இருக்கிறார்களோ அவர்களையும் கண்டுபிடித்து அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்; இந்தச் சட்ட முன்வடிவின் 3-வது ஷரத்தில் அதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது

"UNLAWFUL POSSESSION OF DRUGS OR OTHER STORES: (1) If any person is found, or is proved to have been, in possession of any drugs or other stores belonging to, or in the charge or possession of," .... etc.

யார் கையிலே இருக்கிறதோ, யார் வைத்துக் கொண்டிருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டதோ அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் 3-வது ஷரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்த மசோதா கொண்டு வருவதற்கே காரணம் என்ன வென்றால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நாம் எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும், இந்த மருந்துகள் எல்லாம் வெளியே போய்விடுகின்றனவே என்று கருத்துத் தெரிவித்தார்கள். கலப்படத்தைப்பற்றி பிறகு வருகிறேன்.

(பிற்பகல் 1-05)

அதைக்குறித்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையிலே 'எம்பாசிங் லோகோகிராம்' என்ற வகையில் தமிழக அரசாங்கத்தின் பொருள் என்று தெரிவிக்கும் வகையில் 'த.அ.' என்ற முத்திரையை இட்டு வில்லைகளைக் கொடுக்க ஆரம்பித்தோம். 'காப்ஸ்யூல்' மீதுகூட அப்படி போட ஆரம்பித்தோம். அதற்குப் பிறகும் அந்த மருந்துகள்

வெளியே போயின என்பது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அதற்கு ஒரு கடுமையான சட்டம் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே, இப்போது இங்கே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இந்தச் சட்ட முன்வடிவிலே

"... he shall be punished for a first offence with imprisonment for a term which may extend to three years and with fine which may extend to three thousand rupees but such imprisonment shall not be less than one year and such fine shall not be less than one thousand rupees."

என்று போட்டிருக்கிறோம்.

In sub-clause (2), it is provided :

"(2) In the case of a second or subsequent offence, any such person shall be punished with imprisonment for a term which may extend to seven years and with fine which may extend to five thousand rupees but such imprisonment shall not be less than two years and such fine shall not be less than two thousand rupees."

என்று மிகத் தெளிவாக இதிலே ஷரத்துக்களைப் போட்டிருக்கிறோம். இதுவே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.

I think this will meet the present demands of the situation.

*திரு. எல். ஜெயச்சந்திரன் :* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில், அரசு மருந்துகளை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தண்டனை என்று போட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மருத்துவமனையிலிருந்து மருந்துகளைக் கொடுப்பவர்களுக்கு இதே தண்டனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அது ஏற்கெனவே உள்ள சட்டத்திலேயே இருக்கிறது. மருந்துகள் வைத்திருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க போதிய சட்டம் இல்லை என்பதால்தான் இப்போது இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.



சில யோசனைகளை, அவை இந்தச் சட்டத்திற்குட்பட்ட கருத்துக்கள் இல்லையென்றாலும், இந்தச் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லியிருக்கிறார்கள். ஒரு சில நல்ல யோசனைகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். 'ராபீஸ்' பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 'ராபீஸ்' வியாதிக்குப் போதிய மருந்து கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய கவனத திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது நடவடிக்கை எடுத்தேன். இப்போது ஆண்டி-ரேபி வேக்சின் இருக்கிறது. இது குன்னூரில் தயார் செய்யப்படுகிறது. இதை 'இண்டன்ட்' செய்வதில் கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது. 'இண்டன்ட்' செய்வது என்பது ஒரு கலை. மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பே என்னென்ன மருந்துகள் குறைந்துகொண்டு வருகின்றன என்பதைக் கவனித்து கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக 'இண்டன்ட்' செய்ய வேண்டும். இந்த முக்கியமான பணியில் ஸ்லாக்காக இருந்தால் மருந்துகள் வருவதற்குத் தாமதம் ஏற்பட்டுவிடும், குன்னூரில் உள்ளது மத்திய சர்க்காரின் நிறுவனம். அந்த நிறுவனத்தில் பணத்தைக் கொடுத்த பிறகுதான் மருந்தைக் கொடுக்கிறார்கள். அதிலே கொஞ்சம் தாமதம் இல்லாமல் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 'ஸ்டாக்' குறையும்போது 'இண்டன்ட்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். சென்ற சில ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இல்லை. ஏனென்றால் ஒழுங்காக 'இண்டன்ட்' போடுகிறார்கள். அவர்களும் ஒழுங்காக 'சப்ளை' செய்கிறார்கள்.

அடுத்து 'டேட் ஆஃப் எக்ஸ்பயரி' மற்றும் கலப்படம் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஏற்கெனவே அகில இந்திய சட்டம் இருக்கிறது. கடுமையான வகையில் நடவடிக்கை எடுக்க ஷரத்துக்கள் அதிலே இருக்கின்றன. அந்த அகில இந்திய சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். நம்முடைய இலாக்காவைப் பொறுத்தவரையில், அப்போதைக் கப்போது 'செக்' செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ரெப்ரிஜிரேட்டரில் சில பொருள்கள் இருக்க வேண்டும் 20 டிகிரி சென்டிகிரேட், 10 டிகிரி சென்டிகிரேட் என்ற அளவிற்கு சில மருந்துகளை குளிர்சாதன பெட்டியில் வைக்க வேண்டும். அவைகளையெல்லாம் குளிர்சாதன பெட்டிகளில் வைக்காவிட்டால், இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, கடுமையான நடவடிக்கை எடுத்து பல பேருக்கு 'சார்ஜ்ஷீட்' கொடுத்திருக்கிறோம். இதிலேகூட கொஞ்ச பேருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதிலே தயவு தாட்சண்யம் காட்டுவதில்லை.

கலப்படம் பற்றியும் திருமதி தாரா செரியன் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். 'ஹாஸ்பிட்டல் கமிட்டீஸ்' என்று வேகமாகப் போட்டுக் கொண்டிருக்கிறோம். நானே எதிர்க் கட்சியில் இருக்கும்போது, இந்தக் கமிட்டியில் நான்காண்டுகள் பணியாற்றியிருக்கிறேன். அப்போது அதில் அரசியல் கிடையாது. சுகாதாரப் பிரச்சினைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு பேசுவது வழக்கம். அப்படி நாம் அதிலே அரசியலைப் புகுத்தாமல்

(பிற்பகல் 1-10)

நல்ல வகையிலே பணி செய்தால், நன்றாக இருக்கும். அதற்கு வேண்டிய வகையிலே வேகமாக கமிட்டிகள் போட்டுக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு யோசனை சொன்னார்கள். வாலண்டரி சர்வீஸ்-ல் உள்ளவர்கள் எல்லாம் இதில் உதவியாக இருப்பதாகவும் உதவியைத் தருவதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்றும் சொன்னார்கள். நிச்சயமாக அந்த யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். We will definitely make use of the offer the hon. Member has made on the floor of the House. நாங்கள் நிச்சயமாகப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மருந்துகளைப் பொறுத்தவரையில், நாம் இன்னொன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய சர்க்கார் சென்ற ஆண்டிலே மட்டும் மருந்துகள் வாங்கியதற்கான புள்ளிவிவரங்களைச் சொல்கின்றேன். ஒரே ஒரு புள்ளிவிவரம். ரூ. 25 கோடி அளவுக்கு மருந்துகள் வாங்கியிருக்கிறோம். தமிழக சர்க்கார் ஆஸ்பத்திரிக்குள்ளே எத்தனை ரூபாய்க்கு மருந்துகள் வந்திருக்கின்றன என்றால், ஏறத்தாழ ரூ. 160 கோடிக்கு வந்திருக்கின்றன. பல்வேறு துறைகளுக்கு வந்திருக்கின்றன. டி.எம்.எஸ்., டி.எம்.ஈ. மூலம் எல்லாவற்றிற்கும் செலவழிக்கப்படுகின்றன. நாம் மருந்துக்கு மட்டும் இவ்வளவு தொகை செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ரூபாய் 35 கோடி அளவுக்கு செலவழிக்கிறோம்.

அடுத்து லினன் நமக்குக் கூடுதலாகத் தேவை என்கிறோம். இப்போது லினனைப் பொறுத்தவரையில், செப்பரேட்டாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இரண்டு மூன்று ஆண்டுகளாக எங்கு பார்த்தாலும், இந்த லினனை ஏன் மாற்றவில்லை என்கின்றார்கள். அது ஏனென்றால் ஒரு ஆஸ்பத்திரிக்கு இவ்வளவுதான் 'லினன்' என்று கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். நான்



ஒரு நல்ல செய்தியைச் சொல்கிறேன். நான் பைனான்ஸ் டிப்பார்ட்மென்டிலே வாதாடிச் சொல்லியிருக்கின்றேன். இன்றைக்கு அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். சென்ற ஆண்டுக்கு மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குக் கூடுதலாக 'லினன்' கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே ஒரு கோடி ரூபாய் அளவுக்கு 'லினன்' கொடுப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதற்கு ஏற்ப, அவருடைய கருத்தின் அடிப்படையில், பழைய லினனை எடுத்துவிட்டு புதிய லினன் கொடுக்க சௌகரியமாக இருக்கும். கொஞ்சம் தாராளமாகக்கூட 'லினன்' கொடுக்கத் தயாராக இருக்கலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். இதை அந்தந்த மருத்துவ மனை அதிகாரிகள் சுறுசுறுப்பாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த அவையிலேயே சொல்லியிருப்பதன் மூலமாகக்கூட எல்லோரும் தெரிந்துகொள்வார்கள். மக்களுக்கும் இது தெரியும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 25 கோடிக்கு மருந்துகள் வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படி மருந்துகள் வாங்கப்பட்டும், ஒரு நோயாளிக்கு குணப்படுத்த வசதியில்லை என்று ஒரு 'சர்டிபிகேட்' கொடுத்திருக்கிறார். அது நியாயம் தானா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எதைப்பற்றிச் சொல்கின்றார்கள் என்று விவரமாக எழுதிக்கொடுத்தால், பதில் சொல்ல முடியும். எல்லாவற்றையும் செய்து முடிக்க முடியும் என்று சொல்ல முடியாது. எல்லாவற்றையும் செய்ய முடியாது. ஒரு விஷயத்தை நான் மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். எல்லாவற்றையும் எல்லா நாடுகளிலும் செய்து முடிக்க முடியும் என்று நினைக்கக்கூடாது. வெளிநாட்டிற்குப் போவதுபற்றிச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரு மருந்து இங்கே இல்லாமல் இருக்கலாம். இன்னொரு நாட்டிலே இருக்கலாம். 'ரிபைன்ட் இன்சுலின்' அமெரிக்காவிலே கிடையாது. இங்கிலாந்திலே கிடையாது. பல நாடுகளிலே கிடையாது. ஸ்கேண்டிநேவியன் கன்ட்ரீஸில் இருந்து 'இம்போர்ட்' செய்துகொண்டிருக்கின்றார்கள், இதை ஏன் சொல்கிறேன் என்றால், எல்லாவற்றையும் ஒரு நாடு செய்து முடிக்க முடியும் என்று சொல்ல முடியாது. நம் அரசாங்கம் நிதி நிலைமைக்குட்பட்டுத்தான் செய்ய முடியும். இன்னமும் கூடுதலாகச் செய்ய வேண்டும் என்று கேட்கின்றபோது, ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். கூடுதலாக எல்லா இலாக்காக்களும் செலவழிக்க வேண்டும் என்று கேட்கின்ற

போது, பிரச்சினை எழுகிறது. அந்த அளவிற்கு வரிபோடுகின்ற நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த அளவுக்குப் பேசுகின்றார்கள் என்பதையும் பார்க்க முடிகிறது. ஆகவேதான் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று எந்த அரசாங்கமும் சொல்ல முடியாது. 'அப்சல்யூட்னஸ்' என்பது கிடையாது. அதற்காகத்தான் சொல்கிறேன். அந்த வகையிலே வெளிநாட்டிற்கு யாராவது போவதாக இருந்தால், குறிப்பிட்ட வைத்தியத்திற்குப் போய் ஆகவேண்டுமென்றால், அப்படிக் கேட்கின்ற நேரத்திலே நாங்கள் தடுக்க முடியாது. அது 'Fundamental right of the human' என்பார்கள்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டதற்காக நான் சொல்கிறேன் என்று அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அப்படி எடுத்துக் கொள்ளக்கூடாது. இன்றையதினம் இந்த அவையிலே தாங்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கின்றீர்கள்.

"யார் சட்ட முன்வடிவில் பேசுகின்றார்களோ அவர்கள்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதையே வாடிக்கையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் அறிவித்தீர்கள். இப்படி சட்ட முன்வடிவில் பேசாதவர்கள்கூட இப்படிப்பட்ட கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால், அதுவே மரபாகிவிடும் என்று சொன்னீர்கள். அப்படிப்பட்ட வாய்ப்புகள் இந்த சபையிலே என்றைக்கும் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, உறுப்பினர்கள் கேள்விகள் கேட்பதற்கும் அமைச்சர் பேசிக்கொண்டிருக்கின்றபோது கேள்வி கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது, உறுப்பினர்கள் சந்தேகத்தை எழுப்பலாம். ஆனால் அவர் பேசி முடித்த பிறகு, சாதாரணமாக அனுமதி கிடையாது. ஆனால் பேசி முடித்தபிறகு கூட, இப்போது கேள்வி கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அது யார் பேசினார்களோ அவர்கள் கேள்வி கேட்கட்டும் என்று விட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது திரு. தாஸ் அவர்கள் கேட்டது அமைச்சர் அவர்கள் பதில் அளித்துக்கொண்டிருக்கும்போது. நேற்று அமைச்சர் அவர்கள் பேசி முடித்து அமர்ந்த பிறகும் அவர் கேள்வி கேட்டார். அதைத்தான் நான் சொல்கிறேன். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.



(பிற்பகல் 1-15)

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள்கூட, அமைச்சரவர்கள் பேசி முடிப்பதற்கு முன்புதான் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அப்போது தான் அந்த ரூலிங் கொடுத்தீர்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தலைவர் ஒரு முடிவைச் சொன்ன பிறகு, தலைவர் சொன்ன முடிவு சரியா, இல்லையா என்று பேசுவது சரியில்லை. குறிப்பை எடுத்துப் பார்த்து, ஒரு முடிவுக்கு வரலாம். என்னுடைய நினைவு, அமைச்சரவர்கள் பேசி முடித்து அமர்ந்த பிறகு கேள்வி கேட்டார்கள் என்பதுதான். அவைக் குறிப்பில் என்ன இருக்கிறது என்று பார்த்து முடிவு செய்யலாம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: துணைத் தலைவரவர்களே, குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. தாங்கள் சொல்லியதை நினைவுபடுத்தத் தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் சொன்ன கருத்துக்குப் பதில் அளிக்கிறேன்.

I am immediately responding to the suggestion made by the hon. Member. We have just now received the grant from the Finance Department. I thought I could share this happy news with the hon. Member.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சர் [illegible] கொண்டிருக்கலாம். அதுமட்டுமின்றி முக்கியமான ஒரு கருத்தைச் சொல்லிக் [illegible] ஒருவர் கேட்கலாம். இவற்றுக்கெல்லாம் முக்கியமானதொரு விளக்கத்தை [illegible] ஏற்படலாம். எல்லாவற்றிற்கும் தலைவரவர்கள் அனுமதி கொடுக்கும் அவசியம் [illegible] ஒரே மாதிரியாக முடிவு செய்ய முடியாது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, இந்த [illegible] நான் இதுவரை கூறியவற்றைப் பதிலுரையாக ஏற்றுக்கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi TARACHERIAN: On a point of clarification, Sir, I am sure that it is the person in the Chair who has got the discretion to allow us to raise questions. We are following certain conventions and, as things stand at present, we have got to seek your permission.

MR. DEPUTY CHAIRMAN: The only thing that I am asking of the hon. Member is that she may please ask a question and not make another speech.

Thirumathi TARA CHERIAN : I am only asking a clarification, Sir. When a young boy steals a small vessel in his own house, it becomes a Police case. He is taken to the Court and the Judge gives him punishment and sends him to the Borstal School. If the culprit is a grown-up man, the Judge sends him to the Jail. In either case, the person is first taken by the Police, then sent to the Court and then only to the prison. He is not sent to the prison straightway. This Bill contains some provisions regarding punishment. From a reading of these provisions, I am not able to understand whether the person concerned would be punished straightway or whether he would be sent to the Court. I think the punishment will have to be given by the Court and not by the Government. I request a clarification on this point.

Secondly, clause 5 of the Bill deals with 'Indemnity' and states: "No suit or other legal proceeding shall lie against the Government or any officer of the Government in respect of anything which is in good faith done or intended to be done by or under this Act.'

Normally, a Government does a lot of things while exercising various powers. I am not able to understand how there can be an indemnity for the Government or for the Government officers for the acts done by them. I would like to have a clarification on this point also.

The Hon. DR. H. V. HANDE : With the permission of the Chair, I will explain both the points raised by the hon. Member. The first point is with regard to filing of cases. All similar enactments in the Statute-book contain a provision similar to the one in this Bill. It is this provision which enables the officer concerned to frame charges against the person who commits the offence and to take the case to the Court. It is the Court which ultimately decides the case. The Government have no right to give punishment straightway. It only brings forth the legislation and gets it passed by the Legislature. The Executive has no power to punish and it has to take the



matter before the Judiciary. It has all along been the practice to make such a provision in all statutes. In every such Act, there is a section providing for punishment. Similarly, this Bill also provides for the minimum punishment and the maximum punishment for the offence. It does not go beyond stating that the punishment should not be below a particular level and it should not be above a particular level. So, each and every case has to be decided by the Court and the quantum of punishment in each case is also left to the discretion of the Court. By making such a provision in this Bill, we are only continuing a long standing practice.

The second point raised by the hon. Member relates to the clause on ' Indemnity '. After this Bill is passed and becomes an Act, some officer may file a case against some person. Now, the legal acumen available in the country is so much that some intelligent person may choose to file another case against that officer stating that because the officer did not like him, he had purposely foisted the case on *mala fide* grounds. So, to protect the officer adequately, we are arming ourselves with this particular provision. This clause protects the officers of the State from accusations to the effect that the cases had been filed on *mala fide* grounds.

Thirumathi TARA CHERIAN : The Bill does not clearly spell out all these things.

The Hon. DR. H. V. HANDE : It is very clear. I will read it. It states:—

"No suit or other legal proceeding shall lie against the Government or any officer of the Government in respect of anything which is in good faith done or intended to be done by or under this Act."

A case may be brought against a person stating that he was possessing Government medicines unlawfully. At that time, the person concerned may choose to file a case against the officer concerned, stating "This officer has purposely filed the case against me with the mala fide intention of damning me and damaging my reputation.'

This provision in the Bill does not allow such an accusation to be made. The provision is there only to protect the person or the officer concerned.

**Mr. DEPUTY CHAIRMAN: I hope the hon. Member is now convinced about the matter. If she is still not convinced, she can have a private discussion with the Hon. Minister.**

திரு. எல். ஜெயச்சந்திரன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, அரசு மருத்துவமனைகளில் முக்கியமான மருந்துகளை வைத்துக் கொள்ள குளிர்சாதனப் பெட்டிகள் நல்லமுறையில் இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் உள்ள முக்கியமான மருத்துவ மனைகளில் எல்லாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கேள்வி கேட்கலாம். நீண்ட சொற்பொழிவு ஆற்றவேண்டாம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : அத்தகைய குளிர்சாதனப்பெட்டிகள் இல்லை யென்பது அரசுக்குத் தெரியுமா? மேலும், சில மருந்துகளைப் பொறுத்தவரை, அந்நிய நாடுகள் தங்களுடைய தயாரிப்பை இங்கே நம் நாட்டில் விற்கிற போது, பல வெளிநாடுகளில் அந்தத் தயாரிப்புகள் தடை செய்யப்பட்டிருக் கும்போது, அதே மருந்துகள் சென்னையிலும் மற்ற இடங்களிலும் விற்கப்படு கின்றன. அரசு முன்வந்து அதையும் தடை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, அந்த குளிர்சாதனப்பெட்டிகளைப்பற்றி நான் தவறாக சொன்னேன். நம்முடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, சில கடைகளில், அவைகள் வேலை செய்யாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதில் கருத்து வேறுபாடு இல்லை. அடுத்ததாக சில மருந்துகளை அமெரிக்காவில், இங்கிலாந்தில் தடை செய்திருக்கிறார்கள். அவைகளை இந்தியாவில் பயன் படுத்துகிற நிலை இருக்கிறது. நான் சட்டசபையில் இதற்கு பதில் அளித் திருக்கிறேன். மத்திய அரசிடம் "வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட மாத்திரைகளை இங்கே பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம், அப்படி பயன்படுத்தக்கூடாது" என்று சொல்லியிருக்கிறோம். மத்திய சுகாதார அமைச்சர் கூட்டிய சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் கூட இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டு அமைகிறேன்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படு கிறது.

(பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.)

[பிற்பகல் 1-24].

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

131. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த கல்வித் துறையின் 20—6—1985 ஆம் நாளிட்ட 645 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

132. 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக சட்டத்தின் இணைபபுப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த கல்வித் துறையின் 20—6—1985 ஆம் நாளிட்ட 646 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

133. 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த கல்வித்துறையின் 20—6—1985 ஆம் நாளிட்ட 647 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

134. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்ட இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித்துறையின் 3—7—1985 ஆம் நாளிட்ட 648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

135. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் எஞ்சியுள்ள பிரிவுகளை அமுலுக்குக் கொண்டு வருவது குறித்த கல்வித்துறையின் 25—6—1985 ஆம் நாளிட்ட 659 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].





136. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு கல்விக் குழு அமைப்பது குறித்து கல்வித்துறையின் 24—7—1985 ஆம் நாளிட்ட 34683/என்.யு. 2/85-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

137. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு நிர்வாகக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 24—7—1985 ஆம் நாளிட்ட 41714/என்.யு. 2/85- 2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.

138. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு கல்விக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 19—8—1985 ஆம் நாளிட்ட 41713/என்.யு. 2/85-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

139. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு கல்விக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 3—10—1985 ஆம் நாளிட்ட 94615/என்.யு. 2/85 2 ஆம் நாளிட்ட கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

140. காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு முதல் துணை வேந்தராக டாக்டர் திருமதி ராதா தியாகராஜன் அவர்களை நியமிப்பது குறித்த கல்வித்துறையின் 13—6—1985 ஆம் நாளிட்ட 617 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

141. காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராக திரு. ஜி. சங்கரராஜுலு அவர்களை நியமிப்பது குறித்து கல்வித்துறையின் 2—7—1985 ஆம் நாளிட்ட 690 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66(2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

142. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன நிலங்கள் (ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்) விதிகளில் திருத்தங்கள் செய்யப்படுவது தொடர்பாக வன-மீன் துறையின் 18—4—1985 ஆம் நாளிட்ட 418 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

143. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக வணிகவரிகள்—அறநிலையத் துறையின் 24—10—1985 ஆம் நாளிட்ட 971 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

144. வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 22-11-1983 ஆம் நாளிட்ட எஸ்.ஆர்.ஓ.-ஏ 273 (பி)/83 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக, வணிகவரிகள்-அறநிலையத் துறையின் 4—11—1985 ஆம் நாளிட்ட 1020 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

145. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் வரி விதிகளில் திருத்தங்கள் செய்யப்படுவது தொடர்பாக வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 15—10—1985 ஆம் நாளிட்ட 950 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].



146. வருவாய்த் துறையின் 22—5—1962 ஆம் நாளிட்ட 2437/1962 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக வணிக வரிகள்-அறநிலையத்துறையின் 28—10—1985 ஆம் நாளிட்ட 986 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

147. தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

52. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை.

53. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை.

54. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை.

55. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை.

56. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை.

57. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை.

58. ஒப்படை அதிகாரத்தின் கீழ் இயற்றப்பெறும் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதல் அறிக்கை (எட்டாவது பேரவை).

59. ஒப்படை அதிகாரத்தின் கீழ் இயற்றப்பெறும் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை (எட்டாவது பேரவை).

*60. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986).

*61. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட

* 62. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986).

* 63. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986).

* 64. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986).

* 65. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986).

* 66. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986).

* 67. சட்டமன்றப் பேரவையால நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மருத்துவப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்), சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/1985).

---

* 29—1—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டன



## இணைப்பு

(564 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

4—12—1985 அன்று சென்னை நகரில் காமராசர் சாலையில் உள்ள குடிசை மாற்று வாரிய அலுவலகத்தின் முன்பாக மீனவ சமூகத்தினரின் கலவரங்களால் ஏற்பட்ட மோதல்களின் தொடர்பாக காவல் துறையினரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அத்துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர்கள் உயிரிழந்தனர்.

2. மீனவப் பிரதிநிதிகள் சிலர் முதலமைச்சர் அவர்களை 12—12—1985 அன்று சந்தித்து, தங்கள் குறைகளை எடுத்துக் கூறினார்கள். அவர்களின் கோரிக்கைகளை ஏற்று துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்தவர்களின் 5 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 15,000 வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசு செய்தி வெளியீட்டின் மூலம் அறிவிக்கப்பட்டது. மரணமடைந்தவர்களின் குடும்பங்கள் மேற்படி சம்பவத்திற்குப் பின்னர் வெவ்வேறு இடங்களில் இருந்ததால் அவர்களின் இருப்பிடங்களைக் கண்டு பிடித்து அன்னாரின் குடும்பத்தினர் பற்றிய விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சேகரிக்கப்பட்டு அரசு ஆணை எண் 2092, பொது (சட்டமும் ஒழுங்கும்-அ) துறை, நாள் 26—12—1985-ல் நிதியுதவி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

3. மரணமடைந்தவர்களில் சேகர் என்பவரின் குடும்பத்திற்கு நிதியுதவிக்கான தொகை ரூபாய் 15,000, 9—1—1986 அன்று வழங்கப்பட்டுவிட்டது. மற்ற நான்கு பேர்களின் வாரிசுதாரர்கள் இந்த நிதியுதவியை பெறுவதில் தயக்கம் காட்டியதுடன் அவர்களின் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துப் பின்னர்தான் உதவித் தொகையினை பெறுவோம் என்று கூறியுள்ளனர். மீண்டும் அவர்களை அணுகியபோது தங்களின் சட்ட ஆலோசகரைக் கலந்து வட்டாட்சியர் அலுவலகம் வந்து உதவித்தொகை பெறுவதாகக் கூறியுள்ளனர். ஆனால் 13—1—1986 வரை அவர்கள் வரவில்லை. மீண்டும் நேரடியாகத் தொடர்பு கொண்டபோது மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டாட்சியருக்குக் கொடுத்த ஒரு கடிதத்தில் தமிழ் நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் மூலம் அனுப்பி வைக்கப்படும் ஒரு வழக்கறிஞர் திரு. டி. எம். வாசுதேவன் முன்னிலையில் 17—1—1986 அன்று பெற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளனர். அவ்வாறே நால்வரில் மூவர் 17—1—1986 அன்று பெற்றுக்கொண்டனர். எஞ்சிய ஒருவருக்கும் 21—1—1986 அன்று வழங்கப் பட்டது. எனவே உதவித் தொகையினை வழங்குவதில் ஏற்பட்ட கால

தாமதம் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரை பலமுறை வேண்டிக்கொண்டும் அவர்கள் உதவித்தொகை பெற தயக்கம் காட்டி மறுத்ததுதான் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். இந்நிலையில் மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்குவதில் அரசு தரப்பில் தவிர்க்ககூடிய காலதாமதம் ஏதும் ஏற்படவில்லை.

## இணைப்பு II

568ஆம் பக்கத்தில் இனம் 3 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அமைப்பதற்கு முன்பு தொழிலாளர் மலிவு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் திரு.வி.க. நகரில் பொதுப்பணித்துறையினரால் 544 வீடுகள் கட்டப்பட்டு, அவை 1961 முதல் பராமரிப்புக்காக வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இதற்கு மாதம் ரூ. 134 பொருளாதார வாடகையாக (Economic Rent) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்குடியிருப்புகளுக்கு மாதம் ரூ. 10 மலிவு வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளை தொழிலாளர் நலத்துறை தொழிலாளர் நல அதிகாரி மூலம் ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்த ஒதுக்கீடு தொழிலாளர்களின் சம்பள விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டு வருகின்றது. மாதம் ரூ. 351 முதல் ரூ. 500 வரை சம்பளம் பெறுபவர் மட்டுமே குடியிருக்கத் தகுதியுடையவர். இக்குடியிருப்புகளில் குடியிருக்கும் பலர் இக்குறைந்த வாடகையான ரூ. 10 யும் செலுத்தவில்லை. எனவே இக்காலனியில் வாடகை நிலுவை அதிகம் உள்ளது. நிலுவையை செலுத்தும்படி நிலுவை அறிக்கை பாக்கிதாரர்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ரூ. 500-க்கு மேல் ஊதியம் பெறும் 231 நபர்களும், ஓய்வுபெற்று மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 280 நபர்களும் இக்குடியிருப்புகளில் குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் குடியிருப்புகளில் குடியிருப்பதற்கு தகுதியற்றவர்கள். இவர்களில் 5 குடியிருப்புகளில் இருப்பவர்களுக்கு மட்டும் தொழிலாளர் நலத்துறையும், வீட்டு வசதி வாரியமும் குடியிருப்புகளை காலி செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளன.

## இணைப்பு III

570 ஆம் பக்கத்தில் இனம் 3 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

வழக்கமாக ஜூன் 12-ம் நாளன்று மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிடப்படவேண்டும். ஆனால், 1985-ம் ஆண்டு இத்தேதியில் மேட்டூரில் 11.5 டி.எம்.சி. அளவுக்கு நீர் இருந்தது. அப்போது காவிரி நீர்ப் பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரமடையவில்லை.



எனவே, மேட்டூர் நீர்த்தேக்கம் திறப்பது தள்ளி வைக்கப்பட்டது. கர்நாடக நீர்த்தேக்கங்கள் நிரம்பும் வரையில் காத்திராமல் காவிரி ஆற்றில் பருவ மழை மூலம் நீர்வரத்து ஏற்படும்போதே தமிழகத்திற்கு உரிய நீரை தமிழ்நாட்டிற்கு அனுப்புமாறு, கர்நாடக அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது.

25—6—1985 முதல் கபினி நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் மூலம் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நல்ல நீர் வரத்து ஏற்பட்டு, நீரிருப்பில் முன்னேற்றம் காணப்பட்டதால், குறுவைப் பயிர் வேலைகளை தொடங்குவதற்கு வசதியாக மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் விரைவில் திறந்து விட வேண்டுமென்று விவசாயிகள் கோரினர். ஏனெனில் காலந்தாழ்த்தி திறப்பதனால் அறுவடைக் காலத்தின் போது வடகிழக்கு பருவமழை மூலம் பயிர் அழிந்துவிடுவதற்கு ஏதுவாகும். 1985 ஜூன், ஜூலைத் திங்களின்போது இது தொடர்பாக சட்டமன்றப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது, பருவமழை தீவிரமடைந்து மேட்டூருக்கு வழக்கமாக வரும் நீர்வரத்து இருக்குமென்று எதிர்பார்த்து 8—7—1985 அன்று பாசனத்திற்கு மேட்டூர் நீர்த்தேக்கம் திறந்துவிடப்பட்டது. அப்போது மேட்டூரில் இருந்த நீரிருப்பு 32 டி.எம்.சி. ஆகும்.

நீர்த் தேக்கத்திலுள்ள நீர் விரைவில் குறைந்துவிடுவதை தடுப்பதற்காக, தொடக்கத்திலிருந்தே நீர் கட்டுப்படுத்தப்பட்டு விடப்பட்டது. சிக்கனமாக நீரைப் பயன்படுத்தும்படி விவசாயிகளும் அறிவுறுத்தப்பட்டனர்.

மேட்டூரில் இருந்து விடப்படும் நீரின் அளவு 26—7—1985 வரை 7,500 கன அடியாகவும் பின்னர் 12,000 கன அடியாகவும் உயர்த்தப்பட்டது. 26—7—1985 முதல் முறைப்பாசனம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சரும், பொதுப்பணித்துறை செயலாளரும் பெங்களூருக்குச் சென்று கர்நாடக முதல்வரை சந்தித்து காவிரி டெல்டாவில் உழவு மற்றும் நாற்று நடவு வேலைகளை விரைவில் முடிப்பதற்காக கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விடுவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நமது கோரிக்கையினை பரிசீலிப்பதாகத் தெரிவித்தும், நீரை அவர்கள் விடுவிக்கவில்லை. மேட்டூரின் நீரிருப்பு நாளுக்கு நாள் குறைந்ததோடு நீர்வரத்தும் தொடர்ந்து மிகக் குறைவாக இருந்ததால், பொதுப்பணித்துறை அமைச்சரும் செயலாளரும் மீண்டும் 13—8—1985 அன்று பெங்களூருக்குச் சென்று நீரை விடுவிக்குமாறு கர்நாடக அரசிடம் கோரினர். கிருஷ்ணராஜசாகரத்திலிருந்து 21—8—1985 முதல் 25—8—1985 வரையிலான காலத்தில் 5 டி.எம்.சி. நீரை அவர்கள் விடுவித்துள்ளார்கள்.

[1986 ஜனவரி 30

காவிரி டெல்டாவில் எல்லாப் பகுதிகளிலும் நீர் பெறப்பட்டு, விவசாய வேலைகளை தொடங்குவதற்காக மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து விடப்படும் நீரின் அளவு 19—8—1985 லிருந்து 15,000 கனஅடியாக உயர்த்தப்பட்டது. உழவர் பெருமக்கள் கூட்டம் ஒன்றை 6—9—1985 அன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டினார். வேளாண்மைத்துறை அமைச்சர், வேளாண்மை இயக்குநர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். மேட்டூரில் நீரிருப்பு நிலைமை விவசாயி களிடம் எடுத்துக் கூறப்பட்டது. நீரைச் சிக்கனமாக உபயோகித்து குறுகிய கால பயிர்களை மட்டுமே பயிரிடுமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப் பட்டது. மேட்டூரின் நீரிருப்பு மிக விரைவாக குறைந்ததால், பவானிசாகரில், இருந்து 14—9—1985 முதல் 26—9—1985 வரை சுமார் 5.8 டி.எம்.சி. நீர் காவிரி பாசனத்திற்கு அளிக்கப்பட்டது

இதற்கிடையில் பயிரிடப்பட்ட பயிர்களை காப்பாற்ற, 30 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு விடுவிக்க, அவ்வரசை இணங்க வைக்குமாறு கோரி, தமிழக முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் மற்றும் மத்திய பாசன அமைச்சர் அவர்களை 31—8—1985 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டார்கள். இது தொடர்பாக, கர்நாடக முதல்வருக்குக் கடிதம் எழுதப்பட்டது. தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் 10—9—1986 அன்று கர்நாடகத்திற்கு நேரில் சென்று விரைவில் நீரை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார். இம்முயற்சி களின் விளைவாக கர்நாடக அரசு, 19—9—1985 லிருந்து 25—9—1985 வரை கபினி நீர்த்தேக்கத்திலிருந்து 5 டி.எம்.சி. நீரை அனுப்பியது. 23—11—1985 அன்று சென்னையில், தமிழகம் மற்றும் கர்நாடக முதல்வர் களுக்கிடையே காவிரி நீர் பற்றி நடைபெற்ற இருதரப்புப் பேச்சு வார்த்தை யின்போதும் கர்நாடக நீர்த்தேக்கத்திலிருந்து மேற்கொண்டும் நீரை விடுவிக்க வேண்டிய அவசியம் குறித்து தமிழக முதல்வரால் வலியுறுத்தப்பட்டது.

| | |
|---|---|
| 23—9—1985 முதல் 28—9—1986 வரை | 59 மி.லிட்டர். |
| 1—10—1985 முதல் 7—10—1985 வரை | 55 மி.லிட்டர். |
